சுடர் 32
கதிர் 267
ஆவணி 4ஆம் நாள்
ஞாயிற்றுக்கிழமை
20 ஓகஸ்ட் 2017
வள்ளுவர் ஆண்டு 2048
விலை: 30
பக்கங்கள்: 48 +24

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



புதிய சேவைகள் அறிமுகம்
மகாராஜா பொதிகள் சேவை
வெளி நாட்டிற்கான உங்கள் மேலதிக பொதிகளை நம்பகரமாக குறைந்த கட்டணத்தில் விரைவாக அனுப்ப நாடவேண்டிய ஒரே இடம்
GTV Enterprises (Pvt)Ltd.
GTV Express
இல.225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 4338 / 021 492 5024
Parcel.lk
இல.25, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. 024 493 0200 / 076 690 8961


# தேர்தல் ஆணைக்குழு உறுப்பினருக்கே இந்த நிலை எனின் தமிழ் மக்களின் நிலையைக் கொஞ்சம் எண்ணிப் பாருங்கள்

*தன்னைக் கைது செய்ய வந்த பொலிஸாரின் நடத்தை பற்றி அரசதலைவருக்கு ஜீவன் கூல் கடிதம்*

யாழ்ப்பாணம், ஓக. 20
தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினரான என்னையே பொலிஸார் மிக மோசமாக நடத்தும்போது சாதாரண தமிழ் மக்களின் நிலையை நினைத்துப் பாருங்கள். பொலிஸார் தெற்கில் பொதுமக்களை கௌரவமாக நடத்துகின்ற அதேவேளை வடக்கில் அவர்கள் வேறுவிதமாகச் செயற்படுகின்றனர். அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், தேர்தல் ஆணைக் குழுவின் உறுப்பினர் ரட்ணஜீவன் கூல் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
16ஆம் திகதி எனது வீட்டுக்கு வந்த பொலிஸார் என்னைக் கைது செய்வதற்கான நீதிமன்ற பிடி ஆணையைக் காட்டினார்கள். அது 6 வருடங்களுக்கு முந்தியது. அவர்களுக்கு நான் யார் என்பது தெரியும். எனது வீடு வடக்கு


45


**சப்பை ரதத்தில் நல்லூர்க் கந்தன்**



நல்லூர் கந்தசுவாமி ஆலய சப்பைரதத் திருவிழா நேற்று மாலை இடம்பெற்றது. இலட்சக்கணக்கான பக்தர்கள் புடைசூழ வள்ளி, தெய்வானை சமேதரராய் முத்துக்குமாரசுவாமி சப்பைரதத்தில் காட்சியளித்தார். (வ-37)

- இராணுவத்தை பன்னாட்டு நீதிமன்றில் நிறுத்துவதை எதிர்த்தால் துரோகி
- மேற்குலக நாடுகளுக்கு வால்பிடிப்பது பிழை என்றால் துரோகி
- சிங்கள இனத்தைக் காப்பாற்றக் கதைத்தால் துரோகி

# மைத்திரி யுகத்தை கட்டியெழுப்ப விஜயதாஸ அழைப்பு

*ரணிலையும் ராஜிதவையும் சாடிய படி சுதந்திரக்கட்சித்தலைவருக்கு ஆதரவு*

யாழ்ப்பாணம், ஓக. 20
“எமது அரச தலைவரின் பெயர் மைத்திரி. அதன் அர்த்தம் அமைதியானவர். நாம் மைத்திரி யுகத்தைக் கட்டியெழுப்பவேண்டும். அதற்காக எல்லோரும் ஒன்றுபடுவோம்” என்று அறைகூவல்


45


*வடமாகாண சபை ஆளும் கட்சிக்குள்*

## அமைச்சுப் பதவியைப் பெற குத்துவெட்டுக்கள் தாராளம்

யாழ்ப்பாணம், ஓக. 20
வடக்கு மாகாண அமைச்சரவை மாற்றத்துக்கு முதலமைச்சர் நடவடிக்கைகள் எடுத்துள்ள நிலையில், அமைச்சுப் பதவிக்கான அடிபாடுகளும் - குத்துவெட்டுக்களும் ஆரம்பமாகியுள்ளதாக


45


## அமைச்சுப் பதவியை ஏற்க ஜி.ரி.லிங்கநாதன் விருப்பம்

*தனது முடிவை முதல்வருக்கு அறிவித்தார்*

யாழ்ப்பாணம், ஓக. 20
வடக்கு மாகாண சபையின் வவுனியா மாவட்ட ஆளும் கட்சி உறுப்பினரான ஜி.ரி.லிங்கநாதன், அமைச்சுப் பதவி வழங்கப்பட்டால் அதனை ஏற்றுக் கொள்


45


## வளர்ப்பு மாடு இடித்து குடும்பத்தலைவர் சாவு

*வேலணையில் பரிதாபச் சம்பவம்*

யாழ்ப்பாணம், ஓக. 20
வளர்த்த மாடு கொம்பினால் இடித்ததால் குடும்பத் தலைவர் ஒருவர் பரிதாபமாக


43


## நல்லூர்க் கந்தன் இன்று தேரில் பவனி வருவார்

யாழ்ப்பாணம், ஓக. 20
வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய தேர்த் திருவிழா இன்று காலை 7 மணிக்கு இடம்பெறுகிறது.
அதிகாலை 5.30 மணிக்கு வசந்த


45


## ரணிலை நீக்கி அந்த இடத்தில் மகிந்தவை அமரவையுங்கள்

*அமைச்சர் அருந்திக்க பெர்னான்டோ அழைப்பு*
*அமைச்சர் துமிந்த அதனை நிராகரிப்பு*


45





## இந்தியப் படைச் சிப்பாய்களுக்கு கோப்பாயில் நேற்று அஞ்சலி

*யாழ்ப்பாணம் வந்த அந்த நாட்டின் இராணுவ அதிகாரிகள் செலுத்தினர்*

யாழ்ப்பாணம், ஓக. 20
தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்ட இந்திய இராணுவச் சிப்பாய்களின் நினைவாகக் கல்வியங்காட்டில் அமைக்கப்பட்ட


45




**வாழ்த்துகிறோம்**

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை எழுதும் மாணவ செல்வங்கள் இலட்சியத்தில் வென்றிட உதயன் உங்களை மனதார வாழ்த்துகின்றான்.

## 2 கிலோ கேரளக் கஞ்சா வவுனியாவில் சிக்கியது

*யாழ்ப்பாணத்தில் வாங்கி நீர்கொழும்பு கொண்டு சென்றபோது*

வவுனியா, ஓக.20
2 கிலோ கேரளக் கஞ்சா வவுனியாவில் நேற்றுமுன் தினம் கைப்பற்றப் பட்டது. கஞ்சா யாழ்ப்பாணத்தில் கொள்வனவு செய்யப்பட்டு நீர்கொழும்புக்கு விற்பனைக்கா


43



20
SDB TOP SAVER
20 வருட பூர்த்தியை முன்னிட்டு
சேமிப்பு கணக்குக்கு வழங்கும்
10% அதிகூடிய வட்டி
- எச் சந்தர்ப்பத்திலும் பணத்தை மீளப்பெறும் வாய்ப்பு
- SDB VISA Debit Card வசதி மற்றும் SMS சேவை
- வட்டி வீதம் 10% (வ.தே.வ 10.46%) வரை*
011 5 411 411
SDB வங்கி
சனச அபிவிருத்தி வங்கி பீஎல்சீ, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating BB+ (stable), Reg No: PB62PQ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 மாணவருக்கான புலமைப் பரிசில் பரீட்சை

## இன்று நாடுமுழுவதும்

யாழ்ப்பாணம், ஒக.20
தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரிட்சை இன்று நடைபெறவுள்ளது. பரீட்சையில் நாடுமுழுவதும் 2 லட்சத்து 56 ஆயிரத்து 700 மாணவர்கள் தோற்றுகின்றனர். வடக்கு மாகாணத்திலிருந்து 20 ஆயிரத்து 481 மாணவர்கள் தோற்றுகின்றனர். நாடு முழுவதும் 3ஆயிரத்து 17 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாணத்தில் 214 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் 92 பரீட்சை நிலையங்களின் ஊடாக 9 ஆயிரத்து 204 மாணவர்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 32 பரீட்சை நிலையங்களின் ஊடாக 3 ஆயிரத்து 141 மாணவர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 28 பரீட்சை நிலையங்களின் ஊடாக 2 ஆயிரத்து 771 மாணவர்களும், வவுனியாவில் 34 பரீட்சை நிலையங்கள் ஊடாக 3 ஆயிரத்து 81 மாணவர்களும், மன்னார் மாவட்டத்தில் 28 பரீட்சை நிலையங்களின் ஊடாக 2 ஆயிரத்து 284 மாணவர்களும் தோற்றுகின்றனர். பரீட்சை நடைபெறும் போது பரீட்சை மண்டபங்கள் அமைந்துள்ள பாடசாலைகளின் வளாகத்துக்குள் மாணவர்களின் பெற்றோர் செல்வதும் ஆசிரியர்கள் நடமாடுவதும் பரீட்சைத் திணைக்களத்தால் தடை செய்யப்பட்டுள்ளது.

பரீட்சை வினாத்தாள்கள் திருத்தும் பணிகள் எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை நடைபெறும் என இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. (ற-21,ரி,173)

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில்

# பன்னாடுகளின் தலையீடு தேவை

## உறவினர்கள் கோரிக்கை



கொழும்பு,ஒக.20
"காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரத்தில் ஐ.நா. உட்பட பன்னாடுகளின் தலையீடு அவசியம் தேவை. இந்த அரசு மீது எங்களுக்குத் துளியளவேனும் நம்பிக்கை இல்லை. இதுவரை வீதியில் காத்துக் கிடந்தது போதும், எங்கள் கண்ணீருக்குத் தீர்வு பெற்றுத் தாருங்கள்"

இவ்வாறு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டில் நடைபெற்ற இறுதிப் போர் மற்றும் போர்க்காலச் சூழலில் பலர் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். அத்துடன் இறுதிப் போரில் இராணுவத்திடம் தமது பிள்ளைகளைப் பலர் ஒப்படைத்தனர். இந்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவரங்களை அரசு வெளியிட வேண்டும் அல்லது அவர்கள் தொடர்பான தகவல்களை வெளியிட வேண்டும் என வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். திருகோணமலை, வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். அவர்களது போராட்டம் ஆரம்பித்து 6 மாதங்களைக் கடக்கின்றது. இதுவரை அரசு உரிய பதில் வழங்கவில்லை. " நல்லாட்சி அரசு மீது நம்பிக்கை இழந்து விட்டோம். ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட பன்னாட்டுச் சமூகம் உரிய பதிலை எமக்குப் பெற்றுத்தர வேண்டும். எமது போராட்டத்தின் உண்மைத் தன்மையையும், நியாயத்தையும் பன்னாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. ஐ.நா.பிரதிநிதிகள் உட்படப் பல அரசியல் வாதிகளும் எம்மைச் சந்தித்தனர். ஆனால் எமக்குத் தீர்வு பெற்றுத்தர எவரும் நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை. இனி பன்னாடுகளின் உதவியை நாடுவதைத் தவிர எமக்கு வழியில்லை. அரசுக்கு அழுத்தம் கொடுத்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரத்துக்குப் பதில் பெற்றுத் தர வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம். இனியும் எம்மால் வீதியில் கண்ணீருடன் காத்திருக்க முடியாது." என்று உறவுகள் தெரிவித்தனர். (ஐ)

# ஆமைகளை உணவாக்கிய 9 பேர் கைது

கொழும்பு,ஒக.20
ஆமைகளைப் பிடித்து இறைச்சியாக்கி உண்ட 9 பேர் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். அவர்கள் ஹொரவ்பொத்தானைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திரப்பன்கடவெல வயல்பகுதியில் விடுமுறை தினத்தைக் குதூகலமாகக் கொண்டாடுவதற்காக வயல் பகுதியிலுள்ள நீர் தேங்கி நிற்கும் இடமொன்றில், 12 பால் ஆமைகளைப் பிடித்து உணவாக்கியுள்ளனர். பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து, சம்பவ இடத்தைச் சுற்றிவளைத்த அதிகாரிகள், 9 பேரையும் கைது செய்தனர். அவர்களிடமிருந்து 3 கத்திகள், சமையலுக்காகப் பயன்படுத்தப்படும் பொருள்கள் என்பனவற்றையும் அதிகாரிகள் கைப்பற்றினர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# இணையத்தளங்களில் சிறுவர் உரிமை மீறல்

## கண்டனம் தெரிவித்து பாதயாத்திரை



மட்டக்களப்பு.ஒக.20
இணையம் மற்றும் சமூக வலைத்தளங்களில் சிறுவர்களின் உரிமைகளைப் மீறும் தகவல்கள் வெளியிடப்படுவதற்கு எதிராக ஏறாவூர் மற்றும் செங்கலடிப் பிரதேசங்களில் நேற்று பாதயாத்திரை மேற்கொள்ளப்பட்டது.

ஏறாவூர் நகரப் பொலிஸ் நிலையம் முன்பாக உள்ள மணிக்கோபுரச் சந்தியிலிருந்தும், செங்கலடி - பதுளை வீதிச் சந்தியிலிருந்தும் பாதயாத்திரை ஆரம்பமானது. செங்கலடி யுனைட்டட் விளையாட்டு மைதானத்தில் பாதயாத்திரை நிறைவடைந்தது. அதன் போது பொது மக்களுக்குத் துண்டு அறிக்கைகளும் வழங்கப்பட்டன.

"வொயிஸ் வோக்" என்ற தொனிப்பொருளில் இந்தப் பாதயாத்திரை நடத்தப்பட்டது. சிறுவர்கள் துர்நடத்தைகளுக்கு உட்படுத்தப்படுதல், அவர்களின் உரிமைகள் மீறப்படும் தகவல்களை இணையங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் வெளியிடுதல் என்பவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்தப் பாதயாத்திரை நடத்தப்பட்டது.

அதில் சமூக நிறுவனாங்களின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், பொது அமைப்புக்கள், சர்வமதங்களைச் சார்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (ஐ-10,46)

# மீராவோடை காணி விவகாரத்துக்கு விரைவில் தீர்வு

மட்டக்களப்பு.ஒக.20
வாழைச்சேனை மீராவோடை சக்தி வித்தியாலய மைதானக் காணிப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு பெற்றுத் தரப்படும் என்று அரசின் உயர்மட்டத் தலைவர்களும் அதிகாரிகளும் நேற்று உறுதியளித்தனர்.

பாடசாலையின் காணிப்பிரச்சினை தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல் கோறளைப்பற்றுப் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில் மைதானக் காணியின் தற்போதைய நிலவரம் தொடர்பாக ஆராயப்பட்டது.

கூட்டத்தின் இறுதியில், நீதிமன்றில் பாடசாலைக்குச் சாதகமாகத் தீர்வு கிடைக்கும் பட்சத்தில் காணி உரிமை கோருபவர்கள் உடனடியாக வெளியேற வேண்டும், காணி உரிமை கோருவோருக்குச் சாதகமாகத் தீர்ப்பு கிடைக்கும் பட்சத்தில் பாடசாலையின் நலனைக் கருத்திற் கொண்டு அந்தக் காணியை விட்டுக் கொடுக்க வேண்டும் எனத் தீர்மானம் எட்டப்பட்டது. அதில் கிராமியப் பொருளாதார அலுவல்கள் பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி, நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், கோறளைப்பற்றுப் பிரதேச செயலர் வி.வாசுதேவன், கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ரவி, ஐக்கிய தேசிய கட்சியின் கல்குடாத் தொகுதி அமைப்பாளர் ஆறுமுகம் ஜெகன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-10)

Vணி வேண்டுகை

செய்திப் பத்திரிகை
உதவி ஆசிரியர்கள் (பயிற்சி)

ஆகக் குறைந்த கல்வித் தகைமை:
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் தமிழ்ப் பட்டதாரி.
அல்லது
எழுத்துத் துறையில் சிறந்த ஆளுமை உள்ளவராக இருத்தல்.
(எந்தத் துறைசார் பட்டதாரியாகவும் இருக்கலாம்)

நேர்முகத் தேர்வு
23.08.2017 புதன்கிழமை
நடைபெறும்.
நேர்முகத் தேர்வுக்கான
நேரத்தை
021 492 7481
என்ற தொலைபேசி
இலக்கத்துடன் தொடர்பு கொண்டு
பெற்றுக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்துசாதனம் இதழ் மாதந்தோறும் வெளிவரும்

## சைவபரிபாலன சபையின் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.20

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையால் வெளியிடப்படும் “இந்து சாதனம்” என்னும் மாதாந்த இதழ் இனி மாதம் தோறும் தொடர்ச்சியாக வெளியிடப்படும்.

அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் தலைவர் இ.வசந்தசேனன் தெரிவித்தார். நீண்ட இடைவெளியின் பின்னர் “இந்து சாதனம்” இதழ் நேற்று வெளியிடப்பட்டது. யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ளசைவ பரிபாலன சபையின் மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது: 1889ஆம் ஆண்டு இரண்டு மொழிகளில் இந்து மக்களின் வழிகாட்டியாகவும் ,காலத்தின் கண்ணாடியாகவும் இந்து சாதனம் இதழ் வெளியிடப்பட்டு வருகிறது. அதன் பின்னர் சில ஆண்டுகள் அதன் வெளியீடு தடைப்பட்டது. எனினும் கடுமையான முயற்சியின் பின்னர் இன்று(நேற்று) வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்ச்சியாக மாத இதழாக வெளியிடுவதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. என்றார். நிகழ்வில் இந்துசமயப் பிரதிநிதிகள், சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

(ஐ-10,ரி)

# சந்தைக்குச் சென்றவர் விபத்தில் சிக்கி உயிரிழப்பு



சாவகச்சேரி, ஓக. 20

தேங்காயைச் சந்தையில் விற்பனை செய்வதற்குக் கொண்டு சென்றவர் டிப்பருடன் மோதுண்டு விபத்தில் சிக்கிசம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் .

இந்த விபத்து சாவகச்சேரி நீதிமன்றுக்கு முன்பாக முதன்மை சாலையில் நேற்றுக் காலை நடந்தது. மட்டுவில் முத்துமாரியம்மன் கோவிலடியைச் சேர்ந்த கதிர்காமு சிவராசா ( வயது 56 ) என்பவரேஉயிரிழந்தவர் ஆவார். அவர் காலையில் வீட்டில் பறித்த தேங்காயை விற்பனை செய்வதற்காகச் சாவகச்சேரிச் சந்தைக்குக் கொண்டு சென்றுள்ளார். முதன்மைச் சாலையூடாக துவிச்சக்கர வண்டியில் பயணித்த அவர், சாவகச்சேரி நீதிமன்றுக்கு முன்பாக அதே திசையில் வேகமாக வந்த டிப்பர் வாகனத்துடன் மோதியுள்ளார். எனத் தெரிவிக்கப்பட்டது. விபத்தில் தூக்கி வீசப்பட்ட அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். சாவகச்சேரி பேருந்து நிலையத்துக்கு அருகில் சம்பவம் இடம்பெற்றதால், அந்தப் பகுதியில் நின்றவர் கள் அவரை சாவகச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என மருத்துவர்களால் தெரிவிக்கப்பட்டது. அவரது சடலம் சாவகச்சேரி மருத்துவமனையின் சடல அறையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்தை ஏற்படுத்திய டிப்பர் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டார்.

அவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டது.

(ஐ-9)






# தேர்த் திருவிழா

### தங்கரதமேறி வருகிறான் நல்லூர் வேலவன்

அழகன் முருகனே நல்லூர்க் கந்தா
ஆதிசிவன் மைந்தனே நல்லூர்க் கந்தா
அலைகடல் எனப் பக்தர் வெள்ளம் திரண்டோடும் வீதி தனில்
பச்சைமயில் ஏறி வரும் பாலமுருகா
பரமனுக்கு உபதேசம் செய்த பாலமுருகா
தேவர்தம் சிறை மீட்டுக் காத்திட்ட வேலவா
எம்மக்களை இனியும் அல்லல் படவிடாதே வேலவா
நல்லாட்சிதனில் நாள்கள் நகர்கிறது பலன் ஏதும் எமக்கில்லை வேலவா
ஒன்றுபட எம்மினத்தை ஒன்றாக்கி வைத்துவிடு
தமிழர் குலம் தன்னைக் காத்திட
தங்க ரதமேறி வருகிறான் நல்லூர் வேலவன்

நயினை விசு. இராசநாயகம்

### தேவரும் தேர்வடம் பிடிப்பர்

தேவரும் தேர்வடம் பிடிக்கத்
திரண்டு வருவர் பூமிக்கு
செய்வதறியாது பூமியிலுள்ளோரும்
இரங்கி இடங்கொடுப்பர்
மூவரும் பாடிய தேவாரங்களை
முறையாகப் பாடி மகிழ்வர்
முருகனும் தேரிலே அசைந்து வருமழகுக்கு
மூவுலகும் சொக்கி நிற்கும்

கே.எஸ்.சிவஞானராஜா

### சிவன் பிள்ளை தேரில் பவனி

முத்துப் பவனம் மெத்தென பின்னும் தேரோட்டம்
முத்தமிழ் மேனியில் அத்தர் சந்தனம் தேரோட்டம்
சித்தம் மகிழும் இரத்தின வேலின் தேரோட்டம்
சிவனின் பிள்ளை தேரினில் பவனி தேரோட்டம்

ஆவணித் திங்கள் அமாவாசை முதன் நாள் தோரோட்டம்
உலகினில் வாழும் தமிழர்கள் கூடும் தேரோட்டம்
தத்துமி தாளம் தந்திடும் மேளம் தேரோட்டம்
தங்கரதத்தில் வெள்ளிக் குதிரை தேரோட்டம்

அத்தனை உள்ளத்தில் அரோகரா தேரோட்டம்
அண்டியின் மலையில் அரசனின் ஆட்சி தேரோட்டம்
இத்தனை சிறப்பும் உயர்ந்து நிற்கும் தேரோட்டம்
இனிய உலகில் நல்லூர் நகரில் தேரோட்டம்

ஞானம் பரமநாதன்
தாவடி கிழக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்டத் தேவைகள்: கையெழுத்துச் சேகரிப்பு நிறைவு

மன்னார், ஓக.20

மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு 'மன்னாரின் எழுச்சி அதுவே எங்களின் முயற்சி' எனும் கருப்பொருளில் ஆரம்பிக்கப்பட்ட கையெழுத்துச் சேகரிப்பு நேற்றுடன் நிறைவடைந்தது.

சேகரிக்கப்பட்ட கையெழுத்துக்கள் அடங்கிய மனுக்கள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட முக்கியஸ்தர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.



மன்னார் மாவட்டத்துக்கு வரவேற்புக் கோபுரம் அமைக்கப்பட வேண்டும், மணிக்கூட்டுக் கோபுரம் அமைக்கப்பட வேண்டும், மின் சமிக்ஞை விளக்குகள் பொருத்துதல் வேண்டும், மன்னார் பொது நூலகத்தைச் சிறப்பாக உருவாக்குவதோடு, கிராமப்புறங்களி ல் உள்ள நூலகங்களைத் தரமுயர்த்த வேண்டும், மாவட்டத்தில் பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்குதல் வேண்டும்.

உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டன. கடந்த 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட கையெழுத்துச் சேகரிப்பு நேற்றுடன் வெற்றிகரமாக நிறைவடைந்தது.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், இ.சாள்ஸ் நிர்மலநாதன் , மன்னார் மறை மாவட்டக் குரு முதல்வர் அன்ரனி விக்டர் சூசை, மன்னார் மாவட்டச் செயலர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய ஆகியோருக்கு மனுக்கள் கையளிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத் தமிழமுது நண்பர்கள் வட்டத்தின் ஏற்பாட்டில் கையெழுத்துக்கள் சேகரிக்கப்பட்டன. (ஐ-10, 56)

## நிரந்தர நியமனத்தை வலியுறுத்தி ரயில் கடவைக் காப்பாளர்கள் வெள்ளியன்று வவுனியாவிலிருந்து கொழும்புக்கு நடைபவனி

வடக்கு கிழக்கு தொடருந்துக் கடவைக் காப்பாளர்கள், தமது நிரந்தர நியமனத்தை வலியுறுத்தி எதிர்வரும் 25ஆம் திகதி வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கி நடைபவனியில் ஈடுபடவுள்ளனர்.

இந்த நடைபவனியின் நிறைவில் அரச தலைவரையும் சந்தித்துக் கலந்துரையாட அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கு கிழக்கு தொடருந்துக் கடவைக் காப்பாளர்கள் ஒன்றியத்தலைவர் ரோஹான் ராஜ்குமார் இதனைத் தெரிவித்தார். வவுனியாவில் அவர் நேற்று நடத்தி செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

" நாள் ஒன்றுக்கு 250 ரூபா சம்பளத்துக்கு கடமையில் ஈடுபட்டு வருகிறோம். எங்களை நியமனம் செய்வது தொடர்பில் அரசின் உயர் மட்டத்திடம் கோரினோம். பயனில்லை.

எமது கோரிக்கையை வலியுறுத்தி எதிர்வரும் 25ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு வவுனியா நகரத்தில் அமைந்திருக்கின்ற மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு முன்பாக இருந்து கொழும்பு அரச தலைவர் செயலகத்தை நோக்கி நடைபவனியில் ஈடுபடவுள்ளோம். அங்கு அரச தலைவரைச் சந்திக்கவும் எமது பிரச்சினை தொடர்பில் அவருடன் கலந்துரையாடவும் விரும்புகிறோம். வடக்கு கிழக்கிலுள்ள சிவில் சமூகங்கள், விளையாட்டுக் கழகங்கள், சமூக ஆர்வலர்கள் அனைவரும் எமது நியாயமான கோரிக்கை நிறைவேறுவதற்கு எங்களுடன் இணைந்து கொள்ளுமாறு கோருகிறோம். நாம் நடைபவனி மேற்கொள்ளும்போது தொடருந்துக் கடவைகளில் பொலிஸார் காவல் கடமையில் ஈடுபடுவார்கள். இது தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கப்படும்" என்று வடக்கு கிழக்கு தொடருந்துக் கடவைக் காப்பாளர்கள் ஒன்றியத் தலைவர் மேலும் தெரிவித்தார். (வ-4)



வவுனியா பாலமோட்டை, ஊரல்குளத்தில் யானை ஒன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் வழங்கிய தகவலை அடுத்து ஓமந்தைப் பொலிஸாரும், வன ஜீவராசிகள் திணைக்களமும் சம்பவ இடத்துக்குச் சென்று யானையை மீட்டனர். வன ஜீவராசிகள் திணைக்கள மருத்துவ அதிகாரியால் யானை இறந்ததற்குரிய காரணம் தொடர்பாக மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டது. மருத்துவ அறிக்கையின் படி 5 வயதுடைய யானை வெங்காய வெடியை உண்டதால் வாயில் ஏற்பட்ட காயம் காரணமாக, உணவு உண்ண முடியாமல் இறந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. அந்த யானை 7 நாள்களுக்கு முன்னர் இறந்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)



# உறவுகள் தொலைந்து 27 வருடங்கள்

## நீதிகோரி சித்தாண்டியில் திரண்டனர் உறவினர்கள்

மட்டக்களப்பு,ஓக.20

போர்ச்சூழலில் தமது உறவுகளைத் தொலைத்தவர்கள் ஒன்று திரண்டு சித்தாண்டியில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தமது உறவினர்கள் தொலைந்து 27 வருடங்கள் கடந்துள்ள நிலையில், அதனை நினைவு படுத்தும் நிகழ்வு மட்டக்களப்பு, சித்தாண்டியில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

தமது உறவுகளுக்காக சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் கற்பூரம் ஏந்தி சிறப்புப் பூசை வழிபாடுகளில் ஈடுபட்டனர். ஆலயத்துக்கு முன்னால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் ஒளிப்படங்கள் மற்றும் அவர்களின் பெயர்களும் பட்டியலிடப்பட்டு காட்சிப் படுத்தப்பட்டிருந்தன.



அங்கு தமது உறவுகளை ஒளிப்படங்களில் பார்வையிட்டு மண்டியிட்டுக் கதறினர். பின்னர் ஒன்றாகத் திரண்டு ஆலயத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். "மறைத்து வைத்த எமது உறவுகளை வெளியே கொண்டுவாருங்கள், காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள் எங்கே, பன்னாட்டுச் சமூகமே எம்மைத் திரும்பிப்பார், எமது உறவுகள் செய்த குற்றம் என்ன, அரசே எமது கண்ணீரின் வலி உமக்குத் தெரியவில்லையா, நல்லாட்சி அரசே உமது நீதி எங்கே, கைது செய்யப்பட்ட உறவுகள் எங்கே" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் கைகளில் தாங்கியிருந்தனர். ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கத்திடம் மனுக் கையளித்தனர்.

பின்னணி

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1990 ஆம் ஆண்டு வாழைச்சேனை, பேத்தாளை, மீராவோடை, கிண்ணையடி, கிரான், சந்திவெளி, முறக்கொட்டான்சேனை, சித்தாண்டி, மாவடிவேம்பு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பொதுமக்கள் உயிர் அபாயத்தை எதிர்கொண்டிருந்தனர். அதன் போது சித்தாண்டி ஸ்ரீ சித்திர வேலாயுதர் பேராலயத்தில் நலன்புரி முகாம் அமைத்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் உதவிகளை மேற்கொண்டு வந்தது. பொது மக்களுக்கும் அடைக்கலம் கொடுத்தது. அங்கு திடீர் சுற்றி வளைப்புகளை இராணுவத்தினர் மேற்கொண்டனர்.

முகாமில் தஞ்சம் புகுந்த இளைஞர்கள், பெண்கள் மற்றும் கூலித் தொழிலாளிகள் என 62 பேரைத் தமது வாகனத்தில் ஏற்றிக்கொண்டு சென்றனர்.

அவ்வாறு ஏற்றிக்கொண்டு சென்றவர்கள் முறக்கொட்டான்சேனை இராணுவத்தினர் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்ட பின்னர் காணாமல் ஆக்கப்பட்டனர்.

அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டு நேற்றுடன் 27 வருடங்கள் கடந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10,47)

## மாணவர்களின் போராட்டம் தொடரும்

மாணவத் தலைவர்கள் கைது செய்யப்பட்டாலும், மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டங்கள் தொடர்ந்து நடைபெறும் என்று அனைத்துப் பல்கலைக்கழக மாணவ ஒன்றியத் தலைவர் லகிரு வீரசேகா தெரிவித்தார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அதேவேளை பல்கலைக்கழக மாணவச் செயற்பாட்டாளர் ரயன் ஜெயலத் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் சரணடைந்தார். அவர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டிருந்த குற்றச்சாட்டில் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைஞன் சடலமாக மீட்பு

வவுனியா,ஓக.20

கட்டாருக்குத் தொழில் வாய்ப்புக்காகச் சென்று வீடு திரும்பிய இளைஞன் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டார். இந்தச் சம்பவம் வவுனியா சமயபுரம் அம்மன் கோயிலுக்கு அருகில் நேற்று நடந்தது.

சடலமாக மீட்கப்பட்ட இளைஞன் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் கட்டார் நாட்டிலிருந்து விடுமுறையில் வீட்டுக்கு வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு வீட்டுக்கு வந்த இளைஞன் வழமையைப் போன்றே வீட்டில் இருந்துள்ளார். எனினும் நேற்று தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டார் எனத் தெரிவிக்கப்பட்டது . சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் சடலத்தை மீட்டனர். மாரிமுத்து பிரசாந்தன் (வயது 26) என்ற இளைஞனே உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. மேலதிக விசாரணை களை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-10)

## கடலில் மிதந்து வந்த பீடி இலை மூடைகள்

### இந்தியக் கடலோரக் காவல் படை கைப்பற்றியது

யாழ்ப்பாணம், ஓக.20

தமிழ்நாடு, இராமநாதபுரத்தில் இருந்து இலங்கைக்குக் கடத்தப்பட்டவை என்று நம்பப்படும் பீடி இலைகள் அடங்கிய 25 பொதிகள் இந்தியக் கடலோரக் காவல் படையால் நேற்று மீட்கப்பட்டன.

பாம்பன் மன்னார் கடற்பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்கள் கடலில் பொதிகள் மிதப்பதைக் கண்டு கடலோரக் காவல் படைக்கு அறிவித்தனர். கடலோரக் காவல் படையினர் ரோந்துப் படகுகள் மூலம் பொதிகளை மீட்டுள்ளனர். தனுஸ்கோடி கரையில் ஒதுங்கிய பொதிகளும் மீட்கப்பட்டன. இதுவரை 25 பொதிகள் மீட்கப்பட்டுள் ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

பொதிகளைக் கடத்தி வரும் சமயம் கடலோரக் காவல் படையினரைக் கண்டு அவற்றை வீசி விட்டுக் கடத்தல்காரர்கள் தப்பிச் சென்றிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்படுகின்றது.

கைப்பற்றிய பீடி இலைகளின் எடை ஒரு தொன் இருக்கும் என்று கூறப்படுகின்றது. அவற்றை இலங்கையின் எந்தப் பகுதிக்குக் கடத்தத் திட்டமிடப்பட்டிருக்கலாம் என்பது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ரு-101)

# உலகின் தலைசிறந்த ஆங்கில பயிற்சிப்பட்டறை

உலகின் தலைசிறந்த ஆங்கில பயிற்சிப் பட்டறையாக 7th World Scientific Congress இனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.....

## இலங்கையின் முதலாவது ஆங்கிலத்துக்கான பயிற்சிப்பட்டறை

வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் இடம்...

# British Way® English Academy

எந்த மாற்று வழியுமில்லை British Way

ISO 9001:2008 CERTIFIED

## இரண்டு மாத காலப் பயிற்சி — 02 Months

**காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை திங்கள் முதல் வெள்ளி வரை இரண்டு மாத காலப் பயிற்சி வழங்கப்படும்.**

இப்பயிற்சியானது பிரித்தானியா மற்றும் அனேக நாடுகளில் கையாளும் விதத்தில் இரண்டு மாதத்திற்குள் ஆங்கில அறிவே இல்லாத ஒருவருக்கு கற்பிக்கும் முறைமைக்கேற்ப இலங்கையிலும் விசேடமாக யாழ் மண்ணிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலம் 100% ஆங்கிலத்தை சரளமாக பேச வைக்க முடியுமென இக்கல்வியகம் உத்தரவாதம் அளிக்கின்றது.

07, September, 2017 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

## வார இறுதி வகுப்புகள் — 04 Months

**காலை 8.30 முதல் 4.00 மணி வரை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்**

வார இறுதி வகுப்புகள் ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நான்கு மாத காலம் நடைபெறும். தொழில் செய்பவர்களுக்கு இப்பயிற்சிநெறி மிகவும் உகர்ந்ததாகும்.

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

## KIDS' Class (Grade 1-10)

**சனிக்கிழமைகளில் காலை 8.30 முதல் 12.30 வரையும் மாலை 1.00 முதல் 4.00 வரையும்**

சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பாடநெறியானது மாணவர்களின் ஆங்கிலம் தொடர்பாக காணப்படும் பயத்தை நீக்கி அவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கான சரியான வழியை காண்பிப்பதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்டுள்ளது

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

## IELTS — 04 Months

**சனிக்கிழமைகளில் மாலை 1.30 முதல் 5.30 வரை**

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

**British Way® English Academy**

**Contact** (Jaffna Branch) : **021 300 55 55**

நிட்டம்புவ | Tel: 033 302 19 19 | Fax: 033 2297912 | E-mail: info.britishway@gmail.com | Web: www.britishway.lk

**No.15, Kannathiddy, Jaffna.** (In front of the Shivan Kovil)

நிட்டம்புவ | காலி | மாத்தறை | அநுராதபுரம் | நுகேகொட | கம்பஹா | யாழ்ப்பாணம்
நீர்கொழும்பு | கண்டி | குருநாகல் | கிரிபத்கொட | இரத்தினபுரி | எம்பிலிப்பிட்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறுமையில் உள்ள எழுத்தாளருக்கு நிதியுதவி வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம் ஓக.20
வறுமைக்கோட்டின் கீழ் உள்ள எழுத்தாளர் ஒருவருக்கு அச்சுப்பதிப்புக்கான நிதி வழங்கப்படவுள்ளது என்று நல்லூர் பிரதேச செயலகத்தின் கலாசாரப் பிரிவு தெரிவித்துள்ளது.
வடக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்த நிதி வழங்கப்படவுள்ளது. வடக்கு மாகாணப் பண்பாட்டு அலுவலகல்திணைக்களத்தால்வறுமை கோட்டின் கீழ் உள்ள எழுத்தாளர்களின் ஆக்கங்களை ஆவணமாகப் பதிப்பிப்பதற்கு வருடம்தோறும் இந்த நிதி உதவி வழங்கப்பட்டு வருகின்றது. கலைஞர்களின் எழுத்துருவிலான ஆக்கத்தினைப் பதிப்புச் செய்வதற்கும் அவர்களின் திறமையை வெளிக்கொண்டு வருவதற்கும் இந்த நிதி உதவியாக அமையும்.
இதன் அடிப்படையில் இந்த வருடம் எழுத்தாளர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு அவருக்கு 20 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்படவுள்ளது. எனவே எழுத்தாளர்கள் தனது சொந்த ஆக்கத்தை, கிராம அலுவலகரிடம் உறுதிப்படுத்திய பின்னர், நல்லூர் பிரதேசசெயலகத்தின் கலாசாரப் பிரிவிடம்எதிர்வரும்31ஆம்திகதிவியாழக்கிழமைக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது என நல்லூர்ப் பிரதேச செயலகத்தின் கலாசாரப் பிரிவினர் கேட்டுக்கொண்டனர். (21,ரி)

## தற்போது எமது விடுமுறைக் காலம்

யாழ்ப்பாணம், ஓக.20
கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடைமுறைப் படுத்தப்படும் கலாசார செயற்றிட்டத்தின் கீழ் ஆவணி மாத வேலைத் திட்டத்தில் "தற்போது எமது விடுமுறைக் காலம்" என்ற தொனிப்பொருளிலான நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.
குடும்ப சூழலில் கலை ரசனையை ஏற்படுத்துவதன் மூலம் பெற்றோர் பிள்ளைகளிடையே ஆரோக்கியத்தை ஏற்படுத்துவதற்கும் குழந்தைகளின் சுதந்திரம் மற்றும் குடும்ப உள்ளகத் தொடர்புகளை விருத்தி செய்வதற்குமான வேலைத்திட்டமாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
இதற்கமைய உடுவில் பிரதேச கலாசார அதிகாரசபையால் பிரதேசத்தின் சிறுவர் கழகங்களைச் சேர்ந்த சிறார்களிடையே பட்டம் தயாரித்தல் போட்டி நடத்தப்படவுள்ளது. எனவே உடுவில் பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட சிறுவர் கழக சிறார்கள் இந்தப் போட்டியில் பங்குபற்றிப் பயன்பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.
போட்டியானது கீழ்ப்பிரிவு வயது 5 தொடக்கம் 10 வரையும், மேற்பிரிவு வயது 11 தொடக்கம் 15 வரை என இருபிரிவுகளில் நடைபெறும். ஆர்வமுடைய சிறார்கள் தங்கள் பெயர் விபரங்களை உடுவில் பிரதேச கலாசார அதிகாரசபை ஒருங்கிணைப்பாளரிடம் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்பாக பதிவு செய்யுமாறு உடுவில் பிரதேச செயலர் மதுமதி வசந்தகுமார் கேட்டுள்ளார். (21)

சாவகச்சேரி பகுதியில் விபத்துக்களில் சிக்கி;

# 20 நாள்களில் 38 பேர் காயம் ஒருவர் சாவு

### வீதிச் சமிக்ஞைகள் அமைத்துத் தருமாறு பொதுஅமைப்புக்கள் கோரிக்கை

சாவகச்சேரி ஓக.20
சாவகச்சேரி மருத்துவமனைப் புள்ளிவிபரங்களின்பிரகாரம் சாவகச்சேரி நகரப் பகுதியில் இந்த மாதத்தில் நேற்றுக் காலை வரை சாலை விபத்துக்களில் சிக்கி காயமடைந்தோரின் எண்ணிக்கை 38 எனவும் அவர்களில் ஒருவர் சாவடைந்துள்ளார் என வும் தெரிவிக்கப்பட்டது.
எனவே சாவகச்சேரிநகரப்பகுதியில் தினமும் சாலை விபத்துக்கள் இடம்பெற்று வருவதால் வேகக் கட்டுப்பாட்டுக் குறியீடுகளை அமைத்துக் கண்காணிப்புப் பொலிஸாரையும் கடமையில் ஈடுபடுத்துமாறு பிரதேச பொது அமைப்புகளால் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.
சாவகச்சேரி நகரசபையினர், மற்றும் சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோரை அந்த அமைப்புக்கள் வினையமாகக் கேட்டுக் கொண்டனர்.
இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது; சாவகச்சேரி நகரப் பகுதிக்கு பல்வேறு தேவைகளுக்காகத் தினமும் பெருமளவு மக்கள் வருகின்றனர். நகரப் பகுதியில் மருத்துவமனை, பிரதேச செயலகம் நீதிமன்றம், வங்கிகள், பொதுச் சந்தை உட்பட பெருமளவு வணிக நிலையங்களும் உள்ளன. நகரப் பகுதிக்குத் தினமும் ஏனைய பிரதேசங்க ளிலிருந்தும் பெருமளவு மக்கள் தமது தேவை களுக்காக வருகின்றனர்.
ஏ - 9 முதன்மைச் சாலையை இணைக்கும் வகையில் கச்சாய் சாலை தனன்களப்புச் சாலை, டச்சுச் சாலை, தபாலகச் சாலை, தொடருந்து நிலையச் சாலை போன் றவை காணப்படுவதால் இதனூடாக தினமும் பெருமளவு வாகனங்கள் நகரப் பகுதிக்கு வந்து பயணிக்கின்றன.
இந்தப்பகுதியில் வேகக் கட்டுப்பாட்டுக் குறியீடுகள் இன்மையால் வாகனங்கள் அதிகரித்த வேகத்தில் பயணிக்கின்றன. இதனால் தினமும் விபத்துக்கள் இடம் பெறுவதுடன் அநியாயமாக உயிரிழப்புகளும் இடம்பெற்று வருகின்றன. நகரப் பகுதியில் போக்குவரத்துக் கண்காணிப்புப் பொலிஸார் கடமையாற்றுகின்ற போதிலும் வாகனங்களின் வேகக் கட்டுப்பாடு தொடர்பான எந்த வொரு நடவடிக்கையும் மேற்கொள்வதில்லை.
இதனைக் கருத்தில் கொண்டு சாவகச்சேரி நீதிமன்றச் சந்தி தொடக்கம் மருத்துவமனை வரையான ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை வாகனங்கள் குறைந்த வேகத்தில் செல்லக் கூடிய குறியீடுகளை அமைப்பதுடன் அதனைக் கண்காணிக்க பொலிஸாரையும் கடமையில் ஈடுபடுத்த வேண்டும் என்று அந்த அமைப்பினர் கேட்டுக் கொண்டனர். (21,9)





தொற்றுநோய்களுக்கான இலவச பரிசோதனை முகாம் ஒன்று சாவகச்சேரி சுகாதார திணைக்களத்தின் ஏற்பாட்டில் மிருசுவில் விடத்தற்பளை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. தொற்று நோய்களை முன்கூட்டியே இனம் கண்டு அவைகளிலிருந்து விலகுவதற்கான பரிசோதனைகள் இதன் போது மேற்கொள்ளப்பட்டன. குருதி அழுக்கம் நீரிழிவு உயர்குருதி அழுக்கம் அதிக நிறை மற்றும் கண்பார்வை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கும் நடத்தப்பட்டது (21,9)

## நல்லூர் கந்தன் தேர் அன்று

### அருளுரை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஓக.20
நல்லூர் கந்தன் திருவிழாக்காலங்களில் யாழ்ப்பாணம் கதிர்கலையகத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் அருளுரை நிகழ்வுகளில் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் கலாநிதி பால கைலாசநாத சர்மாவின் சிறப்பு அருளுரையும், பண்டிதர்சைவப்புலவர் பொன். சுகந்தனின் கந்தபுராணம் தொடர்அருளுரையும் இடம்பெறவுள்ளது என அறிவிக்கப்பட்டது.
இந்த நிகழ்வு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டது. (21)

++++++++++

### இசை நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஓக.20
நல்லூர் கந்தன் தேர்த் திருவிழா நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை வட்டுக்கோட்டை பம்பலப்பிட்டி மிருதங்க வித்துவான் பிரம்மஸ்ரீ க.சுவாமிநாதன் சர்மாவின் இசை நிகழ்வுகள் நல்லூரில் இடம் பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.
சாஸ்திரிய இசை நிகழ்ச்சியுடனான இந்த நிகழ்வுகள் இன்றுமாலை 7 மணிக்கு நல்லைதிருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இடம்பெறவுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டது. (21)

++++++++++

### இறுவெட்டு வெளியீடு

யாழ்ப்பாணம்,ஓக.18
நல்லூர் கந்தன் கானங்கள் இறுவெட்டு வெளியீட்டு விழா இன்றுஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.
யாழ்ப்பாணக் கதிர்கலையகப் பணிப்பாளர் உடுவை எஸ்.தில்லை நடராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் என்.சண்முகலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார் எனவும் அறிவிக்கப்பட்டது.

++++++++++

### தெய்வீக இசையரங்கு

யாழ்ப்பாணம்,ஓக.20
இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் திருவிழாகாலத்தையொட்டிதெல்லிப்பழைதுர்க்காதேவி ஆலயத்தின் ஏற்பாட்டில் நடத்தும் தெய்வீக இசையரங்கில் நல்லூர் கந்தனின் தேர்த் திருவிழாவான இன்று பாட்டு இடம்பெறும்.
நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் மாலை 6.45 தொடக்கம்பி.ப 8 மணிவரை நிகழ்வு இடம்பெறும், பாட்டு எஸ்.குமாரசுவாமியும், வயலின் அ.ஜெய ராமனும், மிருதங்கம் க.கண்ணதாசும், கடம் அ.செல்வரெத்தினமும், கெஞ்சிரா ஞா. வசந்தும் இசைக்கவுள்ளனர். (21)

++++++++++

### சங்கீத கதாபிரசங்கம்

யாழ்ப்பாணம் ஓக.20
யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் திருவிழாவை முன்னிட்டு நல்லூர் சைவமகா சபையின் ஏற்பாட்டில் "சங்கீத கதாபிரசங்கம்" கடந்த 6ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முதல் நடைபெற்று வருகின்றது.
இதனை கான கதா வாரிதி கலாபூஷணம் பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா நிகழ்த்தி வருகின்றார்.
தினமும் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் மாலை 6.30 மணி தொடக்கம் 8 மணிவரை நடைபெறும் இந்த நிகழ்வின் 15ஆம் நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை கம்பராமாயணத்தின் "கும்பகர்ணன் வதம்" பகுதி இடம்பெறவுள்ளது. (21,ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி உயர்வு

கொழும்பு, ஓக. 20

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் உள்ளிட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர்கள் 8 பேர் பிரதிப் பொலிஸ் மா அதிபர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (5)

# கைதியைப் பார்க்கச் சென்றவரும் சிறைக்குள்

## போதைப் பொருள் கொண்டு சென்றதால் இந்த நிலமை

கொழும்பு, ஓக. 20

கைதி ஒருவருக்கு ஹெரோயின் போதைப்பொருள் கொண்டு சென்ற பெண்ணுக்கு 14 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மாத்தறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதியைப் பார்வையிட 2010ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் சென்றிருந்தார். கைதிக்கு கொடுப்பதற்காக பற்பசை டியூப்பில் போதைப் பொருளை நிறைத்து நூதனமான முறையில் உள்ளே கொண்டு சென்றிருந்தார்.

இதனையடுத்து அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இது தொடர்பான வழக்கில் குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்ட 37 வயதான பெண்ணுக்கு மாத்தறை உயர் நீதிமன்ற நீதிபதி தமித் தொடவத்த பதினான்கு ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்துள்ளார்.

இந்த தண்டனைக்கு மேலதிகமாக இரண்டு லட்சம் ரூபா அபராதம் செலுத்த வேண்டுமெனவும், அவ்வாறு செலுத்த தவறினால் மேலும் இரண்டாண்டுகள் தண்டனை நீடிக்கப்படும் எனவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (5)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iNishta
CANADA
After A/L's or have completed a degree!
WANTS MORE FOREIGN STUDENTS
Are You Ready?
Study, Work & Live in Canada
➔ கனடாவில் உயர்கல்வி ➔ பகுதிநேர வேலை வாய்ப்பு
We Recruit for:
- Cape Breton University, Nova Scotia
- Vancouver Island University, British Columbia
- Kings College, Ontario
- Durham College, Ontario
- Canadore College, Ontario, & many more
Bachelors / Undergraduate Diplomas / Masters and Post Graduate Diplomas
iNishta
பிரதிநிதி யாழ் விஜயம்
ஆகஸ்ட் 21-23 வரை
சந்திக்க விரும்புபவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்
iNishta Consulting
2nd Floor, McLarens Building
123, Bandhaloka Mawatha Colombo 4
E-mail : sl@inishta.com Tel : 0114 953 850
Hotline: 0776 541 250

# மகிந்த அணியினரை துரத்தும் விசாரணைகள்

கொழும்பு, ஓக. 20

லொத்தர் சபை விடயம் தொடர்பில் எதிர்வரும் 25ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் என்னிடம் விசாரணைகளை நடத்தவுள்ளனர் என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குற்றப்புலனாய்வுப் பிரிவு என்னிடம் விசாரணை நடத்த வேண்டியுள்ளதால் நேரம் ஒதுக்கித் தருமாறு கேட்டுக்கொண்டது. கடந்த திங்கட்கிழமை காலை 7.30 மணிக்கு வந்து விசரணை நடத்துமாறு நேரம் ஒதுக்கிக் கொடுத்தேன்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர், சபாநாயகரிடம் அனுமதி பெறவேண்டியுள்ளதனால் அனுமதி பெற்று புதன் கிழமை விசாரணை நடத்துவதற்கு வருகை தருவதாகக் குறிப்பிட்டிருந்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை எனது பாதுகாப்புத் தரப்பை தொடர்புகொண்ட குற்றப்புலனாய்வுப் பிரிவினர் எதிர்வரும் 25 ஆம் தகிதி விசாரணை நடத்துவதற்கு வருகை தருவதாகக் குறிப்பிட்டுள்ளனர் என்றார். (5)

முகவர்கள், விநியோகஸ்தர்கள் தேவை
சன் எலக்ட்ரோனிக் பிரைவேட் லிமிட்ட் ஆகிய நாங்கள் இலங்கையில் முதல்தர சுவர்க்கடிகாரம், கைக்கடிகாரங்கள் ஆகியவற்றின் ஏக முகவர்கள்.
SONAM QUARTZ
▶ Sonam (இந்தியா சுவர்க்கடிகாரங்கள்)
▶ Mondia Classic (கைக்கடிகாரங்கள்)
● வவுனியா, ● முல்லைத்தீவு, ● திருகோணமலை மற்றும் ● யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளுக்கு விநியோகஸ்தர்கள் தேவை.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
SUN ELECTRONICS (PVT) LTD.
(ESWARAN BROS. GROUP).
104/11, கிரான்ட்பாஸ் ரோட், கொழும்பு - 14.
Tel : 011 4796 755 / 077 230 9449

CAPRICORN®
கெப்ரிகோன் மின்விசிறிகள்
மற்றும் வீட்டு உபயோக பொருட்கள் நாடுபூராகவுமுள்ள அனைத்து சில்லறை விற்பனையாளர்களிடம் கிடைக்கும்
1991 முதல் மக்களின் நம்பிக்கையை வென்ற
குறைந்த மின் பாவனையில் அதி கூடிய பயன்
கெப்ரிகோன் என்டபிரைசஸ் (தனியார்) நிறுவனம்
காட்சியறை - புறக்கோட்டை : இல: 59, மெலிபன் வீதி, கொழும்பு - 11.
தொ.பேசி: 011 - 2473441, 011 - 4737443 தொ.நகல்: 011 - 2735586
விநியோகஸ்தர்களின் அவசர அழைப்பு - 077-3070527

VACANCY
CINEC INSTITUTE OF HIGHER EDUCATION
27th ANNIVERSARY 1990 / 2017
Qualified, experienced lecturers on full time, contract and visiting basis for B. Ed Degree programmes
• Bachelor of Education in English • Bachelor of Education in Physical Science • Bachelor of Education in Biological Sciences
at
Trincomalee and Jaffna
Academic Profile
• Lecturer / Snr. Lecturer in Mathematics / Physics / Biology / Chemistry / English
• A degree with specialization in the relevant discipline or a degree with post graduate qualifications in the relevant discipline
• Teaching in Tamil medium
• Specialized in B.Ed. qualification
• A Doctoral level qualification is an added advantage
Other Requirements
• Minimum experience of 2 years in teaching the relevant subject in a Higher Educational Institution
• Fluency in English and Sinhala/Tamil
• Computer literacy
• Effective presentation skills
Attractive remuneration package on par with the industry standards will be offered to commensurate with qualifications and experience of the candidate.
Applications along with curriculum vitae with names of two non-related referees should be e-mailed within 14 (fourteen) days of this advertisement to:
jobs@cinec.edu
Please include a recent photograph and also indicate the post applied as the subject in the mail
Millennium Drive, IT Park, Malabe.
T: 011 4 486 400 / 011 2 413 500 E: jobs@cinec.edu
World Class Excellence in Education and Training... www.cinec.edu

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்
சம்பத் வங்கியிடமிருந்து தற்போது தங்கத்திற்கு சிறந்த தொகை!
சம்பத்
அடகுச் சேவை
அவசரத்திற்கு உதவும் அயலவன்
கெரட் 24 ற்கு ரூ. 40,000/-
கெரட் 22 ற்கு ரூ. 37,000/-
நாடு முழுவதிலுமுள்ள சம்பத் வங்கி கிளைகளில் தவணை முறையில் செலுத்தமுடியும்.
0112 30 30 50 www.sampath.lk Sampath Bank Fitch Ratings A+(lka)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சன் சீ கப்பல் விவகாரம்

# ஆள் கடத்தல் குற்றச்சாட்டில் தமிழருக்கு 18 ஆண்டுகள் சிறை விதிக்கப்படலாம்

கொழும்பு, ஓக. 20
சன் சீ கப்பலில் ஆள்களைக் கடத்தினார் என்று குற்றம்சாட்டப்பட்டுள்ள தமிழிருக்கு 18 வருட சிறைத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று கனேடிய சட்டத்துறை கோரியுள்ளது.

தாய்லாந்தில் இருந்து 492 இலங்கைத் தமிழர்களுடன் சட்ட விரோத பயணத்தில் ஈடுபட்டிருந்த சன் சீ கப்பல் 2010ஆம் ஆண்டு கனடாவின், பிரிட்டிஷ் கொலம்பியாவில் நங்கூரமிட்டது.

இந்த ஆள் கடத்தலுடன் தொடர்புடையவர் என்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து, பயணியாக அந்தக் கப்பலில் பயணித்த குணரொபின்சன் கிறிஸ்துராஜா என்பவருக்கு முன்னதாக தண்டனை வழங்கப்பட்டது. அதனை ஆட்சேபித்து, அவர் தாக்கல் செய்த மனு மீதான விசாரணைகளின் முடிவிலும் அவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே 6 வருடங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவர், தீர்ப்பு வழங்கப்பட்டால் மேலும் 12 வருடங்கள் சிறையில் இருக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (5)

# தமிழ் மக்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை

## முன்னாள் சமாதானத் தூதுவரின் இப்போதைய பேச்சு இது

கொழும்பு, ஓக. 20
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை, தமிழ் மக்கள் ஏன் மகத்தான ஒரு தலைவராக விரும்பினார்கள் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இவ்வாறு இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

இந்திய ஊடகத்துக்கு வழங்கியுள்ள



செவ்வியிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரபாகரனை முதல் தடவையாகச் சந்திப்பதற்கு நான் சென்றிருந்தபோது, இலங்கையில் யாருமே அதனை அறிந்திருக்கவில்லை. தலைமை அமைச்சருக்கு கூட அது தெரியாது. சந்திக்கச் செல்வதற்கு அரச தலைவரே எமக்கு அனுமதி அளித்திருந்தார்.

நாங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து பிரதேசத்தில் பிரபாகரனைச் சந்தித்தோம். அதற்காக நாங்கள் உலங்குவானூர்தியில் சென்றிருந்தோம். தாழ்வாகவும், மேலுயர்ந்தும் பறந்து சென்றது அது. மலைகளாக இருந்திருந்தால் பயங்கரமாக இருந்திருக்கும். நாங்கள் செல்வதை இராணுவத்தினரோ, விடுதலைப் புலிகளோ அறிந்திருக்கவில்லை. அதனால் அவர்கள் இலகுவாக சுட்டு வீழ்த்தக் கூடும்.

நாங்கள் பிரபாகரனைச் சந்தித்தோம். அது ஒரு நல்ல சந்திப்பு. அமைதி முயற்சிகளில் அவர்கள் ஆர்வம் கொண்டிருப்பதை உறுதிப்படுத்தினர்.

ஆனால், தமிழர்கள் மத்தியில் பிரபாகரன் ஏன் மகத்தான நிலையில் இருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்வது கடினமாக இருந்தது. அந்த நேரத்தில் அவர் கடவுளாக, மீட்பராக போற்றப்பட்டார். தமிழ் மக்கள் ஏன் அவரை அப்படிப் போற்றினார்கள் என்று எம்மால் உண்மையில் புரிந்து கொள்ள முடியவில்லை -என்றார். (5)

# ட்ராவிஸ் சின்னையா அமெரிக்காவின் முகவர்

## மகிந்த ஆட்சிக் காலத்தில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 20
அமெரிக்காவின் முகவர் என்று மகிந்த ஆட்சிக் காலத்தில் குற்றம் சுமத்தப்பட்டவரையே தற்போதைய அரசு கடற்படைத் தளபதியாக நியமித்துள்ளதாக சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கைக் கடற்படையில் 47 ஆண்டுகளுக்குப் பின்னர் தமிழர் கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். றியர் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா, மகிந்த ஆட்சிக் காலத்தில் அமெரிக்காவின் முகவர் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருந்தார்.

அரசியல் பழிவாங்கல் அச்சுறுத்தலால் நாட்டிலிருந்து வெளியேறி, ஆஸ்திரேலியாவில் தஞ்சமடைந்திருந்தார். ஆட்சி மாற்றத்தின் பின்னரே இவர் நாடு திரும்பியிருந்தார்.

இதேவேளை, தற்போதைய இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்காவும், மகிந்த ஆட்சிக் காலத்தில் நாட்டிலிருந்து வெளியேறி ஆட்சி மாற்றத்தின் பின்னரே நாடு திரும்பியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (5)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

### வீடு விற்பனைக்கு
யாழ்ப்பாணம், கொழும்புத்துறை வீதி பாண்டியன் தாழ்வில் 1½ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.
**077 530 3198** (CS 6888) (14)

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு
டேமன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு.
**077 633 4850** (CS 6905) (14)

### வீடு, காணி விற்பனைக்கு
தெஹிவளையில் Arpico இற்கு எதிரில் Auburn side இல் 14.5 பேர்ச் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. Tourism Approvaled. 5 மாடிகள். 1300 சதுர அடி. 10 வீடுகள் கட்டலாம். 1 பேர்ச் 35 இலட்சம்.
**071 316 8067, 071 484 0610**

### காணி விற்பனைக்கு
கோயில் வீதி, கொழும்புத்துறையில் தென்னைமரம், நல்ல தண்ணீர் வசதிகள் உள்ள சுற்று மதில் உள்ள காணி விற்பனைக்கு.
**021 221 1959/076 620 8358**

### வீடு விற்பனைக்கு
யாழ்.நகருக்கு அருகில் ஓட்டுமடம் சந்தியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு. சுற்றுமதிலுடனும், நன்னீர்க் கிணறுடனும் கூடிய 1 ¼ பரப்புக்காணி உடனடியாக விற்பனைக்குண்டு.
**077 715 5866, 076 345 5669**

### வீடு விற்பனைக்கு
வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலய வீதியில் 04 பரப்புக்காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
**077 833 2954/ 004552724262**

## தேவை

### மணமகள் தேவை
1992 இல் பிறந்த கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த குருக்கள் மணமகனுக்கு மணமகள் தேவை. (CS 6689) (14)
**075 528 4009/ 075 648 0755**

### தேவை
கார் 19 அல்லது 300 இலக்கம் கொண்டவை விரும்பத்தக்கது.
**077 223 0561** (CS 6946) (14)

### வாகன சாரதி தேவை
இலகு ரக வாகனத்துக்கு சாரதி தேவை. AD சாரதி அனுமதி உள்ளவர் விரும்பத்தக்கது.
**077 300 1763, 077 758 5412**

### வீடு வாடகைக்குத் தேவை
நல்லூர் கோயிலுக்கு அண்மித்த, திருநெல்வேலி, பிறவுண் வீதி ஆகிய இடங்களில் நல்ல நிலையிலுள்ள வீடு வாடகைக்குத் தேவை.
**072 486 4630**

### வேலையாள்கள் தேவை
தெகிவளையிலுள்ள பிரபல சலூனுக்கு வேலையாள்கள் தேவை. யாழ்ப்பாணம், வவுனியா, வன்னி மாவட்ட இளைஞர்கள் தொடர்பு கொள்ளவும். சம்பளம் திறமைக்கேற்ப சம்பளம் சிறந்த அனுபவமுள்ளவராயின் மாதம் 60000 /=
**Raj:077 0537608/ 077 663 3446**

### தேவை
யாழ்.நகரில் இயங்கும் பிரபல தனியார் நிறு வனம் ஒன்றுக்கு விற்பனை பிரதிநிதி தேவை. சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. சுயவிவரங்களை கீழ் உள்ள விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்.

**விளம்பர இல- 5542,**
C/O **உதயன்**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

# ஏனையவை

### காணி விற்பனைக்கு
மீசாலை A9 வீதியில் இராமாவில் கோயிலுக்கருகில் 20 பேர்ச் காணி உடன் விற்பனைக்குண்டு. (தரகர் வேண்டாம்)
**071 444 5866**

### வீடு வாடகைக்குண்டு
இராசா மாளிகை, பிரம்படி லேன், கொக்குவிலில் (யாழ். பல்கலைக்கழகத்துக்கு மிக அருகில்) சகல நவீன வசதிகள் கொண்ட இருவீடுகள் வாடகைக்குண்டு. உத்தியோகத்தர்கள் மற்றும் அரச அரசார்பற்ற நிறுவனங்களும் விரும்பத்தக்கது
**077 556 4519/ 076 445 8387**

### வீடு வாடகைக்கு
கஸ்தூரியார் வீதி யாழ்.நகரை அண்டிய பிரதேசத்தில் கில்னர் லேனில் மூன்று அறைகளுடன் கூடிய வீடு வாடகை 12000 முற்பணம் 300 000 உடன் வாடகைக்கு உண்டு.
**077 720 6714**

### அறை வாடகைக்குண்டு
யாழ்.போதனா வைத்தியசாலை வீதியில் இருவருக்கு அறை வாடகைக்குண்டு. பெண்கள் மட்டும்.
**071 704 5075, 075 756 3588**

### ஒருங்கிணைப்பாளர் தேவை
யாழ்ப்பாணம் Town இல் பிரபல வைபவசேவை மற்றும் அழைப்பிதழ் காட்சியறைக்கு ஒருங்கிணைப்பாளர் உடனடியாகத் தேவை. A/L மற்றும் ஆங்கில அறிவு அவசியம். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
**077 815 2693**

### பணிப்பெண் தேவை
திருகோணமலை நகரில் வசிக்கும் வயதான பெண்மணி ஒருவரைப் பராமரிக்க நம்பிக்கையான சேவை மனப்பாங்குடைய பொறுப்புகள் அற்ற நடுத்தர வயது பெண்ணொருவர் தேவை. தங்கி இருந்து வேலை செய்யக்கூடியவராக இருக்க வேண்டும்.
வடக்கு, வன்னி, கிழக்கு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது. உணவு, உடை, தங்குமிட வசதிகளுடன் தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
(தரகர்கள் தேவையில்லை) (CS 6861) (14)
**076 944 1114**

### அறை வாடகைக்கு
யாழ் நகருக்கு அண்மையில் அரச உத்தியோகத்தவர்கள் விரும்பத்தக்கது.
**077 894 9672** (CS 6906) (14)

### தேவை
யாழ்ப்பாணத்தில் சந்தைப்படுத்தல் அதிகாரிகள் (Marketing Executive ) வேலையாள் (ஆண்/ பெண்) தேவை. தகுந்த ஊதியம்+ கமிஷன் வழங்கப்படும்.
**071 764 3322, 077 764 3322**

### வைத்தியம்
தலைமுடி உதிர்தல், முள்ளந்தண்டு பிரச்சினை, பாரிசவாதம், சலரோகம், உடல் பருமன் குறைத்தல் அல்லது கூட்டுதல் (வயிறு / மார்பு / கை) ஆண்மைக் குறைபாடுகள், குழந்தையின்மை போன்றவற்றுக்கு மருந்தின்றி, பக்கவிளைவின்றி அக்குபன்சர் சிகிச்சை வழங்கப்படும்.
**நோய் எதுவாயினும் தீர்வு உண்டு.**
**(ACU) Dr.Sanker**
**077 035 7307**

### வீடு காணி விலைக்குத் தேவை
**தேவைப்படும் இடங்கள்**
* **யாழ்.நகரில் இருந்து கச்சேரி**
* **நல்லூர்**
* **கோண்டாவில்**
* **கொக்குவில்**

ஆகிய இடங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் தேவை.
2 தொடக்கம் 5 பரப்புக்குள் தேவை.
**077 361 1282**

### WALLAWATTE
முன்பள்ளி ஆசிரியருக்கான பயிற்சிநெறி (Montessori Method of Education) தமிழிலும் ஆங்கிலத்திலும் நடைபெறும். புதிய வகுப்புக்கள் SET 06 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது. சேரவிரும்பும் மாணவர்கள் August 31 ஆம் திகதிக்கு முன் பதிவு செய்யவும். அத்துடன் Cake, தையல் வகுப்புக்களும நடைபெறுகின்றன. அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட "TVEC Diploma" சான்றிதழும் வழங்கப்படும்.

**தொடர்பு கொள்ளவேண்டிய T.P. No.**
2504218, 077 9415686
**நடைபெறும் இடம்:** K.K.S. Road, **சுன்னாகம்.**

### உடனடி தேவை
தெகிவளையில் இயங்கும் முன்னோடி ரெஸ்ரோரன்ஸ் ஒன்றுக்கு சமையலறை உதவியாள்கள், இறைச்சி சுத்தம் செய்பவர்கள் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்து தரப்படும்.
**077 919 7661** (ACO 7017) (14)

### உடனடி தேவை
ஹோட்டல் ரெஸ்ரோரன்ஸ் ஒன்றுக்கு Accounts Assistants தேவை. Computer மற்றும் QB Accounts அறிவு தேவை. சம்பளம் மற்றும் மேலதிக சலுகைகள் வழங்கப்படும்.
**077 755 2795** (ACO 7015) (14)

### உடனடி தேவை
தெகிவளையில் இயங்கும் Family Restaurant இற்கு களஞ்சியசாலை கட்டுப்பாட்டாளர் (Stores Controller) தேவை. சம்பளம் மற்றும் இலவச உணவு தங்குமிட வசதி வழங்கப்படும்.
**077 722 9877** (ACO 7016) (14)

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை
MajesticCineplexSL
021- 2227712
www.ceylontheatres.lk

## விஷேட பல் வைத்திய சேவை

* பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
* முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

**மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்**

* **மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)**
* **ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்**
* **நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல்** (Crown & Bridges, Implants)
* **வேர்முறை சிகிச்சை** (Root Canal Filling)
* **நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்**
* **பற்களை வெண்மையாக்குதல்** (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 934 7687 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

### மருத்துவ ஆலோசனை
வெள்ளவத்தை
றோயல் IVF கிளினிக் ஆலோசகர்
**Dr. M. சதானந்தன் அவர்கள்**
யாழ்ப்பாணம்
Northern Central Hospital இல்
**ஓகஸ்ட் மாதம் 24 ஆம் திகதியிலிருந்து 27ஆம் திகதி வரை**
ஆலோசனை வழங்கவுள்ளார்.
FLEX Graphic
முன்பதிவுகளுக்கு : Miss. Rupa - 021 7423200
Sister Vicky - 077 282 5869

### பதவி வெற்றிடம்
படவரைவில் (Auto Cad) முன் அனுபவத்துடன் கணிய அளவியலில் (Q.S) குறைந்தது மூன்று வருட அனுபவமும் தகைமையும் உடையவர்கள் நேரில் சமுகம் தரவும்

தொடர்பு :
**நிர்வாக உத்தியோகத்தர்**
**45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.**
**021 222 6239**

### உதவி குருக்கள் பரிசாரகர் தேவை



கொழும்பு 13 ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்கு
**உதவிகுருக்கள், பரிசாரகர்**
(மடைப்பள்ளி ஐயர்)
உடனடியாகத் தேவை. தங்க வீடு வசதியும், தகுந்த சம்பளமும் வழங்கப்படும்.

விண்ணப்பிக்கவேண்டிய முகவரி
90, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு - 13.
Phone: 0722 2447606 / 2433881 Fax: 2336033
Email : muruganginthupitiya@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# எதுவும் மாறிவிடாது!

இலங்கையில் நிரந்தர அமைதி ஏற்படுவதற்கான வாய்ப்பும் நல்லிணக்க முயற்சிகளும் அறுந்து நூலிழையில் தொங்கிக் கொண்டிருக்கும் தருணத்தில், கடற்படைத் தளபதியாகத் தமிழர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார் என்கிற செய்தி வந்திருக்கிறது. ரியர் அட்மிரல் ராவிஸ் சின்னையாவுக்கு அந்தப்பதவியை அரசதலைவர்மைத்திரிபாலசிறிசேன வழங்கியிருக்கிறார். 47 வருடங்களின் பின்னர், அதாவது போர் தொடங்கி முடிவதற்கு 17 வருடங்களுக்கு முன்பிருந்து, தமிழர் ஒருவர் இலங்கையின் கடற்படைக்குத் தளபதியாகியிருக்கிறார் என்கிறதகவல்கள்ஊடகங்களில்பெரிதுபடுத்தப்பட்டிருக்கின்றன.

போர்க் காலங்களில் தமிழர்களைக் கொன்று குவித்ததும், பயங்கரவாதம் என்ற போர்வையின்கீழ் இன அழிப்புச்செய்ததும் 99 சதவீதம் சிங்களவர்களை மட்டுமே கொண்டதுமான போர்ப்படை ஒன்றுக்குத் தமிழர் ஒருவர் தளபதியாக நியமிக்கப்படுகிறார் என்றால், அது நல்லிணக்கத்திற்கான அர்ப்பணிப்பு, வேணவாஎன்றெல்லாம்பாரப்படக்கூடியது; இனிவரும்நாள்களில் அது அப்படிப்பாராடப்படும்என்பதும் தெரிந்ததே.

அதிலும் போர் முடிந்த பின்னரும் தமிழர்களுடனான உறவைச்சரிசெய்ய முடியாதிருக்கும் இலங்கைப்படை ஒன்றின் தளபதியாகத் தமிழரை நியமிப்பது என்பது அந்த உறவைச் சரிசெய்வதற்கானநல்லிணக்கச்சமிக்ஞையாகவும் நோக்கப்படப்பாலது.

2015ஆம் ஆண்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் பின்னர் இதுபோன்றுஉயர்பதவிகளில்தமிழர்கள்நியமிக்கப்படுவது முன்னரும் நடந்திருக்கிறது. தலைமை நீதியரசராக க.சிறிபவன் என்கிற தமிழர் நியமிக்கப்பட்டார். மத்திய வங்கியின் ஆளுநராக அர்ஜுன மகேந்திரன் நியமிக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து தமிழ் வம்சாவளியைச் சேர்ந்தவரான இந்திரஜித் குமாரசுவாமி நியமிக்கப்பட்டார்.

அரசின் உயர் பதவிகளில் தமிழர்களை நியமிப்பதன் மூலம் அரசு தமிழர்களுக்கு நல்லிணக்கச் சமிக்ஞையை வெளிப்படுத்தலாம் என்று மேற்கு நாடுகளால் வழங்கப்பட்ட ஆலோசனைக்கு அமையவே இத்தகைய நியமனங்கள் வழங்கப்பட்டன என்கிற விமர்சனம் அப்போதே இருந்தது. ஆனாலும் அந்த நடவடிக்கையின் பின்னால் இருந்த ஒரு நோக்கம் இந்த நாட்டில் தாம் இரண்டந்தரக் குடிமக்களாகவே நடத்தப்படுகிறோம் என்று தமிழ் மக்களுக்கு நீண்டகாலமாக இருந்து வந்த குறையை நிவர்த்திப்பது என்பதாகும்.

ஆனால், அந்த நியமனங்களால் அந்தக் குறை போக்கப்பட்டதா என்று கேட்டால், இல்லை. நாட்டின் உயர்பதவிகளில் தமிழர்கள் இருவரை நியமனம் செய்தபோதும், நாடு முழுவதும் பரந்து வாழும் தமிழர்களை கண்டுகொள்ளாத, அவர்களின் கோரிக்கைகளை ஒதுக்கிவிடும் போக்கை அரசோ அரச இயந்திரமோ ஒருபோதும் கைவிடவில்லை. மக்கள் தமது தேவைகளை வலியுறுத்தி வீதிகளில் இறங்கிப் பல மாதங்களாகப் போராட்டங்களை நடத்தியபோதும்கூட, கொழும்பின் செவிகளில் அவை ஒலிக்கவில்லை, கொழும்பின் இதயத்தையும் அது எட்டவில்லை. அதனால் தாங்கள் இந்த நாட்டில் இரண்டாந்தரக் குடிமக்களாகவே நடத்தப்படுகின்றோம் என்கிற அவர்களின் எண்ணத்தில் மாற்றமும் ஏற்படவில்லை. இன்னும் சொல்லப்போனால் நியமிக்கப்பட்டவர்களில் ஒருவர் பெரும் ஊழல் குற்றச்சாட்டிலும் சிக்கிதற்போதைய அரசுக்குக்கடும் நெருக்கடிகளையும் ஏற்படுத்தி வருகிறார்.

ஆக, இலங்கையைப் பொறுத்தவரையில் அரசு உயர் பதவிகளில் தமிழர்களை நியமிப்பதால் களநிலவரத்தில் எதுவும் மாறிவிடப்போவதில்லை. கடற்படைத்தளபதியாகதமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டார் என்பதும் அதைப் போன்றதுதான். தமிழர்களைஈவிரக்கமின்றிக் கொன்றொழித்த, கொடுமைப்படுத்திய படையின் ஓர் அங்கமே அவர். தனது மேலதிகாரிகளின் உத்தரவை அப்படியே செயற்படுத்தும், செயற்படுத்த வேண்டிய கடமைமிகு தளபதி அவர். தெளிவான சிங்களமயமான ஒரு படைக் கட்டமைப்பின் கீழ் தமிழராக இருந்தால் என்ன முஸ்லிமாக இருந்தால் என்ன, அவர்கள் படையினரேதான். அவர்களுக்கும் ஏனைய படையினருக்கும் இடையில் இனத்தால் வேறுபாடு ஏதும் கிடையாது.

எனவே கடற்படையின் தளபதியாகத் தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டார்என்பதால், இங்குஎதுவும் மாறிவிடப்போவதில்லை. இன முரண்பாட்டுக்கான, மோதலுக்கான, சண்டைக்கான, போருக்கான அடிப்படைக் காரணங்களுக்குத் தீர்வு காணப்படாத வரைக்கும் இதுபோன்ற சிறு சிறு சலசலப்புகள் உலக நாடுகள் மத்தியில் கொழும்பு தன்னைக் காத்துக்கொள்ள உதவுமே தவிர, தமிழ் மக்களுக்கு எந்தவிதத்திலும் பயனுள்ளதாக இருக்கப்போவதில்லை.




# மத்திய வங்கி பிணைமுறி ஊழலில் சிக்கித் திணறும் கூட்டு அரசு

எம்.ஐ.முபாறக்

அபிவிருத்தியில் இலங்கையைவிட பல மடங்குகள் பின் தங்கி நின்ற நாடுகள் பலவும், அபிவிருத்தி விடயத்தில் அன்று இலங்கையை முன்னுதாரணமாகக் கொண்டு செயற்பட்ட நாடுகள் பலவும் இன்று பிரமிக்கத்தக்க வகையில் முன்னேறிவிட்டன. ஆனால், இலங்கையர்களாகிய நாம் அப்படியேதான் இருக்கின்றோம். இதற்குக் காரணம் நாட்டை மாறி மாறி ஆட்சி செய்த அரசுகளின் ஊழல்கள்தான்.

### கூட்டு அரசிலும் ஊழல்

இலங்கையின் வரலாற்றில் ஊழல், மோசடியற்ற அரசொன்றின் ஆட்சியைக் காண்பதென்பது அரிதுதான். ஆட்சியாளர்களுக்கு ஏற்ப ஊழல், மோசடிகளின் அளவுகளில் வேறுபாடுகள் இருந்திருக்குமே தவிர ஊழல், மோசடிகள் அறவே இல்லாதஓர்அரசுஇருந்ததேயில்லை. அந்த வரிசையில் அதிக ஊழல்கள் நிறைந்த அரசாக மகிந்தவின் அரசைத்தான் சொல்ல முடியும். நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு, பல ஆயிரம் கோடி ரூபாக்கள் ஊழலுக்குள் சிக்கியதன் காரணமாகவே மகிந்தவின் ஆட்சி கவிழ்ந்தது.



இந்த ஊழலுக்கு எதிராக, ஊழலை ஒழிக்கப் போவதாகக் கூறிக் கொண்டு ஆட்சியைக் கைப்பற்றிய மைத்திரி- ரணில் கூட்டு அரசு அதற்கு விதிவிலக்கல்ல என்பது அது ஆட்சிபீடமேறி ஒரு மாதத்துக்குள் நிரூபிக்கப்பட்டுவிட்டது.

கூட்டு அரசு ஆட்சி மலர்ந்து இரண்டரை வருடங்கள் ஆகிவிட்டன. இந்த இரண்டரை வருடங்களாகவும் இந்த ஆட்சிக்குத் தலையிடியாக இருந்து வருவது மத்தியவங்கிபிணைமுறிவழங்களில் இடம்பெற்ற ஊழலாகும்.

### சிக்கிக் கொண்டார் ரவி கருணாநாயக்க

[illegible] தேசியபட்டியல் [illegible] இந்த ஊழலுடன் தொடர்புபட்டுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டு வந்த நிலையில், அவர்களுள் முதன்மையானவராக அடையாளம் காணப்பட்டுள்ளவர் முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கதான்.

இந்தப் பிணைமுறி ஊழலுடன் தொடர்புபட்ட 'பேர்பச்சுவல் நிறுவனம்' இந்த விவகாரத்தில் மோசடியானமுறையில் இலாபம் ஈட்டுவதற்கு ரவி உதவியமையும், அதற்காக அவருக்கு ஆடம்பர வீடு ஒன்று அந்த நிறுவனத்தால் வாடகைக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டமையும் அரச தலைவர் ஆணைக்குழுவின் விசாரணை மூலம் வெளிவந்தது.

மாதமொன்றுக்கு பதினான்கரை லட்சம் ரூபா வாடகையில் ஒன்பது மாதங்களுக்கு அந்த வீடு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. பின்பு ரவி கருணாநாயக்கவின் நிறுவனம் அந்த வீட்டை 160 கோடி ரூபாவுக்குக் கொள்வனவு செய்தது.

ஆனால், அதற்கானபணத்தை ரவியின் நிறுவனம் செலுத்தியமைக்கான ஆதாரங்கள் எவையும் இல்லை. பிரிட்டனில் வாழும் லட்சுமிகாந்தன் என்பவரேஅந்தப்பணத்தைதவணை முறையில் செலுத்தி வருகிறார் என்று ரவி கருணாநாயக்க கூறுகின்றபோதிலும் அதிலும் குழப்பம் உள்ளது.

பேர்பச்சுவல் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன அலோசியசுக்கும், ரவிக்கும் இடையில் 10 வருடங்களாக உறவு இருந்து வருவதாக அறியப்பட்டுள்ளது. பிணை முறி ஊழல் இடம்பெற்ற காலப்பகுதியில் ரவியும் அலோசியசும் 13 தடவைகள் சிங்கப்பூரில் சந்தித்துள்ளனர் என்றும் ஒரு தடவை இருவரும் இணைந்து ஒரே விமானத்தில் சிங்கப்பூர் சென்றனர் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஆனால், இந்தக் குற்றச்சாட்டுக்களை ரவியால் உறுதியாக மறுக்க முடியவில்லை. அரச தலைவர் ஆணைக்குழுவின் விசாரணையின்போது அவர் உளறிக்கொட்டி மாட்டிக்கொண்டார். ஒன்பது மாதங்களாக குடியிருந்த வீட்டுக்கு யார் வாடகை செலுத்துகின்றார் என்பதைரவிஅறிந்திருக்கவில்லை என்று கூறியதன்மூலம், அவர் நடந்த ஊழலை மறைக்க முடியாமல் தடுமாறுகிறார் என்பது தெரிகிறது.

ஒரு முக்கிய அமைச்சரின் பதில் இவ்வாறு சிறுபிள்ளைத்தனமானதாக இருப்பதன்மூலம் அவர் ஊழலில் ஈடுபட்டுள்ளார் என்பது உறுதியாகின்றது. இதனைத் தொடர்ந்துதான் அவருக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை மகிந்த அணி கொண்டுவந்தது.

அந்தத் தீர்மானத்துக்கு அரசுக்குள்ளேயே பெரும்பான்மை ஆதரவு இருக்கும் என்று ரவி நினைத்திருக்கவில்லை. அதிலும் அதிர்ச்சியான விடயம் என்னவென்றால், அவரது கட்சிக்குள் இருந்தே அவருக்கு எதிரான வாக்குகள் கிளம்பியமைதான். நாலாபுறமும் அழுத்தம். அமைச்சுப் பதவியை தாமாகக் கைவிடுவதைத்தவிர வேறுவழி இருக்கவில்லை அவருக்கு.

தீர்மானம் விவாதத்துக்கு வந்தால் அது நிச்சயம் வெற்றி பெறும் சாத்தியமே இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறும் சாத்தியமே இருந்தது. இதனால் அரச தலைவரும், தலைமை அமைச்சரும் அமைச்சர் ராஜித சேனாரத்னவும் சேர்ந்து பதவியைக் கைவிடுமாறு ரவிக்கு ஆலோசனை கூறி பதவியைக் கைவிட வைப்பித்தனர்.

இந்த விடயம் அரசுக்குப் பெரும் நெருக்கு தலை, அவப்பெயரை ஈட்டிக் கொடுத்துள்ளது. மகிந்த ஆட்சியில் இடம்பெற்ற மிகப் பெரிய மோசடிகள் எல்லாம் அவ்வளவு தூரம்பேசப்படாது, இந்தவிடயம்மாத்திரம் ஏன் இவ்வளவு தூரம் பேசப்படுகின்றது என்பதையும், இந்தப் பிணைமுறி மோசடி எப்படி இடம்பெற்றிருக்கின்றது என்பதையும்மக்கள் அறிந்துவைத்திருக்க வேண்டியது அவசியமாகும்.

"மத்திய வங்கி மோசடி,மத்திய வங்கி மோசடி" என்று பேசப்படுகின்றதே தவிர மத்திய வங்கி மோசடி என்றால் என்ன;அது எவ்வாறு இடம்பெற்றது என்று சாதாரண பொது மக்களுக்குத் தெளிவாகத் தெரியாது.

**பிணைமுறி என்றால் என்ன?**

அரசுக்கு நிதித் தேவை ஏற்படும்போது, மத்திய வங்கி அரசின் தரகராக இருந்து மக்களிடம் இருந்து கடன் வாங்கி அதை அரசுக்கு வழங்கும் ஒரு முறைமைதான் இந்த "பிணைமுறி வழங்கல்" என்ற முறைமை. மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ள முதன்மைவணிகர்கள் (Primary Dealers) என்று அழைக்கப்படும் 16 நிதி நிறுவனங்களிடம் இருந்தே மத்திய வங்கி அந்தக் கடனைப் பெற்றுக்கொள்ளும். மக்கள் இந்தத்தரப்பினர்கள் ஊடாகவே மத்திய வங்கியிடம் பிணைமுறியைப் பெற்று மத்திய வங்கிக்கு கடனைக் கொடுக்க முடியும்.

நூறு ரூபா பெறுமதியாக இந்தப் பிணை முறி விநியோகிக்கப்படும். வட்டி விகி தத்துக்கு ஏற்ப பிணைமுறிகளைப் பெற்றுக் கொள்ளும் மக்கள், இலாபத்தை அடைவர். இன்னும் எளிமையாகச் சொல்லப் போனால், மத்திய வங்கிக்கு அல்லது அரசுக்கு மக்கள் வட்டிக்குப் பணம் கொடுப்பதே பிணைமுறி விநியோகமாகும்.

**மகிந்த போட்ட வீதிகளுக்காக....**

தற்போது சர்ச்சையில் சிக்கியுள்ள பிணை முறி எதற்காக வழங்கப்பட்டது என்பதைப் பொதுமக்கள் தெரிந்து கொள்ளுதலும் அவசியமாகும்.

தமது ஆட்சிக் காலத்தில் வீதி அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்ட ஒப்பந்தக்காரர்களுக்கு முழு ஒப்பந்தப் பணத்தையும்செலுத்தாமலேயே ஆட்சியில் இருந்து வெளியேறினார் மகிந்த. அந்த ஒப்பந்தக்காரர்கள் புதிய ஆட்சியாளர்களை நெருக்கத் தொடங்கினர். அவர்களுக்கு வழங்குவதற்கு ஆயிரத்து 350 கோடி ரூபா நிதி தேவைபட்டது. அதற்கான பணம் அரசின் வசம் இருக்காததால்தான், மத்திய வங்கி பிணைமுறி விநியோகத்தின் ஊடாக அந்த நிதியைத் திரட்டுவதற்கு அரசு தீர் மானித்தது.

முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக,நிதி அமைச்சின் செயலாளர், மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன், நெடுஞ்சாலைகள் அமைச்சர்கபீர்காசீம்மற்றும்தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சார்பில் மாலிக் சமரவிக்ரம ஆகியோர் இது தொடர்பில் 2015 பெப்ரவரிமாதம் 25ஆம்திகதிநிதிஅமைச்சில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர். அந்தக் கலந்துரையாடலின் முடிவில் இந்தப் பிணைமுறி விநியோகத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

ஆயிரம் கோடி ரூபா நிதியைத் திரட்டும் நோக்கில் முதலில் 100 கோடி ரூபாவைத் திரட்டுவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. அதற்காக மத்திய வங்கிக்குக் கடன் வழங்குவதற்காக பதிவு செய்யப்பட்டுள்ள 16 நிறுவனங்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அப்போது தான் குறித்த மோசடித் திட்டமும் அரங்கேற்றப்பட்டது.

**இப்படித்தான் மோசடி மேற்கொள்ளப்பட்டது**

மத்திய வங்கிக்கு கடன் வழங்கவதற்காக, அதில்பதிவுசெய்யப்பட்டுள்ள 16 நிதிநிறுவனங்களுள் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனின் மருமகன் அர்ஜுன ஆலோசியசின் (Perpetual Treasuries) பேர்ச்சுவல் றெசறீஸ் என்ற நிறுவனமும் ஒன்று.

நூறு கோடி ரூபாவை திரட்டுவதற்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது என்று ஏனைய நிறுவனங்களிடம் தெரிவித்து விட்டு, 1000 கோடி ரூபாவைத் திரட்டும் அந்த ரகசிய திட்டத்தை மகேந்திரன் அவரது மருமகனுக்கு மாத்திரம் கூறி வைத்தார். அதற்கு ஏற்ப 90 வீதத்துக்கும் அதிகமான பிணைமுறிகளை பெறுவதற்கு மருமகன் தயாரானார்.

அவர் அந்தப் பிணைமுறியைப் பெறுவதற்கு வசதியாக ஏலமிடும் நேரத்தையும்



நூறு கோடி ரூபாவை திரட்டுவதற்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது என்று ஏனைய நிறுவனங்களிடம் தெரிவித்து விட்டு, 1000 கோடி ரூபாவைத் திரட்டும் அந்த ரகசிய திட்டத்தை மகேந்திரன் அவரது மருமகனுக்கு மாத்திரம் கூறி வைத்தார்.

ஐந்து நிமிடங்களால் அதிகரிப்பதற்கும் மகேந்திரன் திட்டம் தீட்டினார். இந்த இரண்டு இரகசியத் திட்டங்களும் அந்த வேளையில்ஏனையநிறுவனங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

திட்டப்படி, ஏலத்துக்கான அந்த நாளான 2015 பெப்ரவரி 27 ஆம் திகதியும் வந்தது. காலை 8 மணி முதல் 11 மணி வரை ஏலம். நூறு கோடி ரூபா பெறுமதியான பிணைமுறியைப் பெறுவதற்கான ஏலத்தில் ஈடுபட்ட நிறுவனங்கள் அவற்றின் பணியை நிறைவு செய்கின்ற சந்தர்ப்பத்தில், அதாவது, 11 மணியளவில் திடீரென ஏலமுடிவு நேரம் 11.05 ஆக நீடிக்கப்பட்டு பிணைமுறித் தொகையும் ஆயிரம் கோடி ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. இந்த இறுதிச் சந்தர்ப்பத்தில்தான் ஏனைய பிணைமுறிகள் அனைத்தையும் பேபேர்ச்சுவல் நிறுவனம் வாங்கிக்கொண்டது.

ஆரம்பத்தில் ஏனைய நிறுவனங்கள் 100 ரூபா பெறுமதியான ஒவ்வொரு பிணைமுறியையும் 104 ரூபாவுக்குப் பெற்றன. ஆனால், பேபேர்ச்சுவல் நிறுவனமோ 90 ரூபாவுக்கே பெற்றது. அது மாத்திரமன்றி, மறுநாளே அந்த பிணைமுறிகளை 110 ரூபாவுக்கு ஊழியர் சேமலாப நிதியத்துக்கு அந்த நிறுவனம் விற்பனை செய்துவிட்டது.

இதனால் ஒவ்வொரு பிணைமுறியிலும் அந்த நிறுவனத்துக்கு 20 ரூபா இலாபம் கிடைத்ததோடு, மத்திய வங்கி ஒவ்வொரு பிணைமுறியிலும் 10 ரூபா நட்டத்தை எதிர்கொண்டது. அதுமாத்திரமன்றி, இந்தப் பெரிய தொகையை வாங்குவதற்கு இந்த நிறுவனத்திடம் போதிய பணம் இல்லாததால் மத்திய வங்கி 660 கோடி ரூபாவையும், இலங்கை வங்கி 250 கோடி ரூபாவையும் இந்த நிறுவனத்துக்குக் கடனாகக் கொடுத்தன.

இந்த நிதியுடன் தன்னிடம் இருந்த மீதிப் பணத்தையும் போட்டே அந்தப் பிணைமுறிகள் அனைத்தையும் பேபேர்ச்சுவல் நிறுவனம் வாங்கியது.

இலங்கை வங்கியானது, கடன் வழங்கலில் பின்பற்றப்படும் எந்த நடைமுறைகளையும் பின்பற்றாது, மேலிடத்தில் இருந்து கிடைத்த ஒரு தொலைபேசி அழைப்புக்குச் செவிசாய்த்து உடனடியாக 250 கோடி ரூபாவை வழங்கியது.

இத்தனைக்கும் இலங்கை வங்கியும் மத்திய வங்கிக்கு கடன் வழங்கும் முதன்மை 16 நிறுவனங்களுள் ஒன்றாகும். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இலங்கை வங்கி பிணைமுறியைப் பெற்று இலாபம் அடைவதைவிட்டுவிட்டு, பேபேர்ச்சுவல் நிறுவனத்துக்கு கடன் வழங்கியமையானது அரசியல் செல்வாக்கு இந்த விவகாரத்தில் எந்த அளவுக்கு புகுந்து விளையாடி யுள்ளது என்பதை நிரூபிக்கிறது.

அதுமாத்திரமன்றி, மத்திய வங்கியிடம் இருந்தே 660 கோடி ரூபா கடன் பெற்று, மத்திய வங்கியின் பிணைமுறியை வாங்கும் அளவுக்கு அர்ஜுன மகேந்திரன் தனது மருமகனுக்காக தனதுபதவியின் அதிகாரத்தைத்தவறான விதத்தில் பயன்படுத்தியுள்ளார் என்பதும் இங்கு தெளிவாகின்றது.

மேலும், அவர் ஏலம் இடம்பெற்ற அன்று காலை எட்டு மணிக்கும் 11 மணிக்கும் இடைப்பட்ட நேரத்துக்குள் இரண்டு தடவைகள் ஏல அறைக்குள் சென்று ஏனைய நிறுவனங்களின் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து பார்த்துள்ளார். மத்திய வங்கி ஆளுநர் ஒருவர், இவ்வாறு செய்தமை வரலாற்றில் அதுவே முதல் தடவையாகும். மேலும், பிணைமுறித் தொகையை 2 ஆயிரம் கோடியாக அதிகரிக்குமாறும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

**தருணம் பார்த்துக் காய் நகர்த்திய மகிந்த அணி**

இறுதித் தருணத்தில் இடம்பெற்ற இந்த மோசடியால் ஏனைய நிறுவனங்கள் அதிர்ந்து போயின. திட்டமிட்ட அடிப்படையில் மோசடி ஒன்று இடம்பெற்றிப்பதை அறிந்துகொண்ட அந்த நிறுவனங்கள் அந்த மோசடியை அம்பலப்படுத்துவதற்கான நடவடிக்கையில் இறங்கின.

மகிந்தவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டு அவரது ஆட்சியில் இடம்பெற்ற மோசடிகள் அப்போது ஒன்றன்பின் ஒன்றாக அம்பலப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தன. அவற்றைத் திசை திருப்ப வாய்ப்பேதும் கிடைக்காதா என்று மகிந்த தரப்பினர் ஏங்கிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில்தான், குறித்த பிணைமுறி மோசடி விவகாரம் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. பிணை முறி ஏல ஊழலால் பாதிக்கப்பட்ட நிறுவ னங்களே மகிந்த தரப்பினர்களின் காதுகளில் அதனைப் போட்டு வைத்தன.

மகிந்த தரப்பினர் உடனடியாக மத்திய வங்கியை சுற்றி வளைத்தனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் பந்துல குணவர்தன, ஜீ. எல். பீரிஸ், நிமால் சிறிபால டீ சில்வா மற்றும் இப்போதைய பிரதிச் சபாநாயகர் திலங்க சுமதிபால ஆகியோர் மத்திய வங்கிக்கு உள்ளே சென்று சம்பந்தட்ட அதிகாரிகளிடம் விசாரணை நடத்தினர்.

இந்த மோசடி தொடர்பில் ஜீ. எல். பீரிஸ் விரிவான அறிக்கை ஒன்றைத் தயார் செய்து உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட பல முக்கிய நிதி நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்தார்.

(நாளை தொடரும்)

## ஆசிரியருக்கான கடிதம்

### கன்னியாவின் பாரம்பரியத்தை காப்பாற்ற முன்வருவோமா?

கதிர்காமம், சிவனொளிபாதமலை, திருக்கேதீஸ்வரம், முன்னீஸ்வரம், திருகோணமலை, நயினாதீவு ஆகிய சைவ சமய சேத்திரங்கள் இந்து சமயத்தவர்களின் அடையாளங்கள் என நாம் சிறுவயதிலே படித்திருக்கின்றோம். பூர்வீக வரலாறுகளும், அற்புதங்களும் இந்த ஆலயங்களில் நிறைந்திருப்பதை எவரும் மறுக்கமாட்டார்கள்.

அண்மையில் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் இடம்பெற்ற சைவமாநாட்டில் பிராந்தியங்களின் சைவசமய மேம்பாடு கருதிய நிறைவினையும், தடைப்படுகின்ற குறைகள் பற்றியும் பிரதிநிதிகளினால் எடுத்துரைக்கப்பட்டது.

அந்த வேளை திருகோணமலையில் கன்னியாவின் தற்போதைய நிலை பற்றி மண்டபம் தன்காதுகளைக் கூர்ந்து கவனித்தது. 1960களில் நாம் கன்னியா சென்று வெந்நீரூற்றுக்களில் குளித்து வணங்கியபோது, சிவன், பிள்ளையார், இராம, இராவண வரலாறு திருநீறு, சந்தனம், குங்குமம், முழுக்க முழுக்கச் செந்தமிழ், திருமுறைகள் என எங்கும் பிரவாகித்தன. பிரகாசித்தன. பேறாகின. ஆனால் இப்போது அத்தனை பேறுகளும் அடையாளம் ஏதுமின்றி பெரும் பான்மையினத்தவர்களது வரலாறாகிவிட்டன.

என்னைப் போன்ற பல துரும்புகளை ஒன்று சேர்க்கக்கூடிய ஒரு கரும்பாக ஆகசைவ மகா சபையோ அல்லது ஏனைய பேரவைகளோ அல்லது ஏனைய மன்றங்களோ அல்லது இந்து கலாசார அமைச்சோ ஒன்று சேர்ந்து படத்தோடிருக்கும் மடத்திலே பென்னாம் பெரிய சிவமுகூர்த்தத்தை நிறுவாத பட்சத்தில் கன்னியா என்ற கன்னி பாஞ்சாலி துகிலுரியப்பட்டமை போன்று காப்பாற்ற எவருமின்றி கண்ணீரைத் தேடுவாள் என்பதனை ஒவ்வொரு சைவசமயியும் உணர வேண்டும். யாழ்ப்பாணத்திலிருந்தே ஆயிரம் தொண்டர்களோடு ஒரு செய்தியைக் கொழும்புக்குத் தெரியப்படுத்தலாம். கன்னியா என்னும் கன்னி எங்களது பிள்ளை. கன்னியை வாழ வைக்கும் எவருக்கும் விருது கொடுக்கலாம். அது தங்க விருதாக இருக்கட்டுமே.

கே. எஸ். சிவஞானராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### திருமதி தங்கம்மா (தங்கேஸ்வரி) பரஞ்சோதி

சங்கானை, சிலம்புப் புளியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா (தங்கேஸ்வரி )பரஞ்சோதி நேற்று (19.08.2017) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - நல்லம்மா தம்பதிகளின் பாசமிகு புத்திரியும், காலஞ்சென்றவர்களான சண்முகம் - விசாலாட்சி தம்பதிகளின் பாசமிகு மருமகளும், பரஞ்சோதியின் (ஓவசியர்) அன்பு மனைவியும், மகாதேவன், வாமதேவன், வாசுதேவன், ஞானதேவன், காமதேவன், சந்திரவதனா, வாமதேவி, வாசுதேவி, இந்திராதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சாந்தகுமார், ஜெயக்குமார், ரவிக்குமார், ரமணி, ரஜனி (ஆசிரியை - யா/காட்டுப்புலம் அ.த.க.பாடசாலை), விஜயகுமார் (அப்பன் - பரம்ஸ் விலாஸ்), சபேஸ்குமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், விஜயமாலா, குசேந்தினி, சர்மினி, கஜேந்திரன், சந்திரகுமார், விஜிதா ஆகியோரின் அன்பு மாமியாரும், நிருஜா, பிரசன்னா, புகழ்யா, கேதன், சகானன், அபிஷா, அஜிதன், சஜிதன், அபர்ணன், அம்சவி, அபிரவி, டிலானி, டல்சி, சோபினி, கம்சவி, கவிஸ்ணவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணயளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிலம்புப் புளியடி,**
**சங்கானை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**0777549435**

## முதலாம் ஆண்டு நினைவுகள்



**தோற்றம்** 09.12.1929 — **மறைவு** 31.08.2016

### அமரர் செல்லப்பா மாணிக்கவாசகர்

(ஓய்வுநிலை பொலிஸ் தலைமையக பிரதம லிகிதர், தங்கோடை, காரைநகர்)

அன்புக்கு இலக்கணமாய் அருளின் இருப்பிடமாய்
பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
கருணையின் வடிவமாய் குடும்பத்தின் தலைவனாய்
எம் வாழ்வில் ஒளி தந்த தெய்வமே!

எங்களிடம் எத்தனை கொள்ளை அன்பும்
கோலோச்சிய பாசம் நிறைந்த பேச்சும்
எண்ண இனிக்கும் இனியதோர் புன்னகையும்
எம்மைவிட்டு மறைந்து ஓராண்டு சென்றதையா

ஆண்டொன்று மறைந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்
உங்கள் ஆத்மா சாந்திபெற
ஊழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வரப்
பெருமானைப் பிரார்த்தித்து நிற்கிறோம்.

**55 / 19 சபாபதி லேன்,**
**தலையாழி, கொக்குவில்.**

**நீங்கா நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்.**

# அதிரடிச் சலுகையின் இலக்கு தேர்தலே

## மகிந்த அணியின் குற்றச்சாட்டு இது

கொழும்பு, ஓக. 20

தேர்தலை இலக்கு வைத்தே வாகன விலைகள் குறைக்கப்படுவதாக மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழப்பெரும தெரிவித்தார்.

கொழும்பு ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வாகனங்களின் வரியைக் குறைப்பதனால் வறிய மக்களுக்கு எவ்வித நலன்களும் கிடைக்கப் போவதில்லை. இணைய வரிகள் நீக்கப்படுவதனால் சில நலன்கள் கிடைக்கும். அப்பாவி மக்களின் சமுர்த்திக் கொடுப்பனவையும் இந்த அரசு வரையறை செய்துள்ளது. வறிய மக்களுக்கு அரசு எவ்வித நலன்களையும் வழங்கவில்லை.

திடீரென அரசு விலைகளைக் குறைப்பதன் ஊடாக தேர்தல் நடத்தப்பட உள்ளமை தெளிவாகின்றது என்றார். (5)

## மரண அறிவித்தல்

### கந்தையா வைரவநாதன்



முத்துலிங்கம் என அன்பாக அழைக்கப்படும் க.வைரவநாதன் 16.08.2017 புதன்கிழமை தனது பூதவுடலை விட்டு நீங்கினார்.

(கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் நா. வ. கந்தையா அன்சன்ஸ் உரிமையாளர் - தற்காலிக தொழில் முகவரி 959, பருத்தித்துறை வீதி, திருநெல்வேலி கிழக்கு, நல்லூர், யாழ்ப்பாணம்)

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் அன்னபூரணம், அன்னலட்சுமி, நாகம்மா, செல்வரத்தினம், அமிர்தலிங்கம், நாகரத்தினம், தியாகலிங்கம், ஐம்புலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2017) ஞாயிற்றுக்கிழமை இல. 19, சந்திரசேகரப்பிள்ளையார் கோவில் வீதி, நல்லூர் வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு பி.ப.2.00 மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.19, சந்திரசேகர பிள்ளையார்**
**கோயில் வீதி, நல்லூர் வடக்கு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## நினைவலைகள்

**31 ஆம் நாள்** — **40 ஆம் ஆண்டு**





### சுப்பிரமணியம் தர்மலிங்கம்

**மண்மகிழ** 08.07.1922 — **கண் நெகிழ** 21.07.2017

### திருமதி நாகரத்தினம் தர்மலிங்கம்

**மண்மகிழ** 26.06.1924 — **கண் நெகிழ** 21.07.1977

அன்பாலும் பண்பாலும் எமை ஆட்கொண்ட பெற்றோரே!
ஆனந்தமாய் எமக்கு அறுசுவையுடன் அறிவும் தந்தீரே!
இதயத்தில் என்றும் நீங்காத இடத்தில் இருப்பீரே
உங்கள் பிள்ளைகளின் சிறப்புகளை நீவீர்கள் பார்த்தாலும்
அவர்களின் வழித்தோன்றல்கள் மகிழ்வுகள் பார்க்காமல் மறைந்தீரே!
உங்கள் இருவரின் ஆத்ம சாந்திக்காக எம் பிரார்த்தனைகள்...

அன்புடன் மகன்மார், மருமகள்மார்,
பேரப்பிள்ளைகள்.

சிவானந்தகுமார் (ஆனந்தன்) - 077 900 7118
கோணேஸ்வரன் (வரன்) - 0033 676 272011
[illegible]நாதன் (தயா) - 077 646 8644

# பதவி விலகேன்

## விஜயதாச பிடிவாதம்

கொழும்பு, ஓக. 20

எந்தவித அழுத்தங்கள் வந்தாலும் அமைச்சுப் பதவியிலிருந்து விலகப் போவதில்லை என்று நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

விஜயதாசவுக்கு எதிராக அவரது கட்சியினால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் பஸ்நாயக்காவின் மகளின் திருமண நிகழ்வு கொழும்பில் அண்மையில் நடைபெற்றது. அமைச்சர் விஜயதாசவும் இதில் கலந்து கொண்டுள்ளார். அமைச்சுக்களின் செயலாளர்கள் சிலர், விஜயதாசவுடன் கலந்துரையாடியுள்ளனர். அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பிலும் பேசப்பட்டுள்ளது.

அமைச்சர் விஜயதாச, அரசு ஒருமுடிவுக்கு வரும்வரை நான் எந்தத் தீர்மானத்தையும் எடுக்கப் போவதில்லை. எந்தவொரு குறையையும் சுட்டிக்காட்டுவதற்கும் அஞ்சப்போவதில்லை. நான் பதவியிலிருந்து விலகும் எந்தத் தீர்மானத்தையும் எடுக்க மாட்டேன் என்று கூறியுள்ளார்.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் செயலாளர் லலித் வீரதுங்க, முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச உள்ளிட்டோரும் திருமண விருந்தில் கலந்துகொண்டுள்ளனர். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LINK ENGINEERING
## Honors A Promise for its Construction Excellence

Link Engineering is a renowned construction legend with over 36 years of excellence and has been accredited with highest national construction grading by Construction and Industrial Development Authority (CIDA) in Sri Lanka. The company also has been recongnized as a award winning construction industry of its wide-range of construction excellence in the field of building developments such as...

- Hotels & Resorts
- Office Complex
- Luxury Condominiums
- High-rises & Multiplexes
- Residential Villas
- Auditoriums & Reception Halls

Our Related Subsidiaries...



CONTESSA INTERIOR
Carpentry Workshop @ No.105, St. Peter's Road, Koralawella, Moratuwa, Sri Lanka



LINK READYMIX
Concrete Readymix Plant @ No. 4/1, Colombo Rd,Jaliyagoda, Piliyandala, Sri Lanka



LINK ALUMINIUM
Aluminium Fabrication Factory @ No.105, St. Peter's Road, Koralawella, Moratuwa, Sri Lanka

**Blue Ocean - Head Office - Sri Lanka**
#32, 1st & 2nd Floors, Galle Road, Dehiwala, Sri Lanka
**Blue Ocean Eurpoe Ltd. - United Kingdom**
#53, Clarendon Road, Watford, WD17 1LA, United Kingdom

A Subsidiary of
Blue Ocean GROUP OF COMPANIES™

+44 79 6096 9684 | +94 777 546 546
For More Details, Please Visit www.link.lk



FACULTY OF AGRICULTURE UNIVERSITY OF JAFFNA



FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA



WATER BOARD OFFICE COMPLEX - JAFFNA



NEW COURTS COMPLEX - CHAVAKACHCHERI

# LOCATION MATTERS

**FINALLY,** A PRESTIGIOUS HOME THAT EMBRACES THE LUXURIOUS LIVING & MAKES INVESTMENT SENSE

**FREE HOLD PROPERTIES**
OUR ALL PROJECTS ARE FREE HOLD PROPERTIES WHICH THE OWNER OF SUCH AN ESTATE ENJOYS FREE OWNERSHIP FOR PERPETUITY AND CAN USE THE LAND FOR ANY PURPOSES.

**MULTI LEVEL CARPARKS**
OUR PRESTIGIOUS PROJECTS COMPROMISING MULTI LEVEL CARPARKS WITH INTERNATIONAL STANDARDS, USING BEST-PRACTICE CONSTRUCTION TECHNIQUES.

**PRESTIGIOUS RESIDENTIAL UNITS**
DECENT LIVING ENVIRONMENT THAT THE HIGH-END PROFESSIONALS DESIRE WHEN INVESTING FOR THE FUTURE.

**MOST PROMINENT LOCATIONS**
OUR PRESTIGIOUS PROJECTS GIVING THE OCCUPANTS AN OPPORTUNITY TO REACH MOST FAMOUS PROMINENT LOCATIONS .

We help you obtain Bank Loan Facilities in United Kingdom (*Conditions Apply)
BOC | HNB | Sampath Bank | Commercial Bank

**Sri Lanka's Largest Condominium Developer**
Real Estate • Construction • Facilities Management

Blue Ocean GROUP OF COMPANIES™
Sri Lanka | United Kingdom | Australia | Canada | United Arab Emirates

10+ Located Cities | 30+ Condo Projects | 1100+ Condo Units




+94 777 546 546 | +94 777 755 657 | +94 777 121 926 | +94 772 216 617 | +94 777 402 070
www.blueocean.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> விசர்நாய்க்கடி தொடர்பான சிகிச்சைக்காகவும், அதன் தடுப்பு நடவடிக்கைளுக்கெனவும் பல மில்லியன் கணக்கிலான நிதி ஆண்டுதோறும் சுகாதார அமைச்சினால் செலவிடப்பட்டு வருகிறது. இந்த நிலையில் நாம் அனைவரும் "2030 ஆம் ஆண்டில் ரேபிஸ் இல்லாத இலங்கை" என்னும் சுகாதார அமைச்சின் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு எம்மால் இயன்ற பங்களிப்பை வழங்குவதற்கு முன்வர வேண்டும்.

# 'ரேபிஸ்' நோய்காவும் நாய்கள்

தா.சுந்தரம்

நாம் எல்லோருமே நாய் என்றால் நன்றியுள்ள பிராணி, வீட்டின் காவல் காரன் என்றெல்லாம் சிறு வயதில் கற்றுக்கொண்டுள்ளோம். எமக்கும் நாய்க்கும் இடையேயான அறிமுக வார்த்தைகள் மேற்கண்டவாறே அமைந்தன. ஆனால் காலமாற்றத்தில் நாய் என்ற விலங்கின் மீதான எமது புரிதல்களும் மாற்றங்கண்டுள்ளது என்றே கூறலாம்.

### செல்லப் பிராணி

வீட்டின் செல்லப் பிராணிகளான நாய்கள் சரியான வளர்ப்புமுறையின்றி இருக்கின்றன. அவற்றின் எஜமானர்கள் கட்டாக்காலிகளாக வீதியோரங்களில் அவற்றை விட்டுவிடுகின்றனர். இதன் விளைவாக அவை பலருடைய வாழ்வின் அழிவுக்கு வித்திடும் எமனாகவும் மாறிவிட்டன. இன்று இடம்பெறுகின்ற கணிசமானளவு வீதிவிபத்துக்களுக்கு தெருவோரத்து நாய்களே காரணமாகிவிட்டன.

இவை தவிர கட்டாக்காலிகளாகத் திரியும் விலங்குகள் நீர்வெறுப்பு நோய் (ரேபிஸ்) எனப்படும் உயிர்கொல்லிநோய் பரப்பும் காவிகளாகவும் மாறிவிட்டன.

### நீர்வெறுப்பு நோய்த் தொற்று

உலக சுகாதார அமைப்பின் அறிக்கை வருடந்தோறும் 60 ஆயிரம் மக்கள் 'ரேபிஸ்' நோயினால் உலகெங்கும் உயிரிழக்கின்றனர் எனவும் அவற்றில் 95 வீதத்துக்கும் மேலானவை ஆசிய மற்றும் ஆபிரிக்க பிராந்தியங்களில் நிகழ்வதாகவும் கூறுகிறது. இவற்றில் 95 வீதமானவை நாய் கடியினால் ஏற்பட்டதாக இனங்காணப்பட்டுள்ளது. மேலும் விசர் நாய்க்கடி தொடர்பான சிகிச்சைக்காகவும், அதன் தடுப்பு நடவடிக்கைளுக்கெனவும் பல மில்லியன் கணக்கிலான நிதி ஆண்டு தோறும் சுகாதார அமைச்சினால் செலவிடப்பட்டு வருகிறது. இந்த நிலையில் நாம் அனைவரும் "2030 ஆம் ஆண்டு ரேபிஸ் இல்லாத இலங்கை" என்னும் சுகாதார அமைச்சின் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு எம்மால் இயன்ற பங்களிப்பை வழங்குவதற்கு முன்வர வேண்டும்.

### நோய்த் தடுப்பு

தற்போது நாட்டில் விசர் நாய்க்கடி நோய் நிலமை ஏற்படுவதைத் தடுப்பதற்கு பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அவற்றுள் குறிப்பாக, அனைத்து வயதிலுள்ள நாய்களுக்கும் தடுப்பூசி ஏற்றப்படுகிறது. வீட்டு வளர்ப்பு நாய்களுக்கென 6 வாரங்கள், மூன்று மாதம் பின்னர் வருடந்தோறும் என தொடர்ச்சியாகத் தடுப்பு மருந்து வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் சமுதாய மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இது தவிர பெண் நாய்களுக்கென கருத்தடை சத்திரசிகிச்சை முறையும் வழங்கப்பட்டு வருகிறது.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கட்டாக்காலிநாய்களின் உருவாக்கத்துக்கு நாங்களே காரணமாக இருக்கின்றோம். வீட்டில் அதிகளவான நாய்க்குட்டிகள் உள்ள போது அவற்றைப் பராமரிக்கும் வசதி இன்மை காரணமாக வீதிகள், கோயில்கள், பொலிஸ்நிலையங்கள், உணவுக் கடைகள் போன்ற பொது இடங்களில் கொண்டு சென்று விட்டுவரும் முறைமை நம்மிடையே இன்றும் பிரபலமாக இருந்துவருகிறது. இவ்வாறு கைவிடப்படும் சிறுகுட்டிகள் உணவுச் சண்டையின் போது வளர்ந்த நாய்களால் காயங்களுக்கு உள்ளாகின்றன. இதன்போது




அவை 'ரேபிஸ்' தொற்றுக்குள்ளாகின்றன. மேலும் இவ்வாறான நாய்களே வீதிவிபத்துக்களுக்கு வழிவகுப்பதோடு வீதியால் பயணப்படுவோரையும் நோய்த் தொற்றுக்குள்ளாக்குகின்றன. இந்த நிலமையை சீர் செய்வதற்கு பெண் நாய்க்குட்டியைக் கருத்தடைச் சிகிச்சைக்கு உள்ளாக்குவதன் மூலம் மிக இலகுவாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும்.

மேலும் உங்களிடம் மேலதிகமாக நாய்க்குட்டிகள் இருக்கும் போது அவற்றை வளர்க்கவும், வாங்கவும் விரும்புகின்ற உங்கள் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் பரிசாக வழங்குங்கள். இதன் மூலம் நீங்கள் சமுதாயப் பொறுப்புடையவர்களாக மாறுகின்றீர்கள்.

அதேபோன்று வீதியோரக் குப்பைமேடுகளே கட்டாக்காலி நாய்களின் போர்பூமியாகக் காணப்படுகின்றன. எனவே இவ்வாறான குப்பைமேடுகளை இல்லாதொழிக்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் குறித்து கரிசனை கொள்ளுதல் விசர்நாய்க்கடி தொற்றைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளுக்குப் பேருதவியாக அமையும்.

### பாதுகாப்பு நடைமுறை

விசர்நாய்க்கடிக்கு ஆளான பின்னரும் விசர்நாய்க்கடித் தொற்றிலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கு நாம் தெரிந்திருக்க வேண்டிய சில விடயங்கள் உள்ளன. அவை குறித்து அறிந்துகொள்ளுதல் நன்று.

1. காயம் ஏற்பட்ட பகுதி சவர்க்காரம் மற்றும் நீரினால் 3 தொடக்கம் 5 நிமிடங்கள் தொடர்ச்சியாக நன்றாகக் கழுவப்பட வேண்டும்.
2. காயத்தை மிக இறுக்கமாகக் கட்டுவதைத் தவிர்க்க வேண்டும்.
3. உடனடியாக மருத்துவமனைக்குச் சென்று Antibiotics மற்றும் Tetanus toroid எடுத்துக் கொள்ள வேண்டும். மேலும் காயத்தின் தன்மை ,கடித்தநாயின் நிலை என்பவற்றினைத் தெரியப்படுத்தி நாய்க்கடிக்குப் பின்னரான சிகிச்சையைப் பொருத்தமான முறையில் பெற்றுச் சிகிச்சையை முழுமைப்படுத்த வேண்டும்.

### பங்களிப்பு

எனவே நோய் நிலை ஏற்பட முன்னர் அதனைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். 'ரேபிஸ்' இல்லாத இலங்கையை 2030 ஆம் ஆண்டளவில் உருவாக்கும் சுகாதார அமைச்சின் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும். முற்றாகத் தடுப்பு நடவடிக்கைகளால் கட்டுப்படுத்தக் கூடிய இந்த நோய் நிலைக்காகச் செலவு செய்யப்படும் நிதியைக் கட்டுப்படுத்தவும் அனைவரும் ஒன்றிணைந்து எமது ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்குவோம். நாய் எமக்குத் தோழன் தான் என்ற சிறுவயதுக் கருத்தியலை என்றும் மாறாது நிலை நிறுத்துவோம்.

நீரிழிவு சிகிச்சை நிலையம்,
போதனா மருத்துவமனை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியகாந்தி

ஞாயிறு சிறப்பம்சம்
20.08.2017

அ.தி.மு.க. இணைப்பு சாத்தியம்
23





# கவனிக்குமா வடமாகாணசபை...?

நடராசா லோகதயாளன்

அந்தப்பெண்ணின்சோகம்அளவிடமுடியாததாக இருக்கிறது. அவளைப்போல பரிதவிக்க விடப்பட்டுள்ள ஏனைய பெண்களின் நிலையும்அப்படியானதாகத்தான் இருக்கவேண்டும். அவளுடைய வாழ்வாதாரத்தைச் சிதைத்துச் சென்றிருக்கின்றது போர். ஆனால், அதற்குப் பின்னர் முன்னெடுக்கப்பட்டிருக்கின்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் எவையும் அதை மீட்டுக்கொடுப்பதற்கு முன்வரவில்லை. அவைஎவையாலும்அவளுடையவயிற்றுப் பசியைப் போக்க முடிய வில்லை. அவளுடைய வாழ்க்கை உயிர் வாழ்தலுக்கான போராட்டமாகவே தொடர்கிறது.

“90ஆம் ஆண்டு இடம்பெயர்வுக்குப்பிறகு கோப்பாயில இருக்கிற நெசவு சாலையில வேலை செய்தனான். அதத் தொடந்து தாவடியில இருந்த நெசவுச் சாலையிலயும்வேலைசெய்தனான். 95ஆம்ஆண்டு வரைக்கும்அந்தவேலையாலசீவியம்ஓடிச்சுது. பிறகு இடப்பெயர்வுகள் தொடங்க, தொழிற்சாலைகளும் கைவிடப்பட்டிச்சு. சீவியம் இல்லாமல் கஸ்ரப்படத் தொடங்கினன். புவனா, இராமகிருஸ்னா, இரத்தினசிங்கம் எண்டு மூண்டு நெசவுசாலைகளில நான் வேலை செய்திருக்கிறன்.

அந்தக் கைத்தறி, மின்தறித் தொழிற்சாலைகளில செய்தவேலைகளும்அனுபவமும் இப்பவும்மறக்காம எனக்குள்ள அப்பிடியே இருக்கு. சண்டை முடிஞ்சு, எல்லாம் மீளவும் கட்டியமைக்கப்படும், நானும் நான் பழகின தொழிலுகளைச் செய்து சீவியம் போக்கலாம் எண்டு தொழில்தேடி அலைஞ்சால் அதற்கான சந்தர்ப்பம் கிட்டேல்ல" என்றுகூறிக் கண்ணீர் வடித்தார் அந்தப் பெண் கனகீஸ்வரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"2013ஆம் ஆண்டுத் தரவுகளின் பிரகாரம் நாட்டிலுள்ள 25 மாவட்டங்களிலும் வறுமை கூடிய மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டம் விளங்குகின்றது. அது 28.8சதவீத வறுமைக்குறிகாட்டியைப் பதிவு செய்துள்ளது. மன்னார் 20.1சதவீதத்தையும் கிளிநொச்சி 12.7 சதவீதத்தையும் யாழ்ப்பாணம் 8.3சதவீதத்தையும் வவுனியா 3.4சதவீத வறுமை நிலையினையும் பதிவு செய்துள்ளன.

எனவே வட மாகாணத்தின் பல்வேறு துறைகளிலும் தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்கக்கூடிய முதலீடுகளை உருவாக்கி வேலை வாய்ப்புக்களை அதிகரிக்கச் செய்வதும் சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளுக்கூடாக மக்களின் வருமானத்தினை அதிகரிக்கச்செய்வதும் இவ்வரவு செலவுத் திட்டத்தினூடாக அடையப்படவேண்டிய இலக்குகளாக உள்ளன" முதலாவது வடக்கு மாகாண சபையின் 69ஆவது அமர்வில் முதலமைச்சரால் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 2017ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்துக்கான அறிமுகவுரை இப்படியிருந்தது. ஆனால் யதார்த்தம் வேறுமாதிரியாக இருக்கிறது.

வறுமையைப்போக்கி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதில் பெரும் பங்காற்றக் கூடியவையும் ஏராளமானவர்களுக்குத் தொழில் வாய்ப்புக்களை வழங்கக்கூடியவையுமான பல உள்நாட்டுத் தொழில்சாலைகள் யாராலும் கவனிக்கப்படாமல் நீண்ட துயில் நிலையில் இருக்கின்றன. அதுவும் பெரும் தொகை மதிப்புடைய இயந்திர சாதனங்களுடன்.

**தொழிற்சாலைகள் நிறைந்திருந்த யாழ்ப்பாணம்**

போருக்கு முற்பட்ட வடமாகாணத்தில் பல தொழிற்சாலைகள் இருந்தன. அவற்றில் அதிகமானவை யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயே காணப்பட்டன. இதற்கு முதன்மைக் காரணமாக இருந்தது அவற்றுக்குத் தேவையான மனித வளத்தை இங்கு இலகுவில் தேடிக்கொள்ள முடிந்தமையே. இதில் காங்கேசன்துறை சிமேந்துத் தொழிற்சாலை முக்கிய இடத்தைப் பிடித்தது. அத்துடன் நாவற்குழி ரயர் தொழிற்சாலை, மண்டைதீவு மற்றும் மாவிட்டபுரம் பகுதிகளில் இருந்த அலுமினியத் தொழிற்சாலைகள், நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை, கொட்டடி ஆடைத் தொழிற்சாலை ஆகியவற்றுடன் தாவடி, சுன்னாகம், கோப்பாய்ப் பகுதிகளில் இயங்கிய நெசவுச் சாலைகள் என யாழ்ப்பாணத்தில் இயங்கிய தொழில்சாலைகளின் பட்டியல் நீளமானது.

தாவடியில் பிள்ளையார் ஆலயத்துக்குப் பின்புறமாக தற்போதைய பாடசாலையின் அருகில் பெரிய தொழிற்சாலையாக 14 இயந்திரங்களுடன் ஒரு நெசவு சாலை இயங்கியிருந்தது. 1990களான அந்தக் காலப்பகுதியில் நாளொன்றுக்கு இரண்டு சுற்று பணி நேரங்களாக 60க்கும் மேற்பட்ட பணியாளர்கள் வேலைக்கமர்த்தப்பட்டனர். அந்தத் தொழில்சாலை பலருக்கும் வேலை வாய்ப்பளித்ததுடன் போர்க் காலத்தில் நிலவிய பொருளாதாரத் தடைகளின்போது துணிவகைகள், படுக்கை விரிப்புக்கள் போன்றவற்றுக்கிருந்த தேவைகளையும் ஓரளவுக்கு நிறைவு செய்து வந்தது. இதுபோன்றே அன்று இயங்கிய மேற்குறித்த அனைத்துத் தொழில்சாலையின் நிலையும் இருந்தது. அதன் காரணமாகவே 1990களுக்கு முன்பு உற்பத்தி, நூல் நெய்தல், கைத்தறி ஆகிய தேவைகளின் பொருட்டு யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்க மின்தறி நிலையத்தில் 480க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இருந்திருக்கிறார்கள்.

**எஞ்சியுள்ள தொழிற்சாலைகளும் தொழிலாளர்கள் நிலையும்**

தற்போதும்கூட யாழ்ப்பாணத்தில் தேசிய கைத்தொழில் அமைச்சின் கீழ் சிறிய சிறிய கைத்தறி நெசவு சாலைகளாக 20 நெசவுசாலைகள் இயங்குகின்றன.



இங்கு பணிபுரியும் ஊழிர்களுக்கான சம்பளம் மிகவும் சொற்பமானதாக உள்ளது. அதாவது ஒரு தொழிலாளி 50யார் நூல் கோர்த்து, நெய்தால் 8ஆயிரம் ரூபா வேதனம் வழங்கப்படுகிறது. இந்த 50 யாரைப் பூர்த்தி செய்வதற்கு ஒரு தொழிலாளிக்குக் கண்டிப்பாக ஒரு மாத காலம் தேவைப்படுகிறது. பலருக்கு அடுத்த மாதத்திலும் சில நாள்கள் தேவைப்படுகின்றன. இதனால் போதிய வருமானம் இன்றி வேறு வேலை தேட முனையும் தொழிலாளர்களும் உண்டு. அதேநேரம் யாழ்ப்பாணத்தைத் தவிர்த்து வடக்கு மாகாணம் என்று பார்த்தால் வவுனியாவில் வவுனியா நகரம், தோணிக்கல் என இரண்டு மின்தறி நிலையங்கள் இயங்குகின்றன. அங்கும் பல தனியார், அரச, கூட்டுறவு நெசவு சாலைகள் அழிவடைந்து செல்லும் நிலையிலேயே இருக்கின்றன.

போர்க்காலத்துக்கு முன்பு மாதம் ஒன்றுக்கு 60ஆயிரம் யார் துணியை உற்பத்தி செய்து சந்தைப்படுத்திய தொழில்சாலைகள் இன்று 5ஆயிரம் யார் மட்டுமே உற்பத்தி செய்யும் திறன் குன்றியவையாக நலிவடைந்திருக்கின்றன. யாழ். குடாநாட்டில் முன்னர் இயங்கியிருந்த 10க்கும் மேற்பட்ட பெரிய தொழிற்சாலைகளையும் 5சிறிய தொழிற்சாலைகளையும் இன்று தேடினாலும் காண முடிவதில்லை. அவை இருந்த இடம்கூடத் தெரியாமல் அழிவடைந்து விட்டன.

**இயந்திர சாதனங்களின் நிலை**

இங்குள்ள ஒரு தொழிற்சாலைக்கு மாத்திரம் போர் காரணமாக பகுதியழிவாக சுமார் 7கோடி ரூபா சொத்தழிவு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அவை எவற்றுக்கும் நஷ்டஈடு வழங்கப்படவே சீர்படுத்தப்படவே இல்லை. அவற்றைச் சரிவர இயக்கினால் போதிய இலாபமும் ஏராளம் வேலைவாய்ப்பும் தானாகவே கிடைக்கும். இதற்குச் சிறியளவு முதலீடு மாத்திரமே தேவையாகவுள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் 1990கள் வரை இயங்கிய சுன்னாகம், கோப்பாய், பண்டத்தரிப்பு, சங்கானை, கோண்டாவில், தாவடித் தொழிற்சாலைகள் அனைத்தும் முற்றாக அழிவடைந்து விட்டன.

அங்கிருந்த இயந்திரங்கள் பழைய இரும்பு என்று விலை தீர்க்கப்பட்டுவிட்டன.

சில தொழிற்சாலைகளில் பயன்படுத்தக்கூடிய நிலையில் பெறுமதி வாய்ந்த பல இயந்திர சாதனங்கள் வீணே கிடக்கின்றன. அனைத்து வசதிகளும் கொண்டு இயங்கிவந்த அன்றைய தொழிற்சாலைகளில் பலவற்றிலும் பல கோடி ரூபா பெறுமதியுள்ள இயந்திரங்கள் இப்போதும் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. பல பாவனையின்றியே பாழடைகின்றன. இதே நேரம் தற்போதுவரை எமது உற்பத்திகள் இந்தியச் சந்தையில் காணப்படும் சகல உற்பத்திகளோடும் போட்டி போட்டு விற்பனை செய்யக்கூடிய சூழல் காணப்படுகின்றது.

**யாழ். புடவை நெசவாளர் கூட்டுறவுச்சங்க பொதுமுகாமையாளரின் கருத்து**

"ஆரம்பத்தில் 400 பணியாளர்கள் எமது சங்கத்தில் தொழில்புரிந்தனர். தற்போது 13 பேர் மட்டுமே பணியாற்றும் அளவுக்கு இந்தத் தொழில்துறை சிதைவடைந்து விட்டது. நெசவு உற்பத்தி ஆடைகளுக்கு இன்றும் தாராள சந்தை வாய்ப்பு உண்டு. இருப்பினும் இத்துறை நலிவடைந்து செல்வதற்கு ஊழியர் விலகல், போதிய முதலீடு இன்மை அதற்கான அரச ஊக்குவிப்பு இல்லாமையே காரணங்களாக அமைகின்றன. 1972ஆம் ஆண்டு கொள்வனவு செய்த இயந்திரங்களே தற்போதுவரையில் பாவனையில் உள்ளன. இதில் 48 சிறிய, 12 பெரிய இயந்திரங்கள் இருந்தும் அதில் வெறும் 5 இயந்திரங்களை மாத்திரமே இயக்கும் அளவு பணியாளர்கள் உள்ளனர்.

இங்குள்ள தொழில்சாலைகளைக் கவனித்துப் பயன் பெற முனையாததால், கைத்தொழில் நிலையங்களை மட்டுமே வாழ்வாதாரமாகக் கருதி வாழ்ந்து வந்த பல பெண்கள் இன்று நடுவீதியில் நிற்கின்றனர்" என்கிறார், யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கப் பொதுமுகாமையாளர் கணபதிப்பிள்ளை ஜெயக்குமார்.

**பதில் கூறவேண்டியது மாகாணசபை மாத்திரமே**

இவ்வாறு அழிவடையும் தொழிற்சாலைகளை பேணுவதன் மூலம் ஏராளமான இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதுடன் உள்நாட்டினருக்குத் தேவையான ஆடைகளையும் உற்பத்தி செய்ய முடியும். இன்று எமது பிரதேசத்தில், உள்ளூர் உற்பத்தித் துறைசார்ந்து எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதில்லை. விவசாய, கைத்தொழில் துறை சார்ந்த உற்பத்தி முயற்சிகளைத் தோற்றுவிப்பதன் மூலம் இங்குள்ள இளைஞர் படைக்கு வேலை வாய்ப்பை வழங்க முடியும். ஆனால் இதனைச் செய்யக்கூடியவர்கள் யார்? இப்போது எங்கள் கைகளில் உள்ள ஒரே ஒரு நிறுவனம் வடமாகாணசபையே ஆகும்.

வடமாகாணசபை இதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்து உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவித்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதனூடாக ஒரு மாற்றத்தினை இந்த மண்ணில் ஏற்படுத்துமா?



அழிவடையும் தொழிற்சாலைகளை பேணுவதன் மூலம் ஏராளமான இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதுடன் மனித உடலுக்குச் சுவாத்தியமான நூல் உற்பத்தி ஆடைகளையும் உற்பத்தி செய்ய முடியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிங்கள அரசின் ஒடுக்குமுறைகள் ஆயுதம் ஏந்துவதற்குத் தமிழ் இளைஞர்களைத் தூண்டியது போல இந்திய அரசின் இந்த நடவடிக்கைகள் அதை ஏவியவர்களைக் கொல்வதற்குத் தூண்டின என்பதும் அவதானிகளின் கருத்து. ஆனாலும் இந்தியாவின் தமிழர்கள் மீதான ஒடுக்குமுறைப்போக்கு சிங்கள அரசுக்குச் சமாந்தரமாகத் தொடர்ந்தும் பயணிக்கவே செய்கின்றது.**

# ஆக்கிரமிப்பின் இன்னொரு வடிவமா...?



தர்சன் சங்கரப்பிள்ளை

பூகோள அரசியல் நீரோட்டத்திலிருந்து இலங்கை ஒருபோதும் விலத்திவிட முடியாது. இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள ஒரு நாடு என்று அடையாளப்படுவதற்கு முன்னர் அது இந்தியாவுக்கு அருகிலுள்ள ஒரு தீவு என்றே அறியப்படுகிறது. பிரித்தானியரின் காலனியாதிக்கத்துக்கு உட்பட்டிருந்த இந்தத் தேசம் மெல்ல மெல்ல இந்தியாவின் வல்லாதிக்கத்துக்கு உட்பட்டுவிட்டமை யாருக்கும் தெரியாததல்ல. பன்னாட்டரங்கில் அமெரிக்காவும் அதைப்போன்றே ரஷ்யாவும், சீனாவும் கொண்டிருக்கின்ற ஏனைய நாடுகளைத் தத்தம் கட்டுக்குள் வைத்திருக்கும் போக்கையே இந்தியாவும் அயலிலுள்ள வலுக்குறைந்த நாடான இலங்கை விடயத்தில் கையாளுகின்றது. அதன் உச்சமே இறுதிப்போராக இந்தியா மற்றும் மேற்குலகால் தமிழர் விடயத்தில் கையாளப்பட்டிருந்தது. ஆட்சி விடயத்தில் அது தொடரவும் செய்தது. இந்த நிலையில்தான் இந்தியாவின் சுதந்திர தினம் கடந்த 15ஆம் திகதி கடந்திருக்கிறது. அந்த நாட்டின் சுதந்திர நாள் சார்ந்த கொண்டாட்டங்கள் பல பகுதிகளிலும் கோலகலமாக நடந்தேறின. யாழ்ப்பாணத்திலும்கூட.

## யாழ்ப்பாணத்தில் இந்தியத் தலையீடுகள்

யாழ்ப்பாணத்தில் அமைந்திருக்கும் இந்திய அலுவலகங்கள் அனைத்தும் அவற்றின் பணிகளுக்கு அப்பாற்பட்டு தமிழர் விடயத்தில் அதிக தலையீடுகொண்டுள்ளன என்பது பரவலான கருத்து. அவை இந்திய உளவுத்துறை மற்றும் மத்திய அரசின் கைப்பிள்ளைகளாகச் செயற்படுவதுதான் நிஜம் என்பதான கருத்துக்களும் உண்டு. ஏன் தமிழ்ப் பத்திரிகைகளின் சுதந்திரமான போக்குகளில் இவைகளின் தடைகள் இருக்கின்றன என்றுகூட அண்மையில் அரசியல்வாதி ஒருவர் கூறியிருந்தார். அவ்வளவுக்குத் தமிழர் விடயத்தில் மூக்கை நுழைத்திருக்கின்றது இந்தியா. அது கொழும்பு அரசுக்கு அடுத்த சக்தியாகத் தன்னைத் தமிழர்கள் மத்தியில் உருவெடுக்கச் செய்துள்ளது. இதனால் கொழும்பு அரசையும் இந்தியாவையும் அனுசரித்தே அரசியல் நடத்த வேண்டிய இக்கட்டான நிலை தழிழ்த் தலைமைகளுக்கு. இதன் வெளிப்பாடே அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடந்தேறிய இந்திய சுதந்திர நாள் கொண்டாட்டத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் ஆற்றியிருந்த உரை.

## தமிழர் மண்ணில் இந்தியாவின் கோரமுகம்

உண்மையில் இலங்கை - இந்திய கூட்டு ஒப்பந்தத்தின்படி அமைதிப்படைகள் எனும் பெயருடன் இலங்கையில் களமிறங்கிய இந்திய இராணுவம் தமிழர்களுக்கு ஏராளம் பாதகங்களையே ஏற்படுத்தியிருந்தது. இதனால் ஆயுதம் ஏந்திப் போராடிக் கொண்டிருந்த தமிழ் இளைஞர்கள் மாத்திரமன்றி அப்பாவி மக்களும் கொதிப்படைந்தனர். இந்திய இராணுவம் தமது இரண்டு கைகளையும் கட்டிக்கொண்டு தமிழ்ப் பெண்களுக்கு முன்பாக மாரியாதையாக நடந்துகொண்டதான கற்பனைகளை இந்தியா வெளியுலகுக்குக் காட்டிநிற்க, அவர்கள் இங்கே பல பெண்களின் கற்பைச் சூறையாடிக் களித்திருந்தனர். மக்கள், இளைஞர்கள் பலரும் துன்புறுத்தப்பட்டனர். சிங்கள அரசின் ஒடுக்குமுறைகள் ஆயுதம் ஏந்துவதற்குத் தமிழ் இளைஞர்களைத் தூண்டியதுபோல இந்திய அரசின் இந்த நடவடிக்கைகள் அதை ஏவியவர்களைக் கொல்வதற்குத் தூண்டின என்பதும் அவதானிகளின் கருத்து. ஆனாலும் இந்தியாவின் தமிழர்கள் மீதான ஒடுக்குமுறைப்போக்கு சிங்கள அரசுக்குச் சமாந்தரமாகத் தொடர்ந்தும் பயணிக்கவே செய்கின்றது. இதுவே வரலாற்று உண்மையும்கூட. பிரித்தானியர்களிடமிருந்து தேசத்தைப்பெற்றுக்கொண்டதும் சிங்களவர்கள் நாட்டின் அரசியல் சார்ந்த விடயங்களில் தாமே முதன்மையாகினர். படிப்படியாகச் சிறுபான்மையினர் ஒடுக்கப்படலாயினர். அதை எதிர்த்துப் போராட வேண்டிய நிர்ப்பந்தம் தமிழ் இளைஞர்களிடத்தே திணிக்கப்பட்டது. அறவழியில் போராடி இயலாமல் ஆயுதம் ஏந்தியும் போராடினர். அதைத் தாங்கும் சக்தி சிங்கள அரசுக்கு இருக்கவில்லை. ஆனால் அதற்கு உதவும் தேவை இந்தியா மற்றும் மேற்குலகுக்கு இருந்தது. அதனாலேயே தொடர்ந்தும் இலங்கையைத் தமது கட்டுக்குள் வைத்திருப்பதைத் தொடரலாம் என்றும் அவற்றுக்குப் புரிந்தது.



## புலிகளை வென்ற பெரும் சக்திகள்

முன்னாள் அதிபர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசு, விடுதலைப் புலிகளைப் போரில் வீழ்த்தியது என்பதே பதிவு. அதற்கு இந்தியா, சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் என்று எல்லாத் தரப்புகளின் ஆசியும் ஆதரவும் கிடைத்தது என்பதே உண்மை. இதனால்கூடக் கடினமாகவே அவர்களால் தமக்கான வெற்றியை ஈட்ட முடிந்தது. இவற்றுக்கு முன்னர் பல தடவைகளும் சிங்கள அரசும் இந்திய அரசும் தனித்துப் புலிகளுடன் முட்டிமோதிக் கொண்டதில் அவைக்கு ஏற்பட்ட இழப்புக்கள் பெருமளவாக இருந்தன. பின்னடைவைச் சந்தித்த அவ்விரு பகுதிகளும் இணைந்து அப்பாவி மக்களைத் துன்புறுத்திய விதமும் வரலாற்றிலிருந்து ஒருபோதும் ஒதுக்கப்பட்டுவிடாது. சிங்கள அரசுடன் தமிழர்கள் முரண்பட எவ்வளவுக்கு எவ்வளவு நியாயமான காரணங்கள் இருந்தனவோ அதைவிட அதிகமாகவே இந்திய அரசுடனும் முரண்பட்டதற்கும் அடுக்கடுக்காகக் காரணங்கள் இருந்தன. இலங்கை ஆட்சியாளர்களில் பலர் விடுதலைப்புலிகளால் கொல்லப்பட்டனர் இந்திய ஆட்சியாளர்களும் கொல்லப்பட்டனர்பதிலுக்கு அவர்களால் விடுதலைப்புலிகளும் சாட்டாக அப்பாவி மக்களும் கொல்லப்பட்டனர். இவை அனைத்தையும் ஒரு தராசில் போட்டு நிறுக்கும்போது இந்திய, சிங்கள ஆட்சியாளர்களின் பக்கம் எப்போதும் உயர்ந்துநிற்பது தான் இதில் நகைப்பான விடயம். அதாவது ஒரு சிலரான அவர்களுடைய உயிர் உயர்த்தியானது. ஆயிரக்கணக்கான மக்களின் உயிர் அவர்களிலும் குறைவானதாகவிருக்கிறது.

## பிரச்சினைக்குரிய மூலம்...

சரி இவ்வளவு காலமும் நடந்தேறிய அனைத்து விடயங்களுக்கும் பின்னராவது பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டதா? புலிகள் ஆயுதப் போரில் தோற்கடிக்கப்பட்டார்கள். அத்துடன் முடிந்தது அவர்களின் பிரச்சினை. புதிய அரசமைப்பு எனும் விடயத்துடன் தீர்வு கிடந்து இழுபடுகிறது. ஏன் புதிய அரசமைப்போ அல்லது சரியான அதிகாரப்பகிர்வே சிங்களவர் - தமிழர் பிரச்சினைக்கு ஒருபோதுமே தீர்வாகாது என்றுகூட யாருக்குமே புரியவில்லை. இவ்வளவு காலச் சம்பவங்களுக்கும் காரணமான மூலம் இன்னமும் யாருடைய கண்களுக்கும் ஏன் தெரியாமலிருக்கிறது. இந்தப் பிரச்சினையின் மூலம் சிங்கள மக்களும், அவ்வின அரசியல் வாதிகளுமே. அவர்கள் உள்ளம் தம் சக இனத்தவர்களையும் மதிக்கப்பழகும் வரை இந்தப் பிரச்சினை நீளவே செய்யும் என்பதை ஏனோ யாரும் உணர்ந்துகொள்ளவில்லை. இந்தப் பின்னணியிலேதான் யாழ்ப்பாணம் - கல்வியங்காடு, இராச வீதியில் பிடாரித்தோட்டம் பகுதியில் உள்ள தனியார் காணியில் காணி உரிமையாளர்களின் அனுமதி இன்றிக் கட்டப்பட்ட இந்திய இராணுவத்தினருக்கான நினைவுத்தூபி சீரமைக்கப்படுகிறது எனும் விடயம் வெளியில் வந்துள்ளது.

## ஆக்கிரமிப்பு இந்தியாவின் ஒரு வடிவம்

தமிழர் நிலத்தில் அவர்களின் அனுமதி இன்றி அவர்களை அடக்குவதற்காக இங்குவந்த ஆக்கிரமிப்பு இராணுவமான இந்திய இராணுவம் அவர்களைக் கொன்றழித்தது மட்டுமல்லாமல் அந்தக் கொல்லும் முயற்சியில் இறந்த தம் சகாக்களுக்கு ஒரு நினைவுத்தூபியையும் அமைத்துவிட்டுச் சென்றுள்ளது. 17வருடங்களுக்குப் பின்னர் அந்த நினைவுத்தூபியில் அஞ்சலி செலுத்த இந்திய இராணுவ உயர் அதிகாரிகள் இங்கு வரப்போகிறார்கள். என்ன கொடுமை இது.

தமிழ்மக்கள் மீதான சிங்கள, இந்திய இராணுவ அடக்குமுறைகளின் விளைவுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை முழுமையான நிவாரணம் கிடைக்கவில்லை. அது மட்டுமல்ல தமிழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டிய அரசியல் உரிமைகளாவது கிடைக்காத சூழ்நிலையில் இவ்வாறான சம்பவங்களை நாம் எப்படி எடுத்துக்கொள்ள முடியும்? இது இந்திய ஆக்கிரமிப்பின் இன்னொரு வடிவமா...?

**தமிழர் நிலத்தில் அவர்களின் அனுமதி இன்றி அவர்களை அடக்குவதற்காக இங்குவந்த ஆக்கிரமிப்பு இராணுவமான இந்திய இராணுவம் அவர்களைக் கொன்றழித்தது மட்டுமல்லாமல் அந்தக் கொல்லும் முயற்சியில் இறந்த தம் சகாக்களுக்கு ஒரு நினைவுத்தூபியையும் அமைத்துவிட்டுச் சென்றுள்ளது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் குள்ளத்தனம்



அரசியல் என்பது திரைக்கு முன் ஒருகதை திரைக்குப் பின் வேறொரு கதை என்பதை அநேக மக்கள் அறிவதில்லை. திரைக்கு முன் ஓர் அரசியல்வாதிக்கு எதிராக ஒருவர் பேசுகிறார் என்றால், திரைக்குப் பின்னாலும் அதே நிலைப்பாட்டில் தான் அவர் இருப்பார் எனச் சொல்லி விட முடியாது. தனிப்பட்ட உறவு அந்த 'டீலிங்', இந்த 'டீலிங்' என ஏகப்பட்ட சமாச்சாரம் திரைக்குப் பின்னால் அவர்களுக்கு இடையில் இருக்கும். அவ்வாறான சங்கதி ஒன்றுதான் இது. நாட்டில் இன்று பரபரப்பாகவுள்ள ஒரு விடயம் மத்திய வங்கி ஊழலும் அதில் ரவி கருணா நாயக்க தொடர்புபட்டு இருந்தமையும் தான்.

ஊழலில் ரவியின் தொடர்பை அறிந்த மகிந்த அணி அதை வைத்து அரசியல் இலாபம் தேடுவதற்குத் திட்டமிட்டு ரவிக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தது. அந்தப் பிரேரணைக்குப் பயந்து ரவி அமைச்சுப் பதவியைத் துறக்கமாட்டார். அவர் பதவி துறக்காத வரைக்கும் அதை வைத்து தனக்கு வேண்டியதைச் சாதிக்கலாம் என மகிந்த அணி நப்பாசை கொண்டது.

மகிந்தவின் திட்டத்தை முறியடிக்கும் வகையில் ரணில் காய் நகர்த்தினார். நம்பிக்கை இல்லாப் பிரேரணை வெற்றிபெற்று அவர் பதவி விலகுவதைவிடுத்து மேற்கு நாடுகளில் நடப்பதைப்போன்று அதற்கு முன்பே பதவி விலகுமாறு ரணில், ரவிக்கு அறிவுரை வழங்கினார்.

இந்தச் செய்தியை அறிந்த மகிந்த. ரவிக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு பதவி விலக வேண்டாம் என்று கூறினார். ஒரு தடவை, இரண்டு தடவை அல்ல. 20 தடவைகள் அழைப்பு...! மகிந்த மட்டுமன்றி பந்துல குணவர்தன, காஞ்சன விஜயசேகர எனப் பலர் இவ்வாறு அழைப்பை எடுத்து ரவியைப் பதவி விலக வேண்டாம் என்றிருக்கின்றனர். ரவிக்கு எதிராகப் பிரேரணையைக் கொண்டு வந்த இவர்கள் இப்போது ஏன் அவரைப் பதவி விலக வேண்டாம் என்று சொல்கிறார்கள்...!

*"என்ன... யோசிக்கத் தொடங்கி விட்டீர்களா? இதுதான் அரசியல். உள்ளே ஒன்று. வெளியே வேறென்று"*



# 3 மாதங்களுக்குள் வந்துவிடுவேன்

**ஊ**ழலில் சிக்கி ரவி கருணாநாயக்க அமைச்சுப் பதவியை இழந்ததும் மகிந்த ஆட்சியை விடவும் இந்த ஆட்சிக்குள் ஜனநாயகம் நிறைந்துள்ளதுஎன்றுஎல்லோரும்நினைத்துக்கொண்டிருக்கின்றோம். ஆனால் இதற்குள்ளும் அப்படி ஒன்றுமில்லை. எல்லாமே நாடகம்தான்.

அவர் பதவியைத் துறந்ததும் ஐக்கிய தேசிய கட்சியின் எம்.பிக்கள் மற்றும் ரவியின் நலன் விரும்பிகள் ரவியிடம் துக்கம் விசாரித்தனராம். ஆனால், ரவியோ சந்தோசமாகக் காணப்பட்டாராம். இந்தப் பதவி துறப்பு என்பது அவருக்கு வெறும் மூன்று மாதங்களுக்கான சிறிய ஓய்வாக இருப்பதுதான் காரணமாம்.

ஆம்... "ஏன் கவலைப்படுகிறீர்கள். இது சும்மா மூன்று மாத ஓய்வுதானே. அதன் பின் சூடு தணிந்துவிடும். மீண்டும் அமைச்சராகிவிடுவேன்" துக்கம் விசாரிப்பவர்களிடம் இப்படித் தான் சொல்கிறாராம் ரவி.

*"எல்லாம் ஒரு நாடகம்தானே, நடத்துங்க.... நடத்துங்க"*

எம்.ஐ.முபாறக்



# லண்டன் ரயிலை வைத்து கோடிக் கணக்கில் ஊழல்



## அரசியலில இதெல்லாம் சாதாரணமப்பா!

இலங்கையில் ஊழல் என்பது சர்வசாதாரண விடயமாகிப் போயிற்று. அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் அளவுகணக்கில்லாமல் கொள்ளையடித்துக் கொண்டு இருக்கின்றனர். அவற்றுள் சிலரே சிக்குகின்றனர். சிலர் பிடிபடாமல் அப்படியே தொடர்கின்றனர்.

சிக்காமல் ஊழல் செய்வதற்காக எமது அரசியல் தலைவர்கள் புதுப் புது யுக்திகளைக் கையாள்கின்றனர். அவற்றுள் ஒன்றுதான் இது.

சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காகப் பல திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. வெளிநாட்டுச் சுற்றூலாப் பயணிகளைக் கவரும் திட்டமும் அவற்றுள் ஒன்று. அவர்களைக் கவருவதற்கான வேலைத் திட்டங்களை அவரவர் நாட்டில்தான் முன்னெடுக்க வேண்டும். அந்த வகையில் லண்டன் சுற்றுலாவாசிகளைக் கவரும் வகையில் லண்டன் மெற்றோ ரயிலில் இலங்கைச் சுற்றுலாத்துறை பற்றிய படத்தைக் காட்சிப்படுத்தி இலங்கையை விளம்பரப்படுத்தும் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. அதற்காகக் கோடிக்கணக்கான பணமும் செலவிடப்பட்டது.

அண்மையில் லண்டன் சென்ற சுற்றுலாத்துறைப் பதில் அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ அந்த ரயில்களில் விளம்பரங்கள் எப்படி இருக்கின்றன என்று பார்ப்பதற்கு ஆசைப்பட்டாராம். ஒவ்வொரு ரயிலாகப் பார்த்தாராம். ஒரு ரயிலிலும் சிறு அளவிலான படம் கூட இல்லையாம்.

லண்டன் என்பதால் யாரும் தேடிப் பார்க்கமாட்டார்கள் என்ற தைரியத்தில் இதில் சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் கோடிக் கணக்கான பணத்தை ஆட்டையைப் போட்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து திரும்பினாராம் அமைச்சர்.

*'என்ன ஒரு நூதன ஆட்டை'*



# இவரின் சாராயத்துக்குத்தான் சிறப்புச் சலுகை

ஆட்சி மாற்றம் ஏற்பட்டது முதல் 'பேர்பச்சுவல்' நிறுவனம், அர்ஜூன அலோசியஸ் என்ற பெயர்கள் உலாவிக்கொண்டே இருக்கின்றன. மத்திய வங்கி ஊழலுடன் தொடர்புபட்ட இந்தப் பெயர்கள் இலங்கை அரசியல் அரங்கில் இருந்து அகற்ற முடியாத பெயர்களாகி விட்டன. அத்துடன் அவற்றுடன் இந்த ஆட்சியாளர்கள் எவ்வளவு தூரம் தொடர்பைப் பேணுகிறார்கள் என்பதும் அம்பலமானது. இந்த ஆட்சியாளர்கள் மத்திய வங்கி விவகாரத்தில் மாத்திரம் அலோசியசுக்கு உதவி செய்யவில்லை. அவரது ஏனைய வியாபாரங்களுக்கும் உதவி செய்கின்றனர்.

அதாவது, சாராய நிறுவனங்கள் 15 நாட்களுக்கு ஒரு தடவை அரசுக்கு வரி செலுத்த வேண்டும். தவறினால், அடுத்த15 நாள்கள் வரை கால எல்லை வழங்கப்படும். அப்போதும் செலுத்தாவிட்டால் அனுமதி நீக்கப்படும். அலோசியசுக்கும் சொந்தமாகச் சாராய நிறுவனம் ஒன்று உள்ளது. ஆனால் இவருடைய சாராய நிறுவனத்துக்கு இந்தச் சட்டங்கள் எதுவும் இல்லையாம்.

அலோசியசின் சாராய நிறுவனம் ஜூலை மாதம் முழுவதும் வரி செலுத்தவே இல்லையாம். அதாவது இரண்டு தவணைகளுக்கான வரி செலுத்தப்படவில்லை. இதனால் அந்த நிறுவனத்துக்கு அனுமதி நீக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அப்படி எதுவும் நடக்கவில்லை. அது தொடர்ந்தும் இயங்குவதைக் காணலாம். அரசியல் செல்வாக்கு இருந்தால் மாத்திரம்தான் இது சாத்தியப்படும். இவருக்கு ஆட்சியாளர்கள் எவ்வளவுக்கு விலைபோயுள்ளனர் என்பதை இதன்மூலம் புரிந்துகொள்ளலாம்.

*'பணம் பாதாளம் வரை பாயும் பாருங்கோ...'*

# அப்போதே சொன்னேன்... கேட்டாரா அவர்

மத்திய வங்கி ஊழல் வெளியானமை சுதந்திரக் கட்சிக்குத் தான் சாதகமாகியுள்ளது. இந்த ஊழலுடன் முழுக்க முழுக்க தொடர்புபட்டது ஐக்கிய தேசியக் கட்சிதானாமே...!

மத்திய வங்கி ஆளுநராக அர்ஜுன மஹேந்திரனை ரணிலின் நண்பர் நியமிப்பதற்கு சிபாரிசு செய்ததும் ரணில்தான். அவரது மருமகன் அலோசியசுடன் பல வருடங்களாக உறவு வைத்திருக்கிறார் ரவி கருணாநாயக்க. அவரும் ஐக்கிய தேசியக் கட்சிதான். இப்படி எல்லாவகையிலும் ஐக்கிய தேசியக் கட்சிக்குத்தான் இந்த ஊழலுடன் தொடர்பு இருக்கின்றது.

அர்ஜுன மகேந்திரனை மத்திய வங்கி ஆளுநராக நியமிப்பதற்கு ரணில் முடிவெடுத்தபோதே ஐக்கிய தேசியக் கட்சி இவ்வாறான ஒரு சிக்கலில் மாட்டிக்கொள்ளும் என்பதை மைத்திரி அறிந்து வைத்திருந்தாராம்.

இந்தச் சிக்கல் சுதந்திரக் கட்சிக்கு நல்ல பெயரைக் கொண்டு வரும் என்று அவர் நினைத்தாலும்கூட, அப்போது ரணிலுக்கும் அவருக்கும் இடையில் காணப்பட்ட நல்லுறவு காரணமாக இந்தச் சிக்கலில் இருந்து ஐக்கிய தேசிய கட்சியை காப்பாற்றுவதற்கே மைத்திரி முயற்சி செய்தாராம்.

அர்ஜுன மகேந்திரனை ஆளுநராக்குமாறு மலிக் சமரவிக்ரமவின் ஊடாக ரணில், மைத்திரியிடம் கோரிக்கையை முன்வைத்தபோதே "இது உங்கள் கட்சிக்கு ஆபத்தைக் கொண்டு வரும்" என்று மலிக் சமரவிக்ரமவிடம் மைத்திரி எடுத்துக் கூறினாராம். அத்துடன் நின்றுவிடாது 10 நாள்களாக அந்த நியமனத்தை இழுத்தடிக்கவும் செய்தாராம். ஆனால், ரணிலோ அதில் விடாப்பிடியாக நின்றாரம். அதனால் ஒருவாறாக நியமனத்தை வழங்கினாராம் மைத்திரி. இப்பொது அந்த விடயத்தில் ரணில் விடாப்பிடியாக நின்றதைச் சொல்லிக்காட்டித் திரிகிறாராம் மைத்திரி.

*'ஆனாலும் உள்ளுக்குள் அவருக்கு மகிழ்ச்சியோ மகிழ்ச்சி'*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரவின் இரசிகன்

இரவு
பூமிக்குக் காலம் நெய்து கொடுத்த
கறுத்தப் பட்டு.

பகல்
பூமிப் பந்தின்
பரிபூரண நிர்வாணம்.

நிலவு
இரவுப் பாஞ்சாலிக்கு
துகில் உடுத்தும்
கிருஸ்ண பரமாத்மா.

கதிரவக் கதிர்கள்
துகில் உரிந்து நிர்வாணமாக்கும்
துச்சாதனக் கரங்கள்.

கூடிய கொழுநன்
தேன் துளிகளைச் சொட்டுதற்கும்
சொட்டிய துளிகளை
மன்மதக் கிண்ணங்கள் ஏந்துதற்கும்
இரவே இதமானது.

இரவை இரசிக்கத் தெரியவில்லை
இந்த இயந்திர மாக்களுக்கு.

அதனால்தானோ என்னவோ
தினமும் புற்களின்மீது
அழுதுவிட்டுப் போகிறது
இரவு.

வேல். லவன்.





# செல்லும் வழியின் தூரம்... 15

பரியமதா பயஸ்

பயஸ் தேவிபுரம் சென்று இன்றுடன் நான்காவது நாள் ஆகிவிட்டது. வலைஞர் மடமும் களேபர பூமியாகிப் பிணக் காடாகியது. உண்ண உணவும், தண்ணீரும் இல்லாமல் மக்கள் அங்கலாய்த்தனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு உயிரைப் பறிகொடுத்தவர்களாக, ஒவ்வொருவர் வேதனையை மற்றவர்களும் அறிந்தவர்களாக, ஒவோருவர் முகத்தையும் ஒவ்வொருவர் பார்த்துக் கொண்டு துயர் சூழ அந்தக் காற்றிலும் வெயிலிலும் காய்ந்துகொண்டிருந்தோம். எப்போதும் பயஸ் வருவதுபோன்ற அரட்சியான நிலைமையை என் மனது நிலை நிறுத்திக் கொண்டது. அந்தக் குரல் அவர் அழைப்பது போல இருந்தது. மன அருட்சியோ என நினைத்துக்கொண்டு கூடாரத்துக்குள் இருந்து எட்டிப்பார்த்தேன். அவரேதான் வந்துவிட்டார். மனம் அந்த கொடும் வேளையிலும் துள்ளிக் குதித்தது.

## பயஸ் கொண்டுவந்த இலை, குழை உணவுகள்

அவருடைய கையில் ஒரு பை. அது நிறைய நாயுண்ணிக் குளைகள் கட்டுக்கட்டாக முறித்து அடுக்கி அமர்த்தி வைக்கப்பட்டிருந்தன. அதைவிட வேறு எதையும் அவர் கொண்டு வரவில்லை.

“என்னப்பா இது...? இதை ஏன் கொண்டு வந்தனீங்கள்...? தேங்காய், மாங்காய் ஒன்றும் சந்திக்கேல்லையா...?” இது என் கேள்வி.

“இப்போதைக்கு இதுதான் நல்ல பொருள் இதைவிட வேற என்னத்தை கொண்டுவாறது...?” இது பயஸ்.

“சரி இது என்ன இலையப்பா...?” அடிப்பையில் இருந்த இலைகளை அள்ளிக் கையில் எடுத்து வைத்துக்கொண்டு கேட்டேன்.

“இது காரை இலை. இதைக் கஞ்சி வைச்சுக் குடிக்கலாம். அதைப் பக்குவமாக எடு” என்றார்.

நான்கு நாள் களப்பணிக்குப்போய் என் கணவனால் கொண்டுவர முடிந்த பெறுமதியான பொருள்கள், காரை இலையும், நாயுண்ணி இலையும்தான். சிரிப்பும் மனவேதனையும் இணைந்து தொண்டையை அடைத்துக் கொண்டது. ஏதோ ஒரு விம்மல் என் நெஞ்சைக் கடந்து வந்து வாய்வழியாகப் பெருமூச்சாகக் கடந்துபோனது. இங்கேதான் மனதை நெருடும் கொடூரமும், வேதனையும், எம் இயலாமையும், நாம் இருக்கும் இக்கட்டான, மிகக் கேவலமான, மனிதராக எம்மை மதிக்காத அரச பயங்கரவாதத்தின் கோரமும் அரங்கேறியது.

ஒவ்வொரு மனிதனும் உணவைக் காண அங்கலாய்த்துக்கொண்டு இருந்தான். ஒவ்வொரு குழந்தையும் தன்னிலை அறியாமல் தவித்தது. ஒவ்வொரு தாயும் தன் முலை சுரந்து குழந்தைக்குப் பால்புகட்டமுடியாத பாவியாகிப் பரிதவித்தாள். உணவு என்பதே இல்லாமல் வாயும் வயிறும் ஒட்டிய அந்த உடலில் இருந்து எப்படிக் குழந்தைக்குப் பால் சுரக்கும். தண்ணீரைக் கூடத் தாகம் தீர அள்ளிப் பருக முடியவில்லை அவ்வளவுக்கு வெம்மையும் கொடுமையும் எம்மைச் சூழ்ந்து கொண்டன.

## நான் இலை, குழைகள் விற்கும் வியாபாரி ஆனேன்

இப்போது அந்தக் குட்டிச்சந்தையில் நானும் வியாபாரி ஆகப்போகிறேன். பயஸ் கொண்டுவந்த நாயுண்ணி இலைகளைச் சிறிய சிறிய பிடிகளாகக் (வல்லாரைப் பிடிபோல) கட்டிக்கொள்கிறேன். ஒரு பிடி பத்து ரூபா என்பதாகத் தீர்மானித்து, நாயுண்ணி இலைகளை ஒரு கதிரையில் அடுக்கித் தண்ணீர் தெளித்துக் கொண்டுபோய் கூடாரத்தின் எதிர்ப்பக்கம் சந்தையோடு சேர்ந்த பகுதியில் வைத்தாகிவிட்டது. விற்பனை ஆரம்பமாகிறது. தடல்புடலாக நாயுண்ணிக் குழை விற்பனையாகிறது. பெரும்பாலும் வெற்றிலையைக் காணமல் இருந்த வயோதிபர்கள் முட்டிமோதி ஒவ்வொருவரும் ஒரு கட்டு, இரண்டு கட்டு என வாங்கிக்கொள்கின்றனர். வீட்டில் வெற்றிலை, பாக்கு போடும் வயோதிபர்களை நினைத்துக்கொண்டு, வெற்றிலை போடாதவர்களும் ஒவ்வொரு கட்டு வாங்கிக் கொள்கின்றனர். பத்து நிமிட நெருக்கடியான வியாபாரத்தில் முக்கால்வாசி நாயுண்ணிக் குழைக்கட்டுக்கள் விற்றுத் தீர்ந்துவிட்டன. மீதமாக நான்கோ, ஐந்தோ கட்டுக்கள் தான் கதிரையில் இருந்தன. அவற்றை அந்த இடத்தில் விட்டுவிட்டு விற்பனை எவ்வளவுக்குப் போனது எனக் கணக்குப் பார்க்க நானும் பயசும் கூடாரத்துக்குள் வருகிறோம். முந்நூற்று எண்பது ரூபாவுக்கு குழை விற்றாகிவிட்டது. இன்னும் இரண்டு கட்டு விற்றிருந்தால் நானூறு ரூபா அரைக்கிலோ அரிசியாகிலும் வாங்கலாம். “சரி இதைக் கொண்டு போய்ப் பாருங்கப்பா. எங்காவது அரிசியோ, பருப்போ சந்திச்சால் வாங்குங்கோ” என்று அவரின் கைகளில் காசைத் திணிக்கிறேன். ஒரு நெருடலான உணர்வோடு அவர் அதை வாங்கிக்கொண்டார். (அவர் இறக்கும் வரை எனக்கு அந்த வலியைக் கூறவே இல்லை) ஆனால், என்னால் அவர் மன உணர்வை ஊகிக்க முடிந்தது. என் மனமும் கனத்துத் தான் போய்விட்டது. என்ன செய்வோம் நாம் நிர்க்கதியாக்கப்பட்டுவிட்டோமே. பற்றைக்குள் கிடக்கும் இலை குழைகளை விற்கும் நிலை எமக்கு. அதை வாங்கும் நிலைமை என் மக்களுக்கு.

## பரிதாபமான சம்பவம் ஒன்று...

இந்தத் தருணத்தில் ஒரு சம்பவம் நடக்கிறது. இதை இப்போது நினைக்கும்போது சுவாரசியமாக இருக்கலாம். ஆனால் அப்போது அது தீவிரமாக இருந்ததை என்னால் உணர முடிகிறது. என் கதையைக் குறுக்கறுத்து “அங்கே பார்...” என்று கண்களால் சைகை செய்கிறார் பயஸ். நான் நாயுண்ணிக் குழை வைக்கப்பட்ட பக்கம் பார்வையைத் திருப்புகிறேன். “அண்ணோய்...” என வாய் உச்சரித்து முடிக்கும் முன் என் வாயைப் பொத்தி “ஸ்...ஸ்... சத்தம் போடதே” என்றார் பயஸ். நான் சுதா[illegible]. நான் எப்போதும் திடீர் [illegible] உடனடியாகவே எதையும் செய்து முடித்துவிடுவேன். ஆழ்ந்து யோசிப்பதெல்லாம் அடுத்த கட்ட நகர்வுதான். இதைப் பயஸ் நன்கு உணர்ந்ததாலேயே என் வாயைப் பொத்திச் சத்தம் வராமல் என்னை அடக்கினார். இப்போது நிதானமாகப் பார்க்கிறேன். நடுத்தர வயதுடைய ஒரு ஆண். அந்தக் குழைக் கட்டில் ஒன்றைப் பத்து ரூபா கொடுத்து வாங்க இயலாத நிலைமை அவருக்கு. ஆனால், ஒரு கட்டைத் தூக்கிகொண்டு ஓடவும் திராணியற்று ஒரு இலை, இரண்டு இலையாக அங்கும் இங்கும் போய் வந்து எல்லாக் கட்டிலும் இருந்து சில இலைகளை உருவி எடுக்கிறார். அந்த நேரத்தில் எனக்கு வந்த அத்தனை ஆவேசமான கோபம் இப்போது அந்தளவு பரிதாபத்தையும் வேதனையையும் தருகிறது. அவர் தனக்குப் போதுமான இலைகளை உருவி எடுக்க ஒரு குறிப்பிட்ட நேரத்தைச் செலவிட்டார். தன்னை யாரும் பார்க்கவில்லை என்ற நிம்மதியோடு அவர் அங்கிருந்து போகிறார். பயஸ் இப்போது என்னோடு பேசுகிறார்.

“பார்த்தியா களவில் கூட எவ்வளவு கண்ணியம் நினைத்தால், இரண்டு கட்டுக்களைத் தூக்கிக் கொண்டு போயிருக்கலாமே... தனக்குத் தேவையான ஒரு பத்து இலைகளைத் தனித்தனியாக உருவி எடுத்திருப்பார் அவ்வளவும் தான், நீ சத்தம்போட்டிருந்தால் அவரின் நிலைமை என்னவாகும் அவர் யார் தெரியுமா...?” என்று கேட்டார். “இல்லையே எனக்கு தெரியாதே” என்றேன். இவர்தான் அவர் என ஒரு பெரிய கடை முதலாளியின் பெயரைச் சொன்னார். நான் அதிர்ந்துபோனேன். கையில் பணமே அற்று நடுத்தெருவில் நிற்கும் அவரின் நிலைமை என்னையும் தாக்கியது. “அவர் பாவம் எடுத்திட்டுப் போகட்டும். நீ கூச்சல் போட்டிருந்தால், என்ன நிலைமை” என்றார். உண்மைதான் ஒவ்வொரு மனிதனும் நாதியற்று பச்சை இலைகளுக்காகவும் ஒரு பிடி சோற்றுக்காகவும் உயிர் தின்னும் பொழுதுகளில் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு அலைந்தான். அந்தக் கொடிய நிமிடங்கள் வலி மிகுந்தவை.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியாக ஆயிரம் வார்த்தைகள்...










மனோஜ் குமாரசாமி

பல்லாயிரம் வார்த்தைகளைத் தனக்குள் கொண்ட சட்டகம் என்று அதைச் சொல்வேன். அந்த வார்த்தைகளுக்கு மொழி எனும் பேதமில்லை என்பதையும் முக்கியமாகச் சொல்லிக்கொள்ள வேண்டும். தான் சொல்ல வரும் அனைத்தையும் அது முழுவதுமாகச் சொல்லிவிடும். மிச்சம் மீதி இன்றி. ஒளிப்படம் என்பதற்கு ஒருவர் சொல்லும் அச்சொட்டான விளக்கம் இப்படியிருக்கிறது.

— — — —

ஓகஸ்ட் 19ஆம் திகதியை உலக ஒளிப்பட தினம் என்கிறார்கள். இது ஒளிப்படக்காரர்களின் திறமையையும் சில ஒளிப்படங்கள் ஏற்படுத்திச் சென்ற புரட்சியையும் கொண்டாடுவதாகவே பிற்காலங்களில் தொடர்கின்றது. நகர்ந்து கொண்டிருக்கும் காலத்தின் கணப்பொழுதைப் பதிவு செய்வதே ஒளிப்படம். அது தொழில்நுட்ப வசதியின் வளர்ச்சியால் சாத்தியமாயிற்று. ஒளிப்படக்கருவியின் வளர்ச்சி ஒருபடியுடன் நின்றுவிடவில்லை. அதேபோலதான் அதன் புதிய ஆற்றல்களால் ஒளியைப் பதிவாக்கிக் கொள்ளும் படைப்புக்களின் உள்ளடக்கமும் படிப் படியாக நீள்கிறது. அந்தக் கருவியின் உச்சபட்ச வசதிகள், நுட்பங்களை இரசனை மிக்க மதி நுட்பத்துடன் வெளிப்படுத்துவது என்பதும் அதில் ஒருவகை.

இவை எல்லாவற்றுக்கும் முதலில் 'ஒளிப்படம்' எனும் சொல் பற்றிய தெளிவு தேவை.

சூழலில் பரந்துள்ள ஒளியின் துணைகொண்டு காட்சிகளைப் பதிவுசெய்தல் அல்லது சூழலில் பரவியுள்ள ஒளிகளின் வேறுபாடுகளைப் பதிவாக்குதல் என்பதே ஒளிப்படக் கருவி செய்யும் ஒரே ஒரு வேலையாகும். ஒளிப்படங்களின் அடிப்படை இந்த ஒளிதான். பொருள்கள் வெளிவிடுகின்ற அல்லது அவற்றின் மீது தெறித்துப் பரவுகின்ற ஒளியைப் பதிவுசெய்கின்றது இந்தக் கருவி.

இதையே புகைப்படம் அல்லது நிழல்படம் என்றும் சொல்கிறார்கள். புறச் சூழலில் பரவியுள்ள ஒளியை நேரம், அளவு எனும் கணிப்புடன் பதிவு செய்வதால் அதை ஒளிப்படம் என்று அழைப்பதே பொருத்தமானது.

— — — —

வேதிப்பொருள்கள் பூசப்பட்ட ஒளியுணர் மேற்பரப்பையுடைய ஒளிப்படத் தாள் ஒளிப்படக்கருவியின் கண்டுபிடிப்பில் முக்கியமானது. அது ஒளியால் தூண்டப்படக் கூடிய நுண் உணரியாக இருக்கிறது. ஒளிப்படக் கருவிகள் புற ஒளியை வில்லைகள் மூலம் குவித்தோ ஒருங்கமைத்தோ இந்த ஒளியுணர் தாளின் மேற்பரப்பில் விழச் செய்வதன் மூலம் தாளில் ஒளிப்படத் தெறியுருவை உருவாக்குகின்றன. இது பின்னர் பல்வேறு வழிமுறைகளின் வழியே தாள், அட்டை அல்லது வேறு பொருள்களில் பதிக்கப்படுகின்றது. பழங்காலங்களில் இரசாயனப் புகைகளை அடிப்படையாகக் கொண்டு படங்கள் உருவாக்கப்பட்டதாலேயே இவை 'புகைப்படம்' என்ற பெயரைப் பெற்றன என்ற கருத்துக்களும் உண்டு.


1825 - முதலாவது ஒளிப்படம்


1826- இரண்டாவது ஒளிப்படம்

— — — —

அறியப்பட்ட சான்றாதாரங்களின்படி முதலாவது ஒளிப்படமாகக் கருதப்படுவது 1825ஆம் ஆண்டு நிசிபோர் நியெபஸ் என்பவரால் எடுக்கப்பட்ட ஒளிப்படமாகும். இதில் 17ஆம் நூற்றாடைச் சேர்ந்த ஓவியம் ஒன்று ஒளிப்படமாக்கப்பட்டுள்ளது. இதுகூட பல கண்டுபிடிப்புக்களுக்குப் பின்னரான வளர்ச்சி என்றே கருதப்படுகிறது. வெள்ளித் துகளும், சுண்ணத் துகளும் கலந்த கலவையானது ஒளிபடும்போது கரு நிறமாக மாறுகின்றது என்ற ஜோகன் ஹென்றிச் சூல்ட்ஸ் என்பவரின் 1724ஆம் ஆண்டுக் கண்டுபிடிப்பை அடிப்படையாகக் கொண்டே இந்த ஒளிப்படம் உருவாக்கப்பட்டது எனும் எண்ணப்பாடும் உண்டு. அதன் பின்னர் 1826ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட ஒரு ஒளிப்படமே இயற்கைக் காட்சியொன்றைக் காட்டிய முதல் ஒளிப்படம் எனக் கருதப்படுகிறது அது யன்னலூடான ஒரு காட்சி போன்று தெரிகிறது. இதே 1826 ஆம் ஆண்டில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜோசப் நைஸ்போர் நீப்ஸ் என்பவர் முதல் நிலையான நவீன ஒளிப்படத்தை எடுத்தார் எனவும் அது நாளடைவில் அழிந்து போன தாகவும் கூடக் கூறுகின்றார்கள். இதற்குப் பிறகு 1839ஆம் ஆண்டில் லூயிஸ் டாகுரே என்பவர் பிரான்சின் தலைநகரான பரிஸின் 'போல்வோர்ட்' கோவிலுக்கு அருகில் உள்ள வீதியைப் ஒளிப்படமாக்கினார். தனிநபர் எடுத்த முதல் ஒளிப்படம் இது என்கிறார்கள்.

— — — —

ஒளிப்படக் கருவியின் கண்டுபிடிப்பு வியப்பானதாக இருந்த காலத்துக்குப் பிறகு, அதன் வளர்ச்சி தொடர்ந்தும் வியப்பைத் தந்தது. இதனால் சாதாரண ஒளிப்படத்தைப் பார்த்து வியந்த நிலை மாறி, அதைப் பல நுட்பங்கள் புகுத்தி எடுத்தால் மாத்திரமே இரசிக்கலாம் என்ற நிலை தோன்றியது. அது இரசனை மிக்கதாகவும் கலை நயமுள்ளதாகவும் இருந்தாலேயே பாராட்டப்படும் என்பது இன்றைய நிலை. இதனால் இன்றைக்கு ஆயிரக்கணக்கான ஒளிப்பட வல்லுநர்களும் அவர்களிடமிருந்து பல்லாயிரக்கண ஒளிப்படங்களும் பார்வைக்கு வந்துவிட்டன. ஆனாலும் வரலாற்றைப் புரட்டிப்போட்ட அல்லது ஒளிப்பட வரலாற்றில் புரட்சியை ஏற்படுத்திய ஒளிப்படங்கள், ஒளிப்படக் கலைஞர்கள் என்று சுட்டிக்காட்டத்தக்க ஒன்றிரண்டு விடயங்கள் இருக்கத்தான் செய்கின்றன. 20ஆம் நூற்றாண்டில் எடுக்கப்பட்ட சில ஒளிப்படங்கள் உலக வரலாற்றை மாற்றியுள்ளன. சீனச் சிப்பாய்களின் இராணுவப் பீரங்கியை எதிர்த்து நின்ற டேங்க் மன் ஒளிப்படம், வியட்நாம் போரை நிறுத்தக் காரணமாகஇருந்தசிறுமியையும்1994ஆம் ஆண்டு சூடானில் நிலவிய உணவுப் பஞ்சத்தை எடுத்துரைத்த குழந்தையையும் பதிவாக்கிய கெவின் கார்ட்டரின் ஒளிப்படம் ஆகியவற்றைச் சொல்லலாம். கலை நயம், இரசனை என்பவற்றை உடைத்தெறிந்து உலகளவில் நிகழ்ந்த அவலங்களைப் பதிவாக்கியிருந்தன குறித்த படங்கள். அவற்றிலும்கூட அது சார்ந்த கலை இரசனை உச்சமாக இருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். அவ்வாறுதான் நிறைந்த அவலத்தைத் தமக்குள் புதைத்த எமது ஈழத்து ஒளிப்படங்களின் நிலையும். இறுதிப்போரில்தமிழர்கள்அனுபவித்த அவலத்தைத் தமக்குள் ஆயிரம் வார்த்தைகள் புகுத்திப் பகருகின்றன அவை.

## நட்பு

திளைக்கிறேன் நான்.
திகட்டாத போதை தரும்
நேசத்தின் சுவையில்...

தொலைந்துபோக விருப்பம்.
அன்பானவர்களின்
உலகத்தில்...

தூரங்கள் அறியாமல்,
திசைகள் கூட தெரியாமல்
பயணிக்க ஆசை
இனிய நண்பர்களுடன்...

முறிகண்டி லக்சிதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்ப்பாசம்!



பழங்காலத்தில் ஓர் நாட்டில் விசித்திரமான ஒரு பழக்கம் இருந்தது.

பெற்றோர்கள் வயதாகி, முதுமையின் காரணமாக ஆற்றல் குறைந்து, மற்றவர்களுக்கு எவ்விதப் பயனும் அளிக்க முடியாத நிலைக்கு வந்துவிட்டால், பிள்ளைகள் அவர்களைத் தூக்கிக்கொண்டு போய் உயரமான மலைகளின் மேல் வைத்துவிட்டு வந்துவிடுவார்கள். எதுவும் செய்ய முடியாத நிலையிலுள்ள அந்த முதியோர்கள் பசி, தாகத்தினால் தனிமையில் வாடி வதங்கி மடிவார்கள். இப்படியான காலத்தில் ஓர் இளைஞன் முதுமையடைந்த தன் தாயைச் சுமந்துகொண்டு மரங்கள் சூழ்ந்த காட்டுப்பகுதியால் மலை உச்சியை நோக்கி நடந்துகொண்டிருந்தான்.

தாய், மகன் இருவருமே எதுவும் பேசவில்லை. ஆனால், சிறிது நேரத்தில் தன்தோளில் இருந்த தாய், ஏதோ ஒருவித வாசனையுடைய மரங்களின் சின்னச் சின்னக் கிளைகளை ஒடித்துக் கீழே போட்டுக்கொண்டே வருவதை மகன் அவதானித்தான். உடனே, "அம்மா, ஏதோ ஒரு மாதிரியான மரத்தின் கிளைகளை ஒடித்துக் கீழே போட்டுக்கொண்டே வருகிறீர்களே, ஏன்?" என்று கேட்டான். அதற்கு தாயார், "மகனே, நீ என்னை மலை மீது விட்டுவிட்டு வீடு திரும்பும்போது வழி தெரியாமல் திண்டாடக் கூடாதல்லவா? இங்கே போடப்பட்டுள்ள கிளைகளைக் கவனித்து நடந்தால் வழி தவறாமல் நீ பாதுகாப்பாக வீடு போய்ச் சேரலாம். அதற்காகவே கிளைகளை அடையாளமாகப் போடுகிறேன்" என்றாள்.

"வயதாகிவிட்ட தன்னைத் தவிக்கவிட்டுச் சென்றாலும் மகன் பத்திரமாக வீடு போய்ச் சேரவேண்டும் என்று நினைக்கும் பாசம் மிகுந்த இந்தத் தாயா பயனற்றவர்?" என்று அவனுடைய உள்மனம் கேட்க, தாயை மீண்டும் வீட்டுக்கே கொண்டு சென்று பாசத்துடன் பராமரிக்கலானான். அதன்பின்பு இந்தக் கொடூரமான பழக்கம் அந்த நாட்டை விட்டே மெல்ல மெல்ல மறைந்து போயிற்று.

**நீதி : பெற்ற தாய்க்கு நிகர் எதுவுமில்லை.**

## சிந்தனைக்கு



மழலைகள் உள்ளம் வெள்ளைக் காகிதம் போன்றது. அது கசங்குவதற்கு முன்னர், நல்லனவற்றை எழுதி விடுங்கள்...

# கண்ணாடி சொல்லும் மூன்று பாடங்கள்



எமதுமுகத்தில்ஏதேனும் அழுக்கோ கறையோ பட்டுவிட்டால், கண்ணாடியில் அது தெரிகிறது. அந்தக் கறையைக் கண்ணாடி கூட்டுவதும் இல்லை, குறைப்பதும் இல்லை. உள்ளதை உள்ளபடியே காட்டுகிறது அல்லவா? அதேபோல் உன் சகோதரனிடம், நண்பனிடம் எந்த அளவுக்குக் குறை இருக்கிறதோ அந்த அளவுக்குத்தான் அதனைச் சுட்டிக்காட்டவேண்டும். எதையும் மிகைப் படுத்திக் கூறக்கூடாது.

இது கண்ணாடி சொல்லும் முதல் பாடம்!

கண்ணாடிக்கு முன்னால் நீ நிற்கும்போதுதான் உன் குறையைக் காட்டுகிறது. நீ அகன்று விட்டால் கண்ணாடி மௌனமாகிவிடும். அதேபோல் மற்றவரின் குறைகளை அவரிடம் நேரடியாகவே சுட்டிக்காட்ட வேண்டும். அவர் இல்லாத போது முதுகுக்குப் பின்னால் பேசக்கூடாது. இது கண்ணாடி சொல்லும் இரண்டாவது பாடம்!

ஒருவருடைய முகக் கறையைக் கண்ணாடி காட்டியதால் அவர் அந்தக் கண்ணாடி மீது கோபப்படுவதில்லை. அதேபோல் நம்மிடம் உள்ள குறைகளை யாரேனும் சுட்டிக்காட்டினால், அவர் மீது கோபப் படாமல் நன்றி கூற வேண்டும். அந்தக் குறைகள் நம்மிடம் இருக்குமேயானால் திருத்திக்கொள்ள வேண்டும். இது கண்ணாடி சொல்லும் மூன்றாவது பாடம்!

நீங்கள் கண்ணாடி முன்னால் நின்று முகத்தை அலங்கரிக்கும் போதெல்லாம் இந்த அறிவுரைகள் உங்கள் மனதை அலங்கரிக்கட்டும்!




# மாவீரன் அலெக்சாண்டர்

ஆசிரியர் இல்லத்தில் பிரார்த்தனை நடந்துகொண்டிருந்தது. நெருப்பில் சாம்பிராணியைப் போடும் பொறுப்பு அந்த மாணவனுக்கு. அவன் அளவில்லாமல் சாம்பிராணியை அள்ளி அள்ளிப் போட்டுக்கொண்டிருந்தான். அந்தக்காலத்தில் சாம்பிராணி அரிதாகக் கிடைக்கும் பொருள். அவனது செயலைப் பார்த்த ஆசிரியர், "சிறுவனே சாம்பிராணியைக் கொஞ்சமாகப் போடு! பின்னாளில் நீ சாம்பிராணி விளையும் நாடு எதையும் போரில் வென்று கைப்பற்றுவாயானால் அப்போது அள்ளிப் போடலாம்" என்றார்.



ஆசிரியர் சொன்ன வாக்குப் பொய்க்கவில்லை. பிற்காலத்தில் அந்த மாணவன் சிரியாவைக் கைப்பற்றி சாம்பிராணி, குங்கிலியம் போன்ற பொருள்களைக் கவர்ந்தான். முதல் வேலையாக அவற்றைத் தன் ஆசிரியருக்கு அனுப்பினான். அத்துடன் சிறுகுறிப்பும் எழுதி வைத்திருந்தான். அதில், "ஆசிரியரே! இனி பிரார்த்தனை யின்போது சாம்பிராணி விடயத்தில் தாங்கள் சிக்கனம் காட்ட வேண்டியிராது!" என்று எழுதப்பட்டிருந்தது. அந்த மாணவன்தான், மாவீரன் அலெக்சாண்டர்!

# மனிதன்

1. மனிதனுடைய இதயத்தைத் திறப்பது, அவனை அறியாமல் எழும் சிரிப்புத்தான்!
2. மூச்சு விட்டுக்கொண்டிருப்பவன் எல்லாம் மனிதன் இல்லை. மூச்சிருக்கும் வரை முயற்சி செய்துகொண்டிருப்ப வனே மனிதன்.
3. மனிதனுக்கு மேலே இருக்கும் சிற்றரசன், அவனுடைய மனச்சாட்சி.
4. மானமும் அறிவும், மனிதனுக்கு அழகு சேர்ப்பவை.
5. மனிதன் வாழ்கின்ற வாழ்க்கை, பிறருக்கும் நாட்டுக்கும் பயனுள்ளதாக இருக்கவேண்டும்.
6. தடம் பார்த்து நடப்பவனல்ல மனிதன், தடம் பதித்து நடப்பவே மனிதன்.
7. தன்னை அறிந்திடும் மனிதனுக்குத் துன்பமில்லை.
8. மனிதன் இயல்பிலேயே அன்புணர்வு கொண்டவன்.
9. அன்பும் கருணையும் கொண்டுள்ள மனிதன், தெய்வமாகி விடுகிறான்.
10. தான் மறைந்த பின்னும் தன்னைப் பற்றிப் பலரும் பேசும்படியாக நடப்பவனே சிறந்த மனிதன்.





## ஏன் வளர்ந்தாய் சொல்?

பனை மரமே
பனை மரமே
ஏன் வளர்ந்தாய் சொல்?
பலருக்கும் பதனீர்
தர வளர்ந்தேன் கேள்!

தென்னை மரமே
தென்னை மரமே
ஏன் வளர்ந்தாய் சொல்?
பலருக்கும் இளநீர்
தர வளர்ந்தேன் கேள்!

வாழை மரமே
வாழை மரமே
ஏன் வளர்ந்தாய் சொல்?
பலருக்கும் பழங்கள்
தர வளர்ந்தேன் கேள்!

தாழை மரமே
தாழை மரமே
ஏன் வளர்ந்தாய் சொல்?
பலருக்கும் பூக்கள்
தர வளர்ந்தேன் கேள்!



சு.இமேசலக்ஷான்,
தரம் – 1
வ/தாலிக்குளம் அ.த.க.பாடசாலை.



றெ.றக்ஷனா,
தரம் – 3 டி,
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டு வேலைகளா...?



# சிறுவர்களை கவனமாக கையாளுங்கள்...!

நா.நவராஜ்

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது 18ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கைத்தொழிற் புரட்சிக்குப் பின்னரே பெருமளவில் முகிழ்ந்ததாகக் கருதப்படுகிறது. இதன் பின்னரே பெருமளவான சிறுவர்கள் தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டதுடன் குறைந்த ஊதியத்துடன், கூடிய மணித்தியாலங்களுக்கு அதிலீடுபடவும் தூண்டப்பட்டார்கள். இதனால் அவர்களிடமிருந்து உழைப்பை வலிந்து பெறுவது முறைகெடானது எனும் கருத்துநிலை மேலெழுந்தது. சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதை எதிர்த்து 1802ஆம் ஆண்டு பிரிட்டனில் சட்டம் ஒன்று முதல்முதலில் உருவாக்கப்பட்டது. அதற்குப் பின்னர் உருவாக்கப்பட்ட எத்தனையோ சட்டங்களும்கூட சிறுவர்கள் வேலைக்கமர்த்தப் படுவதைக் குறைப்பதற்கு முயன்ற வண்ணமே உள்ளன.

ஆனாலும் சிறுவர் உழைப்பை வலிந்து பெறும் செயற்பாடுகள் எவையும் குறைந்தபாடில்லை. 1997ஆம் ஆண்டில் வெளிவந்த ஐ.நா. சபையுடைய பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பின் அறிக்கைப்படி உலகளாவிய ரீதியில் 15 வயதுக்குட்பட்ட 250 மில்லியன் சிறுவர் தொழிலாளர்கள் உள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்று இதன் தொகை இன்னும் அதிகரித்திருக்கும்.



**சுயசிந்தனைக்கு முன் அனைத்தும் திணிப்புக்களே**

அபிவிருத்தி அடைந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இந்தப் பிரச்சினை அதிகரித்துக் காணப்படுகின்றது. எமது நாடு, அபிவிருத்தி அடைந்துவரும் நாடு என்னும் வகைக்குள் இருப்பதுடன் உள்ளநாட்டுப்போர் காரணமாக பொருளாதாரத்தில் பின்னடைவைச் சந்தித்துள்ளது. வறுமை என்பது பொதுவான ஒரு பிரச்சினையாகக் காணப்படுவதால், சிறுவர்களைத் தொழிலில் ஈடுபடுத்துகின்ற தன்மையும் அதிகரித்துக் காணப்படுகின்றது. "உங்கள் பிள்ளையை இந்த வயதில் படிக்க அனுப்பாமல் ஏன் வேலைக்கு அனுப்புகின்றீர்கள்...?" என்று அந்த நிலைக்குட்பட்டிருக்கும் பெற்றோரைக் கேட்டால் "அவன்(ள்) வீட்டுக் கஷ்டத்தை உணர்ந்து தானாகவே உழைக்கப் போகிறான்(ள்)" என்று பதில் சொல்லு கின்றனர். வலிந்து வேலைக்கமர்த்தப்படாமல் அந்தச் சிறுவர்கள் தாம் விரும்பியே வேலைக்குப் போனாலும் அது தவறானதே. ஏனெனில் அவர்களுடைய வயது தாம் சுயமாகச் சிந்திக்கும் நிலைக்கு வரவில்லை என்பதைக்காட்டுகின்றது. இதனால் அவர்கள் எடுக்கும் முடிவு அவர்களுடைய எதிர்காலத்துக்கு நல்லது அல்லது சரியானது என்றோ ஆகிவிடாது. அதே சிறுவர்களிடம் "உமக்குப் படிக்க விருப்பமா...?" என்று கேட்டால், அவர்கள், "ஆம்... ஆனால் என் வீட்டு நிலை அதற்கு இடங்கொடுக்காது" என்பார்கள்.

**உதாரணத்துக்கு ஓர் உண்மைச் சம்பவம்.**

அவனுக்குப் 10 வயது. வீட்டில் கஷ்டம். படிப்பதற்கு வசதியில்லை. அவனுடைய தந்தை இரண்டாவது திருமணம் முடித்துள்ளார். அவர் தனது இரண்டாவது மனைவியின் வீட்டில் வைத்துக் கசிப்பு விற்கிறார். இவனது குடும்பத்துக்கு ஏதும் கொடுப்பதில்லை. அது சார்ந்த பிணக்குகளின் பின்னணிகள் ஒரு புறம் இருக்கட்டும். அந்தச் சிறுவனுடைய நிலை...? அவனைப் பலவந்தமாக அவர் அந்த விற்பனையில் ஈடுபடுத்தினார். அதற்கு அவனுக்கு 500 ரூபா வழங்குகிறார். அவன் அதனைத் தாயிடம் கொடுப்பான். அவனைச் சந்தித்தபோது "தனக்குப் படிப்பதற்கு விருப்பம் என்றும் குடும்பக்கஷ்டத்தால் இதனைச் செய்வேண்டியிருக்கின்றது என்றும் செய்யாமல் நின்றால் அப்பா பேசுவார்" என்றும் குறிப்பிட்டான். தாயாரைக் கேட்டபோது, "அவன் குடும்பத்தின் நிலைமை உணர்ந்து செயற்படுகின்றான்" என்றார்.

இவனுக்கு கல்வி, அடிப்படை உரிமைகள் பலவும் மறுக்கப்படுகின்றன. இதனால், தங்களுக்குத் தேவையானதைப் பெற்றுக்கொள்ளுகின்ற உரிமை பிள்ளைகளுக்கு உண்டு என்பதையும். பிள்ளைகளுக்குத் தேவையானதை வழங்குகின்ற கடமை உங்களுடையதே என்பதையும் பெற்றோருக்கு உணர்த்த வேண்டியிருக்கிறது.

சுயசிந்தனை வளர்ச்சியுறாத பருவத்தில் தம்மைத் தாங்குபவர்களை நம்பியிருக்கும் சிறுவர்கள் தாங்குபவர்களால் முறைகெடாகப் பயன்படுத்தப்படும்போது உளரீதியான பாதிப்பை அதிகளவில் எதிர்கொள்ளுகின்றனர். கடின வேலைகளை ஓய்வின்றி அதிக நேரம் செய்வதால் மனஅழுத்தங்களுக்கு உள்ளாவார்கள். இது வாழ்கை என்பது மிகவும் துன்பமானது. இதைவிட இறந்து போகலாம் என்ற சிந்தனைகளை மிகச்சிறுவயதிலேயே அவர்களுக்கு ஏற்படுத்திவிடும். சில சந்தர்ப்பங்களில் தற்கொலை முயற்சிக்கும் வித்திடக்கூடும். தங்களை ஒத்த மற்றைய சிறுவர்கள் அனுபவிக்கின்ற சுதந்திரத்தைத் தன்னால் அனுபவிக்க முடியவில்லையே என்ற ஏக்க உணர்வுக்கும் உட்படுவார்கள். தனது இந்த நிலைக்குக் காரணமானவர்கள் மீது கோபத்தை அல்லது வெறுப்பை ஏற்படுத்தும்.

**பிஞ்சிலே பழுத்தல் என்ற நிலை**

உழைப்பால் கிடைக்கும் ஊதியத்தால் இவர்கள் தம்மை வளர்ந்தவர்கள் போல் காட்டிக் கொள்ளுவார்கள். அதற்காக வளர்ந்தவர்களோடு கூட்டுச் சேருதல், மது அருந்துதல், புகைப்பிடித்தல் போன்ற நடத்தைகளில் ஈடுபடுவார்கள். இதனால் தமது வாழ்க்கை முழுதும் பலவகையான பிரச்சினைகளை அவர்கள் எதிர்கொள்ள வேண்டி ஏற்படுகின்றது. சில வேளைகளில் சமூக விரோதப் போக்குள்ளவர்களாகவே இவர்கள் தொடர்ந்தும் வாழத் தொடங்கி விடுவர்.

> சிறுவர் உழைப்பை வலிந்து பெறும் செயற்பாடுகள் எவையும் குறைந்தபாடில்லை. 1997ஆம் ஆண்டில் வெளிவந்த ஐ.நா. சபையுடைய பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பின் அறிக்கைப்படி உலகளாவிய ரீதியில் 15 வயதுக்குட்பட்ட 250 மில்லியன் சிறுவர் தொழிலாளர்கள் உள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்று இதன் தொகை இன்னும் அதிகரித்திருக்கும்.

எமது வாழ்க்கை முறையைப்பொறுத்த வரையில் வீட்டில் பிள்ளை வேலை செய்வதுஎன்பதுகாலங் காலமாக இருந்து வரும் சாதாரணமான ஒன்று. அதனால் தொழிற்சாலைகளுக்கு அனுப்பிசிறுவர்களை வேலைக்கமர்த்துவது தவறானது என்பதை நாம் இலகுவாக ஏற்றுக் கொள்வோம்.

ஆனாலும் அன்றாட அவர்களுடைய வீட்டு வேலைகளில்கூட அவர்களது விருப்பத்துக்கு மாறாக வேலைகளைத் திணிப்பதும், உடல், உளப் பாதிப்பைத் தோற்றுவிக்கும் வகையில் அவற்றைச் செய்விப்பதும் தவறானதே. அவற்றை நாம் நிறுத்தியே ஆகவேண்டும். சிந்தியுங்கள். சிந்தனை இல்லை என்றால் எமக்கும் விலங்குகளுக்கும் வித்தியாசமே இல்லையே.



## மதி கெட்ட மனிதன்

அயலானை நேசிக்க
அறியாத மனிதர்க்கு
அறம்பேசி ஆவதென்ன?
புயலுக்குத் தென்றலதன்
மேன்மை தனைச் சொல்லி
புகழ்வதில் ஏது பெறலாம்?

கோட்டானின் சிறகிற்கு
நீராட்டுச் செய்தாலும்
அழகிற்கு அமைவாகுமா?
பாட்டனின் பெருமைகளைத்
தெரியாத பேரர்க்கு
விருதுகள் பெருமை தருமா?

ஆட்காட்டி கத்துவதன்
அர்த்தங்கள் புரியாது
தர்க்கீகம் செய்யலாமா?
ஆட்காட்டி முட்டையில்
குயிற்குஞ்சு பொரிக்குமென
எண்ணுபவன் அவனிமூடன்

முறையற்று வாழ்கின்ற
வகையற்ற மனிதர்தம்
வாழ்வுக்குப் பொருளேது சொல்?
கறைகொண்ட மதி கொண்டு
புவி ஆள நினைப்போர்க்கு
புகழ்மாலை பரிசாகுமா?

கடலோடு நதி சேரும்
மலையோடு அலைமோதும்
ஆனாலும் கடல் ஒன்றுதான்
கடல் நீரில் நதி சேரின்
கரிக்கின்ற உவர் மாறி
குடி நீர்க்கு அமைவாகுமா?

கடலுக்குள் தான் தோன்றி
ஒளிர்ந்தாலும் வெண்முத்து
கதிரோனின் ஒளி சிந்துமா?
மடல் கீறித் தேனுண்டு
வாழ்கின்ற தேன் சிட்டு
குயிலாகி இசை பாடுமா?

மனிதத்தைப் புரியாது
மதிகெட்டு வாழ்வோர்க்கு
கதியேதுமில்லைப் புவியில்
இனிதான சுகபோகம்
நிறைவென்ற எண்ணத்தில்
மதி கெட்ட மனிதன் அவனே.

வளவை வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு மாதத்திலும், அதன் மூன்றாவது வாரத்தில், ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை உலகுக்கு வளம்சேர்த்து மறைந்த சிறுகதையாசிரியர் ஒருவரின் சிறுகதை மறுபிரசுரம் செய்யப்படும். அந்த வகையில் இந்த வாரம் அமரர் சம்பந்தனின் 'வாழ்வு' எனும் சிறுகதை பிரசுர மாகின்றது.

## சிறுகதை



## பத்தாயம்



### சம்பந்தன்

ஈழத்துக்குப் புகழ் சேர்த்த புனைகதை ஆசிரியர் சம்பந்தன். யாழ்ப்பாணம் – தின்னவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட வர். இவருடைய இயற்பெயர் க. திருஞானசம்பந்தன். 'கலை மகள்', 'கிராம ஊழியன்', 'மறுமலர்ச்சி', 'ஈழகேசரி' முதலான பத்திரிகைகளில் இருபதுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழு தியுள்ளார். அல்லயன்ஸ் கதைக் கோவையில் இவருடைய 'விதி' சிறுகதை இடம்பிடித்துள்ளது. 'சம்பந்தன் கதைகள்' இவரது சிறுகதைத் தொகுதி. 'சகுந்தல காவியம்' இவரது காவிய நூல். இவரது 'தர்மவதிகள்' நவீன எழுத்துலகுக்குக் கிடைத்திருக்கும் புத்திலக்கியமாகும்.

# வாழ்வு

■ சம்பந்தன்

எதிர் எதிராக அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களது உள்ளங்கள் வேறு வேறு பாதையில் சென்று கொண்டிருந்தன. அவர்களைச் சூழ்ந்து ஒருவித அமைதி நிலவியது.

அவள் தன்னைப் பற்றிச் சிந்திக்கவில்லை என்றுஞ் சொல்ல முடியாது. அவன் சம்பந்தமான நினைவுகளில் தானும் சம்பந்தப்பட்டுக்கொண்டேயிருப்பதை அவள் நன்றாக உணர்ந்திருந்தாள். அவனுக்கு அப்படி ஒரு நம்பிக்கை உண்டாகும்படி அவள் ஒரு நாளும் நடந்ததே இல்லை. ஆனாலும் அவன் நம்பியிருந்தான். அந்த நம்பிக்கை எந்த ஆதாரத்தைக் கொண்டெழுந்ததோ அதைப்பற்றி அவள் கவலைப்படவே இல்லை.

முதலில் நல்லவன், பரிசுத்தமானவன் என்று மட்டும் எண்ணியவள் பிறகு...? தானும் அந்த நினைவுகளுக்கு அடிமையாகியிருக்கிறாள். அப்பொழுது அதில் ஒரு அபாயமும் தெரியவில்லை. இன்றோ? மேலே அவள் சிந்திப்பதை நிறுத்திவிட்டு அவனைப் பார்த்தாள். அவளை அறியாமலே ஒரு மெல்லிய நீண்ட மூச்சு வந்தது.

அதே சமயம் அவனும் பெருமூச்சு விட்டான். உடனே அவள் கேட்டாள், "என்ன யோசிக்கிறீர்கள்?" அவனும் திருப்பிக் கேட்டான்.

"முதலில் நீ சொல்லு. எதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தாய்...?"

அவள் ஒருமாதிரிச் சிரித்தாளே தவிரப் பதில் ஒன்றுஞ் சொல்லவில்லை. மறுபடியும் இருவரும் மௌனமாக இருந்தார்கள். இப்பொழுது அவள் சிந்தனைகள் நிதானமாக எந்தப் பாதையிலும் செல்லவில்லை. சுழன்று சுழன்று தடுமாறி அலைந்தன. அவன் மட்டும் நினைவற்று அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு ஒருவித வேதனை கலந்த உணர்ச்சியோடு இதைச் சொன்னான்.

"சாவித்திரி! மனிதனாகப் பிறப்பது மிகவும் மேலானதுதான். ஆனால் அதிலும் சில கஸ்ரங்கள் இருக்கவே செய்கின்றன. அப்படியான கஸ்ர நிலைகள் வரும்போதுதான் 'எதற்காக மனிதனாகப் பிறந்தோம்" என்ற வேதனை உண்டாகிறது. இதை நீயும் ஒப்புக் கொள்வாய் என்றே எண்ணுகிறேன்"

உடனே அவள் சொன்னாள்: அவளுடைய பதில் நிதானமாக இருந்தது.

"மனிதனாகப் பிறப்பது மேலானதோ தாழ்ந்ததோ என்று ஆராய நான் விரும்ப வில்லை. ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையைத் தானாகவே தேடிக்கொள்கிறான் என்பதை யாராலும் மறுக்க முடியாது. இதைக் காலம் கடந்த உண்மை என்றுகூடச் சொல்லலாம்"

"எல்லாவற்றையும் அவனவனே தேடிக் கொள்கிறான் என்று சொல்வதற்கில்லை. சாவை ஒருவன் தானாகவே தேடிக்கொள்கிறான் என்று சொல்லிவிடலாம். பசியை அப்படிச் சொல்லிவிட முடிகிறதா? சிலவற்றை நாமே வரவழைத்துக் கொள்ளுகிறோம் என்பதற்காக எல்லாவற்றையும் அப்படிச் சொல்லுவது தப்பு"

அவள் இதைக் கேட்டுக் கொண்டிருந்தாளே தவிர ஒன்றும் பேசவில்லை. அவன் பிறகும் தொடர்ந்து சொன்னான்.

"உண்மையிற் சிலர் பாக்கியசாலிகள் தான். பெரும்பாலானவர்களுக்கு பாக்கியம், அதிஷ்டம் என்பவற்றின் அர்த்தமே தெரிவதில்லை. இந்தப் பாக்கியங்களையோ அதிஷ்டங்களையோ பற்றி அவர்கள் நினைக்கிறதுமில்லை. இவர்களுக்கு இடையிற் சிலர் இருக்கிறார்கள். இந்தச் சிலருக்கு அதிஷ்டமும் கிட்டுவதில்லை. அது கிடைக்கவில்லையே என்ற துக்கமும் விட்டு நீங்குவதில்லை. மனிதனைப் படைத்த தெய்வம் அவனுக்கு மூளை, புத்தி, மனம் என்ற இவைகளை ஏன் வைத்தது என்றுதான் நான் அடிக்கடி எண்ணுகிறேன்"

"
அவள் ஒருமாதிரிச் சிரித்தாளே தவிரப் பதில் ஒன்றுஞ் சொல்லவில்லை. மறுபடியும் இருவரும் மௌனமாக இருந்தார்கள். இப்பொழுது அவள் சிந்தனைகள் நிதானமாக எந்தப் பாதையிலும் செல்லவில்லை. சுழன்று சுழன்று தடுமாறி அலைந்தன.
"

கடைசியில் அவன் பேச்சில் துயரத்தின் பிரதிபிம்பம் மெல்ல முகங்காட்டியது. அவளுடைய உள்ளத்திலும் அதன் சாயை படிந்துவிட்டது. ஆனால், அதை வெளிக்குக் காட்டாமலே அவள் பதில் சொன்னாள்.

"நன்றாகச் சிந்தித்துப் பார்த்தால் எல்லாம் ஒருவித மயக்கமே ஆகும். முடிவில்லாமல் இப்படிச் சிந்தித்துக் கொண்டிருப்பதில் ஒரு இலாபமும் கிடைக்கப்போவதில்லை"

இந்த வேதாந்தம் அவனுக்குச் சிரிப்பையே உண்டாக்கியது. பிறகு சொன்னான், "நீ என்னை ஜனக மகாராஜா என்று எண்ணுகிறாயா? எல்லாம் வெறும் மயக்கம். வாழ்வு அநித்தியம் என்ற இவையெல்லாம் உண்மையென்றே வைத்துக் கொள். அ தற்காக என் கண் முன்னே உட்கார்ந்திருக்கும் உன்னைப் பார்த்து, "இவளும் அநித்தியமான ஒன்றுதான் என என்னால் எண்ண முடியவில்லை"

பேச்சை அவ்வளவில் நிறுத்திவிட்டு நிமிர்ந்து அவளைப் பார்த்தான். அவனுடைய பார்வையிலே சொல்ல வேண்டியதை எப்படியோ சொல்லிவிட்டேன் என்ற மனத்திருப்தி காணப்பட்டது.



அவளோ எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டே உட்கார்ந்திருந்தாள். தடைகள், ஆசைகள், நியாயங்கள் என்று எத்தனையோ விசயங்களை அவளுடைய மனம் தொட்டுக்கொண்டு ஓடியது. கடைசியில் குறுக்கே இறங்கி "என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டாள்.

எதிர்பாராத இந்தக் கேள்வி அவனைத் திடுக்கிடச் செய்துவிட்டது. ஆனாலும் கொஞ்சம் பொறுத்துப் பதில் சொன்னான்.

"இதில் நீயோ நானோ தனித்து ஒன்றும் செய்ய முடியாது. நானும் தெண்டிக்கிறேன். நீயும் பிரயத்தனப்படு. எப்படியும் இந்த நினைப்புக்களை அழித்துவிடலாம். நீ சுகமாக வாழுகிறாய் என்று தெரிந்தாலே எனக்குப் போதும். இப்பொழுது நீ என்னை மன்னிக் வேண்டும். இவ்வளவையுமே நீ செய்ய வேண்டும் என நான் விரும்புகிறேன்"

பிறகு அவன் ஒன்றும் பேசவில்லை. அவளும் பதில் சொல்லாமலே நின்றாள். அவன் பலமுறை திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே வெளியே சென்றான்.

– – – – –

நீண்ட நாள்களாக வளர்த்த அந்த ஆசைத் தீயின் ஒரு பகுதி அந்தச் சமயம் பலவந்தமாக அவிக்கப்பட்டதேயன்றி, முற்றாக அணையவில்லை. அது மூலைக்கு மூலை பதுங்கியிருந்து பற்றி எரிந்தது. ஆயினும் அவன் தடுமாறவில்லை.

"அவளுடைய நன்மையை உத்தேசித்தாவது நான் மறக்கவேண்டும். அல்லது அவளையும் படுகுழியில் விழுத்துகிற பாவம் என்னையே சாரும்"

"உண்மையில் அவள் தந்தை எண்ணுவதில் நியாயமிருக்கின்றது. அவளுக்காக இருக்கிற கணவன், என்னைவிட ஆயிரம் பங்கு உயர்ந்தவன். குணம், பதவி, பணம் எல்லாவற்றிலும் அவனுக்கு நானா இணையாவது? அவள் நன்றாக வாழவேண்டும். உயர்ந்த அன்புக்கு இப்படி நினைப்பதுதான் சாஷி' அவன் தன்னை ஒருவாறு சமாதானஞ் செய்து அமைதியடைய விரும்பினான். கழிந்த வாழ்வை ஒரு கனவுபோல மங்க வைத்துக் கொண்டே காலமும் ஓடிச் சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் அறிமுகம்

தொகுப்பு - அயக்கிரீவன்

நூல் – செ.கதிர்காமநாதன் படைப்புகள்
தொகுப்பாசிரியர்கள் – அ.சிவஞானசீலன், த.அஜந்தகுமார்
வெளியீடு – கலாசாரப் பேரவை – கரவெட்டி. தேடகம் கனடா
விலை – 700 ரூபா

கதிர்காமநாதன் எழுத வேண்டும் என்பதற்காக எழுதியவரல்லர். அவர் தனக்குரிய கோட்பாட்டுத் தளத்தில் நின்று கலைநேர்த்தி குன்றாமல் எழுதியவராகக் காணப்படுகின்றார். அவர்; "கலையும் இலக்கியமும் மக்களுக்காக என்ற கோட்பாட்டை நான் தழுவி நிற்பவன்: ஒடுக்கப்பட்ட மக்களது வாழ்க்கையின் பிரதிபலிப்புகளும் விளைவுகளுமே என் கதைகளின் உள்ளடக்கம். வாழ்க்கை தாங்கொணாத அழுத்திக் கொல்கிற சுமையாக ஏன் இருக்கிறதென்பதைத் துருவி ஆராயும் உளப்பாங்கே எனது கதைகளின் ஊற்றுக்கண் ஆதலின் கதைக்காகவும், கலை அழகுக்காகவும் எப்படியும் எழுதலாம் என்ற குழம்பிய இலக்கியக் கோட்பாடுகளின் அடியொற்றி வாழ்க்கைக்கு முரணான கற்பனைகளைத் தழுவி நிற்கும் சமத்காரம் எனது கதைகளுக்குக் கிடையா. 1959 இல் எழுத ஆரம்பித்த நான், எனது முதலாவது 'சவலை'க் கதையிற்கூட இப்பரிணாமத்தைப் பிரதிபலிக்கத் தவறவில்லை."



என்று அறிவிப்புச் செய்தவர். தனது இலக்கியக் கொள்கையை முதலாவது கதையில் இருந்து பின்பற்றியமையானது அவரது தெளிவைக் காட்டுகிறது. இன்றைய இளம் எழுத்தாளர்கள் கற்றுக்கொள்வதற்கு ஏராளமான பாடங்கள் இவரிடம் இருக்கின்றன. முற்போக்குத் தளத்தில் நின்ற பலரின் கதைகளில் பிரசாரவாடை அதிகம் அடித்தபோது தனது கருத்தை கலைநேர்த்தி குன்றாமல் பதிகை செய்த ஆளுமையாக இவர் விளங்கினார். இவரது சிறுகதைகள் துருத்திக்கொண்டு வெளித்தெரியாத நுண் உத்திகளால் ஆக்கப்பட்டவை. அது மட்டுமன்றி இவரது கதைகளின் தலைப்புகள் எளிதில் மறக்க முடியாதவையாக விளங்குகின்றன. இவரது சிறுகதைகளின் இன்னொரு சிறப்பு கரவெட்டியின் உயிரோட்டமிக்க பேச்சு மொழியை தனது கதைகளில் பதிவு செய்தமை ஆகும். ஒரு கிராமத்துப் பையன் கல்லூரிக்குச் செல்கிறான், முதலான சிறுகதைகளின் பேச்சு மொழியே கதைகளை இன்னும் ஆழப்படுத்தி மனதைக் கீறி உள்நுழைந்து துருத்தி நிற்கின்றன. கரவெட்டியின் ஒரு காலத்து பேச்சு வழக்கின் கோவையாகவும் இவரது சிறுகதைகளைக் குறிப்பிடலாம்.

(தொகுப்பாசிரியர்கள்)




நூல் – பூநகரியிலிருந்து புதுமாத்தளன் வரை
நீந்திக் கடந்த நெருப்பாறு (பாகம் 2)
ஆசிரியர் – நா. யோகேந்திரநாதன்
வெளியீடு – மகாதேவா ஆச்சிரமச் சைவச் சிறார் இல்லம்
ஜெயந்தி நகர் கிளிநொச்சி.
விலை– 750 ரூபா

நீண்ட நெடுங்கடல்களை நீந்திக் கடந்து உலக சாதனைப் புத்தகத்தில் தங்களை நிலைநிறுத்தி வைத்த பெருமை சில தமிழர்களுக்கு உண்டு. ஆனால் ஒட்டுமொத்த ஈழத்தமிழினமும் நீந்திக் கடந்ததோ பெரும் நெருப்பாறு. இந்த நெருப்பாற்று நீச்சலில் நாம் கொடுத்த விலைகளோ எண்ணிக் கணக்கிட முடியாதவை. உயிர்ப்பலிகள் கொடுத்தோம். உடல் உறுப்புக்களை இழந்தோம். காலம் காலமாகத் தேடிய சொத்துக்களைப் பறிகொடுத்தோம். இடம்மாறி இடம்மாறி இடப்பெயர்வுகளை எதிர்கொண்டோம். வியர்வையும், குருதியும் சிந்தி, பசியும் பட்டினியும் தாங்கி வெயிலையும், மழையையும், பனியையும் தலையில் ஏற்று விடுதலை வேட்கையை நெஞ்சில் சுமந்து நாம் தளர்ந்துவிடாமல் தொடர்ந்து நடந்தோம். மகத்தான தலைவன் தலைமையில், போராளிகள் ஒப்பற்ற வீரத்துடனும், அர்ப்பணிப்புடனும் தொடர்ந்த இந்த நெருப்பாற்று நீச்சல் நிறைவுபெற்றபோது எந்த விடுதலைக்காக இன்னல்களையும் இழப்புக்களையும் சுமந்து முன் நடந்தோமோ அந்த விடுதலை எம்மை விட்டுத் தொலைதூரம் தள்ளப்பட்டுவிட்டது. எனினும் எமது ஒப்பற்ற இலட்சியத்தின் வேட்கை மங்கிவிடவில்லை. வடிவம் மாறி மீண்டும் மேலெழுவதற்காக நீறு பூத்துப்போய்க் காத்துக் கிடக்கிறது. இந்த மகத்தான நெருப்பாற்று நிச்சலில் நான் சந்தித்த அனுபவங்களையும் எமது மக்களின் இதயங்களில் கொழுந்து விட்டெறிந்த உணர்வுகளையும் ஒரு போர்க்கால இலட்சியமாகப் படைக்கத் தவறினால் என் எழுத்துப் பணிகள் அர்த்தமற்றவையாகி விடுமென்பதைப் புரிந்துகொண்டேன். அதன் விளைவுதான் முள்ளிக்குளத்திலிருந்து கிளிநொச்சிவரை நகர்ந்த போரையும், போருக்குள்ளான எமது மக்களின் வாழ்வையும் அடிப்படையாகக் கொண்டு என்னால் எழுதி வெளியிடப்பட்ட நீந்திக் கடந்த நெருப்பாறு என்ற இலக்கிய வடிவம்.

(நூலாசிரியர்)

இராம. இராகவா

# பண்டாரவன்னியன்




அந்தப் போர்
அவளுக்குப் பாடங்கள்
பல சொன்னது.
திருகோணமலையிலிருந்தும்
யாழ் மண்ணிலிருந்தும்
மன்னாரிலிருந்தும்
மூன்று திசையால்
வந்த படைகளை
முட்டி மோதி
வந்த நினைவுகள்
கண்ணில்
அருவியாய்க்
கொட்டிப் போயின
கலெக்டர் ரேனர்
அனுப்பிய படைகளுடன்
மாங்குளம்
முறுகண்டிச் சாலையில்
பதினெட்டாம் போர்
எனும் பகுதியில்
நடந்த சமரும்
வன்னியர் வீரமும்
காலம் தன்
பக்கங்களில் நிறைத்து
வைத்தது.

பண்டாரவன்னியன்
படைகள்
மெல்லத் தகர்ந்து
உயிர் கரைந்த இடம் அது.

பின்வாங்கிக் கொண்டே
பண்டார வன்னியன்
வலியோடு சிரித்ததையும்
வீரர்கள்,
தம் முகத்தறைந்து
அழுதமையும்,
கண்டு வந்திருக்கிறாள்
இப்போது
உடையாவூரில்...
கட்டளை வராது
போர் முடிந்ததோ...?
என்னவன் நிலைமை
என்ன ஆனதோ...?
பந்தம்
காற்றில்
வலுவாய் ஆடிற்று.

காலரவம் கேட்டு
விழி தூக்கிப் பார்த்தாள்
குருவி
தோழி ஒருத்தி
வேகமாக...
வந்தவள்
"நாச்சி..." என்று
கதறியபடி வீழ்ந்தாள்
குருவியின் உடல்
சிலிர்த்துக் கொண்டது
"என்னாயிற்று
சொல்லி விடு வேகமாய்..."
வார்த்தைகள் காற்றில்
கரைந்தன.

"நாச்சி...!
பண்டாரவன்னியன்
படைகள்
உடையாவூரில்
பின் வாங்கிக்
கொண்டனவாம்"
"போர் நடந்ததா?
என்னை அழைக்காமல்,
ம்...
மிகுதி?"

"நான்கு தினங்களுக்கு
முன்பே
போர் தொடங்கிற்று
வீரர்கள்
களமாடினர்
பகைவரின் சிரங்கள்
பருந்துக்கு இரையாகின
எம்மவர்
குருதியால்
எல்லைகள் சிவந்தன
நெஞ்சினில்
நெருப்பெடுத்து
களமேகின வீரர்களின்
உடலங்கள்
அந்தச் சாலையெங்கும்
மிதந்தன..."

"தோழி பண்டார
வன்னியனின்
நிலை என்னாயிற்று...?"

"மீண்டும் படைதிரட்டி
போர் முகம்
காண்பதற்காய்
வனத்துறையப்
போனாராம்...
போரில் பட்ட
விழுப்புண்
எம் அரசனை
அந்தோ
வேரோடு பிடுங்கி
நிலத்தில் வீழ்த்திற்று..."

மின்னலுக்கஞ்சிய
கருநாகம்போல
கேட்ட மறுகணமே
நிலம்
வீழ்ந்தாள் நாச்சி.

காற்றில் எழுந்து
ஆடிய போர் வாள்,
பகையை
விரட்டிய
காவல் தெய்வம்
காற்றில் கரைந்து
போனதுவோ
கண்களில்
பொங்கி வந்த
கண்ணீரோடு
மயங்கிப் போனாள்
நாச்சி

(தொடரும்)

**கண்களில்
பொங்கி வந்த
கண்ணீரோடு
மயங்கிப் போனாள் நாச்சி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை, இலக்கியத்தில் கொய்தலும் கொழித்தலும்



கலை, இலக்கியப் படைப்பாளிகளின் பல்வேறு கருத்துக்களை அவர்களின் நூல்களில் இருந்தும் சிற்றேடுகளில் இருந்தும் தொகுத்து இந்தப் பகுதியில் தரப்படுகின்றது.

தி.இராஜநாயகி

## புத்தகங்களும் முன்னுரைகளும்

புத்தகத்துக்கு ஆசிரியர் எழுதுவது முன்னுரை. சில நேரங்களில் முன்னுரையைப் புகழ்பெற்ற எழுத்தாளர்கள், ஆசிரியர்கள், விமர்சகர்கள் எழுதுவது உண்டு. அதில் புத்தகம் எழுதும் ஆசிரியரின் விருப்பம் அதிகமாக இருக்கும். அதாவது இவர் எழுதினால், புத்தகம் மதிப்புப் பெறும் என்பது ஆசிரியரின் நினைப்பாக இருப்பதுண்டு. பெரும்பாலும் முன்னுரை ஆசிரியரையும், புத்தகத்தையும் புகழ்ந்து மேம்படுத்துவதற்காக அமைந்து விடுகிறது. அதுதான் ஆசிரியர் எதிர்பார்ப்பது. அந்த எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யாத முன்னுரையை ஆசிரியர் புத்தகத்தில் சேர்ப்பதில்லை.

சிலர் முன்னுரையே கொடுப்பது இல்லை. படிக்க நேரம் இல்லை, அது இடைஞ்சல் புத்தகம் பற்றி முன்கூட்டியே ஓர் அபிப்பிராயத்தை ஏற்படுத்தி விடுகிறது. இருநூறு பக்கப் புத்தகத்தில் சொல்லியிருப்பதைத் தானே முன்னுரையில் சொல்லியிருப்பார்கள். எனவே அது அவசியம் இல்லை. என்கிறார்கள். இது நியாயமான கட்சி. புத்தகத்தின் மீது நம்பிக்கை வைக்கும் கட்சி. வாசகனுக்கும் புத்தகத்துக்கும் நேரடியாகத் தொடர்பு ஏற்படுத்தும் கட்சி.

இரண்டாவது கட்சியினர் ஒரு புத்தகத்துக்கு முன்னுரை அவசியம் என நம்புகிறவர்கள். அதுவும் பிரபலத்தின் முன்னுரை. ஏற்கனவே சமூக அந்தஸ்தினைப் பெற்ற மனிதரின் நல் வார்த்தைகள் நான்கினைப் பெற்று போட்டுக்கொள்கிற கட்சி. அந்த முன்னுரைக்கும் நூலுக்கும் சம்பந்தமே இருக்காது. ஆனாலும் இவரின் முன்னுரை கொண்டது என்ற அறிமுகமே ஆடம்பரமாக இருக்கும். முன்னுரை எழுதுகிறவரோ தன்னுடைய பட்டம் மற்றும் முன்னாள் , இந்நாள் பதவிகளை முதலில் எழுதிவிட்டுத்தான் முன்னுரை எழுதி இருப்பார். ஆசிரியரே எழுதும் முன்னுரையில் தன் கொள்கை, கோட்பாடு, முக்கியமாக இருக்கும். மேலும் யாரையெல்லாம் அவருக்குப் பிடிக்கவில்லையோ, யாரையெல்லாம் திட்டித் தீர்க்க வேண்டும் என்று இருந்தாரோ அவர்களை எல்லாம் முன்னுரையில் ஒரு பிடி பிடித்து விடுவார்.

இன்னும் சில ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தங்களிடம் வரும் இளம் ஆசிரியர்களை பிடித்துக் கொண்டு விடுவார்கள். உங்கள் புத்தகம் வரும்போது நான்தான் முன்னுரை எழுதுவேன் என்று அச்சாரம் பொடுவார்கள். இளம் எழுத்தாளர்களோ காணாமல் போய்விடுவார்கள்.

முன்னுரை என்பது இன்னொருவர் அங்கிகாரம் இல்லை. வெகுமதி இல்லை. படைப்பு இலக்கியத்தில் பூடகமாக ஆசிரியர் சொல்லியிருப்பதை இன்னொருவர் தான் புரிந்து கொண்ட விதத்தில் சொல்வது. அது சரியாகத்தான் இருக்கவேண்டும் என்பது அவசியம் இல்லை. கோபாலகிருஷ்ண பாரதியாருக்கு தன் நந்தன் சரித்திரத்துக்கு மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் பாயிரம் கேட்டுப்பெற்று புத்தகம் போட வேண்டுமென்று ஆசை. ஆனால் மகாவித்வானுக்கு பாரதியார் தமிழ் மீது நம்பிக்கை கிடையாது. இலக்கணப் பிழை உண்டு என்று நம்பியவர். எனவே பாயிரம் கொடுக்க விரும்பவில்லை. ஆனாலும் அதை நேரில் சொல்லாமல் இழுத்தடித்துக் கொண்டேயிருந்தார். இப்படி நாள்கள் சென்று கொண்டிருந்தன.

ஒரு நாள் பகல் பொழுது. மகாவித்வான் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு கோபாலகிருஷ்ண பாரதியார் தன் 'நந்தன் சரித்திரத்தைப் பாட ஆரம்பித்தார். நேரம் ஆக ஆக அவர்க்கே உற்சாகம் வந்துவிட்டது. பாடிக்கொண்டே இருந்தார். வீட்டின் உள்ளே உறங்கிக் கொண்டிருந்த மகாவித்வான் சப்தம் கேட்டு விழித்தார். அப்புறம் பாட்டைச் செவிமடுத்தார். அது அவர் மனசுக்குள்ளே புகுந்தது. சொற்குற்றம், பொருள்குற்றம், இலக்கணக் குற்றம் நிரம்பிய நந்தன் சரித்திரக் கீர்த்தனைகளுக்கு மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாயிரம் எழுதிக்கொண்டிருந்தார்.

தமிழ் மொழியில் மற்றவர்களுக்கு முன்னுரை எழுதிக்கொடுப்பதில் முதலில் இருப்பவர் அசோகமித்திரன். அநேகமாக எல்லா இலக்கிய எழுத்தாளின் முதல் தொகுதிக்கும் முன்னுரை எழுதியிருக்கிறார்.



## விமர்சனங்கள் மதிப்புரைகள்




விமர்சனம் என்பது ஒரு சொல். இது சமஸ்கிருதச் சொல். அர்த்தம் 'பெருமையாகச் சொல்வது' என்பது. ஆனால் தமிழில் குற்றம் குறை கண்டு சொல்வது என்றாகிவிட்டது. விமர்சனத்தை எழுத்தாளர்கள் இலக்கியத்துக்குக் கொண்டு வந்தார்கள். அது இலக்கிய விமர்சனமாகியது. ஒரு நூலை அலசி ஆராய்ந்து அதன் நிறை குறையை எடுத்துச் சொல்வது – குறையைக் குறையாகச் சொல்வது என்பதில் விமர்சனம் வரவே இல்லை. அது வழுவி விட்டது. பத்திரிகையில் விமர்சனம் காணாமல் போய்விட்டது.

எதுவும் இல்லாமல் போவதில்லை. ஓரிடத்தில் தொலைந்தால் இன்னொரு இடத்தில் தலை காட்ட வேண்டும். தமிழ்ப் பத்திரிகைகளில் இலக்கியத்தில் காணாமல்போன விமர்சனம் திரை விமர்சனமாகி அதனோடு சேர்ந்து விட்டது. ஒவ்வொரு பத்திரிகையும் திரை விமர்சனம் எழுதுகின்றன.

உண்மையில் திரை விமர்சனம் திரை விமர்சனமே இல்லை. பாராட்டுரை, சிபாரிசு, சிலாகித்தல் என்று அப்படி உள்ள பெயர்களில் சொல்லி விடலாம். திரை விமர்சனம் விமர்சனமாக இல்லாதபடியால் அதைத் திரையுலகம் ஏற்றுக் கொண்டு விட்டது.

ஒவ்வொரு மனிதனுக்கும் தன்னை, தன் காரியத்தை இன்னொருவர் அங்கீகரிக்க வேண்டும் பாராட்டிக் கௌரவிக்க வேண்டும் என்ற ஆசை உள்ளது. அது இன்று, நேற்று வந்த ஆசை இல்லை. மனித வர்க்கத்தின் நெடுநாளைய ஆசை. அதற்குக் காலம் எல்லாம் சொல்ல முடியாது. அது மனிதனோடு பிறந்து மனிதனோடு ஜீவித்துக் கொண்டிருப்பது, ஆளை ஒழித்தாலும் ஆசையை ஒழிக்க முடியாது.

ஆசையை ஒழிக்க வழி அதை ஏற்பதுதான். அங்கீகரிப்பதுதான். அது அங்கீகரிக்கப்பட ஆசையின் வேகம் குறைகிறது. ஏற்கிறவர் அங்கீகரிக்கிறவரின் பிரபல்யம், தகுதி முன்னே வருகின்றன. முகமற்ற மனிதனின் அங்கீகாரம் ஒரு அங்கீகாரமே இல்லாமல் போகிறது. எனவே எதையும் ஏற்க ஓர் அதிகாரம் வேண்டும். அதிகாரம் சொல்வதெல்லாம் சரிதான். அது கேள்விக்கு அப்பாற்பட்டது. எனவேதான் பரிசை மன்னவனும் தண்டனையை அதிகாரியும் தர வேண்டும் என்று மாக்கிவெல்லி சொல்லி வைத்து விட்டுப் போயிருக்கிறான். பரிசு, விருது என்பதில் சிக்கிக் கொள்ளாத ஆளே இல்லை.

தமிழ்ப் பத்திரிகைகள் விமர்சனத்தைக் கண்களுக்கு எட்டாத தொலைவில் தள்ளிவைத்துவிட்டன. திரை விமர்சனத்தைத் தொடர்ந்து செய்து வருகின்றன. அது படிப்பதற்கும் பார்ப்பதற்கும் இடையேயுள்ள இடைவெளி சம்பந்தப்பட்டது இல்லை. பார்த்து எழுதும் விமர்சனத்தால் என்ன இலாபம். கலையின் இலாபம் அனுபவிப்பதுதான். பார்ப்பது ஓர் அனுபவம். எழுதுவது ஓர் அனுபவம். அனுபவம் எல்லாவற்றையும் தாண்டி விடுகிறது. எழுதுகிறபோது அது தூக்கலாகத் தெரிகிறது.

சி.சு.செல்லப்பா 'எழுத்து' என்ற சிற்றேட்டை முப்பதாண்டு காலம் நடாத்தினார். அவர் காந்தியவாதி. அதைவிட முக்கியம் இலக்கிய தீவிரவாதி. தனிப்பட்ட ஆளாக இருந்துகொண்டு சொந்தப் பணம் போட்டுப் பத்திரிகை நடாத்தினார்.

அவர் 'எழுத்து'வில் மதிப்புரைகள் வந்தன. ஆனால், அது இலக்கியப் பத்திரிகையின் மதிப்புரையாக இல்லை. மதிப்புரையில் சமரசம் இல்லை என்பது சரிதான்.

மதிப்புரை எழுதி ஓர் எழுத்தாளரை கதி கலங்க அடிப்பது ஒரு வகை. மதிப்புரை எழுதாமலே நடுநடுங்க வைப்பது இன்னொரு வகை. அதில் எழுதியவர் மட்டுமில்லை, எழுதாமல் விட்டவரும்கூடத்தான் அடக்கம்.

மதிப்புரைகள் எப்படி மதிப்பிழந்தன?

எழுதியவர்களால் மதிப்பிழந்தன.

எழுதப்பட்ட புத்தகங்களால் மதிப்பிழந்தன என்று பொதுவாகச் சொல்லலாம். ஆனால் மதிப்புரையில் மதிப்புப் பெற முடியும் என்பதும் உண்டு. பாரதிதாசன் முதல் புத்தகமான அழகின் சிரிப்பைக் குத்தூசி குருசாமியும் அவர் மனைவி குஞ்சிதபாதமும் சேர்த்து வெளியிட்டார்கள். அதற்குப் பேராசிரியர் கே.சுவாமிநாதன் ஒரு மதிப்புரை எழுதினார். அந்த மதிப்புரை மறுபடியும் மறுபடியும் எடுத்துச் சொல்லப்படுகிறது. அது பாரதிதாசனின் மேன்மையா? சுவாமிநாதனின் கண்டுபிடிப்பா? என்றால் மதிப்புரையில் இரண்டும் இருக்கிறது.

மதிப்புரையை எழுதித்தான் ஸ்தாபிக்க வேண்டும் என்பதில்லை. பேசியும் ஸ்தாபித்து விடலாம். ஆனால், ஒரு படைப்பு ஜீவிப்பது அதன் உள்ளிருக்கும் தனித்தன்மையால் தான். அப்படி உயிர் இல்லாததையெல்லாம் மதிப்புரை எழுதி, விமர்சனம் செய்து ஸ்தாபிக்க முடியாது என்பது மதிப்புரையின் சரித்திரமாகும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் தன்னை, தன் காரியத்தை இன்னொருவர் அங்கீகரிக்க வேண்டும்; பாராட்டிக் கௌரவிக்க வேண்டும் என்ற ஆசை உள்ளது. அது இன்று, நேற்று வந்த ஆசை இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொடுதிரைகள்

■ சி.சிவபாலன்

தற்போதுள்ள திறன்பேசிகள், கணினிகள், மடிக்கணினிகள் போன்றனவற்றுக்குத் தரவுகளை வழங்குவதாயின் அதற்குத் தனியான விசைப்பலகையோ, சுட்டிகளோ தேவையில்லாமல் போய்விட்டது. அவற்றின் திரைகள் இப்போது வெளியீட்டுச்சாதனமாக மட்டுமல்லாது உள்ளீட்டுச் சாதனமாகவும் மாறிவிட்டமையே இதற்குக் காரணமாகும்.

அதாவது தொடுதிரைகள் உள்ளீட்டு, வெளியீட்டுச் சாதனமாக விருந்து இரண்டையும் செய்து முடித்து விடுவதால் தனியாக விசைப் பலகைகள், சுட்டிகளின் தேவை இல்லாமல் போய்கொண்டிருக்கின்றது. இதனால் விரல் நுனிகளால் தகவல்களைப் பெறும் புதிய சகாப்தம் தற்போது உருவாகியுள்ளது.

### தொடுதிரைகளின் ஆரம்பம்

தொடுதிரைகளின் முன்மாதிரியானது 1977ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுவிட்ட போதிலும், அதன் தொழில் நுட்ப வளர்ச்சியானது 1982ஆம் ஆண்டிலேயே ஏற்பட்டிருக்கின்றது. கனடாவின் ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் கணினிகளுக்கு உள்ளீடுகளை வழங்குவது குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த குழுவே திரைத் தொடுகை மூலம் கணினிக்கு உள்ளீடுகளை வழங்கும் முறையொன்றை முதல் முறையாக வெளியிட்டது. அதுவே பின்னர் 1985ஆம் ஆண்டில் பல்நோக்குத் (multipurpose) தொடுதிரைகளை வெளியிட்டது. இப்பொழுதோ தொடுதிரைகளைக் கொண்ட சாதனம் என்பது மிகவும் பரவலான ஒன்றாகிவிட்டது.

### தொடு திரையுடன் பல நுட்பங்கள்

தொடுதிரைகள் பல அடுக்குகளைக் கொண்டு அமைக்கப்படுகின்றன. இவற்றில் சில அடுக்குகள் தொடுகை (touch) உணர்வுகளூடாகக் குறித்த சாதனத்துக்கான உள்ளீடுகளை வழங்கும் பொறிமுறையைக் கொண்டிருக்கின்றன.

அதனுடன் இணைந்து அடுக்காகவிருக்கும் திரைகள் காட்சிகளை வெளிப்படுத்தும் வழமையான எல்.சி.டி (LCD) திரைகளாக அமைந்திருக்கும். தொடுதிரைகளில் கட்டளைகளை வழங்குவதற்குப் பல தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

அவற்றில் ஒன்று மின்தடை (resistive) முறையாகும். இது பரவலாகப் பயன்படுத்தும் முறையாகும். இதன் முதலாவது அடுக்கு வளையக்கூடிய ஒளி ஊடுருவக் கூடிய மெல்லிய பிளாஸ்ரிக் தட்டுக்கொண்டு அமைக்கப்பட்டிருக்கும். அதற்கு அடுத்த படலம் மெல்லிய கண்ணாடித் தட்டாகும். இந்த இரண்டு படைகளும் மின்னைக் கடத்தாத பொருள்களைக்கொண்டு அமைக்கப்பட்ட சிறிய துகள்களைக் (dots) கொண்டு வேறுபடுத்தப்பட்டிருக்கும்.

### தொடுகைகள் உணரப்படும் விதம்

நாம் திரையைத்தொடும்போது மேலுள்ள மெல்லிய பிளாஸ்ரிக் படலம் வளைந்து கீழுள்ள கண்ணாடியைத் தொடும்போது மின்சுற்று பூர்த்தியாகும். இதனால் கிடைக்கும் சமிக்ஞையைக் கொண்டு நாம் பயன்படுத்தும் சாதனத்தின் பணிச்செயல்முறைமை (OS) அதற்கான கட்டளையைப் புரிந்துகொள்ளும். மற்றொரு தொழில் நுட்பம் கொள்ளளவிகளைக் (capacitor) கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இங்கு தொடுதிரையில் சிறிய மின்னேற்றம் ஒன்று இருக்கும். தொடுதிரையை நாம் தொடும்போது மின்னேற்றம் துண்டிக்கப்பட அதனைச் சமிக்ஞையாகக் கொண்டு நாம் பயன்படுத்தும் சாதனம் செயற்படும். இதேபோல அகச் சிவப்புக் (infra red) கதிர்கள் சதுர வலையின் அமைப்பில் திரையில் பாய்ந்துகொண்டிருக்கையில் நாம் திரையைத் தொடும்போது கதிர் வீச்சுத் தடைப்படும்.

அந்த இடத்தை வைத்துக் கொண்டு கட்டளையை உணரக் கூடிய வகையிலான தொழில் நுட்பமும் சில தொடுதிரைகளில் பயன்படுத்தப்படுகிறது. மேற்பரப்பு ஒலி அலை முறை (Surface Acoustic Wave) எனும் தொழில் நுட்பமும் சில தொடுதிரைகளில் பயன்படுத்தப்படுகிறது.

இங்கு அடிப்படையில் அகச் சிவப்புக் கதிர்களுக்குப் பதிலாக மனிதனின் காதுகளுக்குக் கேட்காத அதிர்வெண்ணைக் கொண்ட ஒலி அலைகள் பயன்படுத்தப்படுகின்றன. நாம் திரையைத் தொடும்போது ஒலி அலை தடைப்படும் இடத்தைக் கொண்டு கட்டளைகளை நாம் பயன்படுத்தும் சாதனங்கள் புரிந்து கொள்கின்றன.

### தொடு திரைகள் நோக்கிய வளர்ச்சி

தொடுதிரைகளில் தொடுகையை உணர்ந்துகொள்ளும் பகுதி இலக்கமாக்கி (Digitizer) என அழைக்கப்படுகிறது. அதற்குக் கீழேயுள்ள பகுதியே திரையாகும். இலக்கமாக்கியானது ஒளி ஊடுருவக் கூடியவாறு ஆக்கப்பட்டிருப்பதால் கீழுள்ள திரையில் தென்படுவனவற்றை நாம் பார்க்க முடிகிறது. திரையானது காட்சியை மட்டும் காட்டும் ஒரு பகுதியாக உள்ள அதேவேளை நாம் அதிலுள்ள கட்டளைக்குரிய உருக்களைத் தொடும்போது அல்லது திரையை உரசும் போது ஏற்படும் விளைவையும் அது காட்டுகிறது. தொடுதிரைத் தொழில் நுட்பமானது மேலும் வளர்ந்து செல்லும் அதேவேளை அது உணர்திறன் அதிகமாகவிருக்கும் தொடுதிரைகளை நோக்கியதாகவும் இருக்கிறது. அதாவது நுட்பமாகவும் வேகமாகவும் செயற்படும் தொடுதிரைகளை அமைக்கும் வகையில் புதிய தொழில் நுட்பங்களை நோக்கியதாக அது உள்ளது. ■

# கேள்வி நான் பதில் யாரோ

■ அக்கினிக் கறுப்பன்

தேனீர்க் கடைகளில் 'ரீ' குடிக்கச் சென்றால், 'ரீ' முப்பது ரூபா என்கிறார்கள். இதில் என்ன புதினம் என்று தானே கேட்கிறீர்கள்.

சுடச் சுட சில வேளைகளில் பச்சைத் தண்ணீருக்குள் சீனி போட்டுத்தரும் இந்த 'ரீ'க்கள் சில கடைகளில் நன்றாக அமைந்தாலும் பெரும்பாலான கடைகளில் ஐயோ என்பதாகிவிடும்.

நண்பர் ஒருவருடன் கடைக்குப் போய் இரண்டு 'ரீ' சொல்லி, ஒரு ரீக்குச் சீனி போடவேண்டாம் என்றும் சொல்லியாகிவிட்டது.

'ரீ' வந்து குடித்து முடித்து காசுப் பட்டறைக்கு வந்து நூறு ரூபா கொடுத்துவிட்டு 'ரெண்டு 'ரீ', ஒண்டு சீனி போடாதது' என்று விளக்கம் கொடுத்துவிட்டு மிச்சக் காசை வாங்கினால், நாற்பது ரூபா சரியாக இருந்தது.

"தம்பி... ஒரு 'ரீ' சீனி போடாதது" என்று பதிலுக்குச் சொல்ல, "சீனி போட்டால் என்ன போடாவிட்டால் என்ன 'ரீ' முப்பது ரூபாதான்" என்றார் கடைக்காரர்.

நண்பர் சொன்னார் "எல்லாக் கடைகளிலும் இதுதான் நிலைமை. சீனியுள்ள 'ரீ' சீனியில்லாத 'ரீ' இரண்டும் ஒரே விலைதான்" என்றார்.

எனக்குள்ள சந்தேகம் என்ன என்பதை உங்களுக்குச் சொல்லி விடுகிறேன். "இந்தக் கடைக்காரர்களுக்கு இலவசமாகச் சீனி விநியோகிக்கும் அந்தப் புண்ணியவான் யார்? ஒரு கிலோ சீனி விற்கிற விலையில், அவர் யார் என அறிந்தால், பெரிய உதவியாயிருக்கும் அல்லவா?

"யார் சொல்வார்கள் பதில்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெந்துதணிந்த காட்டிடை

உணரப்படமுடியாத வலிகளால்
வடிகட்டப்பட்ட சமூகத்தின்
மரத்துப்போன மடியிலிருந்து
துளிர்க்க முனைகிறது
ஒரு புதிய சமூகம்.

மண்ணுக்கடியில் வேரறுத்தோடும்
துரோகத்தின் சாக்கடை நீரோட்டத்தில்
சற்றே கருகிப்போகின்றன
ஆதாரமான ஆணிவேர்கள்.

சபிக்கப்பட்ட சருகுகளாய்
திசையின்றிச் சுழலும் காற்றில்
புலனடக்கிப் புழுதியில் வீழ்கிறது
புத்திஜீவிகளின் புகார்கள்.

முடிவெழுதப்பட்ட
முகவுரைகளின்வழி
ஒருசாண் வயிற்றுக்கு
ஆயுட்காலத்தை விலைபேசி
பயணிக்கின்றன பாமரன் பாதங்கள்.

வெந்து தணிந்த காட்டிடை
வேர்விடுமோ தீர்வென்ற
தீராத தாகத்தீயில்
தீந்துபோகின்றன மீதிநாட்கள்

கந்தர்மடம் அ. அஜந்தன்

# 2500 வருடங்களுக்கு முன்பிருந்த நாகர்களுடைய ஐந்து தலை நாக வழிபாடு

7



அருணா செல்லத்துரை

அடங்காப்பற்று - வன்னிப் பிரதேசம் மூலைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மேற்கு மூலைப் பிரிவுக்குத் தெற்கே செட்டிகுளம் என்ற பெயர் கொண்ட பரந்த பிரதேசம் உள்ளது. இராமாயண காலத்தில் செட்டிகுளம் என்ற பெயர் குறிப்பிடப்படவில்லை. ஆனால் இராவணனுடைய இலங்காபுரம் இராசதானியை அடுத்து மாந்தைத் துறை முகத்துக்குத் தெற்கே செட்டிகுளம் பிரதேசம் அமைந்திருக்கிறது. மகாபாரதக் காலத்தில் அருச்சுனன் மாந்தைத் துறை முகத்தில் இறங்கி தென் திசை நோக்கிச் சென்றபோது அல்லிராணியைச் சந்தித்தார் என்று மகாபாரதக் கிளைக்கதைகள் கூறு கின்றன.

சிலப்பதிகார காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து முத்துக்குளிப்பதற்காகச் செட்டிகுலத்தவர்கள் பல குழுக்களாக இலங்கையின் மேற்குக் கரைக்கு வந்துள்ளனர். நெடுந்தீவு வரலாறுபற்றிக் கூறும் காரையூர் திரு.மு.க. சிவப்பிரகாசம் எழுதிய 'விஷ்ணு புத்திரன் வெடியரசன் வரலாறு' என்ற நூலிலே முத்துக் குளிப்பதற்காக இவர்கள் மாந்தைத் துறை முகத்துக்கு வந்து சென்றனர் என்று குறிக்கப்பட்டுள்ளது. 'வெடி' என்பது ஒருவகை மரக்கலத்தைக் குறிப்பிடுகிறது என்றும் அவற்றைச் சொந்தமாகக் கொண்டிருந்தபடியால் அவர் 'வெடி + அரசன்' என்று அழைக்கப்பட்டதாகவும் மற்றுமொரு தகவல் கூறுகின்றது. இந்த வரலாற்றிலே வீரநாராயணன் என்ற பெயர் பல இடங்களில் குறிப்பிடப்படுகிறது.

வீரநாராயணச் செட்டியார் முத்துக்குளிப்பதற்காக வந்த கப்பல் மாந்தைத் துறை முகத்துக்குத் தெற்கே கரையொதுங்கியது. அந்தக் கடற் பிரதேசத்தில் குளித்த சிப்பிகளை எடுத்து வந்து சிற்றாற்றங் கரையில் வைத்துக் கோதுகளை நீக்கி முத்துக்களைப் பிரித்து எடுத்தனர். இது 'சிப்பிக்குளம்' என அழைக்கப்பட்டது. சிப்பிக்குளத்தின் மறுகரையில் உடைக்கப்பட்ட சிப்பிக்கோதுகள் குவிக்கப்பட்ட இடம் 'சிப்பிமேடு' என அழைக்கப்படுகிறது.

சிப்பிக்கோதுகள் அங்கு பலஅடி ஆழத்துக்குப் புதைந்திருப்பதைத் தற்போதும் காணக்கூடியதாக இருக்கின்றது. வீரநாராயணச் செட்டியார், சந்திரசேகரப் பெருமானுக்கு ஒரு கோவிலையும் கட்டினார். ஈஸ்வரன் தீர்த்தமாடுவதற்காகச் சிப்பிக் குளத்தில் நீர்நிலை (கேணியும்) தெரிவுசெய்யப்பட்டது. 1895ஆம்ஆண்டில் இருந்து இது 'வவ்வாலைக் கேணி' என அழைக்கப்படுகின்றது. அத்தோடு 'வாலை' என்ற குளத்தைத் திருத்தி அதற்கு 'செட்டி குளம்' என்ற பெயர் வைத்ததாகவும் வன்னி வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

செட்டிகுளம் பிரதேசத்தில் 'வைகை' என்ற பெயர் பரவலாகக் காணப்படுகின்றது. நடுச்செட்டிகுளம் பிரிவில் வைகாளி கூழாங்குளம் வைகாளித்தேவர்புளியங் குளம் என்ற பெயர்களில் குளங்களும் கிராமங்களும் இருக்கின்றன.

சின்னச்செட்டிகுளம் மேற்குப் பிரிவில் வைகாளித்தேவர் குளம் என்ற பெயரில் குளமும் சின்னச்செட்டிகுளம் கிழக்குப் பிரிவில் வைகை கட்டின ஒலுக்குளம் (பாவற்குளம்) என்ற பெயரில் மற்றுமொரு குளமும் இருந்துள்ளன. இந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த பலருக்கு வைகாளி என்ற பெயர் வைக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. 'வைகை' என்பதைப் பிரதேச மக்கள் பிற்காலத்தில் 'வாகை' என்று அழைப்பதும் வழக்கமாகி விட்டது.

ஆரம்ப கால வரைபடங்களில் செட்டிகுளம் என்ற பெயர் ஏனையவற்றைப் போன்று ஒரு குளமாக மட்டும் குறிக்கப்பட்டுள்ளது. பின்னர் குளத்தின் பெயரைக் கொண்டு செட்டிகுளப் பிரதேசம் முழுவதும் பிரிக்கப்பட்டுள்ளது. செட்டிகுளப் பிரதேசம் 1895களில் நடுச்செட்டிகுளம், சின்னச்செட்டிகுளம் - கிழக்கு, சின்னச் செட்டிகுளம். மேற்கு என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தமை குறிப்புகளின் மூலம் தெரிகிறது. சின்னச் செட்டிகுளம் கிழக்குப் பிரிவில் 'சின்னத்தம்பனை' என்ற பெயரில் குளமும் கிராமமும் இருக்கின்றது. இது ஒரு புராதன கிராமமாகும். 1817ஆம் ஆண்டு இடம்பெற்ற குடிசன மதிப்பீட்டில் சின்னத்தம்பனைக் கிராமத்தில் 31பேர் வாழ்ந்தனர் என்று வன்னிக் கைநூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சின்னத்தம்பனைக் கிராமம் அருவி ஆற்றுக்குச் சற்றுத் தூரத்தில் உள்ளது. இந்தக் குளத்துக்கு மேலேயுள்ள காட்டுப்பகுதியில் பெய்யும் மழை மூலம் சின்னத் தம்பனைக்குளம் நீரைப் பெற்றுக் கொள்கின்றது.

இங்கிருந்து வடிந்து பாயும் நீர் சிற்றாறு ஒன்றில் கலப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. பாவற்குளத்திலிருந்து கிட்டத்தட்ட கிலோ மீற்றர்கள் தூரத்தில் உள்ள சின்னத்தம்பனைக் கிராமத்தில் உள்ள ஆலயத்தில் ஐந்துதலை நாகசிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இந்த நாகசிலை சின்னத் தம்பனைக் குளக்கட்டிலிருந்து அல்லது அதற்கு அருகில் இருந்து எடுத்து வரப்பட்டதாகவே அறியப்படுகிறது. இந்த ஐந்துதலை நாகசிலையும் நாகர்களுடைய வாழ்புலத்துக்கான அடையாளமாகவே திகழ்கின்றது.



**1.சின்னத்தம்பனை நாகம்**

'மதவு (மதகு) வைத்த குளம்' என்ற பெயரில் நடுச்செட்டிகுளம் பிரிவில் ஒரு குளமும், சின்னச்செட்டிகுளம் - கிழக்குப் பிரிவில் 'மதவு வைத்த குளம்' என்ற பெயரில் மற்றுமொரு குளமும், கிராமமும் இருக்கின்றன. பொதுவாகக் குளக்கட்டில் நீர் பாய்வதற்காக வைக்கும் துருசுகளை 'மதகு' என்று அழைக்கும் பாரம்பரியமே இந்தப் பிரதேசத்திலும் இருந்துள்ளது. சின்னச் செட்டிகுளம் - கிழக்குப் பிரிவில், சின்னத்தம்பனையில் இருந்து கிட்டத்தட்ட 3 கிலோ மீற்றர்கள் மேற்கே சென்றால் 'மதகு வைத்த குளம்' இருக்கின்றது. இங்கு தற்சமயம் இரண்டு குடிகள் மட்டும் மீளக் குடியேறியுள்ளன. மதவு வைத்த குளத்தில் உள்ள நாகசிலை அளவில் சிறியதாக இருந்தாலும் அதன் அமைப்பிலும் பொளியப்பட்ட விதத்திலும் செம்மை தெரிகின்றது.

**2.மதகுவைத்தகுளம் நாகம்**



பெருநிலப்பரப்பிலுள்ள நாகசிலைகளின் வால்பகுதிகள் வலது மற்றும் இடது பக்கங்களில் சுருட்டி வைத்திருப்பது போல வடிவமைக்கப்பட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. கிழக்கு மூலை, தெற்கில் உற்பத்தியாகி நடுச்செட்டிகுளம் ஊடாக மேற்கு நோக்கிப் பாயும் அருவி ஆற்றை மறித்துக் கட்டப்பட்டுள்ள நீர்த்தேக்கங்க ளான பாவற்குளத்திலும், மதகுவைத்த குளத்திலும் மற்றும் பிரதேசத்திலுள்ள சின்னத் தம்பனையிலும் வைக்கப்பட்டுள்ள நாகசிலைகளின் வால்பகுதிகள் வலது பக்கமாகத் திருப்பிச் சுருட்டி வைத்திருப்பதுபோல அமைக்கப்பட்டிருப்பது தெளிவாகத் தெரிகிறது.

**3. பாவற்குளம் நாகம்.**



(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தென்கிழக்கு

## திசையில் இருந்து...

அனார்கலி



# நீயா? நானா?

## இழுபடும் உள்ளூராட்சி மன்றம்

கல்முனை மாநகரசபையின் கீழ் இருந்துவரும் சாய்ந்த மருது பிரதேசத்துக்குத் தனியான உள்ளூராட்சி மன்றமொன்றை நிறுவுவதற்கான வர்த்தமானி அறிவித்தல் இந்தமாத இறுதிக்குள் வெளியிடப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. சாய்ந்த மருதுக்கான தனி உள்ளூராட்சி மன்ற விவகாரத்தைக் கையிலெடுத்த முஸ்லிம் காங்கிரசும் அகில இலங்கை மக்கள் காங்கிரசும் அண்மைக்காலம் வரை அரசியல் பலப்பரீட்சையாகவே அதைக் கையாண்டு வந்தன. அவர்களுடைய நீயா? நானா? போட்டிக்கு மத்தியில் உள்ளூராட்சி மன்றத்தை நிறுவுவது தொடர்பிலான நடவடிக்கைகள் குறித்த கலந்துரையாடல் ஒன்று உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தலைமையில் அமைச்சில் நடைபெற்றது. அதில் அமைச்சர் ரிசாத் மற்றும் அவரது கட்சி முக்கியஸ்தர் கலாநிதி ஏ.எம். ஜெமீலும் பங்குபற்றியிருந்தனர்.

இதன்போதே வர்த்தமானி அறிவிப்புத் தொடர்பில் அமைச்சர் பைசரும் ஏதோவொரு பணிப்புரை விடுத்துள்ளாரென அறிய வருகின்றது.

'எவர் குந்தியும் அரிசியாகட்டும்' என்கின்றனர் பொது மக்கள்.

## பொங்கி எழுந்தனர் 'போராளிகள்'

முஸ்லிம் காங்கிரசின் அம்பாறை மாவட்ட மத்திய குழுக்கூட்டம் நிந்தவூரிலுள்ள தனியார் விடுதி ஒன்றில் நடைபெற்றிருந்தது.

கட்சியின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்ற இந்தக்கூட்டம் சுமுகமாக இடம்பெற்றதாயினும் இறுதியில் 'போராளிகள்' எனப்படும் மத்திய குழு உறுப்பினர்கள் சிலர் எகிறிப் பாய்ந்ததால் களேபரத்துடனேயே அது முடிவடைந்ததாகத் தகவல்கள் சில கசிந்துள்ளன.

"எமது கிராமத்தின் அபிவிருத்திக்கு என்ன செய்துள்ளீர்கள்...?" எனத் தொடுக்கப்பட்ட மத்திய குழு உறுப்பினர் ஒருவரின் ஆக்ரோசமான கேள்விக் கணையே சலசலப்பை ஆரம்பித்ததாம்.

மற்றொருவர், "அம்பாறை மாவட்டத்துக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி தருவது எப்போது?" எனக் கேள்வி கேட்டுப்போர்க்கொடி தூக்கியிருக்கிறார். தான் அமர்ந்திருந்த கதிரையைத் தூக்கி நிலத்தில் அடித்துவிட்டுக் கூட்டத்தை விட்டு வெளியேறியதாகவும் தகவல்கள்.

"முஸ்லிம்காங்கிரஸ் போராளிகளல்லவா இவர்கள்? பொங்கி எழத்தானே செய்வர்"

## தலைவர் தீர்ப்பு என்னவாயிருக்குமோ...

விரைவில் நடைபெறலாமென எதிர்பார்க்கப்படும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவதா? அல்லது வேறு கட்சிகளுடன் சேர்ந்து கூட்டாகப் போட்டியிடுவதா? என்பன குறித்து கட்சி அங்கத்தவர்களது கருத்துத் திரட்டப்படவுள்ளதாக மு.கா. செயலாளர் மன்சூர் ஏ.காதர் தெரிவித்துள்ளார்.

"எமது கருத்துக்கென்ன மதிப்பா கிடைக்கப் போகிறது? தலைவர் நினைப்பதுதானே நடக்கும்" எனக் கொதிப்புடன் கூறும் மூத்த அங்கத்தவர் ஒருவர், "கடந்த அரசதலைவர் தேர்தலில் எவரை ஆதரிப்பதென நாமெல்லாம் முடிவெடுத்தும் தபால் வாக்களிப்பும் முடிந்த பின்னர் தானே தலைவர் வழிக்கு வந்தார்" எனச் சுட்டிக் காட்டியதுடன் "அந்தத் தேர்தலில் முன்னாள் செயலாளர் நாயகம் ஹஸனலி மக்கள் முடிவுடன் நின்றதாலேயே இன்றைய கதிக்கு ஆளானார்" எனவும் ஆக்ரோசத்துடன் கூறினார்.

"எல்லாமே போலி நாடகம் தானோ?"

## நாளை சந்திப்பு

கிழக்கு மாகாணசபைத்தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் முஸ்லிம் கட்சிகள் ஒன்றிணைந்து போட்டியிடுவதற்கென உருவாகவுள்ள முஸ்லிம் கூட்டமைப்புத் தொடர்பில் கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர்கள் நாளை 21ஆம் திகதி திங்கட்கிழமை அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரிசாத்பதியுதீனுடன் 2ஆவது தடவையாகப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

பதில் அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீரலியின் கொழும்பிலுள்ள இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

தூய முஸ்லிம் காங்கிரஸின் ஏற்பாட்டாளரும் முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் நாயகமுமான எம்.ரி.ஹஸனலி தலைமையில் இந்தச் சந்திப்பு இடம்பெறும்.

முஸ்லிம் கூட்டமைப்புத் தொடர்பான இதன் முதல் சந்திப்பின்போது அமைச்சர் ரிசாத் கொள்கையளவில் அதனை ஏற்றுக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நடமாடும் சேவைகள்

வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் இணைந்து செயற்படுத்தும் 'ஸ்ரமிக்கசுரெக்கும்' நடமாடும் சேவைகள் அம்பாறை மாவட்டத்தில் எதிர்வரும் வாரத்தில் நடைபெறவுள்ளன.

அம்பாறை மாவட்டத்திலுள்ள 20 பிரதேச செயலகங்களில் எதிர்வரும் ஐந்து தினங்கள் (19,20,21,27,28ஆம் திகதிகளில்) இந்த நடமாடும் சேவைகள் இடம்பெறவுள்ளன.



## அதிபர்களுக்குக் கௌரவம்

அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ்மொழி மூல ஓய்வு பெற்ற அதிபர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு ஒன்றை அம்பாறை மாவட்டச் செய்தியாளர்கள் சம்மேளனம் நடத்தவிருக்கின்றது.

01.01.2000 முதல் 31.08.2017 வரையான காலப்பகுதிக்குள் ஓய்வுபெற்ற தமிழ்பேசும் அதிபர்களது விவரங்கள் இதற்கெனக் கோரப்பட்டுள்ளதாக செய்தியாளர் சம்மேளனத்தலைவர் கலாபூசணம் மீரா எஸ்.இஸடீன் தெரிவித்தார்.

## தமிழ் -சிங்கள திருவிழா

அம்பாறை நகரில் அமைந்துள்ள மாணிக்கப்பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

கடந்த 15ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான இந்த மகோற்சவத்தில் தினமும் பெருந்தொகையான தமிழ், சிங்கள பக்தர்கள் கலந்து கொண்டு வருகின்றனர்.

மகோற்சவ நிகழ்வாக எதிர்வரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் பூசையைத் தொடர்ந்து சுவாமி அம்பாறை நகரை ஊர்வலம் வருவதுடன் எதிர்வரும் 25ஆம் திகதி தீர்த்தோற்சவமும் அன்னதானம் வழங்கலும் நடைபெற்று மகோற்சவம் நிறைவு பெறும். பெரும்பான்மை (சிங்களவர்) சமூகத்தவரின் முக்கிய நகராக மாறியுள்ள அம்பாறையில் அமைந்துள்ள இந்த ஆலயம் கல்லோயா இந்து பரிபாலன சபை, மாணிக்கப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையினரின் பகீரதப் பெருமுயற்சியால் புனர் நிர்மாணம் செய்யப்பட்டுத் தற்சமயம் புதுப்பொலிவுடன் காட்சியளிக்கின்றது.

100வருடங்கள் பழமை வாய்ந்த இந்த ஆலயத்தைப் புனரமைப்பதில் கல்லோயாத்திட்டம் ஆரம்பிக்கும் போது நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர்களாக அன்று கடமையாற்றிய வடபகுதியைச் சேர்ந்தோரும் பெரும்பங்காற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ.தி.மு.க. விரிசலும் இணைப்பும்

பிரகாஸ்



"எடப்பாடி அறிவித்த இந்த இரண்டு விடயங்களும். இணைப்புப் பேச்சில் பன்னீர் செல்வம் அணியினரால் வலியுறுத்தப்பட்டவை. எனவே பன்னீர்செல்வத்தைத் தம்முடன் இணைத்துக் கொள்வதற்காகவே எடப்பாடி இந்தத் திடீர் அறிவிப்பை வெளியிட்டுள்ளார் என்றும் எண்ணிக்கொள்ளலாம்."

தமிழகத்தின் முதன்மைக் கட்சிகளில் ஒன்றான அ.தி.மு. கழகத்தில் ஜெயலலிதாவின் மறைவின் பின்னர் பெரும் புயல் அடித்து தற்போது ஓரளவு சுமூக நிலை வந்துகொண்டிருக்கிறது. முன்னாள் முதல்வர் ஜெயலலிதா உயிரிழந்த பின்னர் அண்ணா திராவிடக் கழகம், இரண்டாக உடைந்தது. ஒரு தரப்பினர் ஓ.பன்னீர்செல்வத்தின் தலைமையிலும், இன்னொரு தரப்பினர் சசிகலாவின் தலைமையிலும் செயற்பட்டனர். பன்னீர்செல்வம் முதல்வராகவும், சசிகலா பொதுச் செயலாளராகவும் செயற்பட்டனர். அதன்பின்னர் பன்னீர்செல்வத்திடம் இருந்த முதல்வர் பதவி சசிகலாவுக்கு கைமாற்ற முடிவு செய்யப்பட்டது. கைமாற்ற முடிவுசெய் யப்பட்டது என்பதை விட வலுக்கட்டாயமாகப் பறிக்கப்பட்டது என்று சொல்லிக்கொள்ளலாம்.

### இரண்டு, மூன்றானது

இரண்டாக உடைந்திருந்த அ.தி.மு. கழகம் சொத்துக் குவிப்பு வழக்கில் சசிகலா சிறைக்குச் சென்ற பின்னர், மூன்றாக உடைபட்டது. அதாவது சசிகலாவால் அ.தி.மு. கழகத்துக்கு ஏற்பட்ட கறுப்புப் புள்ளியை சரிசெய்வதற்காக அவரையும், தினகரனையும் நீக்கி வைத்துவிட்டு ஆட்சியை நடத்த எடப்பாடி முடிவுசெய்தார். தினகரனுக்கு ஆதரவான சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த முடிவை ஏற்கவில்லை. அவர்கள் தினகரனின் தலைமையில் தனித்துச் செயற்பட முடிவுசெய்தனர்.

### சிறையில் தினகரன்

அ.தி.மு. கழகம் மூன்றாகப் பிரிந்த பின்னர் ஒவ்வொரு தரப்பினரும் கட்சிச் சின்னமும், தலைமையகமும் தமக்குத்தான் சொந்தம் என்று வாக்குவாதம் செய்ய முற்பட்டனர். இதனால் சின்னத்தையும் தலைமையகத்தையும் முடக்கி உத்தரவிட்டது தேர்தல் ஆணையம். எந்த அணியினருக்கு அவற்றைக் கொடுப்பது என்பது தொடர்பில் விசாரணை நடைபெற்று வந்தது. தமக்கு அவற்றைத் தரவேண்டும் என்று தெரிவித்து தினகரன் தேர்தல் ஆணையத்துக்கு லஞ்சம் கொடுக்க முயன்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார். சிறைசெல்லும் முன்னர் அரசியலில் இருந்து விலகி இருக்கப்போகிறேன் என்று தினகரன் அறிவித்தார். இதையடுத்து மும்முனை மோதல் இருமுனை மோதலானது.

### இணைப்புக் குறித்து பேச்சு

தினகரன் சிறை சென்ற பின்னர், பன்னீர்செல்வம், எடப்பாடி இருவரும் இணைந்து செயற்பட முடிவெடுத்தனர். இணைப்புக் குறித்து பேச்சு நடத்த இருவரும் தத்தமது குழுக்களை அறிவித்தனர். ஜெயலலிதாவின் மறைவு தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும், அவர் வாழ்ந்த வேதா இல்லத்தை நினைவிடமாக அறிவிக்க வேண்டும், சசிகலாவுடனான முழுத் தொடர்பையும் கைவிட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை தமது தரப்பின் முதன்மைக் கோரிக்கைகளாக முன்வைத்தனர் பன்னீர்செல்வம் தரப்பினர். இது தொடர்பில் எடப்பாடி அணியிரிடத்தில் இருந்து உறுதியான தகவல் எதுவும் வராததை அடுத்து, பேச்சுக்காக அமைக்கப்பட்ட குழுவைக் கலைத்து உத்தரவிட்டார் ஓ.பன்னீர்செல்வம். பேச்சு இல்லை என்று பன்னீர்செல்வம் வெளிப்படையாக அறிவித்த போதிலும் பேச்சுக்கள் மறைமுகமாக நடந்து கொண்டே உள்ளன என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வந்தன.

### மீண்டும் தினகரன்

தேர்தல் ஆணையத்தக்கு லஞ்சம் கொடுக்க முயன்ற வழக்கில் பிணையில் விடுவிக்கப்பட்டார் தினகரன். சிறையில் இருந்து வெளிவந்த முதல் நாளிலேயே அவரின் பக்கம் 15 சட்டமன்ற உறுப்பினர்கள் சாய்ந்தனர். மீண்டும் அரசியலில் களமிறங்கினார். தற்போது அவருக்கு சுமார் 30 சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரவாக உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

### எடப்பாடிக்கு வந்த தலையிடி

சட்டசபையில் படிப்படியாகத் தனது இருப்பை இழந்து வருகிறார் முதல்வர் எடப்பாடி. எப்போது வேண்டுமென்றாலும் ஆட்சி மாறலாம் என்ற நிலைமை. இதனால் அவர் தனது ஆட்சியைத் தக்கவைக்க அடுத்தடுத்து பல திட்டங்களைச் செயற்படுத்தினார். அவற்றில் முதன்மையானது பன்னீர்செல்வத்துடனான இணைப்பு. முதல்வர் எடப்பாடி பழனிச்சாமிக்கும், தமிழக அ.தி.மு. கழக அமைச்சர்களுக்கும் இடையில் கடந்த வியாழக்கிழமை சந்திப்பொன்று நடைபெற்றது. இந்தச் சந்திப்பில ஓ.பன்னீர்செல்வம் தரப்பினருடன் இணைவது குறித்து பேச்சு நடத்தப்பட்டது என்று அறியவருகிறது.





## கடந்து வந்த பாதை

நீண்ட ஆலோசனையின் பின்னர், தொடர்ந்து நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றுகையில், "முதல்வர் ஜெயலலிதாவின் சாவு தொடர்பில் உண்மையான விசாரணைகள் நடத்தப்படும். ஓய்வுபெற்ற நீதிபதியின் தலைமையில் தனியான விசாரணைக்குழு அமைக்கப்பட்டு இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படும். ஜெயலலிதா வாழ்ந்த போஜஸ் கார்டன் வேதா இல்லம் அவரின் நினைவிடமாக மாற்றப்படும் என்று அறிவித்தார் எடப்பாடி பழனிச்சாமி.

### ஓ.பி.எஸ்ஸின் கோரிக்கை இது

எடப்பாடி அறிவித்த இந்த இரண்டு விடயங்களும். இணைப்புப் பேச்சில் பன்னீர்செல்வம் அணியினரால் வலியுறுத்தப்பட்டவை. எனவே பன்னீர் செல்வத்தைத் தம்முடன் இணைத்துக்கொள்வதற்காகவே எடப்பாடி இந்தத் திடீர் அறிவிப்பை வெளியிட்டுள்ளார் என்றும் எண்ணிக்கொள்ளலாம்.

இத்தகைய படிமுறைகளைக் கடந்தே அ.தி.மு.கழகத்தின் இரு அணிகளும் இன்று ஓரளவு ஐக்கியமாகியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

சினிமா

வழக்கமான தனுஷ், ராம் சினிமாக்கள்

# வேலையில்லா பட்டதாரி 2

### கதைப் பார்வை



முதல் பாகத்தின் தொடர்ச்சியாக, ஆண்டின் சிறந்த பொறியாளராக விருது பெறுகிறார் நாயகன் தனுஷ். அதுவரை தொடர்ச்சியாகப் பல்வேறு விருதுகளைப் பெற்றுவந்த பெண் தொழிலதிபர் கஜோல் இதனால் வெறுப்படைகிறார். தனுஷைத் தன்னுடைய நிறுவனத்தில் வேலையில் சேர்க்க உத்தரவிடுகிறார். அதற்கு உடன்படாத தனுஷ், கஜோலைச் சீண்டுகிறார். இதனால், தனுசுக்குப் பல வகையிலும் தொந்தரவுகள் கொடுக்கிறார் கஜோல். ஒரு கட்டத்தில், தான் வேலை செய்யும் நிறுவனத்தில் இருந்து வெளியேறி மீண்டும் 'வேலையில்லா பட்டாதாரி' ஆகிறார் தனுஷ். பிறகு வேலை இல்லா பட்டதாரிகளை வைத்துக்கொண்டு கஜோலை எப்படி வழிக்குக் கொண்டுவருகிறார் என்பதுதான் படம்.

### பாத்திரப் படைப்புகள்

நாயகன் தனுஷ் அடிக்கடி அடுக்கு வசனம் பேசுகிறார். எதிரிகளை ஓடவிடுகிறார், பழைய வண்டியில் பயணிக்கிறார். நடு றோட்டில் நடனம் ஆடுகிறார். கஜோலுடன் வார்த்தையால் விளையாடுகிறார், ஸ்ரைலாகப் புகைவிடுகிறார். சந்தையில் எதிரிகளைப் புரட்டி எடுக்கிறார். முக்கியமாக ரஜினியைப் புகழவும் செய்கிறார்.

நீண்ட இடைவெளிக்குப் பின் தமிழ்ப் படத்தில் நடித்துள்ள கஜோல் குறையில்லாமல் நடித்திருக்கிறார். மேற்கத்தேய உடையில் மிடுக்காகவும் அழகாகவும் இருக்கிறார். ஆனால், பெரிய நிறுவனமென்றின் திமிர் பிடித்த ஆளுமையாகச் சித்திரிக்கப்பட்ட அவருடைய பாத்திர வார்ப்பில் இன்னும் கவனம் செலுத்தியிருக்கலாம். தனுஷின் மனைவியாக வரும் அமலா பால், கண்டிப்பான குடும்பப் பெண்ணாக வந்து சண்டை போடுகிறார். குடித்துவிட்டு வரும் தனுஷைப் பிடித்து வைத்துக் கேள்வி கேட்கும் காட்சிகளில் சிரிக்க வைக்கிறார். கண்கலங்க வைத்த சரண்யா பொன்வண்ணனின் தாய்ப் பாசம், இதில் நகைச்சுவையாக மாற்றப்பட்டிருக்கிறது. விவேக் தனது பாத்திரத்தைச் சரியாகச் செய்திருக்கிறார். முதல் பாகத்தில் அறிவுரை பேசும் சமுத்திரக்கனி, இந்தப் பாகத்தில் அமைதியாக, இயல்பாக நடித்திருக்கிறார். வலிமையே இல்லாத வில்லனாக வருகிறார் சரவணா சுப்பையா. ரீது வர்மா, பாலாஜி மோகன், செல் முருகன் எனப் பலரும் அவ்வப்போது வந்துபோகிறார்கள்.

### சலிப்புக்கு ஏராளம் விடயங்கள்

முதல் பாகத்துடன் 2ஆம் பாகத் தொடர்பை கச்சிதமாகப் பொருத்தியிருக்கிறார் இயக்குநர் சௌந்தர்யா ரஜினிகாந்த். ஆனால், முதல் பாகத்தில் இருந்த வேகம், சுவாரசியங்கள், எதிரியைச் சமாளிக்கும் சவால்கள் இதில் இல்லை. இடம், கதை, கதாபாத்திரங்கள், அடுக்கு வசனம், நகைச்சுவை, அதிரடி இசை என முதல் பாகத்தின் நகலாகவே இருக்கிறது இரண்டாம் பாகம். முதல் பாகத்தை இன்னொரு தடவை பார்த்தது போலவே சோர்வையும் ஏற்படுத்துகிறது. முன்கூட்டியே ஊகிக்கக்கூடிய வகையில் பயணிக்கும் திரைக்கதை, தேவையில்லாத பாடல்கள், சண்டை, முகப்புத்தக ஆளுகை எல்லாம் சலிப்பை ஏற்படுத்துகின்றன. சாதாரண மனிதர் கோடீஸ்வரி மோதல் என்பது தமிழ் சினிமாவுக்குப் புதிதில்லை என்றாலும், தனுஷ் - கஜோல் மோதல் காட்சிகள் எதிர்பார்ப்பைக் கூட்டுகின்றன. இந்த எதிர்பார்ப்பின் காரணமாக, 2ஆம் பாதி சுவாரசியமாக, பரப்பரப்பாக இருக்கப்போகிறது என்று எதிர்பார்த்தால் ஏமாற்றம் தான் மிஞ்சுகிறது. மிகப் பெரிய நிறுவனத்தின் தலைவர் ஒருவருக்கு சாதாரண பொறியாளருடன் மல்லுக்கட்ட என்ன அவசியம் என்பதற்கு திரைக்கதையில் வலுவான காரணம் எதுவும் இல்லை.

### இசை, ஒளிப்பதிவு, காட்சியமைப்பு

படத்துக்கு இசை ஷான் ரோல்டன். பாடல்கள் மனதில் ஒட்டவில்லை. சமீர் தாஹீரின் ஒளிப்பதிவு கச்சிதம். சண்டைக் காட்சிகளில் வரும் வேகத்தணிப்பு உத்திகளைத் தவிர்த்திருக்கலாம். சென்னையைப் புரட்டிப்போட்ட பெருமழையை உதாரணமாகச் சொல்லி ஏழை - பணக்காரன், உயர்ந்தவன் - தாழ்ந்தவன் என ஏற்றத்தாழ்வுகளைச் சாடும் வசனமும், இடையிடையே தனுஷ் உச்சரிக்கும் இருவரித் திருக்குறளும் ரசிக்க வைக்கின்றன. நல்ல பொழுதுபோக்குக்கான எல்லா அம்சங்களும் இருந்தும், வலுவில்லாத திரைக்கதையால் 'வேலையில்லா பட்டாதாரி' வலுவிழந்த சினிமாவாகிவிட்டது.



❝ உலகமயமாக்கல் உருவாக்கி வைத்திருக்கும் எண்ணற்ற சிக்கல்களை ஒரு காதல் கதைக்குள் குறுஞ்செய்திகள் போன்று இயக்குநர் சொல்லி விடுவது இரசிகர்களை உற்சாகம் கொள்ள வைக்கிறது.



# தரமணி
# तरमणी
# TARAMANI

சமூகத்தின் இருவேறு தரத்தில் வாழும் ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே முகிழ்க்கும் காதலையும், அதனால் விளையும் உறவுச் சிக்கலையும் 'உலகமய மாக்கல்' எனும் கால ஓட்டத்துடன் கையாள முனைந்த திரைக்கதை 'தரமணி'.

### கதைப்பார்வை

காதலிலும் பணத்திலும் ஏமாற்றப்பட்டு விரக்தியடைந்த இளைஞன் வசந்த் ரவிக்கும் கணவனைப் பிரிந்து குழந்தையோடும், தன் தாயோடும் வாழும் ஆங்கிலேய, இந்தியப் பெண்ணான அண்ட்ரியாவுக்கும் நட்பு மலர்ந்து காதலாகிறது. இணைந்து வாழ்கின்றனர். தனியார் நிறுவனமென்றில் 80ஆயிரம் சம்பளம் பெற்றுத் தன் வாழ்க்கையைத் தானே தீர்மானிக்கும் துணிச்சல் மிக்க பெண் அண்ட்ரியாவின் வாழ்க்கை முறையில் ஒன்றமுடியாமல் தவிக்கிறான் வசந்த். நடத்தையில் சந்தேகம், சண்டையால் விரிசல் ஏற்பட்டுப் பிரிகிறார்கள். அதற்குப் பிறகு தவறான வழியில் தடம் மாறும் வசந்த், இறுதியில் திருந்திக் காதலியை நோக்கித் திரும்புகிறானா? மறுபுறம் அண்ரியா தேடிக் கொண்ட புதிய உறவால் அவர் எதிர்கொண்ட சிக்கல்கள் என்ன? அவனை அவள் ஏற்கிறாளா? இதுவே தரமணி.

வழக்கமான காதல் கதை பாணியில் இருந்து விலகி திரைக்கதை அமைத்திருக்கிறார் இயக்குநர் ராம். அண்ட்ரியா, வசந்த், சவும்யா தொடங்கி, வீதியில் அடிபட்டுக் கிடக்கும் பிழைக்கவந்த வடமாநில கட்டிடத் தொழிலாளி வரை, பெரும்பாலான கதாபாத்திரங்கள் உலகமயமாக்கலின் குழந்தைகள் என்று நம்ப வைத்துவிடுகிறார். உலகமயமாக்கல் உருவாக்கி வைத்திருக்கும் எண்ணற்ற சிக்கல்களை ஒரு காதல் கதைக்குள் குறுஞ்செய்திகள் போன்று இயக்குநர் சொல்லிவிடுவது இரசிகர்களை உற்சாகம் கொள்ள வைக்கிறது.

### பாத்திரப் படைப்பு

சுய சார்போடும் சுயமரியாதையோடும், அதே நேரத்தில் கனிவோடும் உயர்ந்து நிற்கிறது அண்ட்ரியாவின் கதாபாத்திரம். தோற்றம், உடல்மொழி, குரல், உணர்வுகளை வெளிப்படுத்தும் பாங்கு என அனைத்திலும் பாத்திரத்தோடு கச்சிதமாகப் பொருந்துகிறார். ஆனாலும், இன்னும் எத்தனை காலம்தான் தறுதலை மன்னன்களை உருகி உருகிக் காதலிக்கும் பொறுப்பான பெண்களை மாத்திரம் தமிழ் சினிமா காட்டிக் கொண்டே இருக்கப்போகிறதோ! அதிகம் அவ்வகை ஆண்களையே அவர் எதிர்கொள்வதாகக் காட்டியிருப்பது வலிந்து உருவாக்கப்பட்ட முரண்.

முதல்பாதி முழுவதும் இயல்பான நடிப்பைத் தந்திருக்கும் வசந்த் ரவி, பின்னர் பின்தங்கிவிடுகிறார். தரமணி தொடருந்து நிலையக் காவலராக வரும் அழகம்பெருமாள், பிரபுவின் காதலி அஞ்சலி, பொலிஸ் ஆணையாளர் ஜே. எஸ்.கே சதீஷ்குமார், அவரது மனைவி, அண்ட்ரியாவின் மகன் என துணைக் கதாபாத்திரங்களில் நடித்துள்ளவர்களும் படத்துக்கு உயிரூட்டியிருக்கின்றனர்.

### உணரப்படும் முத்துக்குமாரின் இழப்பு

உலகமயமாக்கலினால் மனித மனம் வெற்றிடமாகிப் போனதை தேனி ஈஸ்வரின் ஒளிப்பதிவு துல்லியமாகப் பதிவு செய்திருக்கிறது. பின்னணி இசையிலும், நிசப்தத்தை மிகக் கவனமாகப் பொருத்திய விதத்திலும் அசத்தியிருக்கிறார் யுவன் சங்கர் ராஜா. பாடல்கள் அடிக்கடி வந்தாலும் கதைப் போக்கின் விளைவையும், கதாபாத்திரங்களின் மன உணர்வையும் நமக்குக் கடத்தி விடுகின்றன மறைந்த நா.முத்துகுமாரின் பாடல் வரிகள், தமிழ்த் திரைக்கு அவர் எத்தனை பெரிய இழப்பு என்பதை உணர்த்துகின்றன!

நம் மனதில் தென்றல்போல வருடிப் பதியும் அழகம்பெருமாளின் மனைவி கதாபாத்திரத்தைச் சிதைத்தது வக்கிரத்தின் உச்சம். பெண் குடிப்பதை உரிமையாகக் கொண்டாடும் சித்திரிப்புக்களும், ராமேஸ்வரக் கடலோடிகள் உயிர் பிழைக்கும் அரசியலையும், பணமதிப்பு விவகாரத்தையும் ஒற்றை வரியில் ஆங்காங்கே சொல்லியிருப்பது மாத்திரமே படத்துக்குப் பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிம்மாசனத்தில் தொடர்ந்தும் இனவாத அரசியல்



சந்திரசேகர ஆசாத்

பிரிட்டனிடமிருந்து இலங்கை விடுதலை பெற்றதிலிருந்து அதன் அரசியல் வரலாறு இன முரண்பாடுகளின் நீட்சியாகவே தொடர்கின்றது. ஆட்சியைக் கைப்பற்றவோ அல்லது அதிகாரத்திலிருப்பவர்களை அதிலிருந்து இறக்கவோ இனவாதத்தை ஆயுதமாகப் பாவிப்பது சிங்கள அரசியல்வாதிகளின் இயல்பாக இருந்து வருகிறது. தற் சமயமும் அதுவே தொடர்கிறது. தற்போது போர் முடிவுக்கு வந்து விட்டது. போர் வெற்றியின் மமதையில் தமிழ் மக்களின் மீதான ஒடுக்குமுறையை மேலும் விரிவாக்கிய மகிந்தவின் ஆட்சியும் முடிவுக்கு வந்துவிட்டது. இப்போது ஐ.தே.கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டும் இணைந்து ஆட்சி அமைத்து விட்டன. எனவே இந்த ஆட்சியிலாவது இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயபூர்வ மான தீர்வு எட்டப்படும் என்ற நம்பிக்கை தமிழ் மக்கள் மத்தியில் எழுந்தது. அப்படியான ஒரு எதிர்பார்ப்புடனேயே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் தனது அரசியல் நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றது ஆனால் அரச உயர் பீடத்திலிருக்கும் இனவாதம் இன்னமும் அகற்றப்படவில்லை.

## ஒரு நேரம் ஒரு கருத்து - வரலாறு உணர்த்தும் பாடம்

ஆங்கிலேயர் ஆட்சிக் கால, 1938ஆம் ஆண்டு காலப்பகுதியில், கண்டி, கரையோரம், வடக்குக் கிழக்கு என்பன தனித்தனி ஆட்சிப் பிரிவுகளாக உருவாக்கப்பட்டு மத்திய அதிகாரத்தால் ஒன்றிணைக்கப்பட்ட சமஷ்டி அமைப்பை உருவாக்க வேண்டுமென்ற கருத்தை சட்டசபையில் முதன் முதலில் முன் வைத்தவர் மறைந்த முன்னாள் தலைமை அமைச்சர் எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்கா. அத்துடன் 1950ஆம் ஆண்டில் பதவியேற்று 24 மணி நேரத்துக்குள் சிங்களத்தை அரசகரும மொழியாக்குவதாக அறிவிப்புச் செய்து ஆட்சியைக் கைப்பற்றியவரும் அவரே.

1945ஆம் ஆண்டு பரன்ஜெயதிலக, ஏ.ஈ. குணசிங்க போன்றவர்கள் சிங்களமே நாட்டின் அரசகரும மொழியாக வேண்டுமெனத் தீர்மானம் கொண்டு வந்தார்கள். அதை எதிர்த்து நாட்டின் அரசகரும மொழிகளாகச் சிங்களமும் தமிழும் இருக்க வேண்டுமெனத் திருத்தம் கொண்டு வந்தார் மறைந்த முன்னாள் அரசதலைவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன. அத்துடன் 1957இல் இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயபூர்வ தீர்வைத்தரக்கூடியதாகவிருந்த பண்டா – செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்துக் கண்டியாத்திரை நடத்தி அதைக் கிழித்தெறிய வைத்தார்.

1958ஆம் ஆண்டில் இடம் பெற்ற தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைகளுக்கு இவரின் செயற்பாடுகளே முக்கிய உந்து சக்தியாக விளங்கின. இவரது ஆட்சியின்போதே 1977, 1983 இன அழிப்பு நடவடிக்கைகளும் இடம் பெற்றன.

இப்படியாகத் தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டுமெனக் குரல் கொடுத்தவர்கள் ஆட்சியைக் கைப்பற்றியதும் கைப்பற்றிய அதிகாரத்தைத் தக்கவைப்பதற்கு சிறுபான்மை யினரின் உரிமைகளைப் பறிக்கவும், அவர்களை அழிக்கவும் தயங்கவில்லை என்பது வரலாறு உணர்த்திய் பாடம்.

## நிஜத்திலும் அதே நிலை

இந்த நிலையே தற்போதும் இருக்கிறது. அதில் சற்று வித்தியாசம், சிறிலங்கா சுதந்திரக் கட்சி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முயலும்போது ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பதும், ஐக்கிய தேசியக் கட்சி தீர்வுகாண முயலும்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சி எதிர்ப்பதுமாக இருக்கின்றன. ஆக, இப்போதும் இனவாதமே இலங்கை அரசியலை வழிநடத்தி வருகிறது.

முப்பது வருடகாலப்போருக்கும் அது ஏற்படுத்திய பேரழிவுக்கும் இதுதான் காரணம் என்று தெரிந்தாலும் இனவாத வெறிகொண்ட அதிகார வர்க்கத்தினர் அதுபற்றி ஒருபோதும் சிந்திப்பதாயில்லை.

மகிந்த ராஜபக்ச தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் விமல் வீரவன்ச, ஞானசாரதேசர் போன்றவர்கள் தொடர்ந்தும் இனவாதக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். அது அரசுக்கு எதிரான நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாகவும் பார்க்கப்படுகிறது. அத்துடன் அரசுக்குள்ளிருந்தும்கூட இனவாத நடவடிக்கைகளும், இன முரண்பாடுகளைக் கூர்மைப்படுத்தும் செயற்பாடுகளும் வெளிவந்த வண்ணமே உள்ளன. சிங்கள மக்கள் மத்தியில் தமிழ்மக்களுக்கெதிரான உணர்வுகளை மூட்டிவிடுவதில் அமைச்சர் விஜயதாச ராஜபக்சவும் முஸ்லிம் மக்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையே முரண்பாடுகளை ஏற்படுத்துவதில் அமைச்சர் ரிசாத் பதியுதீனும் தீவிரமாகச் செயற்பாட்டு வருகின்றனர். நல்லாட்சி அரசின் அதிகாரபீட அமைச்சரவையில் இருக்கும் இந்த இருவரும் முதன்மையான அமைச்சர்கள் என்பதும் கவனிக்க வேண்டிய விடயம்.

## விஜயதாசவின் முரண்கொண்ட பதவிகள்

அமைச்சர் விஜயதாச வகிக்கும் அமைச்சுக்கள் ஒன்றுடன் ஒன்று முரண்பாடு கொண்டவையாகக் காணப்படுகின்றன. நீதி அமைச்சு என்பது விருப்பு வெறுப்புகள், பாகுபாடுகளுக்கு அப்பால் நின்று நீதியை நிலைநாட்டும் கடப்பாடுகளைக் கொண்டது.

அதேவேளை பௌத்த சாசன அமைச்சு என்பது ஒரு மதம் சார்ந்தது. அந்த மதத்தின் நலன்களையும் அந்த மதத்தைப் பின்பற்றும் மக்களின் நலன்களையும் பேணும் கடப்பாட்டைக் கொண்டது. இதனால் இவ்விரு பதவிகளையும் வகிக்கும் விஜயதாசவோ தனது நீதியமைச்சின் அதிகாரத்தைக் கொண்டு தமிழ் மக்களுக்கு விரோதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். கூட்டு பௌத்த சாசன அமைச்சின் அதிகாரங்களையும் அந்த நோக்கத்துக்காகவே அவர் பயன்படுத்தி வருகிறார்.

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள் அல்லது துரிதமாக விசாரணைகளை மெற்கொள்ளுங்கள் என்பதாக மக்கள் நடத்திய தொடர் போராட்டங்கள் காரணமாக அரச தலைவரும் தலைமை அமைச்சரும் சில ஆக்கபூர்வ நடவடிக்கைகளை எடுக்க முயன்றனர். ஆனால், அமைச்சர் விஜயதாச ராஜபக்ச அரசியல்கைதிகள்எனஎவருமில்லை. இவர்கள் எல்லோரும் கொலை, கொள்ளை போன்ற குற்றங்களை மேற்கொண்ட குற்றவாளிகளே எனக் கூறித் தமிழ் அரசியல் கைதிகள் விவகாரத்தைக் குழப்பியடித்தார். சாதாரண குற்றவியல் குற்றங்களில் ஈடுபட்டவர்களெனில் ஏன் அவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பதற்கு அவரிடம் பதிலில்லை. அவருடன் பேச்சுகளில் ஈடுபட்ட தமிழ்த் தரப்பினரும் இந்தக் கேள்வியை எழுப்பவில்லை.

## அவர் ஐ.நாவுடன் முரண்பட்டதும் அநாகரீகச் செயல்

ஐக்கியநாடுகள் சபையின் அறிக்கையாளர் இங்கு வந்தபோது பல உண்மைகளைக் கண்டறிந்து வெளிப்படுத்தினார். ஐ.நா சபையின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை ஏற்றுக் கொண்ட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்படாமை தொடர்பாக அவர் தனது அதிருப்தியை வெளியிட்டிருந்தார். குறிப்பாகப் பயங்கவாதத் தடைச்சட்டம் நீங்கப்படாமை, மீள்குடியேற்றம் திருப்திகரமாக மேற்கொள்ளப்படாமை காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமை, அரசியல் கைதிகள் விவகாரம் என்பன தொடர்பாக இலங்கை அரசு பயனுள்ள நடவடிக்கைகள் எவற்றையும் மேற்கொள்ளவில்லை என்பதை அவர் சுட்டிக்காட்டினார். அதற்குப் பதிலளித்த அமைச்சர் விஜயதாச ராஜபக்சவோ அந்தப் பிரச்சினைகள் உள்நாட்டு விவகாரங்களெனவும். அவற்றில் தலையிடும் உரிமை ஐ.நாவுக்கு இல்லையெனவும் கூறி அரசியல் நாகரீகமற்ற முறையில் தன் இனவாத முகத்தை வெளிப்படுத்தினர். ஐ.நா அறிக்கையாளர் தனது பேச்சை இடைநிறுத்தி வெளியேறும் மாதிரியாகவும் அமைச்சர் நடந்து கொண்டார்.

## தேரர்களின் பின்னணியில் அமைச்சர்

புதிய அரசமைப்பில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அம்சங்கள் குறைந்தபட்சமாவது இருக்ககூடுமென எதிர்பார்க்கப்படும் நிலையில், மல்வத்தை, அஸ்கிரிய, சமரபுர மகாநாயக்கர்களைக் கூட்டி அதற்கு எதிராக அவர்களை அறிக்கை விட வைத்தார். இதனால் அவர்கள், புதிய அரசமைப்பில் பௌத்த மதத்துக்கு முதன்மை வழங்க வேண்டுமெனவும், ஏனைய மதங்களுக்கு அதேயளவு அந்தஸ்து வழங்கப்படக்கூடாதெனவும், அதிகாரப் பரவலாக்கத்தால் நாடு பிளவுபட்டுவிடும் அதனால் அதை ஏற்றுக் கொள்ள முடியாதெனவும் தெரிவித்தனர். இவரது இத்தகைய நடவடிக்கைகள் அனைத்துமே தேசப்பற்று, மதப்பற்று என்ற போர்வையில் தமிழ் மக்கள் மிதான ஒடுக்குமுறையை மேலும் வலுப்படுத்தி நிற்பவையாகும். ராஜபக்ச வம்சத்துக் கேயுரிய இன அழிப்புச் சிந்தனைதான் இவரின் மரபணுவிலும் ஊறியிருக்கின்றது என்பது இவற்றிலிருந்து தெளிவாகிறது.

## விஜயதாசவுக்கான ஆதரவுகள்

ஐக்கியதேசியக் கட்சியினர், அமைச்சர் விஜயதாச ராஜபக்ச மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரவுள்ளனர் எனச் செய்திகள் வெளிவந்துள்ளன. இந்தச் செய்தி வெளிவந்ததுமே முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரும் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கப்போவதில்லையென அறிவித்துவிட்டனர். அது மட்டுமின்றி மல்வத்தை, அஸ்கிரிய, சமரபுர ஆகிய மதபீடங்களின் விகாராதிபதிகள், விஜயதாச மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படக்கூடாது எனக் கட்டளையிடும் பாணியிலும் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். இந்த எதிர்ப்புக்களிலிருந்து அமைச்சர் விஜயதாச ராஜபக்ச யார் என்பதையும், இவர் யாருடைய பிரதிநிதியாகவிருந்து அரசுக்குள் செயற்படுகிறார் என்பதையும் புரிந்து கொள்ளமுடியும். அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமாயின் இனவெறியைத் தூண்டி அதிகாரத்திலிருப்பவர்களுக்கு நெருக்கடி கொடுப்பது இலங்கையில் காலம் காலமாகவே நடப்பது. அப்படியான சந்தர்ப்பத்தில் முன் தள்ளிவிடப்படுவார்கள் அதிகாரத்தைக் கைப்பற்றப் பாதைதிறப்பவர்களாக விளங்குகின்றனர். எஸ்.டபிள்யூ ஆர்.டி பண்டாரநாயக்கா காலத்தில் கே.எம்.பி.ராஜரத்தினா, சி.பி. டி.சில்வா போன்றோரும், ஜே.ஆர்.ஜெயவர்த்தனா காலத்தில் சிறல மத்தியூ லலித் அத்துலத் முதலி போன்றோரும் மகிந்த காலத்தில் விமல்விரவன்ச, ஞானசாரதேரர் போன்றவர்களும் இப்படியாக முன் தள்ளப்பட்டவர்களே. இப்போது ஒரு சிறு வித்தியாசம் மகிந்த அணியினருக்குப் பாதை திறப்பதற்காக விஜயதாச அரசுக்குள்ளிருந்தே புறப்பட்டிருக்கிறார்.

இதனை அறிந்ததால் தான் ஐக்கியதேசியக் கட்சியின் பின் ஆசன உறுப்பினர்கள் விஜயதாசவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத்துகின்றனர். எப்படியிருப்பினும் இலங்கை அரசியலில் இருக்கும் இனவாதம் நீங்கும் வரை நல்லிணக்கம் என்பது கானல் நீராகவே இருக்கும்.

> இப்போதும் இனவாதமே இலங்கை அரசியலை வழிநடத்தி வருகிறது. முப்பது வருட காலப்போருக்கும் அது ஏற்படுத்திய பேரழிவுக்கும் இதுதான் காரணம் என்று தெரிந்தாலும் இனவாத வெறிகொண்ட அதிகார வர்க்கத்தினர் அதுபற்றி ஒருபோதும் கவலைப்படுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கத்துக்கு தடையாகும் புலிப்பூச்சாண்டி

கூட்டு எதிரணி மற்றும் மகிந்த தரப்பினருக்கு தெற்கில் தமது வாக்கு வங்கி களை பத்திரப் படுத்துவதற்கு வடக்குப் பற்றி ஏதாவது எரிய விட வேண்டிய தேவை இருந்து வருகிறது.



ஸ்டோ ஸ்வாமி

வடக்கில் இராணுவத்துக்கோ அல்லது பொலிசாருக்கோ அச்சுறுத்தல் ஏற்பட்டால், உடனடியாக எழுந்துவிடும் கருத்து 'புலிகள் தலைதூக்குகிறார்கள்' என்பதே. அந்தக் கருத்துக்கு முதல் தடைவையாக அரச சார்பில் இப்போதுதான் ஒருவர் மறுப்புத்தெரிவித்திருக்கிறார். அதாவது வடக்கு அசம்பாவிதங்களுக்குப் பின்னணியில் புலிகள் இல்லை என்றிருக்கிறார் இராணுவத் தளபதி. நீதிபதி இளஞ்செழியனுடன் சம்பந்தப்பட்ட தாக்குதல் முதல் பொலிசார் சம்பந்தப்பட்ட அண்மைக்கால அனைத்துத் தாக்குதல் முயற்சிகளுக்கும் பின்னணியில் புலிகளின் கை இருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டு வந்த நிலையில்,

யாழ். மாவட்ட படைகளின் முன்னாள் கட்டளைத்தளபதியும் தற்போதைய இராணுவத் தளபதியுமான மகேஷ் சேனநாயக்க, அதனை முற்றாக மறுத்திருக்கிறார். அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற மாநாடொன்றின்பின்னரான செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதை வெளிப்படுத்தியிருக்கிறார் அத்துடன் "வடக்கில் இடம்பெற்ற மேற்குறித்த நடவடிக்கைகளால் தேசிய பாதுகாப்புக்குப்பங்கம் இல்லை" என்றுமிருக்கின்றார் அவர்.

முன்னாள் போராளிகள் உட்பட போரினால் பாதிக்கப்பட்டோர் தமது வாழ்வை மீளக்கட்டி யெழுப்புவதற்கான புறச்சூழல் அமைவது தொடர்பிலான கவனக் குவிவை அரசியல் வாதிகளால் தோற்றுவிக்கப்படும் புலிப்பூச்சாண்டி அடிக்கடி பாதிப்பதுண்டு. தவிரவும் சிறப்புப் கண்காணிப்பு நடவடிக்கை களுக்காகப் பாதுகாப்பு தரப்பினரைத் தூண்டும் வாய்ப்பும் இந்த பூச்சாண்டி நடைமுறைகளுக்கு பின்னால் இருக்கிறது.

### முன்னாள் புலிகள் எதிலும் இல்லை

அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இங்கொன்றும் அங்கொன்றுமான சம்பவங்களில் நீதிபதி இளஞ்செழியன் சம்பந்தப்பட்ட சம்பவம் தவிர ஏனைய சம்பவங்களில் முன்னாள் போராளிகள் சம்பந்தப்படவில்லை. போருக்குப் பின் 12ஆயிரத்து 190 முன்னாள் போராளிகள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டனர். அதில் ஆயிரத்து 963 பேர் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த சுமார் 200 வரையிலான முன்னாள் போராளிகள் பல்வேறு காரணங்களுக்காகப் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை என்று குறிப்பிடும் மகேஷ் சேனநாயக்க, வடக்கில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு இதில் எவரும் காரணம் அல்ல என்கிறார். அத்துடன் எந்தவொரு முன்னாள் போராளியும் ஆவா குழுவில் உறுப்பினராக இல்லை என்றும் அவரே கூறுகிறார்.

வடக்கு நிலவரம் தொடர்பில் உண்மை நிலையை விளங்கிக்கொள்வதற்காக வடக்குக்குப் பயணம் செய்யுமாறு மகாசங்கத்தினருக்கு இராணுவத்தளபதி அழைப்பும் விடுத்திருக்கிறார். இதன் பிரகாரம், அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரர்கள் எதிர்வரும் 28ஆம், 29ஆம் திகதிகளில் வடக்கு நோக்கிப் படையெடுக்கவுள்ளனர்.

### உறைத்தது உண்மை

கூட்டு எதிரணி மற்றும் மகிந்த தரப்பினருக்கு தெற்கில் தமது வாக்கு வங்கிகளை பத்திரப்படுத்துவதற்கு வடக்குப் பற்றி ஏதாவது எரியவிட வேண்டிய தேவை இருந்து வருகிறது. இந்த விருப்பின் வெளிப்பாடுகள் பல வடிவங்களை இதுவரை எடுத்திருக்கிறது. கடந்த அரச தலைவர் தேர்தல் காலப்பகுதியில் ஐ.தே.க.வின் முன்னாள் பொதுச்செயலாளர் திஸ்ச அத்தநாயக்க ஆடிய ஆவண நாடகம்கூட அதிலொரு வடிவம் தான். அண்மையில் வடக்கில் ஏற்பட்ட சலசலப்புக்கள் அவர்களுடைய வெறும் வாய்க்கு அவல் வழங்கியிருந்த நிலையில் இராணுவத் தளபதியின் அண்மைய வெளிப்படுத்தல், அத்தகைய தரப்பினருக்கு கசக்கத்தக்க உண்மையாக உறைத்திருக்கிறது. நாட்டின் எல்லாப் பாகங்களிலும் ஏதோவொரு காரணத்தினால் மக்கள் கிளர்ந்தெழுகையில், வடக்கில் நிகழ்பவை மாத்திரம் பெரிதுபடுத்தப்படுகின்றது என்று சுட்டிக்காட்டியுள்ள இராணுவத் தளபதி, வடக்கில் இராணுவம் முகாமுக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தப்படவில்லை எனவும் குறிப்பிட்டிருக்கிறார்.

### புலிப்பூச்சாண்டிக்குப் பின்னாலிருப்பது?

அண்மையில் வடக்குக்குப் பயணம் செய்திருந்த பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர, யாழ்ப்பாணக் குற்றச்செயல்களுக்கும் முன்னாள் போராளிகளுக்கும் சம்பந்தமிருப்பதாகத் தெரிவித்திருந்தார். இதனையடுத்து குடாநாட்டில் இறுக்கமான பாதுகாப்பு நடவடிக்கையினை நடைமுறைக்கிடக்கூடிய சூழல் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. முன்னாள் போராளிகள் உட்பட போரினால் பாதிக்கப்பட்டோர் தமது வாழ்வை மீளக் கட்டியெழுப்புவதற்கான புறச்சூழல் அமைவது தொடர்பிலான கவனக்குவிவை பூஜிதவைப் போன்ற அரசியல்வாதிகளால் தோற்றுவிக்கப்படும் புலிப்பூச்சாண்டிகளும் அடிக்கடி பாதிப்பதுண்டு. தவிரவும் சிறப்புப் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காகப் பாதுகாப்பு தரப்பினரைத் தூண்டும் வாய்ப்பும் இந்தப் பூச்சாண்டி நடைமுறைகளுக்கு பின்னால் இருக்கிறது.

இது வடக்கிலும் தெற்கிலும் இருவேறான விதத்தில் நல்லிணக்கச் சீர்குலைவுக்கு வித்திடுகிறது. வடக்கில் உள்ள மிதிவெடிகளை அகற்றுவதற்கான காலம் 2020ஆம் ஆண்டு வரை மதிப்பிடப்பட்டுள்ள வேளையில் ஆங்காங்கே காணி கையளிப்புக்களுடன் முன்னெடுக்கப்படும் மீள்குடியேற்ற முயற்சிகளைத் தேசிய பாதுகாப்பைக் காரணம் காட்டித் தள்ளிப்போடவும், தவிர்க்கவும் புலிப்பூச்சாண்டிப்புனைவு ஏதுவாகின்றது. மாறாகத் தெற்கிலோ நடைமுறையிலுள்ள அரசைக் கவிழ்க்கவும் அடுத்தடுத்த உள்ளூராட்சி தேர்தல்களில் தமது நிலைவரத்தை பலப்படுத்திமறு அரச தலைவர் தேர்தலில் அதிகாரபீடத்தினைத் தமது கைக்குக் கொண்டுவருவதற்கு தலையாலே தண்ணீர் குடிக்கிறது மகிந்தவின் தரப்பு. தமது இந்த இலக்கினை அடைவதற்காக மக்களதும் மதத்தலைவர்களினதும் மண்டையைக் கழுவவும் அவர்கள் தவறுவதில்லை. இதற்காகப் புலிப்புராணத்தையே தமது மந்திரமாக அவர்கள் கொண்டிருக்கிறார்கள். இது தெற்கில் வடக்குப் பற்றிய தவறான அபிப்பிராயத்தினைத் தோற்றுவிக்கிறது. உண்மைகளை மழுங்கடிக்கவும் வாய்ப்பளிக்கிறது.

### அனைத்துக்கும் முற்றுப்புள்ளி

எந்த அசம்பாவிதமாயினும் புலிகளைப் புகுத்திவிடும் தரப்புக்களுக்கு மத்தியில் இராணுவத் தளபதியின் வெளிப்படுத்தல், யதார்த்தத்தின் பிரதிபலிப்பு என்பதற்கப்பால் தெற்கில் பரவியிருக்கும் வடக்குத் தொடர்பான திரிபுபடுத்தல்களையும் அம்பலப்படுத்தியிருக்கிறது. நடைபெறும் ஒரிரு சம்பவங்களை வைத்துத் தப்புக்கணக்குப் போடுவது அல்லது அது தொடர்பில் எழுந்தமானமாகக் கருத்து வெளியிடுவது என்பவற்றை இனிவரும் காலங்களிலாவது தவிர்த்துக்கொண்டால், அது இனங்களுக்கு இடையிலான மத்தியிலும் புரிந்துணர் வுக்கு வலுச்சேர்க்கும். இதுவே கடந்தகாலங்களில் பூச்சாண்டித் தகவல்களால் அவரவர் தாம் புரிந்த தவறுகளை இனங்காணவும் வழிசமைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வு

(25ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில் எல்லா நினைப்புக்களுக்கும் ஒரு முடிவு தேடித்தர வந்ததுபோல அவனுக்கு ஒரு புது வேலை கிடைத்தது. யாரோ ஒரு பெரிய மனிதர் அதைத் தொடங்கினார். உடுக்கத் துணியும், குடிக்கக் கஞ்சியுமில்லாத ஏழைக் குழந்தைகளுக்காக ஒர குருகுலமம் தொடங்கப்பட்டது. அதில் அவனுடைய பங்கு நாளுக்கு நாள் வளர்ந்துவிட்டது. வேண்டுமென்றே அவன் அதை வளர்த்தான் என்றுகூடச் சொல்லலாம். அவனுடைய தொண்டை எல்லொரும் பாராட்டினார்கள்.

அந்த ஏழைக் குழந்தைகளுடைய வளர்ச்சியை நாளுக்கு நாள் பார்க்கும்போதெல்லாம் அவன் பூரித்தான். அந்த இன்பம் அவனை விடாமல் அங்கேயே அடைத்து வைத்துவிட்டது.

வெகுகாலத்துக்குப் பிறகு, ஒரு நாள் அவன் வெளிக்கிளம்பினான். வழியில் வரும்போது தூரத்தில் அவளுடைய வீடு தெரிந்தது. பழைய ஞாபகங்கள் ஒரு முறை வந்து மோதின. மெல்லச் சிரித்துக் கொண்டான். மனம் உள்ளே சொல்லியது. "மனிதன் எப்பொழுதும் இயற்கையான உணர்ச்சிகளை அடக்கி அழிப்பது என்பது இலேசில் முடிகிற விஷயம் அல்ல"

வாசலிலே திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை என்று திடமாக முடிவு செய்து கொண்டு வேகமாக நடந்தான். ஆனால்...! வீட்டுக்கு முன்னாலே போனதும் தன்னை அறியாமலே திரும்பினான். அவள் வாசலிலே சற்று உள்ளே நின்றாள். அவளைக் கண்டதும் அவனால் தன்னையே சமாளித்து வழிநடத்த முடியவில்லை. அதற்குள் அவள், "ஏது வெகு நாட்களுக்குப் பிறகு இந்தப் பக்கம்...?" என்று தொடங்கினாள். "ஆமாம்" என்றது அவனது வாய். கால்கள் அசையாமல் நின்றுவிட்டன.

"உள்ளே வரலாமே" என்று அவள் மறுபடியும் ஆரம்பித்தாள்.

"வேண்டுமானால் வருகிறேன். ஏதாவது அவசியம் உண்டா?" என்று அவன் திருப்பிக் கேட்டான்.

"அவசியமென்ன? பார்த்தேன்: அதனாலேதான் கேட்கிறேன். பிழை என்றால் மன்னித்துக் கொள்ளலாம் தானே"

அவன் பேச்சின்றி உள்ளே சென்று உட்கார்ந்தான்.

அவள் சமீபத்தில் நின்றபடியே கேட்டாள்.

"உண்மையைச் சொல்லுங்கள், உங்களுக்கு என்னைப் பார்க்க வெறுப்பாக இருக்கிறதல்லவா?"

"எப்படிச் சொன்னால் நீ ஆறுதலடைவாய் என்று எனக்குத் தெரியவில்லை"

"என்னிடம் புதிர் போடுகிறீர்கள். இது ஏன்?"

"மறுபடியும் எதற்காக ஒரு நம்பிக்கையை வளர்க்க இச்சைப் படுகிறாய்?"

"இப்பொழுது நான் சுதந்திரமடைந்து விட்டேன்"

"நான் அடிமையாகி விட்டேனே"

"என்னை வருத்த வேண்டும் என்று நீங்கள் வேண்டும் என்றே பொய் சொல்லுகிறீர்கள்"

"நான் ஒரு நாளும் பொய் சொன்னதில்லை. சத்தியமே பேசுகிறேன்"

அவள் மௌனியாகி நின்றாள்.

"நான் போகலாமா?" என்று அவன் முடிப்பதற்குள்ளாக, "உங்கள் ஆச்சிரமப் பக்கம் நானும் வரலாமா?" என்று அவள் கேட்டாள்.

"எப்பொழுது வேண்டுமானாலும் நீ தாராளமாக வரலாம். வரவேற்க எத்தனையோ மலர்க் கரங்கள் நீட்டப்படும்"

அவள் பிறகு ஒன்றும் கேட்கவில்லை. வெறுமனே பார்த்தபடி நின்றாள். அவன் எழுந்து வெளியே சென்று மறைந்தான்.

தொடக்கத்தில் ஒன்று இரண்டு என்று ஆரம்பித்துப் பல நூறு குழந்தைகள் வந்து சேர்ந்து அங்கே வாழ்ந்தார்கள். ஜனங்களும் நான், நீ என்று தாராளமாக உதவினார்கள். எல்லாமாக அவனை இடையீடற்ற வேலையில் ஆழ்த்திவிட்டது.

ஒரு சாநய்திரம், குழந்தைகள் தோட்டத்தில் விளையாடிக் கொண்டு நின்றார்கள். அவன் அவர்களைக் கவனித்தபடியே ஏதோ செய்து கொண்டு நின்றான். அப்பொழுதுதான் அவள் அங்கே வந்தாள். எதிர்பாராத அவளுடைய வரவு அவனுக்கு அதிர்ச்சியை உண்டு பண்ணியது. பிறகு கிட்டப்போய், "ஏன் இந்த நேரத்தில் வந்தாய்?" என்று கேட்டான்.

"இந்த நேரத்தில் வரக்கூடாதா?" என்று அவள் திருப்பிக் கேட்டாள்.

"எப்பொழுதும் யாரும் வரலாம். காலையில் வந்தால் எல்லாவற்றையும் பார்ப்பது சௌகர்யமாக இருக்கும் என்பதற்காகச் சொன்னேன்" என்று நிறுத்தினான்.

"நாளைக் காலையிற் பார்த்துக் கொள்ளலாம்"

"நல்லது அப்படியானால் நாளை காலையில் வந்து விடேன்"

"நான் போக இங்கே வரவில்லை"

"அப்படியானல்?"

"இந்தக் குழந்தைகளுக்கும் அவர்களுடைய "பாபு"வுக்கும் தொண்டு செய்ய வந்துவிட்டேன்"

அவனால் அசைய முடியவில்லை. அவளைப் பார்த்தபடியே நின்றான்.

---

## சொற்சிலம்பம் போட்டி இல: 485

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | | ■ | 5 |
| 6 | | | ■ | | ■ | 7 | |
| | ■ | 8 | | | ■ | | ■ |
| ■ | 9 | | ■ | ■ | 10 | | |
| 11 | | ■ | 12 | 13 | | | ■ |
| 14 | | 15 | ■ | | | ■ | 16 |
| 17 | | | | ■ | ■ | 18 | |
| | ■ | | ■ | 19 | | | ■ |

**அனுப்புபவர் பெயர்:.................................................**

**முழுமையான தபால் விலாசம்: ..............................**

**..........................................................................**

**கையொப்பம்:..........................................................**

— — — — — — — — — — — — — — — —

### இடமிருந்து வலம்

1. நட்பிணக்கம் கொண்ட தேசங்கள்
6. வகை
7. பெண்
8. ஓடம்
9. ஆண்பால் ஒருமை படர்க்கை விகுதி
10. கசரோகம்
11. பணம்
12. சித்திரம்
14. பேரிகை
17. அகம்பாவம்
18. இந்தக் காலவேளை கடும் குளிராக இருக்கும்
19. அருவருப்பான மிருகம்

### மேலிருந்து கீழ்

1. காலவேளை
2. கூட்டல் அடையாளம்
3. இளம் எருது
4. சமையலில் பயன்படுத்தப்படும் சிறுதானியமொன்று
5. போதை தரும் பானம்
7. இறைச்சி
9. தேவர்களின் எதிரிகள்
10. உடல்
11. அதீத பாலியல் இச்சை உடையவன்
13. அம்பு எய்யப் பயன்படுத்தப்படும் முக்கிய கருவி
15. மதில்
16. பேரறிஞன்
18. கவர்ந்து கொள்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 483 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) சிகரம் (3)மாளிகை (5)உடு (6)மது (7)பறி (9)புண் (10)உதவி (12)மகுடம் (13)வைரி (14)கற (15)காலை (16)சவால் (18) விருது (19)அதிதி

**மேலிருந்து கீழ்**

(1)சிம்மம் (2)ரவை (3)மாடு (4)கைலி (5)உறி (7)பண்டசாலை (8)விதவை (9)புகு (11)விரிசல் (12)மற (14)கருவி (15) காது (16)சதி (17)வாதி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.485**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (30.08.2017 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 483 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**

இ.ஜெயக்குமார்,
இல57, இரண்டாம் குறுக்கு வீதி.
வவுனியா.

**2 ஆம் பரிசு**

ப.சிவரூபன்,
12 ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு.

**3 ஆம் பரிசு**

ஜெ.மதிவதனி,
வேலணை வடக்கு, 5ஆம் வட்டாரம்
(ஈசன் கடை), வேலணை.

**4 ஆம் பரிசு**

இ.மகாலட்சுமி,
பாரதி வீதி, கோணடாவில் மேற்கு,
கோணடாவில்

**5 ஆம் பரிசு**

ப.ஸ்ரீஜீவரஞ்சினி,
இல.8 பிளர்ச்சஸ் ஒழுங்கை,
சுண்டிக்குளி.

**பாராட்டுப் பெறுவோர்**

சிவகுரு தர்மகுலராசா,
ஏழாலை மத்தி.
ஏழாலை.

கா.பொ.இ.குலசிங்கம்,
பிரதேச செயலகம்,
வேலணை.

திருமதி தி.புவனேஸ்,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

சொற்சிலம்பம் போட்டி இல.485இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 03.09.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில் போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 483 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார ராசிபலன் உங்களுக்கு எப்படி?

**20.08.2017 தொடக்கம் 26.08.2017 வரை**

## மேடம்

சுக்கிரன், கேது, சந்திரனால் நற்பலன் கிடைக்கும். திட்டமிட்ட பணிகள் புதிய முயற்சியால் நிறைவேறும். அன்றாட வாழ்வு சுமுகமாக அமையும். தம்பி, தங்கைக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். வாகனப் பயணத்தால் ஓரளவு நன்மை உண்டு. பிள்ளைகளின் நற்செயலை ஊக்கப்படுத்த முயலுங்கள். ஒவ்வாத உணவுகளை உண்ண வேண்டாம். சீரான ஓய்வு உடல்நலனை பாதுகாக்கும். மனைவி வழி சார்ந்த உறவினர்களுடன் இணக்கம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணியில் குளறுபடி நேராமல் விழிப்புடன் இருப்பது நல்லது.

## இடபம்

பெரும்பான்மை கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளனர். மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். சகோதரர் வகையில் சுபநிகழ்ச்சி நடத்த அனுகூலம் உண்டு. வாகனப்பயணம் மூலம் இனிய அனுபவம் காண்பீர்கள். பிள்ளைகள் நற்செயலில் ஈடுபட்டு பெருமை சேர்ப்பர். பகைவரின் தொல்லையில் இருந்து சமயோசிதமாக விலகுவீர்கள். வெளியூர் பயணத்தால் ஆதாயம் கிடைக்கும். மனைவியின் அன்பும், பாசமும் கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் பொறுப்புடன் செயல்பட்டு சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவர்.

## மிதுனம்

சுக்கிரன், சனீஸ்வரர், சந்திரனால் நன்மை கிடைக்கும். குடும்ப நலனில் அக்கறை கொள்வீர்கள். வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். பிள்ளைகளின் செயல்களில் மதிநுட்பம் நிறைந்திருக்கும். நோய் தொந்தரவு விலகி உடல்நிலை மேம்படும். மனைவியின் ஆலோசனை குடும்ப வளர்ச்சிக்கு துணை நிற்கும். அரசியல்வாதிகள் பதவி பெற அனுகூலம் உண்டு. தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்யவும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டத்தை தவறாமல் பின்பற்றவும். பெண்கள், தாய் வீட்டாரின் உதவி கேட்டுப் பெறுவர். மாணவர்கள் லட்சிய நோக்குடன் படித்து முன்னேறுவர்.

## கடகம்

சுக்கிரன், சந்திரனால் நற்பலன் உண்டாகும். அக்கம்பக்கத்தினர் அன்பு பாராட்டுவர். நிலுவைப்பணியை விரைந்து நிறைவேற்றுவீர்கள். வாகனப் பயணத்தால் ஓரளவு நன்மை உண்டாகும். பிள்ளைகள் படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். எதிர் கருத்து கொண்டவர்களை விட்டு விலகுவது நல்லது. சொத்து ஆவணங்களை மற்றவர் பொறுப்பில் கொடுக்க வேண்டாம். உடல்நலத்திற்கு மருத்துவச் சிகிச்சை தேவைப்படலாம். இலாபம் சுமார். பணியாளர்கள் பணிச்சுமையைத் திறம்பட சமாளிப்பர். பெண்களுக்கு வீட்டுச் செலவில் சிக்கனம் தேவை. மாணவர்களுக்கு படிப்பில் விடாமுயற்சி அவசியம்.

## சிங்கம்

குரு, சுக்கிரன், கேது நற்பலன்களை வாரி வழங்குவர். பேச்சில் வசீகரம் நிறைந்திருக்கும். புதியவர்களின் நட்பால் நன்மை காண்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். சகோதர வழியில் ஒற்றுமை மேலோங்கும். வாகனப் பயணத்தில் கவனம் தேவை. பிள்ளைகள் விரும்பிக் கேட்ட பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள். விவகாரம் அணுகாத சுமுக வாழ்வு அமைந்திடும். மனைவியின் பேச்சு உற்சாகம் அளிக்கும். தொழில், வியாபாரத்தில் அதிக இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் எளிதில் பணி இலக்கை நிறைவேற்றுவர். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர். மாணவர்கள் பாதுகாப்பற்ற இடங்களுக்கு செல்ல வேண்டாம்.

## கன்னி

சூரியன், செவ்வாய், புதன், சனீஸ்வரரால் நற்பலன் உண்டாகும். மனதில் நம்பிக்கை அதிகரிக்கும். குறுக்கிடும் தடைகளை தகுந்த முயற்சியால் சரி செய்வீர்கள். வாகனத்தில் பராமரிப்பு செலவு உண்டாகும். பிள்ளைகளின் நற்செயல்களில் ஆர்வமுடன் ஈடுபடுவர். தாராள பணச்செலவில் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள். உடல்நிலை பலம் பெறும். மனைவியின் செயலால் குளறுபடி ஏற்படலாம். வெளியூர் பயணத்தால் எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள், நிர்வாகத்திடம் நற்பெயர் பெற்று மகிழ்வர். பெண்கள், மற்றவர்களின் குடும்ப விஷயத்தில் தலையிட வேண்டாம். மாணவர்கள் விடாமுயற்சியால் தேர்ச்சி காண்பர்.

## துலாம்

சூரியன், புதன், சுக்கிரன் சுபபலன் அளிப்பர். சிந்தனையும், செயலும் சிறப்பாக அமைந்திடும். சகோதர வழியில் நெருக்கம் அதிகரிக்கும். வாகனப் பயணத்தால் ஓரளவு நன்மை உண்டாகும். பிள்ளைகள் முற்போக்கு சிந்தனையுடன் செயல்படுவர். எதிரிகள் சொந்த சிரமங்களால் விலகிச் செல்வர். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அரசு வகையில் உதவி கிடைக்கும். லாபம் படிப்படியாக உயரும். பணியாளர்கள், நிர்வாகத்தினர் மத்தியில் நற்பெயர் காண்பர். பெண்கள், தாய் வீட்டுக்கு இயன்ற உதவிகளைச் செய்வர். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவர்.

## விருச்சிகம்

குரு, கேது, சுக்கிரனால் நன்மை வந்து சேரும். மற்றவருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். மனதில் மகிழ்ச்சியும், உற்சாகமும் நிறைந்திருக்கும். உறவினர்களுடன் இணக்கம் அதிகரிக்கும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். வீடு, வாகன வகையில் நவீன மாற்றம் செய்வீர்கள். பிள்ளைகள் படிப்பு, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நடந்தேறும். சமூகத்தில் முக்கிய மனிதரின் அறிமுகத்தால் உதவி கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள், குடும்ப நலன் பேணிக் பாதுகாத்திடுவர். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவர்.

## தனுசு

புதன், சந்திரன் அனுகூல பலன்தரக் காத்திருக்கின்றனர். தகுதிக்கு மீறிய வாக்குறுதி அளிக்க வேண்டாம். சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் எதிர்பார்ப்புடன் அணுகுவர். பிள்ளைகளின் செயல் குறையை இதமான முறையில் சரி செய்யவும். உடல்நலத்திற்காக சிகிச்சை தேவைப்படலாம். மனைவியின் பேச்சில் விரக்தி வெளிப்படலாம். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளவும். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி பணவரவு சீராகும். பணியாளர்கள் பொறுப்புடன் செயல்பட்டு நற்பெயர் காண்பர். பெண்களுக்கு, தாய்வீட்டினரின் உதவி கிடைக்கும். மாணவர்களுக்கு விடாமுயற்சி தேவைப்படும்.

## மகரம்

குரு, சனீஸ்வரர், சந்திரன் நற்பலன் வழங்குவர். மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். கடந்த கால உழைப்பின் பயன் கிடைக்கப் பெறுவீர்கள். வாகனப் பயணத்தால் ஓரளவு நன்மை உண்டாகும். பிள்ளைகளின் பிடிவாதக் குணத்தை இனிய அணுகுமுறையால் சரி செய்வீர்கள். குடும்பத்தின் தேவை பூர்த்தியாகும். ஒவ்வாத உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. மனைவியின் நற்செயல் குடும்பத்திற்கு பெருமை சேர்க்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பணியாளர்கள் நிலுவைப் பணியை விரைந்து நிறைவேற்றுவர். பெண்கள் சிக்கனத்தால் சேமிக்க முயல்வர். மாணவர்கள் படிப்பில் ஆர்வமுடன் ஈடுபடுவர்.

## கும்பம்

பெரும்பான்மை கிரகங்களால் யோகபலன் உண்டாகும். பேச்சில் மதிநுட்பம் நிறைந்திருக்கும். உடன்பிறந்தவர்களின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். வெளியூர் பயணம் மூலம் நன்மை காண்பீர்கள். பிள்ளைகள் உங்களின் வழிகாட்டுதலை ஏற்று செயல்படுவர். குடும்பத்தில் ஒற்றுமையும், மகிழ்ச்சியும் நிலைக்கும். உடல்நிலை திருப்தி அளிக்கும். மனைவியின் அன்பும், பாசமும் கண்டு மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அளப்பரிய வளர்ச்சி உண்டாகும். சேமிக்கும் விதத்தில் இலாபம் உயரும். பணியாளர்கள் பணி இலக்கை விரைந்து நிறைவேற்றுவர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள், நண்பர்களின் உதவியுடன் படிப்பர்.

## மீனம்

குரு, சுக்கிரன், சந்திரனால் நற்பலன் ஏற்படும். மனதில் இருந்த குழப்பம் விலகும். கடந்த கால நற்செயலால் நன்மை உண்டாகும். உடன்பிறந்தவர்களின் தேவையறிந்து உதவுவீர்கள். வீடு, வாகன வகையில் கூடுதல் பாதுகாப்பு அவசியம். பிள்ளைகள் தங்களின் வழிகாட்டுதலுடன் முன்னேற்றம் காண்பர். குடும்ப பிரச்னைக்கு சுமுக தீர்வு கிடைக்கும். விருந்து, விழாவில் அடிக்கடி கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், பணவரவும் அதிகரிக்கும். பணியாளர்கள் புதிய தொழில்நுட்பங்களை ஆர்வமுடன் கற்பர். மாணவர்கள் திட்டமிட்டுப் படித்து கல்வியில் வளர்ச்சி காண்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரவதையில் இலங்கை முதலிடம்

*ஆட்சி மாறியும் தொடரும் அவலம்; பிரிட்டன் அமைப்பு சுட்டிக்காட்டு*

கடந்த ஆண்டு இலங்கையில் 230பேர் பாதுகாப்புத் தரப்பின் சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எமது அமைப்பினால் உதவி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு பிரிட்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் சித்திரவதைகளிலிருந்து பாதுகாக்கும் பன்னாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

76 நாடுகள் தொடர்பில் நாம் ஆய்வுகளை மேற்கொண்டோம். அதில், கடந்த ஆண்டு இலங்கையிலேயே அதிகளவான சித்திரவதைகள் இடம்பெற்றுள்ளது. இலங்கையில் 230பேர் சித்திரவதைக்கு உள்ளாகியுள்ளனர். இரண்டாவது இடத்தில் ஈரான் உள்ளது. 140பேர் அங்கு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். பாதுகாப்புத் தரப்பினரால் கைது செய்யப்பட்டும், கடத்தப்பட்டும் கொடூரமான சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு உயிர் தப்பியவர்கள் வழங்கிய தகவலுக்கு அமையவே, பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் ஆட்சி மாற்றத்தின் பின்னரும் சித்திரவதைகள் தொடர்கின்றது. பிரிட்டனில் அகதிக் கோரிக்கை விடுத்துள்ள தமிழர்களை நாடு கடத்தினால் அவர்கள் அங்கு மிக மோசமான சித்திவதைக்கு உள்ளாகலாம் என்று அந்த அமைப்பு தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது.

ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் பென் எமர்சன் தனது இலங்கைப் பயணத்தின் முடிவில், இங்கு சித்திரவதைகள் இடம்பெறுகின்றது என்பதையும், பயங்கரவாத தடைச் சட்டம் மோசமாக கையாளப்படுகின்றது என்பதையும் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)


## பல் தேசிய நிறுவனத்தில் வேலைவாய்ப்பு

Educational Technologies Pvt Ltd
இலங்கையில் தனது 20 ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்யும் வகையில் யாழ்ப்பாண கிளைக்கு பதவி வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.

(Jaffna Branch)

- Training Marketing Executive
- Marketing Executive (With one year Experience)

G.C.E A/L சித்தி பெற்ற உங்களுக்கான ஓர் அரிய வேலைவாய்ப்பினை வழங்கவிருக்கின்றது.

After Training Rs.60,000

→ Over seas travel
→ Vehicle Allowance

Training Period Rs. 30, 000



ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.

G.Anthany- Branch Manager
077 356 6835
Jaffna Pioneerhouse@gmail.com
No 100,2nd Floor,Manipay Road Jaffna.

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்திலுள்ள விருந்தினர் விடுதியொன்றிற்கு முழுப் பொறுப்புடன் நின்று மேற்பார்வை செய்யக்கூடிய மும்மொழிகளிலும் பேசாற்றல் உள்ளவர் தேவை. வேதனம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 539 2463

## யாழ் நகரில் உடனடி வேலைவாய்ப்பு

- நீங்கள் A/L பரீட்சை இடித்துவிட்டு உங்கள் சொந்த வருமானத்தில் உயர்கல்வியைத் தொடர ஆசையா?
- பகுதி நேர வேலை செய்து மேலதிக வருமானம் உழைக்க ஆசையா?
- 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்குமான அதி உன்னதமான வேலைவாய்ப்பு.

வெளிநாட்டு பயணங்கள் , கார் , வீடு மற்றும் ஆடம்பர வாழ்க்கை வாழ வேண்டுமா?

உங்கள் வாழ்வை வளமாக்கி கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்

0767755920



IBSL உள்ளவர்கள்ளுக்கு
EPF . ETF உடன் நிரந்தர வேலைவாய்ப்பு
0775328536

## மார்க்கெட்டிங் துறையில் விருப்பம் உள்ளவரா நீங்கள்?

**W.Punchibanda&Sons Pvt Ltd (www.wpbs.lk) ஐ பற்றி.....**

நாங்கள் எழுபத்தைந்து வருடங்களுக்கு மேலாக Industrial Machinery இறக்குமதி துறையில் ஒரு முன்னணி நிறுவனமாக செயற்பட்டு வருகிறோம். தேர்வு செய்யப்படுவோருக்கு தக்க சம்பளம் மற்றும் பல விசேட சலுகைகளும் செய்து தரப்படும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் Sales Promotional Officer ஆக கடமை ஆற்ற விருப்பமான வர்கள் கீழ்வரும் email ID இற்கு உடனடியாக உங்கள் CV ஐ அனுப்பி வைக்கவும்.

careers@wpbs.lk

## விசா பெற்றுக்கொள்ள இருப்பவர்கள்

UK, Australia, Canada, USA, New Zealand , Denmark, France, Germany, Italy, Japan, Netherlands, Norway, Switzerland, Sweden மற்றும் ஏனைய நாடுகளுக்கு எமது பல வருட அனுபவமுள்ள UK, USA, CANADA போன்ற நாடுகளில் பயிற்சி பெற்ற சட்டதரணிகளால் விசா பெற்றுக் கொள்வதற்கான உதவிகள் செய்து கொடுக்கப்படும்.

### VISIT VISA

- சுபகாரியங்களுக்கும், திருமணங்களுக்கும், மங்கள, அமங்கள காரியங்களுக்கும் மற்றும் அவசரமாக செல்ல இருப்பவர்களுக்கும் விசேடமாக உடனே விசா பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்து தரப்படும்.
- பெற்றோர், பேரன், பேத்திமார்களுக்கான சுப்பர் விசா - கனடா. மணமான தம்பதியருக்கான வதிவிட விசா - சகல நாடுகளுக்கும்.
- ONLINE விசாவுக்கான விண்ணப்பம் மற்றும் விசாக்கட்டணக் கொடுப்பனவு செய்து கொடுத்தல்.



தாமதமாகிய விசாக்கள் - நிராகரிக்கப்பட்ட விசாக்கள் உள்ளதா?
விசா பெற்றுக் கொள்வதில் பிரச்சனை உள்ளதா?

**வங்கியில் பணவைப்பு**
*Savings Book, Fixed Deposit, Statement*
3, 6, 12 மாதங்களுக்கான (முன், பின்) பணவைப்பு

**Refused? Rejected?**

- உங்கள் ஆவணங்களை சரியான முறையில் சமர்ப்பிக்கத் தவறி விட்டீர்களா?
- உங்கள் விசா முடிந்ததும் இலங்கைக்கு திரும்பி வருவீர்கள் என்ற சந்தேகமா?
- உங்கள் வங்கியில் சேமிப்பு பணம் பற்றாக்குறையா?
- உங்கள் ஆவணங்கள் திருப்தி தரக்கூடியதாக இல்லையா? மற்றும் ஏதாவது காரணங்கள் இருப்பின் அது நிவர்த்தி செய்து சரியான முறையில் VISA பெற்றுக் கொடுக்கப்படும்.
- விசா சம்பந்தமான சகல ஆலோசனைகள் வழங்கப்படும்.
- விசா விண்ணப்பபடிவம் பூர்த்தி செய்து கொடுக்கப்படும்.
- Embassy கடிதங்கள் மொழி பெயர்த்துத் தரப்படும்.
- Ticket, Hotel Booking, Travel Insurance செய்து தரப்படும்.

எவ்வித முற்பணம் இல்லாமல் எம்மிடம் வந்து கதைத்து உண்மையான, நேர்மையான, நம்பிக்கையான முறையில் ஆலோசனைகளை பெறலாம்.
(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).

100% Genuine Visitors Only

- வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் Sponsor கடிதங்களுக்கு விசா பெற்றுக் கொள்வதற்கு தேவையான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.
- வெளிநாட்டில் உள்ள உறவினர்களிடம் செல்வதற்கான வசதிகள் செய்து தரப்படும்.

Migration / Skill Migration / Visit Visas / Student Visas / Dependent / Family Visas / Business / Investment / Rejection Appeals New Applications etc...

BRITISH STEP VISA SOLUTIONS
076 77 89920
No.39/1/9, Galle Road, Bambalapitiya.
britishfirststep@gmail.com
011 250 30 44

நல்லூர் கந்தன் தேர் ஏறிவரும் காலத்தில் புதியதொரு உதயம்
**23.08.2017 புதன்கிழமை**
கஸ்தூரியார் வீதி, ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையில்





# BEES SPORTS

- சிறுவர் பெரியவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள்
- பாடசாலைகள், விளையாட்டுக் கழகங்கள் போன்வற்றுக்கான விளையாட்டு உபகரணங்கள்
- உடற்பயிற்சி சாதனங்கள்
- பான்ட் வாத்திய உபகரணங்கள்
- வெற்றி வீரர்களுக்கான வெற்றி கேடயங்கள்
- விளையாட்டு வீரர்களுக்கான சீருடைகள்.

Dealers in Sports Goods, Fitness Equipment & Musical Instruments.

5,7, ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 3074


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வேற்றுக்கிரகவாசிகள்

## நிலவைச்சுற்றிவரும் உயிர்த் தனிமங்கள்

## 14ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்



செல்வி **மங்கையர்க்கரசி**
(மங்கை)
**பொன்னம்பலம்**
மலர்வு: குப்பிளானில்
23.08.1978

உதிர்வு: லண்டனில்
20.08.2003

இனிய இளைய மகளே!
குலவிளக்கே!
உன் நினைவில் வாழும், வாடும்,
அப்பா, அம்மா,
அண்ணாமார், அக்காமார்,
"பொன்மணி வாசா"
குப்பிளான் தெற்கு,
077 852 6152

## மரண அறிவித்தல்கள்

### எகண்ட மிக்கேல் வேதநாயகம்



தோற்றம் 16.12.1942 — மறைவு 19.08.2017

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் உடுவில் நாகம்மாள் கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட எகண்ட மிக்கேல் வேதநாயகம் நேற்று (19.08.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெலிச்சோர் மிக்கேல் - எஸ்வினிக் அம்மா தம்பதியரின் மகனும் சாந்தகுமாரியின் அன்புக் கணவரும் நிர்மலன் (நிமால்), நீல்ராஜ்குமார் (நீல்), நிர்மலாகுமாரி, உதயகுமாரி, நெல்சன் ஜெபக்குமார், கெலன்குமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் இராஜேஸ்வரி, திருச்செல்வம், பிரான்சிஸ், ஜெயமணி, அருள்தாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கரோலின் அஜந்தா, தயாநிதி, சிறிதரன், உதயகுமார், ரமா, சண்முகதாஸ் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு நாளை (21.08.2017) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 791 3924 / 077 946 9844**

### திருமதி சரஸ்வதி சாம்பசிவம்



பிறப்பு 15.12.1942 — இறப்பு 19.08.2017

சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சாம்பசிவம் நேற்று (19.08.2017) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னதம்பி சாம்பசிவத்தின் (முன்னாள் தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு.திருமதி சின்னத்தம்பி தம்பதியரின் அன்பு மருமகளும் சத்தியேந்திரா (கொழும்பு), சத்திய லோஜினி (ஆசிரியர் - ஆனைக்கோட்டை R.C.T.M.S). சத்தியவாணி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், சங்கானை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயந்திக்குமார் (அதிபர் - விக்னா கல்வி நிறுவனம், யாழ்) இன் அன்பு மாமியாரும் விதுர்சிகா (மாணவி - விஞ்ஞானபீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்), லதுர்சனன் (மாணவன் கொக்குவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற [illegible] மற்றும் [illegible] (உரிமையாளர் - குறிஞ்சி மருந்தகம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் [illegible] வரி, விஜயலட்சுமி காலஞ்சென்ற [illegible] ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் சுதுமலையில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக [illegible] மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible]
தகவல்:
குடும்பத்தினர்

077 9597392 / 077 856 6085 / 077 [illegible]

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் பரமகுருநாதன்



அராலி வடக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பரம குருநாதன் 18.08.2017 இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2017) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **மனைவி, பிள்ளைகள்**

**077 910 3422, 077 225 8009, 077 476 6926**

## மரண அறிவித்தல்கள்

### நமசிவாயம் வன்னியசிங்கம்



ஆவரங்கால் வன்னியசிங்கம் வீதியைப் பிறப்பிடமாகவும், சிறுப்பிட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் வன்னியசிங்கம் 18.08.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் நமசிவாயம் - ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், தம்பிராசா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், சஜீவன் (லண்டன்), கெங்காஜீவன் (ஆஸ்திரேலியா), கோபிநாத் (லண்டன்), குகதாரணி (அமெரிக்கா), கஜரூபன் ஆகியோரின் அன்பு தகப்பனாரும், வினித்தா (லண்டன்), கேமாலினி (ஆஸ்திரேலியா), சஜந்தினி (லண்டன்), அகிலன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜஸ்மிதா, டினுசா, ஆதுஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், இராஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் பரமேஸ்வரி, இரஞ்சிதமலர், இரத்தினசிங்கம், காலஞ்சென்றவரான குணசிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரனும், பாக்கியம், K.T.இராஜசிங்கம், அகிலேஸ்வரி, நல்லையா, கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.08.2017) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி மேற்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிறுப்பிட்டி மேற்கு,**
**நீர்வேலி.**

**தகவல் : குடும்பத்தினர்.**

### கோணேசபிள்ளை இராசலிங்கம்

*(ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/வேலணை மத்திய மகா வித்தியாலயம்)*



*தோற்றம் 25.12.1936 — மறைவு 12.08.2017*

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் முன்னர் சுருவில் மற்றும் கொக்குவில், அச்சுக்கூட வீதியை வதிவிடமாகவும் தற்போது Birmingham, U.K. ஐ வதிவிடமாக கொண்ட கோணேச பிள்ளை இராசலிங்கம் கடந்த (12.08. 2017) சனிக்கிழமை லண்டனில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோணேச பிள்ளை (அக்குராசி பிரபல வர்த்தகர்) - ஆச்சிமுத்து தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான துரையப்பா - விசாலாட்சி தம்பதியரின் பாசமிகு மருமகனும் பரமேஸ்வரி (கிளி - ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியர், பெரியபுலம் மகாவித்தியாலயம்) யின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பாவன், மற்றும் வித்தகனின் (U.K) அன்புத் தந்தையும், ஜானுகாவின் அன்பு மாமனும், மிருதியின் ஆசைப் பேரனும், காலஞ்சென்ற வர்களான சோமவதி, சிவபாதசுந்தரம் மற்றும் வேதவதியின் (யாழ்ப்பாணம்) பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி அன்னலட்சுமி மற்றும் அழகேஸ்வரி - காலஞ்சென்ற தர்மலட்சுமி (திரு) மற்றும் பூபாலசிங்கம், காலஞ்சென்ற தனபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற வர்களான கந்தையா, பத்மாசினி, இராஜேஸ்வரன், ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற துரைச்சாமி, கந்தவேல், கந்தசாமி மற்றும் சூரியகுமார், கரோலின், சரோஜினிதேவி, ஆகியோரின் அன்பு சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 7.00 மணிக்கு (U.K) St.Cyprian's Memorial Hall, Birmingham, UK இல் நடைபெற்று பின்னர் முற்பகல் 10.00 மணியளவில் Birmingham Crematorium (Perry Barr) UK இல் தகனக்கிரியை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

54/18, பூநாரி உப ஒழுங்கை 04,
கொக்குவில் மேற்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.
021 300 6290
Birmingham U.K

தகவல்:
இ.வேதவதி (சகோதரி)

**0044 7[illegible]0 868908**



சுப்பர் மூனின் அண்மைய கண்டு கொள்ளலின்போது வேற்றுக்கிரக வாசிகள் நிலவைச் சுற்றி வந்த காட்சிகள் கமராவில் பதிவான தகவல் வெளியாகியுள்ளது. இதன்படி வெளியான காணொலியில் மர்மப்பொருள் ஒன்று நிலவைச் சுற்றி வலம் வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த அவதானமானது வேற்றுக்கிரக வாசிகளின் பறக்கும் தட்டு என்ற எதிர்வு கூறலாக சில ஆய்வாளர்களால் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. இந்தநிலையிலே வேற்றுக்கிரக வாசிகள் உண்மையாகவே இருக்கின்றனரா என்பது பலரின் கேள்வியாகக் காணப்படுகின்றது. இருப்பினும் ஒரு சாரார் அதனை ஏற்றுக்கொள்ள இன்னொரு சாரார் இல்லை என்ற பதிலைக் கூறி வருகின்றனர். தவிர இது தொடர்பான உத்தயோகப்பூர்வமான எந்தப் பதிலும் தெரிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வேற்றுக்கிரகவாசிகள் இல்லை என்ற கருத்துகள் வலுவாக உள்ளபோதும் மர்மமான விடயங்கள் தொடர்பில் விஞ்ஞானிகளும் கருத்து வெளியிடாது மௌனம் காத்து வருகின்றமை நோக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வடமாகாண மாற்றுத் திறனாளிகள் விளையாட்டு விழா கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த வாரம் நடைபெற்றது. உயிரிழை நிறுவனத் தலைவர் வி.ஜெயகாந்தன் தலைமையில் நடைபெற்ற விழாவில் தலைமை விருந்தினராக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் க.நந்தகுமாரனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் அ.ரணிஸ் அச்சுதராஜ், வன்னி விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் பே.ஞானகுமார் ஆகியோரும் மதிப்புறு விருந்தினராக மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரத்தினமும் கலந்து கொண்டனர். (ஐ-9)




யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சிரமதான நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதனை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய சுற்றுச் சூழல் அதிகாரிகள் நேரடியாகப் பார்வையிட்டனர். சிரமதானத்தில் சுற்றாடல் மற்றும் சூழல் அபிவிருத்தி மன்ற மாணவர்கள் மற்றும் ஏனைய மாணவர்கள், ஆசிரியர்கள் பங்குற்றினர். (ஐ)




வடக்குமாகாணசபை உறுப்பினர் அய்யூப் அஸ்மினின் 2017 ஆம் ஆண்டுக்காண் பிரமான அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டின் கீழ் யாழ் மாவட்டத்தில் 2ஆம் கட்ட உதவித்திட்டமாக இருவருக்கு மருத்துவ சிகிச்சைக்கான உதவித்திட்டம் வழங்கப்பட்டது . சுபாஸ் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது நிதி பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது. வடக்குமாகாணசபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின், யாழ் முஸ்லிம் புலம்பெயர் சமுகத்தினர், யாழ் முஸ்லிம் சிவில் சமுகத்தினர், யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.(ஐ)




புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற 'ஒக்ரோபர் புரட்சியும் இரண்டாம் உலகப் போரும்' என்ற தலைப்பிலான ஆய்வரங்கு அண்மையில் இடம்பெற்றது.



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் 13ஆம் கட்டை குமராசாமிபுரம் விசுவமடுவைச் சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கு சுயதொழில் முயற்சிக்கான வாழ்வாதார உதவி அண்மையில் வழங்கப்பட்டது. பயனாளிக்கு நீர் இறைக்கும் இயந்திரமும் அதற்கான தூவல் நீர்பாசனத்துக்கான குழாய்களும் வழங்கப்பட்டுள்ளன. வட்டு இந்து வாலிபர் சங்க பொருளாளரும் சங்கானை பிரதேச செயலக ஊழியருமான கலைச்செல்வன் ராகுமான் பயனாளியிடம் குறித்த பொருள்களைக் கையளித்தார். (ஐ)




யாழ். முஸ்லிம்களின் ஒன்றுகூடல் நிகழ்வு யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. ஹிரா பவுண்டேசனின் தலைவர் எம். ஏ. சி. எம் அமீன் உள்ளிட்ட அதன் உறுப்பினர்களின் நெறிப்படுத்தலில் மருத்துவ முகாமும் இடம்பெற்றது. அதில் பலர் பங்குபற்றிப் பயனடைந்தனர். (ஐ)





ஈழத்துக்கவிஞர் சி.றஜீத்தின் தயாரிப்பில் உருவான நல்லூர் கார்த்திகைக்குமரா போற்றி எனும் பக்தி இறுவட்டு வெளியீட்டு விழா நல்லூரில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு இறுவட்டினை வெளியிட்டு வைத்தார். கவிஞர்கள், இசையமைப்பாளர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





புலோலி உபய கதிர்காமம் பெரிய தேவனத்தாய் பாலர் பாடசாலையில் விளையாட்டு நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது. அதில் தலைமை விருந்தினராக திருமதி அனுஷா பொன்காந்தன் கலந்து கொண்டார். அவர் வெற்றியீட்டிய மாணவர்க ளுக்குப் பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தார். (ஐ)




நெல்லியடி கொமர்ஷல் வங்கிக் கிளையின் ஏற்பாட்டில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர். அதில் வங்கியில் ஓய்வுபெற்ற பிராந்திய முகாமையாளர் நிக்கிலாஸ் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டார். அவர் மாணவர்களுக்குப் பரிசில் வழங்கிக் கௌர வித்தார். (ஐ)




தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சினால் நல்லிணக்கச் செயற்பாட்டின் கீழ் 85 துவிச் சக்கர வண்டிகள் பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன. பூநகரி முழங்காவில் மகா வித்தியாலயம் மற்றும் நல்லூர் மகா வித்தியாலய மாணவர்களுக்கு இந்தச் சைக்கிள்கள் வழங்கி வைக்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி, கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம், பூநகரி பிரதேச செயலாளர் கிருஷ்னேந்திரன், மற்றும் மகாண அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகளை வழங்கி வைத்தனர். (ஐ)





கொமர்ஷல் வங்கியின் சங்கானைக் கிளையின் ஏற்பாட்டில் அருணலு சேமிப்புக் கணக்கைப் பேணும் மாணவர்களில் தரம் 5புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் அண்மையில் கௌரவிக்கப் பட்டனர். கிளை முகாமையாளர் எஸ்.மகேந்திரம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் நொபேர்ட் உதயகுமார், வடபிராந்திய முகாமையாளர் இராமச்சந்திரா சிவஞானம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். அவர்கள் மாணவர்களுக்கு பரிசில் வழங்கிக் கௌரவித்தனர். (ஐ-29)




கொக்குவில் மேற்கு சனசமூக நிலைய மும், முன்பள்ளியும் இணைந்து நடத்திய விளையாட்டு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. அதில் மாணவர்களின் வினோத உடை நிகழ்வும் நடைபெற் றது. (ஐ)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும், நிறுவுனர் தினமும் அண்மையில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் ரீ.தேவராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தலைமை விருந்தினராக பாடசாலையின் பழைய மாணவியும் பொறியிலாளருமான திருமதி.சாந்தாதேவி தர்மரட்ணம் கலந்து கொண்டார். அவர் மாணவர்க ளுக்குப் பரிசில் வழங்கிக் கௌவரவித்தார். (ஐ)



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தால் விழிப்புலனற்றோர் சங்கத்தின் பயனாளிகளுக்கு ரூபா 50 ஆயிரம் பெறுமதியான புத்தாடைகளும், வள்ளிபுனம் இனிய வாழ்வு இல்லச் சிறப்புத் தேவைக்குரிய மாணவர்களின் நடனக்குழுவுக்கு ரூபா 30 ஆயிரம் பெறுமதியான புத்தாடைகளும் அன்பளிப்பாக வழங்கபட்டுள்ளன. வட்டுக்கோட்டை இந்துவாலிபர்சங்கத்தின் முன்னாள் உறுப்பினர் சண்முகநாதன் மயூரன் அவற்றை வழங்கி வைத்தார். (ஐ)





வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன், வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் வடலியடைப்பு கலைவாணி [illegible] கலையரங்க முன்றலில் [illegible] நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மடுப்பதியின் வருடாந்தப் பெருவிழா

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

மடுப்பதியில் கடந்த 15 ஆம் திகதி கொண்டாடப்பட்ட வருடாந்தப் பெருவிழா குறித்து இந்தக் கட்டுரை நோக்குகின்றது.

இலங்கையின் தலைநகர் கொழும்பிலிருந்து ஏறத்தாழ 300 கிலோ மீற்றர்கள் தொலைவில் மன்னார் மறைமாவட்டத்தின் வடக்குப் கிழக்கு பகுதியில் அடர்ந்த காட்டின் நடுவாக அமைந்து கானகத்துச் செல்வியாக அருள்மழை பொழியும் மருதமடு அன்னைக்கு அர்ப்பணமாய் கம்பீரத் தோற்றம் தரும் யாத்திரைத்தலமே மடுப்பதி.

**இன வேறுபாடுகளை மறந்து ஒன்று கூடும் தலம்**

இலங்கையின் மிகப் பிரச்சித்தி பெற்ற மருத மடு அன்னையின் யாத்திரைத்தலமானது 400 ஆண்டு காலப் பழமையானது. சிங்கள மக்களும்,தமிழ் மக்களும் ஆரம்ப காலம் முதல் இன்றுவரை இன வேறுபாடுகளை மறந்து ஒன்றுகூடும் ஒரே ஒரு யாத்திரைத்தலமாக விளங்கி வருகிறது. அத்தோடு லட்சக்கணக்கான மக்களை ஆண்டின் முக்கியப் பெருவிழாவான ஆவணிப் பெருவிழாவுக்கும், ஏனைய விழாக்களுக்கும் அரவணைத்திருக்கும் திருத்தலமாகவும் திகழ்கிறது. கடந்த மூன்று தசாப்த கால கொடிய போரினால் தென்னிலங்கை யாத்திரிகர்கள் வருகை தடைப்பட்டிருந்தது. இருந்தபோதும் யாத்திரிகர்களைத் தன்பால் மீண்டும் அரவணைக்கத் தொடங்கியுள்ளது.

போருக்கு முன்பான காலத்தில் மடுப்பதியின் ஆவணித் திருவிழா எவ்வாறாக விழாக்கோலம் பூண்டதோ அதைவிடவும் அதிக யாத்திரிகர்களுடன் இவ்வாண்டு விழா சிறப்பாக நடந்தேறியுள்ளது. திருநாளுக்கான நவநாள்கள் ஆவணி மாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாகின. வழமைபோலவே மடு திருத்தலத்திற்கு நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல லட்சக்கணக்கான பக்தர்கள் கூடி வந்து விடுதிகளி லும், தற்காலிக கூடாரங்களிலும் தங்கியிருந்தனர். இந்தச் சந்தர்ப்பத்திலே கடந்த 8 ஆம் திகதி நண்பகல் வேளை அதிக மழை வீழ்ச்சி இருந்தது. நீர் கொழும்பில் இருந்து மடுப்பதியின் திருவிழாக் காண வருகை தந்து பண்டிவிரிச்சான் பகுதியில் தங்கியிருந்த 25 வயதுடைய திருமணமான பெண் ஒருவர் மின்னல் தாக்கத்தால் உயிரிழந்து போனார்.

**மக்களை வாட்டியது மழை**

மீண்டும் கடந்த 14ஆம் திகதி மடு பிரதேசத்தில் மழை அதிகமாகப் பெய்ய ஆரம்பித்து பெரு மழையாக மாறியது. இதனால் மடுத் திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழாவை காண வந்த அன்னையின் பக்தர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொண்டனர். வரலாற்றில் என்றுமில்லாதவாறு கடும் மழை பெய்தமையால் மடு அன்னையின் திருவிழாவை வழக்கமான முறையில் கொண்டாட முடியாதவாறு தடை ஏற்பட்டது. அன்னையின் பக்தர்கள் பல இன்னல்களைச் சந்தித்தனர். மடுத் திருத்தலத்தை சுற்றியுள்ள பகுதிகளில் கடும் மழை பெய்தமையால் யாத்திரிகர்கள் தற்காலிகமாகத் தங்கியிருந்த கூடாரங்கள் அனைத்தும் வெள்ள நீரில் மூழ்கின. அன்றையதினம் வழக்கமாக நடைபெறும் மாலை நேர வேஸ்பர் வழிபாடுகள் நிறுத்தப்பட்டன. அதற்குப்பதிலாக மாலை 4.30 மணிக்கு ஆலயத்தினுள் திருச் செபமாலையின் இரண்டு காரணிக்கங்கள் சொல்லப்பட்டு மடு அன்னைக்கு யாத்திரிகர்களால் பிரியாவிடை செபம் சொல்லப்பட்டது.

இறுதியில் மரியன்னையின் திருச்சொரூப ஆசிர்வாதத்துடன் மாலை வழிபாடுகள் நிறைவு செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது. அதன்படி பிரியாவிடை செபமானது தமிழ் மொழியில் பி.எம். பீற்றர் மனோகர் அடிகளாராலும்,சிங்கள மொழியில் அனுராதபுர மறைமாவட்டத்தை சேர்ந்த றஞ்சித் டிமெல் அடிகளாராலும் சொல்லப்பட்டது. திருச்சொரூப ஆசிரைக் காலி ஆயர் றேமன் விக்கிரமசிங்க ஆண்டகை வழங்கினார். இதையடுத்து திருவிழாவில் கலந்துகொள்ள வந்திருந்த யாத்திரிகர்கள் தமது ஊர் நோக்கிப் பயணத்தை தொடங்கினர். 80 வீதமான யாத்திரிகர்கள் அன்னையின் திருவிழா நடைபெறும் என்ற நம்பிக்கையுடன் மடுப்பகுதியிலேயே பல இன்னல்களுக்கும் மத்தியில் தங்கியிருந்தனர். காலை வேளையில் மழை வெள்ளம் குறைந்து வழமைபோல் ஆலயத்திற்கு வெளியே திருவிழாத்திருப்பலி நடைபெற்றது.

**வருடாந்தத் திருவிழா**

கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை தலைமையில் வருடாந்தத் திருவிழாவின் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அவரோடு இணைந்து மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை,யாழ் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை,கண்டி ஆயர் வியன்னி பர்னான்டோ ஆண்டகை,அனுராதபுர ஆயர் நோபேட் அன்றாடி அ.ம.தி. ஆண்டகை ,கொழும்பு துணை ஆயர் மக்ஸ்வெல் சில்வா ஆண்டகை மற்றும் காலி ஆயர் றேமன் விக்கிரமசிங்க ஆண்டகை ஆகியோர் கூட்டுத்திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். திருப்பலியைத் தொடர்ந்து அன்னையின் திருச்சொரூபப் பவனி இடம்பெற்று திருச்சொரூப ஆசிர் கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் மல்கம் கர்தினால் றஞ்சித் ஆண்டகையால் வழங்கப்பட்டது.

இவ்வாண்டு இடம்பெற்ற வருடாந்த திருவிழாவுக்கு நாட்டின் பல பாகங்களில் இருந்தும் அண்ணளவாக 7 லட்சம் பக்தர்கள் வருகை தந்திருந்தனர். மடு அன்னையின் ஆசியைப் பெற்று சென்றுள்ளனர். திருவிழா இடம்பெறுமா என்ற அச்சம் இருந்த நிலையில் மடு அன்னையின் அருளால் மழை ஓய்ந்தது. இயற்கை அமைதியானது. வரலாறு காணாத மக்கள் வெள்ளம் ஆலய வளாகத்தை சூழ்ந்திருந்த நிலையில் எந்த ஒரு இடரும் நேராத வண்ணம் திருவிழா திருப்பலி இடம் பெற்றது. இந்தச் செயல்நிலை மடு அன்னையின் மகத்தான அற்புதமாக அமைந்திருந்தது.

**திருத்தந்தை பிரான்சீஸ் கால்பதித்த திருப்பதி**

ஏறக்குறைய 3 தசாப்த கால கொடிய உள்நாட்டுப்போர் முடிவடைந்த பிறகு இலங்கைக்கு திருத்தந்தை பிரான்சீஸ் கடந்த 2015 ஆம் ஆண்டு பயணம் செய்தார். போர் முடிந்தும் அதன் அழுத்தத்திலும்,தாக்கத்திலும் இருந்து மீள முடியாத தமிழ்; மக்களின் உடல் உளக் காயங்களை குணப்படுத்தும் தேவ தூதனாக திருத்தந்தையின் வருகை அமைந்திருந்தது. தமிழ் மக்கள் நீதியோடுகூடிய நிரந்தர தீர்வைப் பெற்றிட அழுத்தம் கொடுக்க விரும்பினார்.

> இலங்கைவாழ் தமிழ் மக்களையும். சிங்கள மக்களையும் இன மத பேதங்கள் கடந்து தன் பாதத்தில் ஒன்று சேர்க்கின்ற மருதமடு அன்னை அனைத்து மக்களும் சமத்துவத்துடனும் சகோரத்துவத்துடனும் வாழ வழிசமைப்பாராக.

இலங்கைக்கு வருகை தந்த திருத்தந்தை வட பகுதிக்கு வர வேண்டும், போரின் கோர வடுக்களைத் திருத்தந்தை நேரில் பார்க்கவேண்டும், போரில் பாதிக்கப்பட்ட மக்களை அன்பாக அணுகி ஆசீர்வதிக்க வேண்டும் என்று தமிழ்க் கத்தோலிக்க மக்கள் அனைவரும் வேண்டிய போது அரசினால் விடுக்கப்பட்ட பாதுகாப்புக்காரணங்கள் அனைத்தையும் தகர்த்து வேத சாட்சிகளின் குருதியால் புனிதப்படு த்தப்பட்ட மன்னார்ப் பிரதேசத்துக்கு வருகை தந்து இலங்கையின் 400 ஆண்டுகாலப் பழமை வாய்ந்த மடுப்பதியை முழு உலகிற்கும் வெளிக்காட்டினார்.

வத்திக்கான் ஊடகங்கள் திருத்தந்தை யின் மடுப்பதிக்கான பயணத்தை முழு உலகிற்கும் தெளிவாகக் காட்டின. அன்னையின் உலகப் பிரசித்தி பெற்ற யாத்திரைத்தலங்களான இங்கிலாந்து நாட்டின் வோள்சிங்கம் பதி,பிரான்ஸ் நாட்டின் லூர்து கெபி,போர்த்துக்கல் நாட்டின் பத்திமா பதி,இந்தியாவின் அன்னை வேளாங்கண்ணி யாத்திரைத்தலம் என்பவற்றின் வரிசையில் மடுப்பதியும் உள்ளது என்ற தகவல் உலகுக்கு வெளிப்படுத்தப்பட்டது.

**மடு அன்னையின் திருச்சொரூபத்தை நெஞ்சோடு அணைத்து கொண்ட திருத்தந்தை**

குறிப்பாக தமிழ் பிரதேசங்களில் சமாதானம் நிலவ வேண்டும் என்று சமாதானப் புறாவினைப் மடுப்பதியின் பரிபாலகர் எமிலியானூஸ்பிள்ளை அடிகளாரிடமிருந்து பெற்று திருத்தந்தை பிரான்சீஸ் பறக்க விட்டார். அதன் பின்னர் திருத்தந்தை பிரான்சீஸ் மடுப்பதிக்கான பயணத்தை நினைவு கூரும் வகையில் அவருக்கு மரத்தினாலான மடு அன்னையின் திருச்செரூபம் வழங்கப்பட்டது. அதனை எல்லோருக்கும் உயர்த்திக் காட்டினார். திருச்சொரூபத்தை முத்தமிட்டு நெஞ்சோடு அணைத்துக் கொண்டார். உண்மையில் அந்தக் காட்சி அனைவருடைய மனதையும் கொள்ளை கொண்ட காட்சியாக அமைந்திருந்தது.

**மடு அன்னையின் திருச்சொரூப யாத்திரை**

மடு அன்னையின் திருச்சொருபமானது 1948 ஆம்,1974 ஆம், 2001ஆம் ஆண்டுகளில் மூன்று தடவைகள் மடுப்பதியை விட்டு யாத்திரையாக இலங்கையின் மறைமாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. அமலமரித் தியாகிகள் சபையினர் இலங்கைக்கு வருகை தந்த நூற்றாண்டு நிறைவு விழாவை கொண்டாடும் விதமாக 1948 ஆம் ஆண்டு மடுமாதாவின் திருச்சொரூபம் திருயாத்திரையாக யாழ் மறைமாவட்டத்தின்



பங்குகளுக்கு எடுத்துச்செல்லப்பட்டது. இதுவே முதல் சந்தர்ப்பமாக அமைந்திருந்தது. மருதமடு அன்னையின் மகுடாபிசேக பொன்விழாவில் அனைவரும் பங்குகொள்ளும் பொருட்டு 1974 ஆம் ஆண்டு இரண்டாவது தடவையாக மருதமடு அன்னையின் திருச்சொரூபம் யாத்திரையாக மறைமாவட்டப் பங்குகளுக்கு எடுத்துச்செல்லப்பட்டது. இந்த மகுடாபிசேக பொன்விழாத் திருப்பலி 1974 ஆம் ஆண்டு ஆடித் திங்கள் இரண்டாம் நாள் கொழும்புப் பேராயரும்,ஆயர் குழுவின் தலைவருமாகிய கர்தினால் தோமஸ் கூறே ஆண்டகை தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. 2001ஆம் ஆண்டு நடைபெற்ற மூன்றாவது யாத்திரையின் போது மடு அன்னையின் திருச்சொரூபமானது தென் இலங்கைக்கு யாத்திரையாக எடுத்துச் செல்லப்பட்டது.

மூன்று தசாப்தங்களாக நடைபெற்று வந்த போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்குடன் நாட்டின் அமைதிக்குச் செபிக்கும் பயான விசேட வேண்டுதலுடனேயே இந்த யாத்திரைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்த யாத்திரையின் பின்னர்தான் இலங்கையின் நீண்டகாலப் போருக்கு ஓர் இடைவெளி கொடுக்கும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கைவாழ் தமிழ் மக்களையும். சிங்கள மக்களையும் இன மத பேதங்கள் கடந்து தன் பாதத்தில் ஒன்று சேர்க்கின்ற மருதமடு அன்னை அனைத்து மக்களும் சமத்துவத்துடனும், சகோரத்துவத்துடனும் வாழ வழி சமைப்பாராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The principal photographer of Jaffna

# JEEVAN STUDIO

NO-8B, 1st Floor, Cargills Square, Jaffna

021 222 2955 / 077 978 5717

www.jeevanstudios.com

# விசேட விலைக்கழிவு !



Discount
5,000/= to 50,000/=
Valid Until
31.08.2017

SATISFACTION 100% GUARANTEE

நீர் சுத்திகரிப்புடன் தொடர்புடைய அனைத்து தேவைகளுக்கும் மிக பொருத்தமான, சிறந்த தீர்வினையும் விற்பனைக்கு பிந்திய சேவையினையும் மிகவும் அர்பணிப்புடன் வழங்கிவரும் ஒரே நிறுவனம்.

Central Environmental Authority Approved.



1. வீடு, தொழிற்சாலை, உணவகங்களுக்கு உகந்த எல்லா அளவிலுமான RO குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்.
2. நீர்க்குழாய்கள், Tiles, Bathroom fittings களில் படியும் கல்சிய, மக்னீசிய படிவுகளிலிருந்து விடுதலை பெற Water Softener System.
3. சுற்றாடல் அதிகார சபையின் நியமங்களிற்கேற்ப கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமை நிறுவி பராமரித்தல்.
4. நீச்சல் தடாக வடிவமைப்பு மற்றும் பராமரிப்பு.



குறிப்பு :- பெரிய வேலைத்திட்டங்களுக்கு மிகக் குறைந்த வட்டியுடனான வங்கிக் கடன் சலுகைகள் பெற்றுக்கொள்ளலாம்!

WE ACCEPT MasterCard VISA

## Everpure Hi-Tec (Pvt) Ltd.

No.341, K.K.S Road, Jaffna
021 222 6888, 021 567 7567, 077 362 6230

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

மட்டுவில் வடக்கு கண்ணகை சனசமூக நிலையம்
யாழ்.மாவட்ட ரீதியிலான மென்பந்து கிரிக்கெற் சுற்றுப்போட்டி
(6 பேர், 5 ஓவர்)

இடம் :- விளையாட்டுக் கழக மைதானம்.
காலம் :- 26.08.2017, 27.08.2017 (சனி, ஞாயிறு)
நேரம் :- காலை 8 மணி

077 673 0015, 075 066 4303

# அறிவித்தல்



எஸ்.ஜே.மோஹஹன்
(702440491V)
பிராந்திய முகாமையாளர்



பரமானந்தசிவம் ரஜினிகாந்த்
(780803940V)
பிராந்திய விற்பனை நிர்வாகி

எங்கள் நிறுவனத்தில் சேவையாற்றிய மேற்குறிப்பிட்ட இருவரும், 30/06/2017 திகதி தொடக்கம் எமது நிறுவனத்தில் சேவையாற்றமாட்டார்கள் என்பதை இலங்கை பிரஜை வாசிகள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

அத்துடன், 30/06/2017 திகதி தொடக்கம் இவர்கள், 4எவர் ஸ்கின் நெச்சுரல்ஸ் பெயருடாக மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கைக்கும், நிறுவனம் பொறுப்பேற்காது என்பதையும் அறிவித்துக்கொள்கின்றோம்.

**4Ever Skin Naturals (Pvt.) Ltd.**

287/2B, ஸ்டேன்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொட.
தொ. பெ: 011 2026868

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ.தி.மு.க. இணைப்பு ஓரிரு தினங்களில்

## ஓ.பி.எஸ். தகவல்

சென்னை, ஒக. 20
'தமிழகத்தின் முதன்மைக் கட்சிகளில் ஒன்றும், ஆளும் கட்சியுமான அ.தி.மு. கழகம் இன்னும் ஓரிரு தினங்களில் இணையும்' என்று நேற்றுத் தெரிவித்தார் முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வம்.

பன்னீர்செல்வத்தின் இல்லத்தில் நேற்றுப் பிற்பகல் ஒரு மணியவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தத் தகவலை அவர் வெளியிட்டார்.

'அ.தி.மு.க. அணிகள் இணைப்பதைப் பற்றிய பேச்சு சுமுகமாக நடந்து வருகிறது. இன்னும் ஓரிரு நாட்களில் நல்ல முடிவு எட்டப்படும். அ.தி.மு.க. அணிகளுக்கு இடையே பெரியளவில் எந்தக் கருத்து வேறுபாடுகளும் இல்லை. அ.தி.மு. கழகத்தைக் காப்பாற்றவும் எம்.ஜி.ஆர். ஜெயலலிதா ஆகியோர் காட்டிய அரசியல் பாதையில் தொடரவும் இணைப்பு திட்டமிட்டப்படி நடைபெறும். தமிழக மக்களும், அ.தி.மு.க. தொண்டர்களும் அ.தி.மு.க. அணிகள் இணைவதை எதிர்பார்க்கிறார்கள். அந்த விருப்பம் நிறைவேறும். விரைவில் நல்ல முடிவை நீங்கள் எதிர்பார்க்கலாம்' என ஓ.பன்னீர்செல்வம் மேலும் தெரிவித்தார்.

எடப்பாடி அணியுடன் இணைய வேண்டுமாயின், ஜெயலலிதா மறைவு தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும், அவர் வாழ்ந்த வேதா இல்லத்தை ஜெயலலிதாவின் நினைவிடமாக அறிவிக்க வேண்டும் ஆகிய இரு கோரிக்கைகளையும் ஓ.பன்னீர் செல்வம் தரப்பினர் முன்வைத்தனர். இவற்றை நிறைவேற்றும்படியான அறிவிப்பை கடந்த வியாழக்கிழமை விடுத்தார் எடப்பாடி. இதையடுத்தே இணைப்பு தீவிரத்தன்மையை எட்டியுள்ளது.

இந்திய ஊடகங்கள் சில, இணைப்பு நடைபெறுவதில் சிறிது பின்னடைவு ஏற்பட்டுள்ளது. ஓ.பன்னீர்செல் வம் பொதுச்செயலாளர் பதவியைக் கேட்டதாலேயே இந்த மந்தகதி என்று செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

### வளர்ப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் 5ஆம் வட்டாரம் வேலணையில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த முனியாண்டி பொன்னையா (வயது - 51) என்பவரே உயிரிழந்தார். "தனது வளர்ப்பு மாட்டுக்கு அவர் உணவளித்தார். அந்த மாடு திடீரென அவரை இடித்தது. படுகாயமடைந்த அவர் உடனடியாக வேலணை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் அவர் வழியிலேயே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவ சோதனையில் உறுதிப்படுத்தப் பட்டது" என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. (வ-4-8,ரி1)

### 2 கிலோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கக் கொண்டு செல்லப்பட்டது என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

கஞ்சா கொண்டு சென்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் 50 வயதுடையவர் என்று தெரிவிக்கப்பட்டது.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் கைது செய்யப்பட்டார். வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபில்யூ.எ.மகிந்த தலைமையிலான உதவி பொலிஸ் பரிசோதகர் சம்பத் மற்றும் போதைப் பொருள் தடுப்பு பிரிவு சார்ஜன்ட் அனுர, பொலிஸ் கொன்ஸ்ரபிள்களான கோரத், பிரதீப், கொத்தலாவே ஆகியோர் அடங்கிய குழுவினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர்.

2 கிலோகிராம் கஞ்சா யாழ்ப்பாணத்தில் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்டு நீர்கொழும்புக்குக் கொண்டு சென்று அங்கு 3லட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது என்று சந்தேகநபர் விசாரணைகளின்போது குறிப்பிட்டுள்ளார் என்று பொலிஸார் கூறுகின்றனர். (ற-21)

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு வாரம் 691
சீட்டிழுப்பு திகதி 19.08.2017 சனிக்கிழமை
R 30 32 44 71
சுப்பர் ஜக்பொட்
ரூ. 56, 523, 720/=
வெல்லப்படவில்லை
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள் 23 46 67 68
ஊதா நிற டிக்கட்டுகள் 2017.08.21 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
2 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.20ம், 3 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.500ம் மற்றும் 4 இலக்கங்களும் பொருந்துமாயின் ரூ.50,000 வெல்லமுடியும்.
தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2918 திகதி 19.08.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து 16 23 31 37 G
போனஸ் இல. 20
திங்கட்கிழமை ஜக்பொட் 37, 476, 265/-
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள் 04 29 33 35
நீல நிற டிக்கட்டுக்கள் 2017.08.21 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk

Development Fortune
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 067
சீட்டிழுப்பு திகதி 19.08.2017 சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 25 32 54 56
சுப்பர் இலக்கம் 04
அதிர்ஷ்ட மாதம் ஏப்ரல்
அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் ரூ. 15, 679, 286/=
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 2, 615, 252/=
அடுத்த ஜக்பொட் ரூ. 2, 322, 920/=
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள் 01 24 33 57
2 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.20ம் 3 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.500ம் மற்றும் 4 இலக்கங்களும் பொருந்துமாயின் ரூ 50,000ம் வெல்ல முடியும்.
2017.08.24 ஆம் திகதி வியாழக்கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.ஊ சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு: 0114 824 824 www.dlb.lk

## நெஞ்சை விட்டு அகலா
## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
1962.04.27

உதிர்வு
2016.08.19

அமரர் திருமதி
**கருணாவதி (சாந்தி) செல்வநாதன்**

ஆண்டு ஒன்று மறைந்தோடினாலும்
உம் நினைவை நெஞ்சில் ஏந்துகின்றோம் - அம்மா
எம்மை எல்லாம் கனிவுடன் வளர்த்தெடுத்து கல்வி புகட்டி
ஞாலத்தில் தலை நிமிர்ந்து வாழ வழி
சமைத்தாயே அம்மா
இள வயதில் எமைவிட்டு மறைந்தாயே - அம்மா
உம் நினைவு எம் அகத்தே என்றும் அகலாது - அம்மா
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

18/4/1, சீனியர் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி மனோராணி சிவானந்தராசா



அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோராணி சிவானந்தராசாகடந்த (18.08.2017) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவானந்தராசாவின் (முன்னாள் பட வரைஞர் மகாவலிசபை) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - பரமேஸ்வரி அம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான விஸ்வநாதன் - லட்சுமிஅம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் நவனீதன், நந்தகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயராணி (ஜேர்மனி), பரமசக்தி (கனடா), ரவீந்திரன் (கனடா), கஜேந்திரன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் விக்னேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை - மல்லாகம் மகாவித்தியாலயம்), மங்கையர்க்கரசி (இளைப்பாறிய ஆசிரியை - அருணோதயாக் கல்லூரி), காலஞ்சென்ற சிவராஜசிங்கம் (கொழும்பு - கணக்காளர்) மற்றும் சிவஞ்ஞானசேகரம் (இளைப்பாறிய சங்கீத ஆசிரியர் - சென்.ஜோன்ஸ் கல்லூரி), காலஞ்சென்ற சிவரூபன் (HNB) ஆகியோரின் மைத்துனியும் பிரியலக்ஷ்னாவின் அன்பு மாமியும் மனோசிவநாதனின் (தெனியாய) மைத்துனியும் அம்சிகன் (Angel International School), ஆதன்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.08.2017) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம், நரியிட்டான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு வீதி, அளவெட்டி மேற்கு,
அளவெட்டி.

தகவல்: பிள்ளைகள்
நவனீதன் 077 605 4089,
நந்தகுமார் 077 488 3699

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Vacancy Advertisement (Females Only)

Taprobane Seafoods (Pvt) Ltd is a multinational sea foods exporting company in Sri Lanka. We are operating in Sri Lanka with 5 main seafood processing plants with over 1000 employees. We are going to recruit the below vacancy.

### Quality Inspector (Job Locations - Jaffna, Mannar & Nachikuda)

**Qualification**

- Passed in GCE A/L (School Leavers encouraged to apply)
- Diploma in Food technology and Science University College or Technical College.
- Credit in English G.C.E O/L.
- Experience in relevant field considered as added advantage.
- Age between 19 -25 years.

### Accounting Assistant (Job Location - Mannar)

**Qualification**

- Passed in G.C.E A/L - Commerce Stream (School Leavers encouraged to apply)
- Credit in English & Mathematics G.C.E O/L
- Basic Knowledge in Microsoft Office.
- Experience in relevant field considered as added advantage.
- Age between 19 -25 Years

Salary Negotiable

Forward you're CV to jobtsf@outlook.com on or before 25th August 2017

## காவடி எடுப்போருக்கு நடைமுறைகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.20

நல்லூர் கந்தனுக்கு தூக்குக் காவடி நேர்த்திக்கடன் செய்யும் அடியார்கள் தேர் மற்றும் தீர்த்தத் திருவிழா நாள்களில் ஆலய வடக்கு வீதியூடாக அதாவது சங்கிலியன் வீதியூடாக கோவில் வீதி வடக்குப் பக்கமாக துர்க்காமணி மண்டபத்தை அடைந்து வடக்கு வீதியில் குபேர வாசலை அடைந்து அங்கு நேர்த்தியை முடிவுறுத்த வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாண மாநகர ஆணையாளர் பொ. வாகீசன் அறிவித்துள்ளார்.

தூக்குக் காவடியுடன் வந்த வாகனம் நல்லூர் தெற்கு வீதியூடாக அதாவது கைலாச பிள்ளையார் ஆலய பக்கமாக வெளியேறும்படி யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

சுவாமி வெளிவீதி உலா வந்து இருப்பிடத்தை அடையும் வரை குறித்த நேரத்தை கருத்தில் கொண்டு துக்குக் காவடி நேர்த்தி செய்யும் அடியார்கள் உள்வருமாறும் ஆலய நிர்வாகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர் என்று ஆணையாளர் செய்திக் குறிப்பில் தெரிவித்தார். (4-ரி)

### வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் உள்ள வியாபார நிலையத்தில் பணியாற்றுவதற்கு வேலையாள் தேவை. **தொடர்பு- 077 188 2518**

### வீடு வாடகைக்கு

வெள்ளவத்தையில் 42 ஆம் வீதியிலுள்ள இரண்டு அறைகள் (A/C, Non A/C) இணைந்த குளியலறைகளுடன்கூடிய தொடர்மாடி வீடு நாள் வாடகைக்கு உண்டு. **தொடர்பு- 077 837 8597**

### விற்பனைக்கு

2015 ஆம் ஆண்டு Xenon Light Truck (றக்) விற்பனைக்கு உண்டு. நல்ல நிலையில் பாவிக்கப்பட்டது. 31000 Km ஓடியுள்ளது.

**-076 857 3798, 077 871 5430**

### பணிப்பெண் தேவை

நல்லூர் பகுதியில் வசிக்கும் இளம் குடும்பத்திற்கு நடுத்தரவயது கொண்ட பணிப்பெண் தேவை. மாலை 5.00 மணிக்கு பின் தொடர்பு கொள்ளவும்.

**- 0777 756 178**

### வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல தொழிற்சாலையொன்றிற்கு கணக்கு பதிவாளர் மற்றும் தொழிலாளர்கள் தேவை. **தொடர்பு-021 222 1735**

### காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் தெற்கில் 29 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்கப்படும். (4 பரப்பு, 6, 8)

**076 857 3798, 077 871 5430**

### வாடகைக்கு உண்டு

முற்றிலும் மாபிளிடப்பட்ட நான்கு அறைகளைக் கொண்ட புத்தம் புதிய வீடு A/C உட்பட சகல தளபாடமிடப்பட்டுள்ளது. மேலும் மாபிளிடப்பட்டுள்ள இணைந்த குளியலறைகளையுடைய அறைகள். நாள், வாராந்த அடிப்படையில் வாடகைக்குண்டு.

**077 810 5102, 077 301 3659**

### தேவை

திருநெல்வேலியில் இயங்கும் பிரபல பலசரக்கு வியாபார நிலையத்துக்கு விற்பனையாளர், சிட்டை எழுதுனர் தேவை.

தொடர்புகொள்ளவேண்டிய நேரம்
9.00 am - 5.00 pm
2 km இக்கு அண்மித்து இருத்தல் வேண்டும்.

தொடர்புளுக்கு
**077 8575 100/ 077 2247 599**

### வீடு வளவு விற்பனைக்குண்டு

சுதுமலை தெற்கு மானிப்பாயில் அமைந்துள்ள 2 பரப்பு காணியில் 27 அடி நீளமான 2 அறை, சமையலறை, இரண்டு கோல் கொண்ட சகல வசதிகளும் அமைந்த வீடு வளவு விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம் காலை 8.30 க்கு முன்னரும் மதியம் 2 மணிதொடக்கம் 4 மணிவரை. விலை 35 இலட்சம். **தொடர்பு - 076 721 5228**

### உடனடி தேவை

தெகிவளையில் இயங்கும் Family Restaurant இற்கு வெயிட்டர்ஸ் மற்றும் வெயிட்டர்ஸ் வேலை பழகுவோர் உடன் தேவை. சம்பளம் மற்றும் தங்குமிடம், இலவச உணவு தேவைப்படின் வழங்கப்படும்.

**077 919 7661**

### உடனடி தேவை

தெகிவளையில் இயங்கும் Family Restaurant இற்கு பிளம்பிங், இலக்ரீசியன், மேசன், உதவியாள்கள் முழுநேர வேலைக்கு ஆள்கள் தேவை. நல்ல சம்பளம் வழங்கப்படும்.

**077 919 7661**

### பழைமை வாய்ந்த ஏழு தலைமுறைகளாக செய்து வரும் ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



01. ஆண்/பெண் வசியம்
02. பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.

Note: (உங்களால் நேரில் வரமுடியாவிட்டால் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

03. வியாபார முன்னேற்றம்.
04. வீட்டில் ஒற்றுமை உண்டாக
05. போலியானவர்களிடம் ஏமாந்து விட்டீர்களா ?

ஒருமுறை எம்மை வந்து சந்தித்துப் பாருங்கள் !!

**ரெங்கசாமி காளியம்மா**
மாத்தளை வீதி, கண்டி.
**077 327 2302/ 075 509 5887**

## மரண அறிவித்தல்கள்

### கதிரவேலு கிருபாகரன் (பாஸ்க்கரன்)



கெனடிலேன், திருநெல்வேலி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிட மாகவும் பிரித்தானியாவை (லண்டன்) வதிவிடமாகவும் கொண்ட கதிரவேலு கிருபாகரன் (பாஸ்க்கரன்) 18.08.2017 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதி கதிரவேலு - மனோன்மணி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் பாமினி, சிவகரன், மனோகரன் (இந்தியா) காலஞ்சென்ற தயானி ஆகியோரின் பாசமிகு அண்ணனும் சிவகரன், சுகிர்தாதேவி (பதிவாளர், வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி), வசந்தகுமாரி (இந்தியா) ஆகியோரின் அன்புமைத்துனரும் அபிசாயினி, சத்தியா (M.Com), தயானி (இந்தியா) ஆகியோரின் பெரியதந்தையும் நடேசு, கமலாதேவி ஆகியோரின் பெறாமகனும் தங்கம்மா, தட்சணாமூர்த்தி காலஞ்சென்ற பராசக்தி ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2017) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கெனடிலேன், இராமலிங்கம் வீதி,**
**திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.**

தகவல்:
குடும்பத்தினர்.

### தம்பையா தேவபாலன் (ஜெகா)

( இலத்திரனியல் திருத்துனர்)



1ஆம் வட்டாரம் மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், 226/6, கொழும்புத்துறை வீதியை வசிப்பிடமாகக் கொண்ட தம்பையா தேவபாலன் கர்த்தருக்குள் நித்திரை யடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா (பரியாரியார்) - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பௌஸ்ரீன் றீற்றா தம்பதி யரின் அன்பு மருமகனும் அருள்மொழியின் பாசமிகு கணவரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (21.08.2017) திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு 111 கண்டி வீதி சுண்டிக்குளியில் அமைந்துள்ள இலங்கை பெந்தெகொஸ் தேசபை மண்டபத்தில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக வசந்தபுரம் இலங்கை பெத்தெகொஸ்தே சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ப. ஜஸ்ரின்
**077 6645 503, 077 9612 280**

## மரண அறிவித்தல்கள்

### முருகேசு வேலாயுதம்



காந்தியூர் புலோலி வடமேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு வேலாயுதம் 18.08.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மந்திகை, கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**காந்தியூர்,**
**புலோலி வடமேற்கு, புலோலி.**

தகவல்:
**குடும்பத்தினர். 077 899 7944**

### திருமதி தங்கம்பிள்ளை நல்லதம்பி



அம்மன்கோவிலடி, தையிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கனடாவில் வசித்தவருமாகிய திருமதி தங்கம்பிள்ளை நல்லதம்பி நேற்று (19.08.2017) சனிக்கிழமை சிவபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - மாரிமுத்து தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான சின்னையா - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நல்லதம்பியின் அன்பு மனைவியும் ஞானேஸ்வரன், ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), காலஞ்சென்ற விக்னேஸ்வரன், புவனேஸ்வரன், பகீரதன் (கனடா), லோகேஸ்வரன் (கனடா), ஜெகன் (பிரதேச செயலகம் - தெல்லிப்பழை) ஆகியோரின் அன்புத் தாயாரும் மதிவதனி, ரத்தினேஸ்வரி (கிளி - சுவிஸ்), மதுரிகா (கனடா), வனிதா (கனடா), காந்திமதி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**30, சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய்.** தகவல்: **ஜெகன்** (மகன்)

### கலமகுகராசா சயந்தினி



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கலமகுகராசா சயந்தினி (சாளினி) 17.08.2017 அகாலமரணம் அடைந்துவிட்டார்.

அன்னார் கலமகுகராசா சறோஜினிதேவி தம்பதிகளின் அன்பு மகளும் சஞ்சிகா, தர்சன், தீபன் (பிரான்ஸ்), சர்மினி, சர்மிதா, அனுசன், சயித்தா அகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2017.08.20) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 181 4118**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்திரி...

விடுத்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச.

அவர் தனது உரையில், சுகாதார அமைச்சர் ராஜித, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைக் கடுமையாகச் சாடியதுடன், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைப் புகழ்ந்து பேசினார்.

நீதி அமைச்சர் விஜயதாச அமைச்சரவைக் கூட்டுப் பொறுப்பை மீறி விட்டார் என்று தெரிவித்து அவருக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியினாலேயே நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்ற நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அநுராதபுரத்தில் பிக்குகள் கலந்து கொண்ட நேற்றைய நிகழ்வில் தலைமை விருந்தினராக விஜயதாச ராஜபக்ச பங்கேற்றார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தப் பிரதேசத்தில் சிறுநீரக நோயாளர்கள் அதிகரித்துள்ளனர். அவர்கள் தொடர்பில் சுகாதார அமைச்சர் கவனம் எடுக்க வேண்டும். அவர் இவற்றைக் கண்டு கொள்வதில்லை. அவருக்கு சைட்டம் இருந்தால் போதுமானது.

இந்த நாட்டிலுள்ள இனங்கள், மதங்கள் தமது உரிமைக்காகக் குரல் கொடுக்கலாம். சிங்கள இனத்துக்கு நடக்கும் அநியாயத்துக்கு எதிராக குரல் கொடுத்தால் இனவாதம் என்று பெயர் சூட்டப்படுகின்றது.

நாட்டைப் பீடித்திருந்த பயங்கரவாதத்தை தமது உயிரைக் கொடுத்து மீட்டெடுத்த இராணுவத்தினரை பன்னாட்டு நீதிமன்றில் நிறுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளை எதிர்த்தால் அவர் துரோகியாக்கப்படுவார். நீதி தொடர்பான நடவடிக்கைகளில் தலையீடு செய்ய வேண்டாம் என்றால் துரோகி.

சட்டமா அதிபர் திணைக்களத்தினுள் எதுவித அரசியல் தலையீட்டுக்கும் அனுமதி இல்லையென்று சொன்னால் நீதி அமைச்சர் துரோகியாக சித்திரிக்கப்படுகின்றார்.

மேற்குலக நாடுகளின் சப்பாத்துக்களைத் துடைத்துவிடும் எங்கள் அரசியல்வாதிகளைக் குறைசொன்னால் - அவர்கள் செய்வது தவறு என்று சொன்னால் நீதி அமைச்சர் துரோக்கியாக்கப்படுவார்.

எதிர்கால சிங்கள இனத்தை காப்பாற்றுவதற்காக கதைக்க முற்பட்டால் என்னை தவறாகப் பார்க்கின்றனர். நாங்கள் கூட்டு அரசை நிறுவியது நல்லாட்சியை நடத்த வேண்டும். இங்கு நீல நிறத் திருடர்கள், பச்சை நிறத் திருடர்கள் என்று எவரும் இல்லை. எல்லோருமே திருடர்கள்தான். எங்கள் அரச தலைவர் மைத்திரி. அவர் அமைதியானவர். அவருடன் இணைந்து சிறப்பாக நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். மைத்திரி யுகத்துக்கு எல்லோரும் ஒன்றிணைய வேண்டும் - என்றார். (வ-5)

## இந்தியப்...

தூபியில் நேற்று இந்திய இராணுவ உயர் அதிகாரிகள் அஞ்சலி செலுத்தினர்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இந்திய இராணுவ உயர் அதிகாரிகள் குழு கோப்பாய் நினைவுத் தூபி அமைந்துள்ள இடத்துக்கு நேற்று மதியம் ஒரு மணியளவில் வந்தது.

1987 முதல் 1989 வரையான காலத்தில் அமைதி காப்புப் படையாக வந்தது இந்திய இராணுவம். பின்னர் ஆக்கிரமிப்புப் படையாக மாறியது. சொல்லொணாக் கொடுமைகளை இழைத்தது. பெண்கள் வன்புனரப்பட்டனர்; அப்பாவிகள் பலர் கொல்லப்பட்டனர்.

இந்தக் காலப் பகுதியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்திய இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் கொல்லப்பட்டனர்.

அவ்வாறு கொல்லப்பட்ட இந்திய இராணுவத்தினர் சிலருக்கு கல்வியங்காடு இராச பாதையில் பிடாரித் தோட்டம் பகுதியில் சிறிய நினைவுத் தூபி ஒன்று கட்டப்பட்டுள்ளது. தனியாருக்குச்சொந்தமான காணி ஒன்றிலேயே அனுமதி இன்றி அந்தத் தூபி அமைக்கப்பட்டுள்ளது.

அந்தத் தூபியிலேயே 27 ஆண்டுகளின் பின்னர் நேற்று இந்திய இராணுவ அதிகாரிகளால் அஞ்சலி செலுத்தப்பட்டது. நிகழ்வில் இலங்கை இராணுவ அதிகாரிகள் சிலரும் பங்கேற்றனர். (வ-8)

## தேர்தல்...

மாகாண கல்வி அமைச்சு, தேவாலயம், அரச பாடசாலை, தேவாலயத்துக்குச் சொந்தமான பாடசாலைக்கு முன்பாக உள்ளது. பொலிஸார் எனது வீட்டுக்கு வந்து என்னைக் குற்றவாளிபோன்று நடத்திய சம்பவம் பலரது கவனத்தையும் ஈர்த்தது. இதன்மூலம்தேர்தல்கள்திணைக்களத்தின் மதிப்பு பொதுமக்கள் மத்தியில் சீரழிக்கப்பட்டது என்று நினைக்கின்றேன்.

இந்தச் சம்பவங்களுக்குப் பின்னர் ஒரு குற்றவாளி தேர்தல் நடத்துவதற்குப் பொறுப்பானவராக எப்படியிருக்க முடியும் என்று பொதுமக்கள் எண்ணக்கூடும். இந்தச் சம்பவம் தேர்தல் ஆணைக்குழு சுதந்திரமானதா என்ற கேள்வியையும், எனது மனைவி, பிள்ளைகள் பாதுகாப்பாக இலங்கையில் இருக்க முடியுமா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது.

போலியான குற்றவியல் குற்றச்சாட்டுக்களை என்மீது சுமத்தி 2011ஆம் ஆண்டு அப்போது அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தா எனக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தார். அது தொடர்பிலேயே என்னைக் கைது செய்ய வந்திருந்தனர்.

6 ஆண்டுகளுக்கு முன்னர் கைது செய்வதற்காக பொலிஸார் கொண்டு வந்த நீதிமன்ற அனுமதிக் கடிதத்தில் எனது பெயர் பிழையாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் சட்டரீதியான துல்லியத் தன்மை பேணப்பட்டிருக்கவில்லை. அது ஒரு சோடிக்கப்பட்ட வழக்கு. அதனால் நான் நாட்டைவிட்டு வெளியேறுவதே பொருத்தமானது என்று சட்டத்தரணிகள் ஆலோசனை கூறினர். அதனடிப்படையில் நாட்டிலிருந்து வெளியேறினேன்.

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் நாடு திரும்பினேன்.

2011ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் லெனின் குமார், இந்த வழக்கு எந்தச் சட்ட அடிப்படைகளையும் கொண்டதல்ல என்று சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு கடிதம் எழுதியிருந்தார். ஆனாலும் என்னை நன்கு அறிந்தவர் என்பதால் தன்னால் இந்த வழக்கைக் கைவிட முடியாது என்றும் லெனின்குமார் தெரிவித்திருந்தார். சட்டமாஅதிபர் திணைக்களம் அந்தக் கோவைக்கு எந்தப் பதில் குறிப்பும் வழங்காமல் அப்படியே திருப்பி அனுப்பியது. அதன் பின்னர் அந்த வழக்கு அப்படியே போய்விட்டது.

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் எல்லாம் மாறிவிட்டது என்கின்ற பிம்பத்தை உடைக்கும் முதல் சமிக்ஞையாக இது எனக்குப்படுகின்றது.

16ஆம் திகதி வீட்டுக்கு இரண்டு பொலிஸார் வந்தனர். நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட மஞ்சள் துண்டு எங்கே என்று கேட்டனர். அதைத் தராவிட்டால் உங்களைச் சிறைக்குத் தள்ளுவோம் என்று பொலிஸாரில் ஒருவர் கோபமாக கத்திக் கொண்டேயிருந்தார்.

தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினருக்கே இந்த நிலமை என்றால், சாதாரண பொதுமகனின் நிலை எப்படி இருக்கும் என்பதை நீங்களே புரிந்து கொள்ளலாம். 6 வருடத்துக்கு முன்னர் நீதிமன்றால் வழங்கப்பட்ட பிடியாணை இப்போது செல்லுபடியாகுமா இல்லையா என்பதைப் பொலிஸார் அறிந்து வைத்திருக்க மாட்டார்களா? ஊர்காவற்றுறை நீதிமன்றுக்கு பொலிஸார் கொடுத்த குற்றப்பத்திரத்தின் அடிப்படையில் இந்த பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டதா? அல்லது அதற்கு மேலாலும் வேறு சில விடயங்கள் இருக்கின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் தலைமை அமைச்சர் ரணில்விக்கிரமசிங்கவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ஊடாக நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார். இனி இவ்வாறான சம்பவம் நடைபெறாது என்று உறுதியளித்தார்.

நீதிக்குப் புறம்பான விதத்தில் தமிழ் மக்கள் மீது இப்படியான அழுத்தங்களைக் கொடுப்பவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். பொலிஸாருக்கு அடிப்படைச் சட்டம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் படிப்பிக்க வேண்டும். தமிழ் பேசும் பொலிஸாரை வடக்கு - கிழக்கில் நியமிக்க வேண்டும். இவற்றையெல்லாம் செய்தால்தான் இதுபோன்ற சம்பவங்களைக் குறைக்க முடியும்.

மக்கள் முன் [illegible] பவம் நடத்தப்பட்டதன் மூலம் தேர்தல்கள் ஆணைக்குழுவினரான எங்களுக்கு ஏதோவொரு செய்தி சொல்லப்பட்டிருக்கின்றதா என்று தேர்தல்கள் ஆணைக்குழு கருதுகின்றது. எனவே பொலிஸ் திணைக்களம் இதற்குப் பகிரங்க மன்னிப்புக் கோரவேண்டும் - என்று குறிப்பிட்டுள்ளார். (உ-5,101)

## ரணிலை...

கொழும்பு, ஓக. 20

இந்த அரசில் நாம் தொடர்ந்து இருக்க வேண்டுமென்றால் ரணிலை நீக்கிவிட்டு மகிந்த ராஜபக்சவை தலைமை அமைச்ராக நியமிக்க வேண்டும். அல்லது மைத்திரி தரப்பிலிருந்து எவரை யாவது தலைமை அமைச்சராக நியமிக்க வேண்டும். அடுத்த மாதத்துக்குள் இது நடைபெறாவிட்டால் நாம் கூட்டு அரசிலிருந்து வெளியேறுவோம்.

இவ்வாறு கூட்டு அரசின் பிரதி அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதேவேளை, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை மாற்றும் யோசனைக்கே இடமில்லை என்று, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலரும் அமைச்சருமான துமிந்த திசநாயக்கா கண்டியில் வைத்துத் தெரிவித்தார்.

பிரதி அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோ மேலும் தெரிவித்ததாவது:

நாம் எமது தனிப்பட்ட நலன்கள் மீது அக்கறை காட்டவில்லை. கட்சியின் நலன்கள் மீதே அக்கறை கொள்கிறோம். கட்சியின் நலன் பாதுகாக்கப்படவேண்டுமென்றால் கட்சிக்குள் ஒற்றுமை அவசியம். அந்த ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கே நாம் பாடுபடுகின்றோம். அப்படியென்றால் மகிந்த தரப்பும் மைத் திரி தரப்பும் ஒன்றிணைந்து உண்மை யான சுதந்திரக் கட்சியாகச் செயற்பட வேண்டும்.

நாம் அரச தலைவர் தேர்தலில் மகிந்தவை அரசதலைவராக்க முயற்சித்தோம். அது முடியவில்லை. நாடாளுமன்றத் தேர்தலில் அவரைத் தலைமை அமைச்சராக்க பாடுபட்டோம். அதுவும் முடியவில்லை. இறுதியாக அவரை எதிர்கட்சித் தலைவராக்குவதற்கு எடுத்த முயற்சியும் தோல்வியடைந்தது.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெற்றி பெற வேண்டுமென்றால் மகிந்தவை அரசுடன் இணைத்தே ஆகவேண்டும். ஆகக் குறைந்தது மகிந்த அணியும் மைத்திரி அணியும் இணைந்தாவது தேர்தலில் போட்டியிட வேண்டும்.

நாம் பிரிந்து நின்று போட்டியிட்டால் வெற்றி நிச்சயம் ஐக்கிய தேசிய கட்சிக்குத்தான். கிராம மட்டங்களில் மகிந்தவுக்கு கணிசமான ஆதரவு உண்டு. அதேபோல் அரச தலைவர் மைத்திரிக்கும் உண்டு. இந்த இருவரின் ஆதரவையும் ஒன்று சேர்த்தால்தான் முழுமையான வெற்றியைப் பெற முடியும்.

இந்த அரசில் தாம் தொடர்ந்து இருக்க வேண்டுமென்றால் மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சராக நியமிக்கப்பட வேண்டும் அல்லது மைத் திரி தரப்பில் இருந்து வேறு எவராவது தலைமை அமைச்சராக நியமிக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாது ஐக்கிய தேசிய கட்சியில் தலைமை அமைச்சரும் சுதந்திரக் கட்சியில் அரசதலைவரும் என ஆட்சியைக் கொண்டு செல்ல முடியாது.

அப்படி இல்லையென்றால் ஐக்கிய தேசிய கட்சியிடம் ஆட்சியை முழுமையாக ஒப்படைத்துவிட்டு நாம் எதிர்க்கட்சி வரிசையில் அமர வேண்டும். அங்கிருந்து அரசை அமைப்பதற்கு முயற்சி செய்வோம். இல்லையென்றால் எதிர்க் கட்சியில் இருந்துவிட்டு 2020இல் சுதந்திரக் கட்சி அரசை உருவாக்குவோம் -என்றார். (உ-5,3)

## நல்லூர்க்கந்தன்...

மண்டப வழிபாடு இடம்பெற்று சண்முகப் பெருமான் 7 மணிக்கு தேரில் எழுந்தருள்வார். நல்லூர் கந்தனின் தேர் காட்சியை தரிசிப்பதற்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலிருந்தும் லட்சக் கணக்கான பக்தர்கள் வழமை போன்று இன்றும் ஒன்றுகூடுவார்கள்.

இதனால் பக்தர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தப் பொலிஸார் சீருடையுடனும் சிவில் உடையிலும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (வ)

## அமைச்சுப்...

வதற்குத் தயாராக இருப்பதாக வடக்கு மாகாண முத லமைச்சருக்கு கடிதம் அனுப்பியுள்ளார். இருப்பினும் அவரை அமைச்சராக நியமிப் பதற்கு அவ ரது கட்சியான புளொட்டினுள் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண அமைச்சரவை கடந்த ஜூன் மாதம் மாற்றியமைக்கப்படும் போது, அமைச்சுப் பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு ஜி.ரி.லிங்கநாதனிடம், முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கோரியிருந்தார். அதற்கு அவர் மறுப்புத் தெரிவித்திருந்தார்.

“வடக்கு மாகாண விவசாய அமைச்சராக இருந்த பொ.ஐங்கரநேசனுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுக்களை மாகாண சபையில் முன்வைத்திருந்தவன் என்ற அடிப்படையில், அமைச்சுப் பதவியை ஏற்றால் பதவிக்காகத்தான் குற்றச்சாட்டுக்கள் முன்வைத்தேன் என்று சொல்லப்படும் என்பதால் பதவி ஏற்க மாட்டேன்” என்று அவர் அப்போது குறிப்பிட்டிருந்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்குத் திடீரென சில தினங்களுக்கு முன்னர் மின்னஞ்சல் அனுப்பியுள்ள ஜி.ரி.லிங்கநாதன், அமைச்சுப் பதவி வழங்கப்பட்டால் ஏற்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

“முன்னர் அமைச்சுப்பதவி கோரியபோது, மாவட்டத்தில் வேறு ஒருவர் (அமைச்சர் சத்தியலிங்கம்) அமைச்சராக இருந்தார். இப்போது அவர் அமைச்சராக இல்லை. எனது ஆதரவாளர்களும் அமைச்சுப் பதவியை ஏற்கச் சொல்வதால், அமைச்சுப் பதவி வழங்கினால் ஏற்றுக் கொள்வேன்” என்று அவர் தனது மின்னஞ்சலில் குறிப்பிட்டுள்ளார்.

“லிங்கநாதன் அமைச்சுப் பதவி வேண்டாம் என்று கூறியிருந்தார். பத்திரிகையில் படித்தேன். முதலமைச்சரும் கூறியிருந்தார். அவர் கொள்கை அடிப்படையில் அந்தத் தீர்மானத்தை எடுத்திருந்தார். அவருக்கு அமைச்சுப் பதவி வழங்குமாறு நான் கோரினால் கொள்கையில்லாதவனாக நான் ஆகிவிடுவேன்” என்று புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் உதயனிடம் தெரிவித்தார். (வ-5 101)

## அ. பதவியைப் பெற...

அறியமுடிகின்றது.

அமைச்சரவை மாற்றதின்போது, புளொட் அமைப்புக்கு அமைச் சுப் பதவி வழங்க முத லமைச்சர் தீர் மானித்துள்ளார். அவர் அந்தக் கட்சியின் சார்பில் முல்லைத்தீவு மாவட்டத்தில் போட்டியிட்ட க.சிவநேசன் (பவான்) பெயரை ஆளுநருக்கு பரிந்துரைத்துள்ளதாக நம்பகரமான வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

இந்த நிலையில், க.சிவநேசனை அமைச்சராக நியமிக்க வேண்டாம் என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த சிலர் நேரில் சென்று கோரிக்கைவிடுத்துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட தற்போதைய பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரனையே நியமிக்குமாறு அவர்கள் கோரியுள்ளனர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வடக்கு மாகாண அமைச்சரவையில் பங்கேற்பதில்லை என்ற முடிவு எடுத்துள்ளமையால் கட்சியின் தலைவர் மாவை.சோ. சேனாதிராசாவுடன் பேசி அவர் இணங்கினால், முதலமைச்சருடன் பேசுவதாக, இரா.சம்பந்தன் அவர்களிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, புளொட் அமைப்பின் மற்றொரு மாகாண சபை உறுப்பினரான ஜி.ரி.லிங்கநாதனும் அமைச்சுப் பதவியை ஏற்பதற்குத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

ரெலோ அமைப்பு தனது உயர்மட்டக் குழுக் கூட்டத்தை இன்றைய தினம் வவுனியாவில் நடத்தவுள்ளது. ரெலோ சார்பில் அமைச்சரவைக்கு விந்தனது பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளபோதும், யாழ்ப்பாணத்துக்கே மற்றைய அமைச்சுப் பதவியையும் வழங்குவதற்கு அந்தக் கட்சியின் மற்றொரு உறுப்பினரான எம்.கே.சிவாஜிலிங்கம் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ-5,101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அம்மன் பிங்பொங் வென்றது கிண்ணம்

யாழ்ப்பாணம், ஓக. 20
உடுத்துறை பாரதியின் துடுப்பாட்டத் தொடரில் அம்பன் பிங்பொங் விளையாட்டுக் கழகம் கிண்ணம் வென்றது.
உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழகம் வடமராட்சி கிழக்கு அணிகளுக்கு இடையில் நடத்திய துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் குறித்த கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
இந்த ஆட்டத்தில் அம்பன் பிங்பொங் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து குடத்தனை செல்வா விளையாட்டுக் கழகம் மோதியது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற செல்வா விளையாட்டுக் கழகம் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பிங்பொங் அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 100 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஜெயதாஸ் 39 ஓட்டங்களையும், தனுராஜ் ஆட்டமிழக்காமல் 15 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கஜன், திலக் மற்றும் முரளி ஆகியோர் 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.
101 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய குடத்தனை செல்வா விளையாட்டுக்கழகம் சகல இலக்குகளையும் இழந்து 65 ஓட்டங்களைப்பெற்று 35 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.
ஆட்டநாயகனாக பிங்பொங் அணியின் ஜெயதாஸ், தொடராட்ட நாயகனாக அதே அணியின் சுதர்சன் ஆகியோர் தெரிவாகினர். (ம-108-422)

# கொக்குவில் இந்து அசத்தல் வெற்றி



யாழ்ப்பாணம், ஓக. 20
இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 176 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.
கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணி மோதியது.
முதலில்துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி தனது முதலாவதுஇன்னிங்ஸில் 9 இலக்குகளை இழந்து 235 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக துவாரகன் ஆட்டம் இழக்காமல் 82 ஓட்டங்களையும், கௌதமன் 39 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தமிழவன் 3 இலக்குகளையும், சசிகரன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய அணி 61 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. பந்து வீச்சில் தனோஜ் 4 இலக்குகளையும், பிரசாத் 3 இலக்குகளையும் கைப்பற்றினர். (ம-422)

# பலாலி விண்மீன் அரையிறுதியில்

யாழ்ப்பாணம், ஓக. 20
துள்ளுமீன்விளையாட்டுக்கழகம்நடத்தும்கடற்கரை கபடியில் பலத்த போராட்டத்தின் பின் சென். தோமஸ் 'பி' அணியை வீழ்த்தி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது பலாலி விண்மீன் அணி.
கொட்டடி கடற்கரையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பருத்தித்துறை சென். தோமஸ் விளையாட்டுக் கழக 'பி' அணியும் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகமும் மோதின. 41:37 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதிபெற்றது துள்ளுமீன் அணி. சாந்தன் ஆட்ட நாயகனானார். (ம-108)

## இன்றைய மோதல்கள்

குடத்தனை வடக்கு, செல்வா விளையாட்டுக் கழகம் அன்னை வேளாங்கன்னி ஆலயத் திருவிழாவை முன்னிட்டு நடத்தும் துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன.
இன்று இடம்பெறவுள்ள முதலாவது ஆட்டத்தில் சுடரொளி அணியை எதிர்த்து சிவனொலி அணி மோதவுள்ளது.
இரண்டாவது ஆட்டத்தில் வெள்ளி நிலா அணியைஎதிர்த்து வெண்மதி அணி மோத வுள்ளது.
மூன்றாவது ஆட்டத்தில் உதய சூரியன்அணியை எதிர்த்து பாரதி அணி மோதவுள்ளது. (ம-23)

# உருத்திரபுரம் வி. கழகத்தின் கால்பந்தாட்ட முடிவுகள் சில

உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தின் 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் குறித்த கழகமைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சில ஆட்டங்களின் முடிவுகள்.
நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் உதயதாரகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கனகபுரம் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் உதயதாரகை விளையாட்டுக் கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் கலைமகள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. 8:1 என்ற கோல் கணக்கில் லக்கி ஸ்ரார் அணி வெற்றிபெற்றது.
தொடர்ந்து இரவு 9 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் சுடரொளி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பரந்தன் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் பரந்தன் மத்திய விளையாட்டுக் கழக 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)





ஸ்பெய்னின் பார்சிலோனா நகரில், நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலில் 13 பேர் கொல்லப்பட்டனர். அவ்வாறு உயிரிழந்தவர்களுக்கு இங்கிலாந்து – மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான டெஸ்ட் ஆட்டத்தில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமெரிக்கத் தொடர்; அசரென்கா விலகல்

பன்னாட்டு அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான அமெரிக்கத் தொடரில் இருந்து பெலாரஸ் வீராங்கனையான விக்டோரியா. அசரென்கா விலக அதிக வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது.

அமெரிக்க ரென்னிஸ் தொடர்களில் அசரென்கா முக்கியமான ஓர் வீராங்கனையாகப் பார்க்கப்படுகிறார். இதுவரை இவர் இரண்டு தடவைகள் அமெரிக்கப் பகிரங்கக் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளார். இந்த வருடத்துக்கான தொடர் எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்தத் தொடரில் அசரென்கா பங்குபற்ற மாட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. எனினும் ஏன் அவர் விலகவுள்ளார் என்று அறிவிக்கப்படவில்லை. (ம)

# உலகக்கிண்ணத் தொடருக்கு நேரடியாகத் தகுதி பெறுவதில் இலங்கைக்கு மேலும் சிக்கல்

2019ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணத் தொடருக்கு நேரடியாகத் தகுதி பெறவேண்டுமாயின் இன்று ஆரம்பமாகும் இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் குறைந்தது இரண்டு ஆட்டங்களில் வெற்றி பெற வேண்டும் என்ற சிக்கல் நிலை இலங்கைக்கு உள்ளது. இந்தத் தொடரில் மொத்தம் 10 அணிகள் விளையாடவுள்ளன. தொடரை நடத்தும் நாடு என்ற அடிப்படையில் இங்கிலாந்து ஏற்கனவே தகுதி பெற்றுவிட்டது.

ஏனைய 9 இடங்களில் 7 இடங்களுக்கு அடுத்த மாதம் 30ஆம் திகதி வெளியாகும் தரப்படுத்தலில் முதல் 7 இடங்களுக்குள் இருக்கும் அணிகள் தகுதிபெறும். அடுத்த இரண்டு இடங்களுக்கு எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறும் தகுதிச் சுற்றில் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் சேர்த்துக் கொள்ளப்படும்.

இலங்கை அணி தரப்படுத்தலில் தற்போது 8ஆவது இடத்தில் உள்ளது. அந்த அணி இந்தியாவுக்கு எதிராக இரண்டு ஆட்டங்களில் வென்றாலேயே நேரடித் தகுதி பெறமுடியும். இல்லாவிடில் மேற்கிந்தியத் தீவுகள் அணி களமிறங்கும் ஆட்டங்களின் முடிவை எதிர்பார்த்திருக்க வேண்டிய நிலை ஏற்படும். (ம)



# இந்தியா - இலங்கை மோதலுக்குத் தயார்

இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான 5 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர், தம்புள்ளையில் இன்று ஆரம்பமாகிறது. இந்திய அணி இலங்கைக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ளது. முன்னதாக முடிவடைந்த டெஸ்ட் தொடரில் இலங்கை அணி 0:3 என்ற அடிப்படையில் சொந்த மண்ணில் படுதோல்வியடைந்தது. இதனையடுத்து ஒருநாள் தொடர் இன்று ஆரம்பமாகிறது. தம்புள்ளையில் பகலிரவு ஆட்டமாக இன்றைய ஆட்டம் நடைபெறவுள்ளது. ஏனைய நான்கு ஆட்டங்களும் முறையே, ஓகஸ்ட் 24ஆம் திகதி பல்லேகலயிலும், ஓகஸ்ட் 27ஆம் திகதி பல்லேகலயிலும், ஓகஸ்ட் 31ஆம் திகதி கொழும்பிலும், செப்ரெம்பர் 3ஆம் திகதி கொழும்பிலும் நடைபெறவுள்ளன.

இலங்கை அணியின் தலைவராக இருந்த மத்தியூஸ், அந்தப் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டதன் பின்னர் அணியின் நிரந்தரத் தலைவராகப் பெயரிடப்பட்ட தரங்க எதிர்கொள்ளும் முதலாவது தொடர் இது. இந்தத் தொடர் அவருக்கு சவால் நிறைந்த ஒன்றாகவே இருக்கும்.

**இலங்கை அணி விவரம்**

உப்புல் தரங்க (தலைவர்), மத்தியூஸ், டிக்வெல்ல, குணதிலக, குசல் மெண்டிஸ், கப்புக்கெதர, சிறிவர்தன, புஷ்பகுமார, தனஞ்சய, சண்டகன், திசர பெரேரா, ஹசரங்க, லசித் மலிங்க, துஷ்மந்த சமீர, விஷ்வ பெர்னாண்டோ.

**இந்திய அணி விவரம்**

விராட் கோக்லி (தலைவர்), தவான், ரோகித்சர்மா, கே.எல். ராகுல், மனிஷ் பாண்டே, ரகானே, கேதர் ஜாதவ், டோனி, ஹர்திக் பாண்டியா, அக்சர் பட்டேல், குல்தீப் யாதவ், சாகல், பும்ரா, புவனேஷ் குமார், சர்துல் தாக்கூர். (ம)



ஆஸ்திரேலியா – பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைப் கொண்ட டெஸ்ட் தொடர் பங்களாதேஷில் எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடருக்கான ஆஸ்திரேலிய அணி பங்களாதேஷ நேற்றுச் சென்றடைந்தது. (ம)

# ரசிகர்களின் ஆதரவை கோரியுள்ளார் தரங்க

தொடர் தோல்விகளால் திணறிவரும் இலங்கை அணிக்கு ரசிகர்கள் ஆதரவும், ஊக்கமும் அளிக்க வேண்டும் என அணித் தலைவர் மற்றும் நிர்வாகத்தின் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

டெஸ்ட் தோல்வியை அடுத்து, இலங்கை அணியின் மீது ஏகப்பட்ட விமர்சனங்கள் வைக்கப்படுகின்றன. ஒருநாள்தொடர் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில், இது தொடர்பாக நேற்று முன்தினம் கருத்துத் தெரிவிக்கும் போதே தரங்க இவ்வாறு குறிப்பிட்டார்.

'ரசிகர்கள் எங்களிடம் அதிகம் எதிர்பார்க்கிறார்கள். இலங்கை அணி தற்போது எந்த நிலையில் இருந்தாலும், ரசிகர்கள் எமக்குத் தொடர்ந்து ஆதரவு தருவார்கள். அதை நாம் எதிர்பார்க்கிறோம்" என தரங்க மேலும் தெரிவித்தார்.

இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபாலவும் இவ்வாறான ஓர் கருத்தைக் குறிப்பிட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)





# பந்து வீசுவார் மத்தியூஸ்

இலங்கை அணியின் சகலதுறை வீரர் மத்தியூஸ் பந்துவீசத் தகுதி பெற்றுள்ளார் என்றும், இந்தியாவுக்கு எதிராக அவர் இன்று நடைபெறவுள்ள ஒருநாள் ஆட்டத்தில் பந்துவீசுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை அணியின் தெரிவுக் குழுத் தலைவரான சனத் ஜெயசூரியவும் இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்.

காயம் காரணமாக அவதிப்பட்டுவந்த இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மத்தியூஸ், இந்த வருடத்தின் ஆரம்பத்தில் ஏகப்பட்ட ஆட்டங்களைத் தவற விட்டார்.

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அவர் அணியில் இடம்பிடித்திருந்தாலும், பந்துவீச அழைக்கப்படவில்லை. காயம் முழுமையாகக் குணமடையாதமையே மத்தியூஸ் பந்துவீச அழைக்கப்படாதமைக்குக் காரணம் என்று டெஸ்ட் தலைவர் சந்திமல் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் காயம் தற்போது முழுமையாகக் குணமடைந்து விட்டது என்றும், இந்தியாவுக்கு எதிராக அவர் இன்று பந்துவீச அழைக்கப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Cambridge (CELTA) Qualified English Teacher in Jaffna**
**August 26, 27, 2017 - Veerasingam Hall**

Are you interested in attending one-day workshops to improve your English language skills?

- General English
- Professional English
- Soft Skills

**SCAN THE CODE TO REGISTER NOW ▼**

or contact us at:

**HOTLINE:077-737-5800**
randhir.david@gmail.com
www.facebook.com/engledge



Workshops conducted by:
**Randhir David**
English Teacher – Cambridge (CELTA)

# பன்னாட்டுத் தரப்படுத்தல்; விராட் கோக்லி முதலிடம்



பன்னாட்டு கிரிக்கெட் சபையின் ஒரு நாள் ஆட்டங்களுக்கான துடுப்பாட்டத் தரப்படுத்தலில் இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லி தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளார். 873 புள்ளிகளுடன் கோக்லி முதலிடத்தில் உள்ளார். அடுத்த இடத்தில் ஆஸ்திரேலிய அணியின் உபதலைவர் வோர்ணர் உள்ளார். அவர் 861 புள்ளிகளைப் பெற்றுள்ளார். தென்னாபிரிக்க அணியின் தலைவர் வில்லியர்ஸ் 847 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார். இங்கிலாந்து அணியின் தலைவர் ரூட் 799 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும், பாகிஸ்தான் அணியின் முன்னணித் துடுப்பாட்ட வீரர் அசாம் 786 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

ஆறு முதல் பத்து வரையிலான இடங்களுக்குள் முறையே நியூசிலாந்து அணியின் வில்லியம்சன், தென்னாபிரிக்க அணியின் குயின்டன் டி ஹொக், தென்னாபிரிக்க அணியின் பிளாசிஸ், நியூசிலாந்து அணியின் கப்ரில், தென்னாபிரிக்க அணியின் அம்லா ஆகியோர் உள்ளனர். இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மத்தியூஸ் 27ஆவது இடத்தில் உள்ளார். அவரே இலங்கையின் சார்பாக சிறந்த தரப்படுத்தல் அடைவை வெளிப்படுத்தியவர். குசல் மெண்டிஸ் 30ஆவது இடத்திலும், டிக்வெல்ல 38ஆவது இடத்திலும், சந்திமல் 54ஆவது இடத்திலும் உள்ளனர்.

(ம)

## இந்திய அணி பெருமைகளுக்குத் தகுதியானது வெள்ளையடிப்புத் தொடர்பில் கிளார்க் கருத்து

விராட் கோக்லியிடம் ஆஸ்திரேலிய வீரர்களுக்கு உரிய குணாதியங்கள் ஏராளமாக இருக்கின்றன என்று தெரிவித்த ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் கிளார்க், இலங்கைக்கு எதிராக இந்திய அணி டெஸ்ட் தொடரை முழுமையாகக் கைப்பற்றியமை மிகப்பெரும் சாதனை என்றும் குறிப்பிட்டார்.

மும்பையில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே கிளார்க் இவ்வாறு தெரிவித்தார்.

"வெளிநாட்டில் எந்த ஒரு வெற்றியும் நல்ல வெற்றிதான். யாருக்கு எதிராக விளையாடினாலும் வெற்றி வெற்றிதான். இது டெஸ்ட் கிரிக்கெட். யாருக்கு எதிராக விளையாடுகிறோம் என்பது முக்கியமல்ல. டெஸ்ட் கிரிக்கெட்டே கடினம்தான். எனவே 3:0 என்று இலங்கையை வீழ்த்திய இந்திய அணி ஏராளமான பெருமைகளுக்குத் தகுதியானதே. அனைத்து அணிகளும் வெளிநாட்டில் வெல்லத் தடுமாறுகின்றன என்பதே உண்மை. இது ஒரு அணிக்கு மட்டும் உரித்தானதல்ல.

ஆனால் இந்தியாவுக்கு மிகவும் கடினமான தொடர்கள் காத்திருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை.

அதனால்தான் நான் கூறுகிறேன் எந்த அணி சீராக அயல்நாட்டில் வெல்கிறதோ அந்த அணிதான் உலகின் சிறந்த அணி என்று. அது அவ்வளவு சுலபமல்ல. தற்போது முதலிடத்தில் உள்ள இந்திய அணி அந்த இடத்தில் நீண்ட காலம் நிலைக்கும்" என கிளார்க் மேலும் தெரிவித்தார்.

(ம)

**60 ஆவது அகவையிலே..!**

**20-08-2017 கதிரவேல் நித்தியானந்தன்**



பண்பின் இலக்கணமான உங்கள்
பாசத்தில் இந்த பார் வியக்கும்.
அன்பின் ஊற்றாகி,
அறிவில் காட்டாறாகி,
அழியாத சொத்து நீங்கள்,
வானவில்லால் ஒருங்கிணைந்த
வார்த்தைகள் கொண்டு
வண்ணக் கவிதையில்
உளமார வாழ்த்துகின்றோம்
வாழ்க நீங்கள் பல்லாண்டு!

- குடும்பத்தினர் -

**வீடு விற்பனைக்கு உண்டு**



இடம் : நவரத்னராசா வீதி,
கோண்டாவில், யாழ்ப்பாணம்.



**Bedrooms - 6**
**Hall - 3**
**Balcony - 1**
**Attach Bathrooms - 2**

தொடர்புகளுக்கு
077 8060850 [பிறேமானந்தி]
0041 787658822 [பிறேமதாசன்]

**விற்பனைக்கு**

நீர்வேலி அரகேசரிப்பிள்ளையார் கோயிலுக்கு அருகில் (பொன் செல்வ மகால் மண்டபத்திற்கு அருகில்) வீட்டுடன் 10 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

**077 639 5068**

**தேவை**

துர்க்கா கிறேசர் புத்தூர் JCB
ஒப்பறேற்றர் தேவை.
சம்பளம் 50 000 - 60 000 வரை
தொடர்பு - 077 3398 775
077 8448 775

**வேலையாள்கள் தேவை (பார்மசி)**

யாழ்.நகருக்கு அண்மையில் உள்ள பார்மசி ஒன்றுக்கு அனுபவம் வாய்ந்த வேலையாள்கள் தேவை. பகுதியாகவோ அல்லது முழுநேரமாகவோ வேலை செய்யலாம்.

**076 868 6085**

**உங்கள் வாகனங்கள் புதுப் பொலிவு பெற**
**நவீன தொழில்நுட்பத்துடன்**

மோட்டார் சைக்கிள், கார், வான் உட்பட அனைத்து வாகனங்களுக்கும் **பொடி பொலிஸ்** பண்ணிப் பெற்றுக் கொள்ளலாம். மற்றும் **இன்ரிரியரும்** செய்து பெற்றுக் கொள்ளலாம்.

**திணைக்களங்களுக்கும், நிறுவனங்களுக்கும் விசேட கழிவு வழங்கப்படும்.**

**077 821 0102**

**இலங்கையின் விமான பயணச்சீட்டுக்களின் நேரடி முகவராக செயற்படும்**
**Sb Travels and Tours Pvt Ltd**

அனைத்து விமான பயணசீட்டுக்களையும் மிகக் குறைந்த விலையில் உடனடியாக பெற்றுக்கொள்ளலாம்.

**SPECIAL AIR FARES**

| | |
|---|---|
| Chennai R/T 29900/= (SRILANKAN AIRLINES) | Chennai R/T 29200/= (AIR INDIA) |
| Madurai R/T 25200/= | Trichy R/T 31700/= |
| Zurich O/W 89900/= | Bombay R/T 36700/= |
| Malaysia R/T 30700/= | Delhi R/T 47600/= |
| London O/W 63500/= | Trivandrum R/T 34500/= |
| Paris R/T 85000/= | Toranto O/W 78600/= |
| Singapore R/T 31600/= | Bangkok R/T 31000/= |
| Toranto R/T 142800/= | |

இந்தியன் வீசா விண்ணப்பப்படிவம் நிரப்பித்தரப்படும் 100/=
மலேசியா, பாங்கொக், தாய்லாந்து வீசா செய்து தரப்படும் 7000/=

VISA ARRANGEMENTS INDIA THAILAND, MALAYSIA ALL AIR TICKETING AND TRAVELS INSURANCE ARRANGEMENT CONDITIONS APPLY. Mobile - 076 691 1080, 076 6911 081, 076 6911082, 076 6911083, 077 7111 228
No.216, Kasthuriyar Road, Jaffna. 021 222 9555

**One platform grow Everest**

- நிரந்தரமான வேலைவாய்ப்பு
- 45 000/= க்கு மேலதிகமான வருமானம்
- EPF, ETF, Medical
- வெளிநாட்டு சுற்றுலாப்பயணம்
- குறுகியகால பதவிஉயர்வு
- கவர்ச்சிகரமான ஊக்குவிப்புத் தொகை

Everest International Company யில் இணைவதற்கு உங்களுக்கும் ஓர் அரியவாய்ப்பு இலங்கை மற்றும் ஆசிய நாடுகளில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்காக O/L, A/L படித்த 18 - 30 வயதிற்கு இடைப்பட்டவர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர். பயிற்சியின் போது 10 000/= தொடக்கம் 20 000/= சம்பளமும் பயிற்சியின் பின் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

**தொடர்பு - 077 517 9034, 076 864 3505**

**E.S Printers**

Poster | Notice | Lable | Wedding Card | Bag Print | Award | Frame Item | Batch | Vehicle Brand
T-Shirt | Cap | ID Card | Key Tag | Book Mark | Pen Print | Book Printing | Woodent Print



சகல நிறுவனங்களுக்குமான பட்டியலேடு (Bill Book) காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற, வர்ண மற்றும் கறுப்பு வெள்ளை நிறத்தில், விரும்பிய அளவுகளில் குறித்த நேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.

357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com
021 492 7471 / 021 492 7472

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் நல்லூர் கந்தனின் தேர்த்திருவிழா இன்று

மலர்விழி கனகசபை

இலங்கைத் திருநாட்டின் வடபால்கோயில்கொண்டு யாழ்ப்பாணத்து நல்லூரிலே முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கின்ற மூப்பில்லாத மோகனான நல்லூர் முருகப் பெருமானின் ஏவிளம்பி வருட மகோற்சவத்தின் சிகரம் என்று சொல்லப் படுகின்ற தேர்த்திருவிழா இன்றைய தினம் வெகு சிறப்பாக இடம் பெறுகின்றது. ஈழத்திலே தமிழர்களின்காவல் தெய்வமாக அலங்காரக் கந்தன் எழுந்தருளி அருளாட்சி செய்கின்ற நல்லூர் கந்த சுவாமி ஆலயம் சைவத்தையும், தமிழையும் பேணிப்பாதுகாப்பதில் வளர்த்தெடுப்பதிலும் மிகப்பெரும் பணியினைச் செய்து வருகின்றது. சித்தர்கள், மகான்கள் வாழ்ந்து சைவத்தை வளர்த்து முத்தி அடைந்த இடமாகத் திகழ்கிறது. நேரம் தவறாமல் குறித்த நேரத்தில் அனைத்தையும் நிறைவேற்றிடும் முருகப் பெருமானுடைய அருளாட்சி நிலையானது.

தமிழ் கடவுளாம் குமரக்கடவுள் நல்லையம்பதியில் அலங்காரக்கந்தனாக எழுந்தருளி அருளாட்சி புரிகின்றார். தேர்த்திருவிழா பஞ்ச கிருத்தியங்களைச் செய்கின்ற இறைவனுடைய அழித்தல் தொழிலைக் குறிக்கும். எம்பெருமானாகிய முருகப்பெருமான் ஆறுமுகநாதனாக வள்ளி தெய்வானை சகிதம் தங்கரதமேறி வந்து தன்னை வழிபடும் அடியார்களது துன்ப துயரங்களை நீக்குகின்ற உற்சவம்.

மகோற்சவ காலத்தில் யாழ் மாவட்டத்தில் வசிக்கின்ற பக்தர்கள் மாத்திரமன்றி உலகெங்கும் பரந்து வாழ்கின்ற சைவப் பெருமக்களும் ஆசார சீலர்களாக நோன்பிருப்பது வழக்கம். இப்பண்பு நீண்ட கால்மாக இருந்து வருகிறது. அதுமட்டுமன்றி இந்தக் காலப் பகுதியில் ஆலயத்துக்கு வருகை தரும் அடியவர்கள் கலாச்சார ஆடைகள் அணிந்து, சைவ அனுட்டான விதிமுறைகளைப் பின் பற்றி, வீபூதி தரித்து தூய்மையாக வழிபாடு ஆற்றுகின்ற சிறப்பை இங்கு காணலாம். நூற்றுக் கணக்கான இளைஞர்கள்அதிகாலை வேளையில் அங்கப்பிரதட்சணம் செய்கின்ற காட்சி முருகன் அருளை வேண்டிப் பணித்திடும் பரிவுபகாரமாக அமைந்திருக்கும். இளையவர்களை ஆற்றுப்படுத்துகின்ற இடமாக நல்லையம்பதி மிளிர்வுபெறும்.

இத்தகு சிறப்புடைய நல்லையம் பதி வாழ் கந்தப்பெருமான் நல்லவர்களை வாழவைப்பது மட்டுமன்றி தீயவர்களை தீயவழியின் பாதை நகர்ந்திருந்திடாது தடுத்து நல்வழிப்படுத்தும் கைங்கரியத்தை செய்கிறார். ஆண்டொருமுறை ஆயிரம்ஆயிரம்அடியவர்கள் புடைசூழ நல்லைக் கந்தன் தேர் தரிசனம் தருகிறான். அதிகாலை வேளை தனில் ஆறுமுகப் பெருமான் தன் பத்தினியரோடு தங்கத் தேரிலே ஆரோகணிக்கும் காட்சி அபரிமிதமானது. மன அமைதியின் ஆத்ம ஞானம் தருவது. இத்துணை காட்சியைக் கண்டுகொள்ள நாம் அவன் வீதியிடை பக்தியின் பால் நடைபயில வேண்டும். ஊர்கூடி வடம் பிடித்து நல்வாழ்வு கேட்கும் அற்புதங்களை காண்பது கிடைத்தற்கரியது.

இவ்விதமாய் எம்மண்ணிலே எழுந்தருளிக் காட்சி தரும் முருகப்பெருமானுக்கு ஒரு தனிச் சிறப்புண்டு. அந்தச்சிறப்பை மகோற்சவ காலத்தில் காணமுடியும். பக்தர்கள் ஆடியும், பாடியும் அரோகராக் கோஷங்களை சொல்லியும், அடிஅழித்தும், அங்கப்பிரதிஷ்டை செய்தும் ஆனந்தப் பேறடையும் பக்தர்கள் கூட்டம் இதற்குச் சான்றாக அமைந்துவிடுகிறது. இதனைக் கண்கொண்டே கொழும்புத்துறை யோகர் சுவாமிகள்,

*"நல்லூரான் திருவடியை*
*நான் நினைத்த மாத்திரத்தில்*
*எல்லாம் மறப்பேனடி கிளியே*
*இரவு பகல் காணேனடி"*

என்று பாடிப்பரவசமடைந்தார். சைவமும் தமிழும் வளர்த்த ஆறுமுக நாவலர் பிறந்தவூரும் நல்லூரான் அடி கண்டு தமிழை அமுதமாய் பருகினார். ஆக, முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கின்ற அழகே உருவான ஆறுமுகப்பெருமானுடைய தங்கரத பவனியைக் காணவரும்பக்தர்களின்வல்வினைகள் அகன்றிட வேண்டும். துன்ப துயரங்கள் நீங்கி எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும். இந்த மண்ணிலே அமைதி கண்டு, புதுப் பொலிவு கொண்டு மண்ணில் நல்லவண்ணமாய் வாழ எல்லாம் வல்ல கந்தக் கடவுள் இத்திருநாளில் அருள்புரிய வேண்டும்.

நல்லூரான் நல்லவர்களை வாழவைப்பது மட்டுமல்லாமல் தீயவர்களை தீயவழியில் செல்ல விடாமல் நல்வழிக்கு இட்டுச் செல்லக் கூடிய பெருமைக்குரியவராகவும் திகழ்கின்றார்.

"ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே
குன்று உருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுகம் ஆன பொருள் நீ! அருள வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே...!"

## செந்தமிழ் உண்டான் மகிழ்ச்சிக்கு...!

வேலன் ஆடும் விளையாட்டு
வேதம் சொல்லும் முதல் பாட்டு
காலம் பாடும் அவன் பாட்டு
கந்தன் மகிழ்வான் அதைக் கேட்டு...!

மந்திரம் சொன்னான் தந்தைக்கு
மலையில் நின்றான் பழத்துக்கு
செந்தூர் கொண்டான் அமைதிக்கு
செந்தமிழ் உண்டான் மகிழ்ச்சிக்கு...!

வேலொடு நின்றான் தீமை அழிய
வீடுகள் கொண்டான் அன்பு மலர
நூலினில் நின்றான் நெஞ்சம் மகிழ
நுண் பொருள் சொன்னான் நல்லூரிலே...!



செ.பரமநாதன்
மண்டைதீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாம்பழக்கந்தன் ஐயா நீ



மாம்பழத்திருமேனி உடையவனே – அழகன்
வேலன் எனப் பெயரெடுத்தவனே
ஆறுமுகனாய் அவதரித்தவனே – முத்துக்
குமரனாய் உறைந்திருப்பவனே
ஔவையின் மனம் கவர்ந்தவனே – நின்
அடியார்க்கு அருள் பாலிப்பவனே
யாமிருக்கப்பயமேன் என்றவனே –அலங்கார
கந்தனாய் நல்லையில் மலர்ந்தவனே
கைகூப்பித் தொழுகின்றோம் ஐயனே – நின்
அருட்பார்வை எமக்கெல்லாம் வேண்டுமென்றே

**நல்வாழ்வு தந்திடுவான் நல்லைக்கந்தன்**

உனை எண்ணாத இதயமுண்டோ
உளை தொழாத கைகள் உண்டோ
உனை பாராத கண்கள் உண்டோ
உன் நாமம் உச்சரிக்காத உதடுகள் உண்டோ
உன் பாமாலை கேட்காத செவிகள் உண்டோ
உள்ளமெல்லாம் உருகித் தொழுகின்றோம்
உனைக் காண ஓடி வருகின்றோம் வேலவனே
நல்லைப்பதியினிலே எழுந்தருளி எமக்கெல்லாம்
நல்வாழ்வு தந்திடுவாய் என்றே ஐயானே

**ஒற்றை ரூபாயில் ஓம் முருகா**

நல்லூரான் நியிருக்கப்பயமேன் ஐயா
நல்லை நகர் நாயகனாய் வீற்றிருக்கவே
ஆறாத துயரமெல்லாம் ஆற்றிரும் தெய்வம் நீ
அடியார் குறை போக்கிடும் அழகனும் நீ
ஆடம்பரக்கந்தனென பெயரெடுத்தவன் நீ
ஆனாலும் ஒற்றை ரூபாவிலே அடியார்க்கு
அர்ச்சரனயாய் அள்ளிக்கொடுப்பவன் நீ

**என்ன தவம் செய்தேன்**

என்ன தவம் செய்தேன் எம்பெருமானே
எழிலான உன் உருவம் காணவே
செங்கதிர் ஒளி வீசும் வதனமதிலே
குழந்தையாய் சிங்கார வேலனாய்
ஆறுமுகனாய் முத்துக் குமரனாய்
புன்னகை சிந்தும் அழகனாய் மிளிர்கிறாய்
எத்தனை எத்தனையோ இன்னல்கள்
தலைந்திடவே இதயம்
தளர்ந்து போகுதையா
நின் முகம் காணவே!

**நல்லை நகர் நாயகனே**

சரவணப் பொய்கையிலே மலர்ந்தவனே
சஞ்சலங்கள் போக்கிடும் சிவசங்கரனே
சப்தஸ்வரங்களில் பாமாலையானவனே
சிந்தனையில் உதித்த சொற்கவி தொடுத்து
சிக்கனமாய் உனை பற்றிப் பிடித்து
சேவற்கொடி கொண்ட உனை சரணடைந்து
சோகமாற வேண்டுகிறேன் அழகனே
சௌக்கிய வாழ்வு அவனியில் தருவாயென்றே

*அரியாலையூர்*
*செல்வி மிஷாந்தி செல்வராஜா*

## பல்லோரும் பணிந்தேத்தும் நல்லை முருகன்

நல்லூரின் வீதியிலே
நாம் நடந்து வந்திட்டால்
தொல்லை வினைகள் தூள்படவே
பறந்திடுமே சொல்லிய யோகர் நடந்தவீதி
பல்லோர் பணிந்தேத்தும் நல்லை
முருகனை ரூபா ஒன்றுடனே
எந்தநாளும் வணங்கிடுவோம்

ப.பாலசுப்பிரமணியம்
வேலணை



# தொல்லை வினை தீர்க்கும் நல்லைக் கந்தன்

■ மு. ஈழத்தமிழ் மணி

பக்தஅடியார்களின் அல்லல் போக்கி, ஆறுதல்தருகின்ற ஆறுமுகப்பெருமான் கலியுக வரதனாய் வள்ளி தெய்வானை சமேதராக இன்று அழகிய சித்திரத் தேரினிலே சிங்காரமாய் பவனி வருகிறான். அவன் எழுந்தருளல் இன்றாகித் தருவதோ அருளின் காவல். அழகான தமிழ் பொலிவின் அலங்கார ஆடல்.

அந்தவகையிலே முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் கந்தப்பெருமான் தமிழர்களின் தனிப் பெருங்கடவுளாகத் திகழ்கிறார். முருக வழிபாடானது தமிழ் மக்களிடையே தொன்று தொட்டு வழங்கி வருகின்ற வழிபாடு இயற்றலின் தொடர்புறலாக சிறப்புப் பெறுகிறது. அதன்வழி ஈழ மணித் திருநாட்டில் முருகனுக்குரிய ஆலயங்களுள் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் பிரசித்தம் கொண்டு விளங்குகிறது.

**இரதோற்சவம்**

வருடந்தோறும் அலங்காரக் கந்தனவன் தேரில் ஆரோகணித்து திருவீதி உலாவரும் காட்சியை காண்பதற்கு இலட்சோப லட்சம் அடியவர்கள் வருகை தருவர். அதிகாலை வேளையிலிருந்தே ஆலயத்தின் உள் வீதி, வெளிவீதி என பக்தி பூர்வமாகத்திரண்டிருந்து தலைவணிங்கி நிற்பர். இதனிடை ஆண் அடியவர்களும், பெண் அடியவர்களும் தங்களது நேர்த்திக் கடன்களைப் பூர்த்தி செய்வர். அதிகாலை வேளையிலேயே பக்திப்பரவசத்துடன் ஆலயம் வருகை தந்து அங்கப் பிரதிஷ்டை மற்றும் அடியழித்தல் செய்து தமது வேண்டுதல்களை நிறைவேற்றிக் கொள்வர்.

**பூஜை வழிபாடு**

வசந்த மண்டபத்தில் பூஜைகள் முடிந்த பின்னர் கொடித்தம்பப் பூஜை இடம்பெறும். அதனைத் தொடர்ந்து வசந்த மண்டபத்திலிருந்து வெள்ளியிலான சிம்மபீடத்திலே வள்ளி, தெய்வானை சமேதராக ஆறுமுகப் பெருமான் எழுந்தருள்வார். பக்தர்களின் தோள்களிலேஅமர்ந்துஆடிஅசைந்து அருட்காட்சி தருவார். பக்தர்கள் புடைசூழ அரோகரா என்று பக்திக் கோஷங்களை நயந்தபடி எம்பெருமான் உள்வீதி உலா வரும் காட்சி இடம்பெறும். தொடர்ந்து கோபுர வாயிலை அடைந்து பூமழை பொழிய ஆறுமுகசாமி வெளிவீதியை வந்தடைவார். அழகிய சித்திரத் தேரினிலே ஆரோகணிப்பார். கம்பீரமாக ஆடி அசைந்து வீதி உலா வரும் காட்சி ஆனந்தமயமான பக்திப் பரவசத்தை ஏற்படுத்தும்.

**யோகரின் கூற்று**

"நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப் போய் நல்ல மனதோடு நாம் பணித்தால் நல்ல மயில் ஏறி வந்து காட்சி கொடுப்பான் எழில் முருகன். தேறிவிடும் சிந்தை தெளி" என யோகர் சுவாமிகள் பாடிய பாடல் நல்லைக் கந்தனவன் அருள் உய்வினை கண்களிடை காட்சியுறுத்துகிறது. இத்தகு சிறப்புடைய எழுந்தருளலை அவன் வீதி நடந்து கண்டுகொள்வது வாழ்நாளில் கிடைக்கப்பெற்ற பெரும் பேறாகும்.

**ஐந்தொழில் தத்துவம்**

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில் தத்துவங்களை உணர்த்துவதே மகோற்சவத்தின் தனித்துவம். இந்த ஐந்தொழில்களில் பக்தர்களின் பாவங்களையும், கர்மவினைகளையும் இறைவன் அழித்து அருள்புரிதலே இரதோற்சவத்தின் சிறப்பு. அதன்படியே நல்லைக் கந்தன் பக்தர்களின் பாவங்களை அழித்துத் துன்பங்களை நீக்கி அருள்பாலிக்க வேண்டும். ஈழத்தமிழ் மக்கள் எதிர்கொள்கின்ற அவலங்களையும், வேதனைகளை நீக்கி இனங்களிடையே புரிந்துணர்வையும், இனப்பிரச்சினைக்கான தீர்வையும் கண்டுகொள்ள சித்தமாய் அருகிருந்து வழி நடத்த வேண்டும். அடியவர்களாய் அவன் தாழ் பணிந்து போற்றித் துதிப்போம். அமைதி காண்போம். ■

**காப்பு**

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்து உருகத்
தஞ்சத்து அருள் சண்முகனுக்கு இயல்சேர்
செஞ்சொல் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக்கர ஆனைபதம் பணிவாம்..!

**நூல்**

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே..!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேற்பெருமானின் திருவருட்கடாட்சம்

## வரலாற்றுச் சிறப்பினையும் முருகனின் அருட் சிறப்பினையும் நினைதல்

அம்பலவாணர் இராஜரட்ணம்

யாழ்ப்பாணத்தை ஆண்ட செண்பகப் பெருமாள் என்ற அரசனால் கி.பி1450 ஆண்டு தொடக்கம் கி.பி 1460 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நல்லூர் கந்தசுவாமி ஆலயம் சங்கிலித் தோப்பு என்னும் இடத்தில் முதன் முதலாக அமைக்கப்பட்டது. இந்த அரசனின் மறுபெயர் சிறி சங்கபோதி புவனேகபாகு என்பதாகும். இவனுடைய காலத்தின் பின்பாக கனக சூரியன் என்னும் அரசன் கோயிலைப் பொருப்பித்தான். நாற்றிசைகளிலும் வீதிகளை அமைத்தான். இதற்குப் பின்பான காலத்தில் கனக சூரியனின் மைந்தன் சிங்கைப் பரராச சேகரன் அரசாட்சி செய்தான். ஆலயத்தை மெருகூட்டினான். நான்கு திசைகளிலும் பாதுகாப்புக்காக நான்கு கோயில்களைக் கட்டுவித்தான்.

முருகனின் தந்தையான சிவனுக்கு வடக்குத் திசையில் சட்டநாதர் கோயிலையும், தாயாகிய பார்வதிக்கு மேற்குத்திசையில் வீரமாகாளி அம்மன் கோயிலையும், அண்ணாகிய தும்பிக்கையான் விநாயகனுக்கு தெற்குத் திசையில் கைலாசபிள்ளையார் கோயிலையும், கிழக்குத் திசையில் வெய்யில் உகந்த பிள்ளை [illegible]ர் கோயிலையும் கட்டுவித்தான்.

### காலனித்துவங்களின் வருகை

கி.பி1505 ஆம் ஆண்டு இலங்கையைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் மதவாதம் கொண்டு கோயிலை இடித்துத் தரைமட்டமாக்கினர். இது நடக்கும் என்று முன்கூட்டியே அறிந்து கொண்ட முருக பக்தர்களும், பிராமணர்களும் முக்கிய விக்கிரகங்களையும், சாசனங்களையும், கோயில் உடைமைகளையும் பாதுகாப்பாக வெறொரு இடத்தில் மறைத்து வைத்திருந்தனர். போர்த்துக்கேயரின் பின் இலங்கையை ஆண்ட ஒல்லாந்தரகள் அதே இடத்தில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றை கட்டினர்.

ஒல்லாந்தரின் பின் இலங்கையை ஆண்ட ஆங்கிலேயர்கள் மதவாதம் கொண்டவர்களாக இருக்கவில்லை. இந்த நிலையிலே மீண்டும் கந்தசுவாமி ஆலயத்தை குருக்கள் வளவு என்ற இடத்தில் (தற்போது கோயில் அமைந்துள்ள இடம்) இரகுநாத மாப்பாண முதலியார் கட்டுவித்தார். பூஜைவ்ழிபாடுகளும் இடம்பெற்று வந்தன.

### ஆலயப் பரம்பரையினரும் தொண்டும்

